# B.A. HISTORY - I YEAR

## *DJH1B* - HISTORY OF TAMILNADU UPTO 1947 A.D

### SYLLABUS

**Unit - I**
Pre History of Tamil Nadu – geographical features – pre historic sites and cultures- Historic Age: Sangam literature – crowned monarchs – chieftains – society – religion – trade and commerce – kalabhras – impact of their rule.

**Unit-II**
Pallavas and I Pandyan empire – political history of the Pallavas – society art and architecture – religion – literature I Pandyan Empire – Society and culture – Bhakti Movement – Alwars and Nayanamars – literature – impact.

**Unit - III**
Imperial Cholas and II Pandyan Empire – Raja Raja – Rajendra – over seas expedition – Temples – architecture – literary growth – administration – II Pandyan Empire – Civil War – Marco Polo's observation – society – muslim invasion – Madurai sultanate.

**Unit - IV**
Nayaks of Madurai and Tanjore – Nature of rule – Society – contribution to art and administration – Art and Architecture – society, Marathas and Nawabs – Marathas Society – religion – literary growth – Arcot Nawabs – administration – society, Sethupatahis of Ramanathapuram – society – religion – Christianity.

**Unit -V**
Polygari system – Kaval system – Palayakkarars – Kattabomman- Arrival of the Europeans – Portuguese, Dutch – French – English – Revenue system- South Indian Revolt – abolishing poligari system – Vellore revolt, Tamil Nadu and freedom struggle – civil disobedient movement – Quit India Movement – Salt sathyagragha V.O.C., Subramania Siva, Bharathi, Justice Party- E.V.R. – Rajaji – Sathyamoorthy – Kamaraj – Role of the Congress Party.

**Reference Books:**

1. A.Krishnasami- The Tamil Country Under Vijayanagar Rule
2. C.S.Srinivasachari- A History of Ginjee and its Rulers
3. –do- , British Diplomacy in Tanjore
4. -do- ,South Indian Rebellion
5. –do-, A real History of Tamil Nadu.
6. –do-, Rise and Fall of the Poligars in Tamil Nadu
7. K.Rajayyan- History of Madura, 1736-1801 A.D.
8. N.Subramanian- History of Tamil Nadu, Pt. I & II
9. R.Sathianathaiar- History of the Nayaks of Madura
10. Vridhagirisan- Nayaks of Tanjore.

# தமிழக வரலாறு – கி.பி. 1947 வரை

## அலகு–I

## வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகம்

மனிதன் முதலில் தோன்றிய இடங்களில் தென் இந்தியா ஒன்று எனச் சில நிலநுலாரும் மானிட நூல் வல்லாரும் கருதுகின்றனர். தென்இந்தியாவில் அதிலும் சிறப்பாக ஒரிஸா, மைசூர், ஆந்திரா, சென்னை ஆகிய இடங்களில் அதற்கானச் சான்றுகள் கிடைத்துள்ளன. அதில் சென்னையும் ஒன்று என்பதால் வரலாற்றுக்கு முன்பே அங்கு மக்கள் வாழ்ந்து வந்தார்கள் என்பது நன்கு புலனாகிறது. தமிழ் நாட்டின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை அறிஞர்கள் ஐந்து வகைகளாகப் பிரித்துள்ளனர். அவைகளாவன

1 தொல் பழங் கற்காலம்

2 பழங் கற்காலம்

3 புதிய கற்காலம்

4 வெண்கலக் காலம்

5 இரும்புக் காலம் ஆகும்.

இக்காலகட்டங்களை எவ்வாறு வகுத்தார்கள் என்றால் அக்கால மக்கள் பயன்படுத்திவந்த கருவிகள், பொருட்கள், உலோங்கள் முதலியவற்றின் ளெபயராலே என்றால் அது சாலப்பொருந்தும்.

**தொல் பழங்கற்காலம்** :- இக்காலக்கட்டத்தில் மக்கள் சில கரடு முரடான கல் ஆயுதங்களைப் பயன்படுத்தியதாகத் தெரிகிறது.தொல்பழங்காலத்து கரடு முரடான கல் துண்டுகள் தென்னாட்டில் உள்ளன என்று வரையறுத்துக் கூற இயலாது என அறிஞர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். அத்தகைய துண்டுகள் தமிழகப் பகுதிகளிலும் பயன்படுத்தி இருக்கலாம் என்று கூறுகின்றனர். இதுவரையறுனக்க முடியாததால்தான் தொல் பழங்காலத்தை வரலாற்றாசிரியர்கள் தவிர்த்து விட்டு மற்ற நான்கு பிரிவுகளைப் பற்றி விவரங்கள் கொடுத்துள்ளனர் எனலாம்.

**பழங்கற்காலம்** : பழைய கற்காலத்தில் தமிழகத்தில் மக்கள் வாழ்ந்து வந்தனர் என உறுதியாகக் கூறலாம் .அதற்கு வலிவு ஊட்டும் வகையில் போதிய சான்றுகள் உள்ளன. அவர்கள் பயன்படுத்திய கற்கருவிகளே தக்க சான்றுகளாகும். 1863 ஆம்ஆண்டில் புரூஸ் புட் என்ற நில நுலநுல் நிபுணர் பல்லாவரத்திநற்கு அண்மையில். சில பழங்கற் கருவிகளைக் கண்டெடுத்தார். அக்கால மக்கள் பயன்படுத்திய கைக்கோடறிகள் கத்திகள் அரிவாட்கள் கண்டெடுக்கப்பட்டன.

கல் ஆயுதங்களையும் கருவிகளையும் தவிர மரத்தில் செய்த ஈட்டிகளையும் தடிகளையும் பயன்படுத்தி வந்தனர். ஆதை நிருபிக்கும் வகையில் சில பொருட்கள் கண்டு எடுக்கப்பட்டன. பழைய கற்கால மனிதன் உணவாக காய் கனிகளை உட்கொண்டான். நாடோடியாக அங்குமிங்கும் அலைந்தான் உழவுத் தொழில் தெரியாது. வேட்டையாடக் கற்றுக் கொண்டான். இறந்துபோன மக்கள் உடல்களை விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் நாடோடியாக அங்குமிங்கும் அலைந்தான். உழவுத் தொழில் தெரியாது. வேட்டையாடக் கற்றுக் கொண்டான். இறந்தபோன உடல்களை விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் இரையாக வெளியாக போட்டுவிட்டனர்.

பொதுவாக மண்டையோடுகளையும் எலும்புகளையும் வைத்து ஆய்வதைவிட கற்கருவிகளே மானிடவியல் வல்லாருக்கும் உயிர்நூல் அறிஞர்களுக்கும் உறுதுணையாக இருக்கின்றன எனலாம். இந்தியாவில் முதன்முதல் மனிதன் குடியிருக்க தொடங்கிய இடம் தக்காணம் தான் என்பது யாவரும் ஒப்புகொண்ட உண்மையாகும். இதை பி.டி.சீனிவாச அய்யங்காரும் வேறு சில அறிஞர்களும் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

இம்மக்களின் காலகட்டம் கி.மு.30000 முதல் 10000 வரை நிலைத்திருந்தது என்று அறிஞர்கள் வரையறை செய்துள்ளனர்.

**புதிய கற்காலம்:** புதிய கற்காலம் பற்றிய செய்திகளை அறியும் முன்னர் பழைய கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் இடையே நிலவிய மெகாலிதிக் எனப்படும் ஒரு காலம் நிகழ்ந்ததாக வரையறுக்கப்பட்டுள்ளதைப் பார்ப்போமாக. இக்காலத்தில் பயன்படுத்திய கற்கள் மிகச் சிறிய அளவுடையதாகும். ஆவை பளிங்குக் கற்கள் போன்றவையாகும்.

இக்கால மக்கள் தொழில் வேட்டையாடுவதாகும்: அம்மக்கள் வேட்டையில் பிடித்த ஆடுகள் மாடுகள் எலிகள் முதலிய பிராணிகளை உணவாகக் கொண்டனர். மக்கள் இறந்த பின் அவர்களை புதைக்கும் வழக்கத்தை இக்காலத்தில் மேற்கொண்டனர்.

புதிய கற்காலத்தில் மக்கள் பயன்படுத்திய கற்களால் ஆன ஆயுதங்கள் சிறு கற்களால் ஆனவை. ஆவைகள் பழைய கற்காலத்தை விட செப்பனிடப்பட்டவை: செம்மையானவை.அம்மக்கள் கூர்மையான படைக் கலங்களையும் கருவிகளையும் 'டிராப்' என்பபடும் ஒருவிதக் கற்களிலிருந்து உருவாக்கப்பட்டவையாகும். திருநெல்வேலி சேலம் மலபார்க்கரை ஆகிய இடஙகளில் தோண்டிய புதை பொருள்களிலிருந்து இதை தெரிந்து கொள்கிறோம்.

இக்காலம் எப்போது நிகழ்ந்திருக்கும் என்பதைப் பற்றி ஆராய்ந்து கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி அவர்கள் தன்னுடைய கருத்தினை வெளியிட்டுள்ளார். அதன்படி அது கி.மு.8000க்கும் 6000க்கும் இடைப்பட்டதாகும்.

இக்காலத்தை அடுத்தே மட்பாண்டங்கள் பயன்படுத்தப்பட்டன. இதன்முலம் காலத்துக்கு காலம் நாகரிகத் தொடர்ச்சி ஏற்பட்டதைக் காணலாம். ஆதன்பின் பெருங்கற்கள் பயன்படுத்தபபட்டன.பெருங்கற்களால் நினைவுச் சின்னங்கள் ஏற்படுத்தப்பட்டன.கல்லறைகளில் பெருங்கற்கள் வைத்து கட்டப்பட்டன. சில சமயங்களில் தாழியில் அடக்கம் செய்தனர். இவ்வகைத் தாழிகளை திருநெல்வேலி செங்கற்பட்டு மாவட்டங்களில் காணலாம். இந்தத் தாழிகள் பெரும்பாலும் கருங்கல் கொண்ட மேட்டு பகுதிகளிலும் நீர்பாசன ஏரிகளை அடுத்தும் விவசாயிகளின் இல்லங்கள் அதாவது குடியிருப்புகளை அடுத்தும் காணப்படுகின்றன.

**வெண்கலக் காலம் :-** புதிய கற்காலத்திற்குப் பின் பித்தளை வெண்கலம் போன்ற உலோக காலங்கள் தோன்றாமல் நேரடியாக இரும்புக் காலம் தோன்றிவிட்டது எனச் சிலர் கருதுகழினறனர். அதற்கு மாறாக நம் நாட்டில் குறிப்பாக தென்னிந்தியாவில் சிறப்பாக தமிழகத்தில் பித்தளையும் வெண்கலமும் காலமும் உளது என அறிகின்றோம்.இக்கால மக்கள் உலகத்தாலான ஆயுதங்களைப் பயன்படுத்தி வந்தனர் .குறிப்பாக வென்களத்தாலான உலோகங்களைப் பயள்படுத்தியதால் அப்பெயர் பெற்றது எனலாம்

**இரும்புக்காலம் :-** புதிய கற்கால மனிதன் படிப்படியாக வளர்ச்சியுற்று உலோக காலத்தை அடைத்தான் என்பது வெள்ளிடை மலையாவகும். இரும்புக் கால நினைவுக் குறிகள்

திருநெல்வேலி மாவட்டத்தில் ஆதிச்ச நல்லூர் கண்டுபிடிப்பு எடுத்துக் காட்டுகிறது. இரும்புக்காலத்தில் பாறையில் குடைந்த குகைகள் சென்னைக்கு அருகில் பெரமபுரிலும் கோயம்புத்தூர் மாவட்டத்திலும் காணியம் பூண்டி சிறுமுகை என்ற சிற்றூர்களிலும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்ச நல்லூரிலும் காணப்பட்டன.

ஆதிச்ச நல்லூரில் கண்டுபிடிக்கப்பட்ட முதுமக்கள் தாழிகள் சிறப்பு மிக்கதாகும். அங்குள்ள குழிகளில் காணப்பட்டவைகள் மக்கள் உடம்பின் முழு எலும்புக் கூடுகள் நேர்த்தியான மண்பாண்டங்கள் பொன் அணிகலன்கள் வெண்கல உருப்படிகள் இரும்பு ஆயுதங்கள் அரிசி உமி தவிடு முதலியன ஆகும். அதுமட்டுமில்லாமல் இரும்பு மண்வெட்டிகளும் சூலாதங்களும் பொன்னால் ஆன தலை கட்டுகளும் பொன் வாய்முடிகளும் கண்டு எடுத்தனர். மேலும் திரிசூலம் அல்லது வேல் போன்ற இறைவனது ஆயுதம் சேவல் பொறித்த கொடியும் கண்டெடுக்கப்பட்டன. இதிலிருந்து ஆதிச்ச நல்லூர் மக்கள் வேலன் அல்லது முருகன் வழிபாட்டை மேற்கொண்டிருந்தனர் என்பது நன்கு போதரும். ஆரிசி உமி காணப்பட்டதின் மூலம் அம்மக்களுக்கு நெல் பயிரிடும் முறை தெரிந்திருக்க வேண்டும் என்பது தெரிகிறது.

தமிழக பண்பாட்டினை ஒழுங்கான முறையில் தெரிந்து கொள்வதற்கு தென்னாற்காடு வடஆர்க்காடு செங்கற்பட்டு முதலிய மாவட்டங்களில் கண்டு எடுக்கப்பட்டவை மிகவும் பயன்தரத்தக்கவையாகும் செங்கற்பட்டு மாவட்டத்தில் சானூர் அமிர்தலிங்கம் குன்றத்தூர் என்ற ஊர்களிலும் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் செங்க மேட்டிலும் பாண்டிசேரிக்கு அருகிலுள்ள அரிக்கமேடு ஆகிய இடங்களிலும் தோண்டி எடுக்கப்பட்ட பொருட்கள் அக்கால மக்கள் நல்தோர் சான்றுகளைத் தருகின்றன்.

இதன் காலகட்டம் கி.மு.2000 முதல் 1200 வரை உள்ளதாகும் எனக் கணித்துள்ளனர்.

## தமிழ் நாட்டின் இயற்கை அமைப்புகள்

தமிழ்நாட்டின் இயற்கை அமைப்புகள் ஆக்கபூர்வமான சவால்களை தந்தமையால் உலகிலேயே தொன்மைமிக்க நாகரீகத்தையும் பெருமைமிக்க வரலாற்றையும் தமிழனால் உருவாக்க முடிந்தது.

இந்தியாவை விந்திய சாத்பூரா மலைத் தொடர்களும் அவற்றுடன் இணைந்து ஓடும் நர்மதை தப்தி ஆறுகளும் அடர்ந்த காடுகளும் வடஇந்தியா தென்இந்தியா என்று இரண்டாகப் பிரிகிறது. தென்னிந்தியாவில் தக்காண பீடபூமிக்கு தெற்கே தமிழ்நாடும் வடக்கில் வேகடமலையும் தெற்கில் குமரியும் கிழக்கு மேற்கில் கடல் சூழ்ந்த நிலப்பரப்பே தமிழகம் என்று தொல்காப்பியச் சிறப்பு கூறுகிறது வட இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் மக்கள் இனக்கலப்பு பொருளாதார சிக்கல்கள் பண்பாட்டு குழப்பங்கள் சமூக மாற்றங்கள் ஆகியவை இயற்கை தடைகளை தாண்டி இந்தியாவை பாதித்தது இல்லை. குறிப்பாக தமிழகத்தை தொட்டதில்லை.ஆனால் விந்திய சாத்பூரா மலை தொடர்களுக்கு இடையில் உள்ள கணவாய்கள் வழியாகவும் வங்க அரபிய கடல்கள் வழியாகவும் மக்கள் போக்குவரத்தும் சில சமயங்களில் அரசியல் பண்பாட்டுத் துறைகளில் தொடர்பும் இருந்திருக்கின்றன. ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் குறைந்தது மூன்று காலகட்டங்களில் வட இந்தியா தென்இந்தியா முழுவதும் ஒரே பேரரசின் ஆதிக்கத்தில் இருந்தது என்று பேராசியர்

கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி குறிப்பிடுகிறார். மூன்று காலங்களிலும் கூட தமிழ்நாட்டின் மீது வட இந்தியா பேரரசுகளின் ஆதிக்கம் முழுமையாக இருந்ததென்று கூற முடியாது.

**கிழக்கு மேற்கு கடற்கரைகள்**

பழந்தமிழ் நாட்டில் வங்காள விரிகுடாவும் மேற்கில் அரபிகடலும் தெற்கில் இந்துமகா கடலும் இருந்தன. கிழக்கு மேற்கு கடற்கரைகள் வளைவுகள் இல்லாமல் அமைந்திருப்பதால் இயற்கை துறைமுகங்கள் குறைவு. ஆனால் தமிழர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கடல் போக்குவரத்திலும் கடல் வாணிகத்திலும் ஈடுபட்டிருந்தனர். கிழக்கு கடற்கரையில் மாமல்லபுரம் பூம்புகார் கொற்கை மேற்கு கடற்கரையில் முசிறி தொண்டி சிறந்த துறைமுகங்களாக திகழ்ந்தன.தமிழ்நாட்டில் சென்னையும் தூத்துக்குடியும் சிறந்த துறைமுகங்களாக விளங்கின்றன. அந்நாளில் பல்லவர்களும் சோழர்களும் கடற்படைகள் வைத்துகடல் கடந்து நாடுகளை கைப்பற்றுவதில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். இலங்கையும் மாலத்தீவுகளும் தமிழர் ஆதிக்கத்தில் ஆட்பட்டிருந்தன. கடல் வாணிகத்தை பெருக்குவதுடன் கலை கலாச்சாரத்தையும் கீழை நாடுகளில் பரப்புவதில் தமிழர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர்.சோழ மாலுமிகள் இந்திய பெருங்கடலில் கப்பலோட்டுவதில் வல்லநர்களாய் விளங்கினர். சோழர்களுடைய வலிமை வாய்ந்த கப்பற்படையை விளக்குவதற்காக பேராசியர். ஆர். சுத்திய நாதய்யர் வங்காளவிரிகுடா சோழர்களுடைய குளமாக ஆனது என்று குறிப்பிடுகிறார்.

**கிழக்குத் தொடர்ச்சி மலை**

மேற்கு தொடற்ச்சி மலையை விட கிழக்கு தொடர்ச்சி மலை உயரம் குறைந்தது. இது ஒரிஸஸா மாநிலம் தொடங்கி தெற்க்கு நோக்கி சென்று நீலகிரி மாவட்டத்தில் மேற்குமலைத் தொடருடகன் இணைகிறது. கிழக்கு தொடர்ச்சி மலை பல இடங்களில் தொடர்பு இல்லாமல் மேற்கு மலை தொடரை போன்று அதிக உயரமும் காடுகளும் இல்லாமல் இருப்பதால் போக்குவரத்துக்கு ஒரு பெரிய தடையாக இல்லை. இதில் ஜவ்வாதுமலை சேர்வராயன் மலை கொல்லி மலை மற்றும் பச்சை மலை போன்ற மலைகள் அமைந்துந்துள்ளன.

**மேற்கு தொடர்ச்சி மலை**

மிகபெரிய சுவர் போல் காட்சி தரும் மேற்கு தொடர்ச்சி மலை வடகோடியில் ஏறக்குறைய 2000 அடி உயரத்தில் துவங்கி படிப்படியாக உயர்ந்து நீலகிரி தொட்டபெட்டாவில் 8760 அடியும் ஆனைமுடியில் 8841 அடியும் உயர்ந்து விளங்குகிறது. இம்மலையில் கோயம்புத்தூருக்கு அருகில் 100 அடி உயரத்தில் தெற்கு வடக்காக 20 மைல் அகலத்தில் பாலக்காட்டு கணவாய் இருக்கிறது. இதுமேற்கு கடற்கரைத் தாழ்நிலத்தையும் கர்நாடகதாழ் நிலத்தையும் இணைக்கின்ற இக்கணவாய் பல வரவாற்று நிகழ்ச்சிகளுக்கு காரணமாய் இருந்திர்க்கிறது. இத்துடன் கன்னியாகுமரி மாவட்டத்தின் எல்லையில் உள்ள அறம்போலி கணவாயும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள செங்கோட்டைக் கணவாயும் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. அடர்ந்து செழித்து வளர்ந்துள்ள காடுகளும் விரிந்து ஆழ்ந்த பள்ளதாக்குகளும் துள்ளி விழும் அருவிகளும் பயத்தை அள்ளிவரும் காட்டுமிருகங்களும் முகில் தவழும் மலைகளும் சந்தனம் தேக்கு வேங்கை மரங்களும் கண்ணைக் கவரும் வனப்புடன் விளங்குகின்றன. மேற்கு மலைத்தொடரில் ஆனைமலை வனப்பும் வனவளமும்

மிக்கதாகும். இம்மலையில் அமைந்துள்ள ஆனைமுடி சிகரம் தென்னந்தியாவில் மிகவும் உயர்ந்த சிகரமாகும்.

**ஆறுகள்**

தமிழகத்தில் வற்றாப் பேராறுகள் இல்லை எனினும் மைசூர் மாநிலத்தில் நந்தி துர்க்கத்தில் தோன்றி வரும் பாலாறும் திருமுக்கூடலில் கலக்கும் செய்யாறும் வடஆற்காடு செங்கற்பட்டு மாவட்டங்கள் வழியாக சென்று வங்க கடலில் கலக்கின்றன் தென்பெண்ணையாறு வடஆற்காடு தென்னாற்காடு மாவட்டத்தை வளப்படுத்திகிறது. சேர்வராயண் மலையிலும் கல்லுராயன் மலையிலும் தோன்றும்சிற்றாறுகள் ஒன்றாக கூடி வெள்ளாறு என்ற பெயருடன் தென்னாற்காடு மாவட்டம் வழியாக வங்கக் கடலை அடைகின்றது.

“வான்பொய்ப்பினும் தான் பொய்யா மலைத்தலைய கடற்காவிரி”எனக் கவிஞர் போற்றும் காவிரியாறு தமிழகத்து ஆறுகளுள் மிகவுத் சிறப்பானது. இதற்கு பொன்னி என்ற பெயரும் உண்டு.குடகு நாட்டில் தலைக்காவிரி என்னுமிடத்தில் தோன்றி காவிரி மைசூர் மேட்டுநிலம் வழியாக சிவ சமுத்திரத்தை தாண்டி தமிழ் மண்ணில் தவழ்கின்றது. கோயம்புத்தூர் சேலம் மாவட்டங்களுக்கு எல்லையாக அமைந்து தர்மபுரியில் புகுந்து ஒகனேகல் அருவியாக வீழ்கின்றது. கோயம்புத்தூர் சேலம் தர்மபுரி திருச்சி தஞ்சை மாவட்டங்களை வளம் கொழிக்க செய்கின்றது.

சின்னாறு தேம்பூலாறு பவானி நொய்யல் திருமணிமுத்தாறு அமராவதி ஆகிய ஆறுகள் காவிரியில் கலக்கின்றன. ஏலமலையின் கிழக்கு சரிவில் தோன்றும் வைகையாறு மதுரை வட்டத்தை வளப்படுத்திகின்றன. கைவைத்தால் நீரளிக்கும் வைகை என்ற மரபினை இது தோற்றுவித்தது. சுருளியாறும் வராக நதியும் மஞ்சளாறும் சிற்றாறுகளாகும். ஆகத்திய மலையில் தோன்றும் தாமிரபரணியாறு திருநெல்வேலி மாவட்டத்தில் சில பகுதிகளை நெல்வேலியாக்குகின்றது.குமரி மாவட்டத்தில் ப.்.றுளியாறும் கோதையாறும் ஓடுகின்றன. பாண்டியன் அணை ஒன்றும் உள்ளது. சிற்றாறுகளுக்கு ஒப்பான நதிகள் வருடத்தில் பெரும்பகுதி நீரோட்டத்துடன் இருப்பதால் அம்மாவட்டத்தின் பசுமைக்கு இவைகள் காரணமாகின்றது.

**மழையும் பருவநிலையும்**

தென்மேற்க்கு பருவகாற்றும் வடகிழக்கு பருகாற்றும் தமிழ்நாட்டிற்கு மழையை கொடுக்கின்றன. தென்மேற்கு பருவகாற்று ஜீன் முதல் அக்டோபர் முடிய வீசி கேரள நாட்டிலும் தமிழகத்தில் குமரி மாவட்டத்திலும் பெருமழை பெய்விக்கின்றது. இதனால் சராசரி 80 அங்குலம் மழைபெய்கிறது.

தென்மேற்கு பருவகாற்று பாலக்காடு கணவாய் வழியாக நுழைந்து கோயம்புத்தூரிலும் பொள்ளாச்சிலும் நல்ல மழையை பெய்விக்கின்றது. தெற்கே கன்னியாகுமரி தென்காசியிலும் பருவமழை பெய்கின்றது. தென்மேற்கு பருவகாற்று ஓய்ந்தபின் வடகிழக்கு பருவகாற்று அக்டோபர் முதல் டிசம்பர் வரை வீசி நல்ல மழையை கொடுக்கின்றது. அக்டோபர் நவம்பர் மாதங்களில் அடைமழையை தருகிற பருவகாற்று பெருமழையை பெய்விப்பதில்லை.. நர்டடின் மழையின் அளவும் ஓராண்டிற்கு 40 அங.குலம் குறைவாக இருக்கிறது.பருவகாற்று சில சமயங்களில் அளவுக்கு மீறிய மழையை பெய்தும் கோரப் புயலை வீசியும் நாட்டில்

நாசத்தையும் அழிவையும் ஏற்படுத்துவதுண்டு. மழையே இல்லாமல் பஞ்சத்திற்கும் பயங்கர தொற்று நோய்களுக்கும் மக்கள் பலியாவதுண்டு. எனவேதான் பஞ்சமும் பட்டினியும் சாவும் வெள்ளமும் கொள்ளையும் மக்களுக்கு ஊழ்வினையில் நம்பிக்கையை உண்டாக்கியிக்கிறது. மக்களின் வாழ்க்கை கூறுகளை மாற்றி அமைக்க கூடிய இயல்பு பெருமழைக்கும் வறட்சிக்கும் குளிருக்கும் உண்டு. குறிப்பாக கோடை வெயிலின் கடுமை மக்களுடைய உழைக்கும் ஆற்றலை குறைக்கின்றது.

## தமிழக வரலாற்று ஆதாரங்கள்

பொதுவாக வரலாற்று ஆதாரங்கள் இரண்டு அடிப்படை பிரிவுகளாக பிரிக்கலாம் அவையாவன

- **தொல்பொருள் ஆதாரங்கள்**
- **இலக்கிய ஆதாரங்கள்கள்**

### தொல்பொருள் ஆதாரங்கள்

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பூமிக்கடியில் சில குறிப்பிட்ட இடங்களை ஆராய்ந்து பல வரலாற்று உண்மைகளை வெளிகொணர்ந்து உள்ளனர். தமிழகத்தில் அரிக்கமேடு ஆதிச்சநல்லூர் காவிரிபூம்ட்டினம் போன்ற இடங்களில் அகழ்வாராய்ச்சிகள் நடந்தன. ஆதிச்சநல்லூரில் பல முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ளன. இறந்தவாகளை தாழிகளில் வைத்துப்புதைத்தனர். அரிக்க மேட்டில் ரோமானிய நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டது. இது தமிழர்களுக்கும் ரோமானியருக்கும் இடையில் நடந்த வானணிப தொடர்பை உறுதிபடுத்துகிறது. கொற்கையில் நடந்த அகழ்வாய்வு இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள வரலாற்று உண்மைகளை நிரூபிக்கின்றது

1. கல்வெட்டுகளும் செப்பு பட்டயங்களும்
2. நாணயங்கள்
3. நினைவுச் சின்னங்கள்

### கல்வெட்டுக்களும் செப்பு பட்டயங்களும்

பொதுவாக பாறைகளின் மீது எழுதப்பட்டுள்ள செய்திகளை கல்வெட்டுகள் எனலாம். காலத்தால் அழியாத எழுத்து வளர்ச்சியைப் பற்றி அறிய உதவும் இவைகள் மன்னர்களின் காலம் படையெடுப்புகள் தானம் நிர்வாகம் சமூக வாழ்க்கை போன்ற விவரங்களை அறிய உதவுகின்றன. மேலும் ஒரு மன்னரின் ஆட்சி எவ்வளவு தூரம் பரவியிருந்தது போன்ற செய்திகள் கல்வெட்டுகள் மூலம் தெரியவருகின்றது. அசோகருடைய கல்வெட்டுகளும் காரவேல மன்னனுடைய ஹதிகும்பா கல்வெட்டுகளும் தமிழகத்தைப் பற்றி குறிப்பிடுகின்றன. மதுரையை சுற்றியுள்ள கோயில்களும் பல கல்வெட்டுகள் காண்பபடுகின்றன

பழங்காலத்தில் மன்னர்கள் ஆணைகள் தகவல்கள் மானியங்கள் மற்றும் சாசனங்கள் ஆகியவற்றை கல்தூண்கள் பாறைகள் கோயில் மற்றும் குகைச்சுவர்கள் ஆகியவறற்றில் பொறித்து வைத்தனர். மண்டகப்பட்டு கல்வெட்டு பல்லவ மன்னன் முதலாம் மகேந்திர வர்மனின் சாதனைகளையும் அவனது பட்டப்பெயர் விசித்திர சித்தன் என்பதையும் குறிப்பிடுகின்றது. குடுமியான் மலை கல்வெட்டு பல்லவர் காலத்தில் இசைக்கலை வளர்ச்சி பற்றியும் அக்காலத்து இசைக்கருவிகள் பற்றியும் குறிப்பிடுகின்றது. திருச்சிராப்பள்ளி

குகைக்கோயில் கல்வெட்டு குணபரா என்ற பல்லவ மன்னன் சோழ நாட்டின் சில பகுதிகளை ஆண்ட செய்தியை குறிப்பிடுகின்றது. மானூர் கல்வெட்டு பாண்டியர் காலத்தில் மானூர் என்ற கிராமம் கிராம சபை என்ற அமைப்பில் நிர்வகிக்கப்பட்டு வந்த செய்தியை குறிப்பிடுகின்றது. திருச்சிராப்பள்ளி கல்வெட்டு பாண்டிய மன்னன் மாறன் சடையனின் சாதனைகளை குறிப்பிடுகின்றது. ஆனைமலை கல்வெட்டு அழகர்மலை கல்வெட்டு இருக்கன்குடி கல்வெட்டு திருப்பரங்குன்றம் கோயில் கல்வெட்டுகள் பாண்டியர்கள் வரலாறு பற்றி கூறிகின்றது. திருப்பதூர் கல்வெட்டு முதலாம் ராஜ ராஜசோழன் பாண்டிய நாட்டை வெற்றி கொண்ட செய்தியை குறிப்பிடுகின்றது. புராந்தகச் சோழனின் உத்திர மேரூர் கல்வெட்டு சோழர்களின் கிராம நிர்வாகம் பற்றி கூறுகின்றது. முதலாம் ராஜ ராஜனின் தஞ்சை பெரிய கோவில் கல்வெட்டுகள் வீர ராஜேந்திரன் காலத்து திருமூக்கூடல் கல்வெட்டு மூன்றாம் ராஜேந்திரனின் திருத்தவபுர கல்வெட்டுகள் சோழர்களைப் பற்றி நமக்கு தருகின்றது. கல்வெட்டுகளில் செய்திகளை பொறித்தது போன்று மன்னர்கள் அரசானைகள் மானியங்கள் தானியங்கள் கொடுத்த செய்திகளை செப்புபட்டயங்களில் செதுக்கி வைத்தனர். வேள்குடி செப்பேடுகள் பாண்டிய மன்னனின் தானம் மற்றும் களப்பிரர்கள் பற்றி தெரிவிக்கின்றது. சின்னமன்னூர் சிறிய செப்பேடுகள் தளவாய்புரம்பட்டயம் சிவகாசி பட்டயம் போன்றவைகளும் பாண்டியர் ஆட்சி பற்றி குறிப்பிடுகின்றது. திருவாலங்காடு செப்பேடுகள் கரந்தை செப்பேடுகள் அன்பில் செப்பேடுகள் மற்றும் லெய்டன் செப்பேடுகள் சோழ மன்னர்களைப் பற்றி தெரிவிக்கின்றது. காசக்குடி பட்டயம் குர்ரம் பட்டயம் உதயேந்தியம் பட்டயம் போன்றவைகள் பல்லவ மன்னர்களின் சாதனைகளை விளக்குகின்றது. செப்பேடுகள் அரசியல் நிலையோடு சமூக பொருளாதார நிலைகளையும் அறிய உதவுகின்றன.

**நினைவுச் சின்னங்கள்**

தமிழகத்தில் முதன்முதலில் அகல்வாரய்ச்சி நடத்தப்பட்ட இடம் பாண்டிசேரிக்கு அருகிலுள்ள அரிக்கமேடு ஆகும். 1945 ஆம் ஆண்டு சர்மாடிமர்வீலர் என்பவரால் இப்பணி தொடங்கப்பட்டது. இங்கு சுடுமண்ணால் செய்யப்பட்ட அழகிய ஆண்பெண் உருவங்கள் வண்ணம் தீட்டப்பட்ட பளபளப்பான பானைகள் தந்த பொருட்கள் சுடுமண் காதணிகள் சங்கு வளையல்கள் போன்றவைகள் கண்டெடுக்கப்பட்டன. இவை தமிழர்களின் பண்பாட்டு பெருமையை உணர்த்துகின்றன. மேலும் ரோமாபுரியுடன் இருந்து வந்த வணிகத் தொடர்பும் இங்கு கிடைக்கப்பட்ட நினைவு சின்னங்கள் மூலம் தெரிய வருகிறது. அடுத்து திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூரில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியில் மட்பாண்டங்கள் எலும்பு கூடுகள் கல்மணி சங்கு வளையல்கள் மண்டை ஓடுகள் வெண்கல்ப பொருட்கள் முதுமக்கள் தாழிகள் போன்றவைகள் கண்டெடுக்கப்பட்டன.இங்கு சவக்குழியினுள் குதிரை லாடம் கத்தி ஈட்டிமுனை அரிவாழ் போன்ற பொருட்கள் காணப்படுகின்றன. இதனால் இறந்தவர்கள் போர்வீரர்களாக இருக்கலாம் அல்லது வணிகர்களாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. மட்பாண்டங்கள் சவடெக்கத்தின் போது சடங்குகளுக்கு பயன்பட்டு இருக்கலாம் ஆதிச்சநல்லூரில் நடத்தப்பட்ட அகழ்வாராச்சி மூலம் இப்பகுதியில் கடைகற்கால மக்கள் வாழ்ந்த வரலாற்று உண்மை தெரிய வருகிறது.

**நாணயங்கள்**

தமிழக வரலாற்றை அறிய உதவும் ஆதாரங்களில் நாணயங்களின் பங்கு மிகவும் சிறந்தது. இந்தியாவில் தங்கம் வெள்ளி தாமிரம் போன்றவற்றால் ஆன பல நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளன. பாரசீகர்கள் நம் நாட்டிற்கு வந்த பின்னர்தான் நாணயப் புழக்கம் நடைமுறைக்கு வந்ததாக கருதுகின்றனர். எழுத்துகளும் உருவங்களும் பொறிக்கப்பட்ட வட்ட வடிவமான நாணயங்களை மக்கள் பயன்படுத்தினர். பண்டைய காலத்தில் தமிழகத்தை ஆட்சி செய்த மன்னர்களின் குறிப்பிட்ட காலவரை முறைறை நாணயங்கள் துல்லியமாக உணர்த்துகின்றன. மேலும் அரசியல் பொருளாதார சமூக நிலைகளையும் நன்கு உணர்த்துகின்றன. தமிழகத்தில் அயல்நாட்டு நாணயங்கள் மதுரை கோயம்புத்தூர் அரிக்கமேடு ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பல்லவர் மற்றும் பாண்டியர் காலத்து நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. உத்தம சோழன் இரண்டாம் ஆதித்தன் முதலாம் ராஜேந்திரன் முதலாம் இராசாதிராசன் முதலிய சோழ மன்னர்களின் நாணயங்களும் கிடைத்துள்ளன. சோழ நாணயங்கள் சிலவற்றில் மையத்திலிருந்த ஒரு விதானத்தின் கீழே அமர்ந்திருக்கிற புலியையும் பக்கத்தில் ஒருமீனையும் அடியில் ஒருவில்லையும் காண்கிறோம். மதுரையை சிறிது காலம் ஆண்ட முஸ்லிம்கள் தங்கம் வெள்ளியுடன் மற்ற உலோகங்களை கலந்து செம்பு நாணயங்களை வெளியிட்டனர். நாணயங்களின் எடை தன்மை அமைப்பு ஆகியவற்றின் மூலம் அன்றைய பொருளாதார நிலையையும் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள சின்னங்கள் மற்றும் எழுத்துகள் மூலம் அரசியல் வரலாற்றையும் மக்கள் நிலையையும் அறிய முடியும்.

இவை தவிர தமிழ்நாட்டில் செங்கற்பட்டு மாவட்டத்தில அத்திரம்பாக்கம் குடியம் சாதனூர் குன்றத்தூர் அமிர்தமங்கலம் வசவ சமுத்திரம் காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலும் தென்னாற்காடு மாவட்டத்தில் செங்னமேட்டிலும் திருச்சி மாவட்டத்தில் திருக்காம்புலியூர் அலகரை உறையூர் கரூர் போன்ற இடங்களிலும் தஞ்சை மாவட்டத்தில் காவிரிபூம் பட்டினத்திலும் அகழ்வாராச்சிகள் நடைபெற்றுள்ளன. இவ்விடங்களில் கிடைக்கப்பட்ட பல பழங்கால நினைவுசின்னங்கள் பண்டைய வரலாற்றை அறிய உதவும் சிறந்த ஆதாரமாக விளங்குகின்றன.

**இலக்கிய சான்றுகள்**

**இலக்கிய சான்றுகளை இரண்டு வகைகளாக பிரிக்கலாம். அவை:**

உள்நாட்டு இலக்கிய சான்றுகள்

வெளிநாட்டு இலக்கிய சான்றுகள்

**உள்நாட்டு இலக்கிய சான்றுகள்**

சங்ககால இலக்கியங்கள் சங்ககால அரசியல் பொருளாதார சமூக நிலைகளை அறிவதற்கு பெரிதும் உதவுகின்றன. சங்க கால இலக்கியங்களான தொல்காப்பியம், எட்டுதொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவை மூலம் பல வரலாற்றுச் செய்திகள் கிடைக்கின்றன.கலம்பகம், உலா, பரணி, கோவை போன்ற சிற்றிலக்கியங்களிலும் வரலாற்று நிகழ்ச்சிகள் பல இருக்கின்றன. பல்லவ மன்னனான மூன்றாம் நந்திவர்மனை பாடும்

நந்தி கலம்பகமும்,முதலாம் குலோத்துங்க சோழனைப் பாடும் கலிங்கத்துப்பரணியும், ஒருவர் பின் ஒருவராக அரியணையேறிய விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் ஆகியோரைபாடும் மூவருலாலும், பாண்டிய அரசர்களை பாடும் பாண்டிக் கோவையும் பலவரலாற்று தகவல்களை தருகின்றன. மதுரை தல வரலாறு, கொங்குதேச ராசக்கள் சரித்திரம், இராமப்பையன் அம்மானை, தேசிங்கு ராசன் பாடல்கள்,கங்காதேவியின் மதுரா விஜயம், பாஞ்சாலங்குறிச்சி சரித்திரம் போன்றவைகளிலும் வரலாற்றுசெய்திகள் கிடைத்துள்ளன.

**அயல்நாட்டு இலக்கியச் சான்றுகள்**

கௌடில்யர், வாத்சாயனா, பதஞ்சலி காளிதாசர், அசுவகோசர் ஆகியோர் தமிழ்நாட்டைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். மகாவம்சம், தீபவம்சம் போன்றவற்றிலும் தமிழகம் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. மெகஸ்தனிஸ் பாண்டியர் அரசுப் பற்றி முதன் முதலில் எழுதிய அயல்நாட்டவர் ஆவார். கிரேக்க வரலாற்றசிரியர் ஹெரடோட்டசும் தாலமியும்தமிழ் நாட்டைப் பற்றி குறிப்பிடுகின்றனர். பெரிப்ளசின் எரித்தியக் கடல் என்ற கிரேக்க நூலிலும் தமிழக வரலாற்று செய்திகள் உள்ளன. பிளஸ்டஸ் என்ற கிறிஸ்துவத் துறவியும் தன்னுடைய நூலில் தமிழ் நாட்டடைப் பற்றி குறிப்பிடுகின்றார். யுவான்சுவாங் என்ற சீனப் பயணியின் பயணக் குறிப்புகளில் பல்லவர் கால தமிழகம் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. சீனத்திற்கு அனுப்பப்பட்ட சோழர்களின் தூதுக்குழுக்களைப் பற்றிய குறிப்புகள் சீன நாட்டின் சாங் வரலாறுகளில் கூறப்பட்டுள்ளது.வெனிஸ் நாட்டுப் பயணி மார்க்கோ போலோ முஸ்லீம் பயணி இபின் பாதூதா ஆகியோரின் குறிப்புகளில் வரலாற்று செய்திகள் பல கிடைத்துள்ளன. வீரமா முனிவர் போன்ற கிறிஸ்துவ பாதிரிமார்கள் எழுதியுள்ள நூல்கள், குறிப்புகள், அறிக்கைகள் ஆகியவற்றலும் தமிழ்நாட்டைப் பற்றிய பல செய்திகள் சொல்லப்பட்டுள்ளன். இந்தியாவுடன் வியாபாரம் செய்ய வந்த ஐரோப்பிய கம்பெனிகள், ஆங்கில பிரெஞ்சு அரசுகளின் ஆவணங்கள் ஆகியவற்றிலும் தமிழ்நாட்டு வரலாற்று செய்திகள் காணப்படுகின்றன.

## சங்க கால இலக்கியங்கள்

சங்க காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் சங்க கால அரசியல், பொருளாதார, சமய, சமுதாய வரலாற்றை அறிந்து கொள்வதற்குரிய மிகச் சிறந்த ஆதாரமாக திகழ்கிறது. பாண்டியமன்னர்கள் சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த செய்தியை இவ்விலக்கியங்கள் தெளிவாக கூறுகின்றது. மேலும் மன்னர்கட்கும் புலவர்கட்கும் இருந்த உறவுமுறை எவ்வாறு தமிழ் வளர்க்கப் பயன்பட்டது என்பதையும் இவ்விலக்கியங்கள் வாயிலாக அறியலாம்.

**அகத்திய நூல்**

முச்சங்கங்களுக்கு பொதுவாகவும் மூல நூலாகவும் விளங்கிய அகத்திய நூல் 1200 சூத்திரங்களைக் கொண்டது. இது எழுத்து, சொல், பொருள், யாப்பு சந்தம், வழக்கியல் போன்றவையும் பிறவும் கொண்டு இருந்தது. ஆகத்திய நூல் தற்போது காணக் கிடைக்காவிட்டால்அவற்றை கையாண்ட பாக்கள் கிடைக்கின்றன.

**தொல் காப்பியம்**

இதன் ஆசிரியர் தொல்காப்பியர். கடைச் சங்க நூல்கட்கு பிந்திய நூலாகிய தொல்காப்பியம் 610 பாக்களை உள்ளடக்கியதாகும். எழுத்ததிகாலம், சொல்லதிகாலம்,

பொருளதிகாரம் என மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. எழுத்திகாரத்திற்கு இளம் பூரணரும், சொல்லதிகாரத்திற்கு சேனதுவணயரும் பொருளதிகாரத்திற்கு நச்சினார்க்கினியரும் உரை எழுதியுள்ளனர். ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களை கொண்டது.

கடைசசங்க நூல்களை பாட்டு, தொகை என்று பிரித்து கூறுவர். ஆவை பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்பவைகளாகும்.

**பத்துப்பாட்டு**

திருமுகாற்றுப்படை, சிறுபாணற்றுப்பற்று, பெரும்பாணாற்றுப்படை, பொருணராற்றுப்படை, மலைபடுகம், பட்டினப்பாலை, முல்லைப்பாட்டு குறிஞ்சிப்பாட்டு, மதுலைக்காஞ்சி, நெடுநேல்வாடை ஆகிய அனைத்தும் பத்துப்பாட்டின் கீழ் வரும் நூல்கள் ஆகும். இவற்றில் முதல் ஐந்து பாட்டுக்களும் ஆற்றுப்படை வகையை சார்ந்தது ஆகும். ஆறு முதல் எட்டு வரையுள்ள பாட்டுகள் அகப்பொருள் பற்றி கூறுகின்றது. கடைசி இரண்டு பாட்டுகளும் புறப்பொருள் பற்றி குறிப்பிடுகின்றன.

**திருமுகாற்றுப்படை**

இதில் முருகப்பெருமானின் ஆறுபடை வீடுபளைப் பற்றி பாடப்பட்டுள்ளது. இது ஆறு பகுதிகளைக் கொண்டது. ஆசிரியப்பாவால் அமைந்த 317 அடிகளைக் கொண்ட இந்நூல் நக்கீரரால் பாடப்பட்டுள்ளது. இப்பாட்டு திருவருளால் வீடுபெற்ற ஒருவன் வீடு பெற விரும்கிய இரவலன் ஒருவனை முருகன் பால் ஆற்றுகப்படுத்துவதாக அமைந்துள்ளது.

**சிறுபாணற்றுப்படை**

இது இடைக்கால நாட்டைச் சார்ந்த நல்லூர் நத்தத்தனார் என்ற புலவரால் பாடப்பட்டுள்ளது. 269 அடிகளைக் பொண்ட இந்நூல் பேகன், பாரி, காரி, ஆய், அதியமான் நள்ளி போன்ற கடையெழுவள்ளல்களைப் பற்றி குறிப்பிடுகின்றது.

**பெரும்பாணாற்றுப்படை**

இது ஐநூறு அடிகளைக் கொண்டது. இந்நூல் பரிசில் பெற்ற பாணன் ஒருவன் மற்றொரு பாணனை தொண்டைமான் இளந்திரையன்பால் ஆற்றுப்படுத்துவதாக கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியுள்ளார்.

**பொருனராற்றுப்படை**

இந்நூல் முடத்தாமற்கண்ணியார் என்னும் பெண்பால் புலவரால் இயற்றப்பட்டுள்ளது. கரிகால் பெருவளத்தானின் பெருமையைக் கூறும் இந்நூல் 248 வரிகளைக் கொண்டது.

**மலைபடுகடாம்**

இது 584 அடிகளைக் கொண்டது. கூத்தன் ஒருவனை மன்னன் தன்னிடம் செல்லுமாறு ஆற்றுபடுத்துவதாக இரணிய முட்டத்தில் பெருங்குன்றூர் பெருகௌசிகனார் பாடியுள்ளார்.

**பட்டினப்பாலை**

இந்நூல் பாலைத் திணையையும் காவிரிபூம்பட்டினத்தின் சிறப்பையும் கூறுகின்றது. கடியலூர் உருத்திரங் கண்ணாரால் பாடப்பட்டுள்ள இந்நூல் 301 அடிகளைக் கொண்டது. சங்க பால வாணிபம் பற்றி இந்நூல் அதிகமாக குறிப்பிடுகின்றது.

**முல்லைப்பாட்டு**

இது காவிரிபூம்பட்டினம் பொன் வணிகனார் மகன் நம்பூதனரால் பாடப்பட்டுள்ளது. போரிலே புண்படும் வீரர்கட்கு ஊக்கமூட்டும் அளவில் உள்ள மன்னரின் வீரதீர பேச்சுக்கள் மற்றும் பாசறை அமைப்புக்கள் பற்று பேசும் இந்நுல் 403 அடிகளையுடையது.

**குறிஞ்சிப்பாட்டு**

இது கபிலரால் பாடப்பட்ட 361 அடிகளை கொண்ட நூலாகும் தலைவியின் களவொழுக்கத்தைப் பற்றி செவிலியிடம் கூறித் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யக் கூறுவதாகப் பாடப்பட்டுள்ளது இந்நூல் நிலச் சிறப்பு பற்றியும் பேசுகின்றன.

**மதுரைக் காஞ்சி**

இந்நூல் மாங்குடி மருதநாரால் பாடப்பட்டுள்ளது. 782 அடிகளைக் உடையது. இளமையும், யாக்கையும், செல்வமும் நிலையற்றவை என்னும் காஞ்சி திணையை விவரித்து கூறுவதால் இது மதுரைக் காஞ்சி எனப்பட்டது. மதுரை மக்களின் வாழ்க்கை முறையையும் இந்நூல் தெளிவுபடக் கூறுகின்றது.

நற்றிணை, குநற்தொகை, ஐங்குநுறூறு, அகநானூறு புறநானூநு, பரிபாடல் ஆகியவை தொகைநூல்கள் என்று அழைக்கிப்படுகின்றது. இவற்றில் முதல் ஐந்து நூல்களும் அகப்பொருள் பற்றி குறிப்பிடுகின்றன. ஆறு மற்றும் ஏழாவது நூல்கள் புறப்பொருள் பற்றி கூறுகின்றன. கடைசி நூலான பரிபாடல் அகம்,புறம் ஆகிய இரண்டு பற்றியும் குறிப்பிடுகின்றது.

**நற்றினை**

இது ஐந்திணைகளைப் பற்றி குறிப்பிடுகின்றது. 400 பாடல்களைக் கொண்டது. பன்னாட்டு தந்த பாண்டியன் வழுதி இந்நூலை தொகுத்துள்ளார். சுமார் 267 புலவர்கள் இந்நூலை பாடியுள்ளதாக கருதுகின்றது.

**குறுந்தொகை**

இந்நூல் 400 பாக்களை கொண்டுள்ளது. 275 புலவர்கள் இந்நூலை இயற்றி உள்ளனர். ஆதிமந்தியார், இறையனார், வெள்ளிவீதியார் ஆகியோரின் பாடல்கள் இந்நூலில் இடம் பெற்று உள்ளது. பூரிக்கோ இந்நூலை தொகுப்பித்தவராகவும், தப்பூரி குடிக்கிழார் இதனை தொகுத்தோராகவும் கருதப்படுகிறார். கணவனுக்கு அமுது படைத்து களிப்புறும் தலைவியின் பொறுப்பு மற்றும் பண்டைத் தமிழரின் இல்வாழ்க்கை சிறப்பு போன்றவைகளை எடுத்துக் கூறுகின்றது.

**ஐங்குறுநூறு**

இது 500 பாடல்களைக் கொண்டது. ஐந்து புலவர்களால் தலா 100 பாடல்கள் வீதம் பாடப்பட்டுள்ளது. ஓரம்போசியார், கம்மூவனார், கபிலர், ஓதலாந்தையார், பேயனார் ஆகியோர் பாடல்களை இயற்றியுள்ளனர். கூடலூர் கிழார் இந்நூலின் தொகுப்பாசிரிர் ஆகும்.

**அகநானூறு**

இது 400 பாக்களைக் கொண்டுள்ளது. 140 புலவர்கள் இதனை பாடி உள்ளனர். இந்நூலை தொகுத்துவர் உருதிர சன்மனாா. தொகுப்பித்தோர் பாண்டிய மன்னன் உக்கிரப் பெருவழுதியாவார்.

**கலித்தொகை**

இது 149 பாடல்களைக் கொண்டது. கலிப்பாக்களின் தொகுப்பாக இந்நூல் காணப்படுகின்றன. ஐந்திணைப் பற்றி கூறுகின்றன. குறிஞ்சி நிலம் பற்றி கபிலரும் முல்லைப் பற்றி சோழ நல்லுருத்திரனும், மருதத்தைப் பற்றி மருனிள நாகனரும், நெய்தல் பற்றி நல்லத்துவனாரும், பாலைப் பற்றி பெருங்கடுங்கோவும் பாடியுள்ளார்.

**பதித்துப்பற்று**

இது 100 பாடல்களைக் கொண்டது. சேர மன்னர்கள் சிறப்பைக் கூறுகின்றது. பத்து புலவர்களால் பாடப்பட்டுள்ளது. இமயவரம்பன், நெடுஞ்சேரலாதன், களங்காய்க் கண்ணி நறுமுடிச்சேரல், சேரன் செங்குட்டுவன், பெருஞ்சேரல் இரும்பொறை போன்றோர்களின் வீரதீரச் செயல்களைப் குறிப்பிடுகின்றது. இதன் முதல் மற்றும் கடைசி பத்து பாக்களும் கிடைக்கவில்லை. தொகுத்தவர் தொகுப்பித்தவர் பற்றிய தகவல்களும் குறிப்பிடவில்லை.

**புறநானூறு**

இது 400 பாடல்களைக் கொண்டது. சுமார் 156 புலவர்களால் பாடப்பட்டுள்ளது. கபிலர், பரணர், இரும்பிடத்தலையார் போன்ற புகழ்மிக்க புலவர்கள் இந்நூலைப் பாடிய புலவர்களின் பட்டியலில் அடங்குவர். இந்நூல் சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் வெற்றியையும் பேகன், பாரி, அதியமான், குமணன், நள்ளி போன்ற குறுநில மன்னர்களின் வீரத்தையும், கொடைத் தன்மையும் கூறுகின்றது.

**பரிபாடல்**

இது 70 பாடல்களைக் கொண்டது. ஆனால் தற்போது 22 பாடல்களே கிடைக்கின்றது. பரிந்து செல்லும் ஓசையை உடைய இந்நூல் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் இசை அமைத்தவரின் பெயரைக் காணலாம். இப்பாடல்கள் அனைத்தும் திருமால், முருகன்,வையை ஆகிய கடவுள்களைப் பற்றி பாடப்பட்டுள்ளது.

திருக்குறள், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம் ஆசாரக்கோவை, பழமொழிகள், சிறுபஞ்சமூலம், ஏலாதி, கார் நாற்பது, ஐந்திணை50,கைநிலை, நாலடியார் முதலியவை அற ஒழுக்கத்ழத வலியுறுத்துகின்றன. இவை காலத்தால் பிந்தியவைகளாகும்.

**இரட்டைக் காப்பியங்கள்**

சங்க காலத்தின் இறுதியில் இயற்றப்பட்ட சிலப்பதிகாரம், மணிமேலை என்ற இரண்டும் இரட்டைக் காப்பியங்களாகும். அவற்றின் மூலம் சங்க கால இறுதியில் தமிழகத்தில் காணப்பட்ட அரசியல், சமய, சமுதாய, பொருளாதார மற்றும் கலை வளர்ச்சிப் பற்றி அறியலாம்.

தமிழில் முதன் முதலில் எழுதப்பட்ட காவியமான சிலப்பதிகாரம் புகார் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்ற மூன்று காண்டங்களைக் கொண்டது. இசை, நடனம், கலை, சமயம், வணிகம், நீதி, கற்பு முதலியவற்றைப் பற்றி சிறப்புறக் கூறுகின்றது.

பௌத்த சமயக் கருத்துக்களைப் பற்றி அதிகமாக கூறும் மணிமேகலையை கடல் வாணிகன் சாத்தனார் எழுதி உள்ளார். சமண சமய கருத்துக்கள் காப்பிய தலைவியான மணிமேகலை மூலம் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூல் முழுவதும் பல

அறக்கருத்துக்களை கூறப்பட்டுள்ளது. இந்நூலை தமிழில் எழுந்த முதல் சமய காப்பியம் என்றும் குறிப்பிடுவர்.

**சங்ககால மன்னர்கள்**

**செங்குட்டுவன்**

சேர மன்னர்களிடையே மிகவும் புகழ்பெற்றவன் சேரன் செங்குட்டுவன் ஆவான்.அவனது போர் வெற்றிகளைப் பற்றியும் பரணர் பாடியுள்ளார். இவன் தனது தந்தையைக் காட்டிலும் வீரமிக்கவனாக விளங்கினான். சில கடற்கொள்ளையர்களை முறியடித்ததால் கடற்பிறகோட்டிய செங்குட்டுவன் என குறிப்பிடப்படுகின்றான். தனது வலிமை மிகுந்த ஈட்டியின் மூலமாக கடலையே வென்றான் செற்குட்டுவன் என்று பரணர் குறிப்பிடுகின்றார். மோகூரை ஆண்ட மன்னனை செற்குட்டுவன் முறியடித்ததாக குறிப்பு உள்ளது. அந்தப் போரில் பல சிற்றரசர்கள் செங்குட்டுவனை எதிர்த்து தோற்றார்கள். சோழராலும், பாண்டியராலும் ஆதரிக்கப்பட்ட நன்னன் என்பவனையும் செங்குட்டுவன் தோற்கடித்தான்.

சேரன் செங்குட்டுவன் மிகச் சிறப்புப் பெறும் வகையில் இருந்தது அவனது வடபுலம் நோக்கிய படையெடுப்பாகும். வட நோக்கிய படையெடுப்பில் கொடுகூர் செங்குட்டுவனின் கையில் வந்தது. அந்நாட்டு மன்னனான் பழையன் என்பவனை முறியடித்தான். கனகவிசயர் எனும் இரு வடபுலத்து மன்னர் களை வென்று இமயம் வரை சென்றான் செங்குட்டுவன் பத்தி கடவுள் கண்ணகிக்கு இமயந்தில் கல்லெடுத்து அதனைக் ஆற்றில் நீராட்டினன். வடபுலத்து மன்னர்களைச் சுமக்க அக்கல்லை சேர நாடு கொண்டு வந்தான். அங்கு கண்ணகிக்கு கோயில் கட்டினான். பத்தினித் தெய்வ வழிபாடு இவனால் கொண்டுவரப்பட்டது. இவனது வடபுலத்து வெற்றிகள் பற்றியசெய்திகள் பதித்துப்பற்று உரைக்கிறது. சிலப்பிகாரம் அவற்றை உறுதி செய்கிறது. கண்ணகியின் கோயிலுக்கு சிறப்பான விழா எடுத்தான் செங்குட்டுவன். அவ்விழாவிற்கு ஈழமன்னன் வந்திருந்தான். இந்தச் செய்தி சிலப்பதிகாரம் மற்றும் இலங்கை மகாவம்சம் ஆகியவற்றால் உறுதி செய்யப்படுகிறது. செங்குட்டுவன் தனது அரசியுடன் வேட்டையாட சென்றதாக அங்கு வேடர்களின் தலைவன் கண்ணகி பற்றிய செய்தியை கூறியதாகவும் தெரிய வருகிறது. கண்ணகியின் வாழ்க்கையை காவியமாக்குமாறு துறவியாகிவிட்டதனது இளவல் இளங்கோ செங்குட்டுவன் கேட்டுக் கொண்டான். அதன் காரணமாக சிலப்பதிகாரம் மலர்ந்தது.

போர் வெற்றிகளில் சிறந்தவனாக இருந்தான் செங்குட்டுவன். வலிமைனான கடற்படையைப் பெற்றிருந்தான். வடபுலம் சென்று மன்னர்களின் மணி முடிகளைப் பறித்தான். பல நாட்டு மன்னர்கள் அவனிடம் மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார்கள் என கயவாகுவின் வருகை சான்றளிக்கிறது. பத்தினி வழிபாடுபழக்கத்தை இந்த மண்ணில் துவங்கியவன் செங்குட்டுவன். இவ்வாறு பல சிறப்புகளைப் பெற்ற செங்குட்டுவன் தென்னகத்தின் வரலாற்றில் என்றும் மறுக்கமுடியாத இடத்தைப் பெறுகிறான். அவனது காலம் ஏறத்தாழ 55 ஆண்டுகாலம் நீடித்தது.

**கரிகாற்சோழன்**

கரிகாலன் முற்காலச் சோழர்களிடையே மிக முக்கியமானவனாகக் திகழ்கிறான். குரிகாலன் மிகச் சிறியவனாக இருக்கும்போதே அவனது தந்தை காலனைச் சந்தித்து விண்ணுரகு எய்தியதாக சிலரும் கரிகாலன் கருவாக இருக்கும்போதேஅவனது தந்தை

மறைந்தான் எனச்சிலரும் கருதுகின்றனர். அரியணை மீது ஆசைக் கொண்ட பகைவர்கள் கரிகாலனை சிறை வைத்தனர். சிறையிருந்த கரிகாலனை கொல்ல சதி செய்து அவனது அறைக்குத் தீ வைக்கப்பட்டது.அதிலிருந்து தப்பிய போது ஒரு கால் கருகியதால் கரிகாலன் என அவன் அழைக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது. போர்களத்தில் எதிரிகளின் கரிகளுக்கு(யானைகட்கு) காலனாக இருந்ததால் கரிகாலன் எனப்பெயர் பெற்றான் என்பாரும் உண்டு.

**கரிகாலன் காலம்**

கரிகாலனின் காலம் பற்றி வெவ்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. கரிகாலன் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தான் எனச் சிலர் கருதுகிறார்கள். சேரன் செங்குட்டுவன் கரிகாலனின் மகள் வழிப் பேரன் எனும் கருத்தைச் சிலர் வலியுறுத்துகின்றனர். சிலப்பதிகாரத்தில் காவிரிப்பூம்பட்டினம் பற்றியசெய்திகளில் குறிப்பிடப்படும் சோழ மன்னன் கரிகாலனே என்பாரும் உண்டு.எனவே சிலப்பதிகார கதையின் தொடக்கத்தில் சோழ நாட்டை ஆண்டவன் கரிகாலன் எனச் சொல்லப்படுகிறது. கரிகாற்சோழனின் காலம் மிக முந்தியது எனும் கூற்றை பி.டி. சீனிவாச அய்யங்கார் மறுக்கிறார். தாலமியின் குறிப்புகளில் கரிகாலன் பற்றிய செய்திகள் காணப்படவில்லை என வாதாடுகிறார். மேலும் சில பொற்றிப்புச் சான்றுகளின் வாயிலாகக் கரிகாலனின் காலம் நான்காம் நூற்றுண்டாகவே இருக்க முடியும் எனும் முடிவிற்கு வருகிறர்.

**கரிகாலனின் போர் வெற்றிகள்**

கரிகாலன் மிகத் திறமையான அரசனாகவும் சிறந்த போர் வீரனாகவும் திகழ்ந்தான். வெண்ணி எனுமிடத்தில் பெருஞ்சேரலாதனையும் அவனை ஆதரித்த வேளிர்களையும் முறியடித்தான் எனும் செய்திஇலக்கியங்களின் வாயிலாகத் தெரிகிறது. இதில் குறிப்பிட்டுள்ள ‘வெண்ணி’ என்பது கோயில்வெண்ணி எனும் பெயரில் இன்றும் தஞ்சைக்கருகில் உள்ளது. இப்போரில் அவனால் முறியடிக்கப்பட்டு முறியடிக்கப்பட்ட அரசர்கள் வடக்கிருந்து உயிர் நீத்ததாகவும் செய்தியுள்ளது. சேரர், பாண்டியர், ஒளியர், அருவர் ஆகிய தென்மண்ணின் வேந்தர்களை வென்று வடபுலம் நோக்கியும் தன் வாளினை வீசினான்கரிகாலன். இன்றையக் கருநாடக மாநிலத்தின் சில பகுதிகளை அவன் வென்றாதாகக் குறிப்புகள் உள்ளன. தெலுங்கு நாட்டிலும் கரிகாலனின் போர் வாள் வெற்றிகளைத் தேடியது எனும் செய்தி சில பொறிப்பு சான்றுகளால் உறுதி செய்யப்படுகிறது. கரிகாலன் தெலுங்கு நாட்டை வென்றதன் காரணமாக பிற்காலத்தில் தெலுங்குச் சோழர்கள் எனும் பிரிவினர் தோன்றினர் என்பாரும் உண்டு. தென்னகத்து மணிமுடிகளை பணிய வைத்த பின்னர் கரிகாலன் பனிமூடிய இமயம் வரை படையெடுத்துக் கொண்டு இமயத்தின் உச்சியில் புலிச்சின்னத்தைப் பொறித்து திரும்பியதாகவும் கூறப்படுகிறது. ஈழநாட்டின் மீதுகரிகாலன் படையெடுத்து சென்று வென்று பல்லாயிரக்கணக்கான போர்கைதிகளுடன் திரும்பினான்.அவர்களைக் கொண்டு காவிரியின் னரைகளை உயர்த்தினான் எனவும் கூறப்படுகிறது. இவ்விரண்டு செய்திகளையும் மறுப்பாரும் உண்டு. கரிகாலன் வீரம்மிக்க மன்னனாக இருந்தான் என்பதில் ஐயமில்லை.

**பிற செயல்கள்**

கரிகாலன் காலத்தில்தான் சோழநாட்டின் தலைநகர் உறையூரிருந்து காவிரிபூம்பட்டினத்திற்கு மாற்றப்பட்டிருக்கவேண்டும். கரிகாலன் புலவர்கட்கு நல்லாதரவு

நல்கினான். முடத்தாமக் கண்ணியார் என்பாரது செய்யுள் இதனை தெளிவுப்படுத்துகிறது. கரிகாலன் தான் கைப்பற்றிய மண்ணையும் வளப்படுத்தினான். புல இடங்களில் காடுகளை அழித்து மக்களை குடியேற்றி விளை நிலங்களை உருவாக்கினான். தனது கடற்படையை வலிமையானதாக்கவும் கடல் வாணிபத்தைப் பெருக்கவும் கரிகாலன் காவிரிபூம்பட்டினத்தை தலைநகராக ஆக்கியிருக்க வேண்டும். அதனை எவ்வாறு அமைத்தான் பற்றிப் பட்டினப்பாலை உரைக்கிறது. கரிகாலன் காலத்தில் தமிழகத்தில் சமணமும் பௌத்தமும் அறிமுகமாயின. ஆரியப் பண்பாட்டை இம்மண்ணில் அறிமுகப்படுத்தியவனும் கரிகாலனே. யாகங்கள் போன்ற ஆரியச் சடங்குகளை கரிகாலன் அறிமுகப்படுத்தனான்.

### ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன்

முந்திய கால பாண்டிய மன்னர்களிடையே மிக முக்கியமானவன் ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன் ஆவான். அவனது சிறப்பு பட்டத்திலிருந்து அவன் ஒரு ஆரியப்படையை முடியடித்திருக்க வேண்டும் என அறிய முடிகிறது. எனினும் அவனது வெற்றி பற்றி விவரங்கள் இல்லை. அவன் கல்வி பற்றி பாடியுள்ள செய்யுள் அவனது புலமைக்கு சான்றாக விளங்குகிறது. சிலப்பதிகாரத்தின் மூலம், அவசரத்தில் கோவலனைக் கள்வன் என எண்ணித் தலையை வெட்ட உத்திரவிட்ட மன்னன் இவனாதிருக்கவேண்டும் என அறியப்படுகிறது. கையிற் சிலம்பொடும், இமையில் நீரோடும் வந்த கண்ணகி தனது கணவன் மாசற்றவன் என்பதை மெய்ப்பித்ததும் மனம் வருந்தி உயிர் துறந்தான். ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனுக்கு வெற்றிவேற் செழியன் எனும் சகோதரன் இருந்தான். அண்ணனின் மறைவை அறிந்த இளவல் மதுரைக்கு விரைந்து அரியணை ஏறினான். பின்னர் கண்ணகிக்குப் பெருமை சேர்க்க விழா எடுத்தான்.

### தலையளங்காளத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்

சிறுபிராயத்திலேயே அரியணை ஏறிய நெடுஞ்செழியன் தழலயானங்கானம் எனுமிடத்தில் சேரன் மந்தரம்சேரல் இரும்பொறை உட்பட பல மன்னர்களின் கூட்டுப்படையை முறியடித்தான். இப்போரைப் பற்றி இலக்கியங்கள் வாயிலாகவும் பிற்காலக் கல்வெட்டுகள் வாயிலாகவும் அறிய முடிகிறது. மதுரைக் காஞ்சி எனும் நூலை இயற்றிய மாங்குடி மருதனார் இவர் காலத்தில் வாழ்ந்தார். இரண்டாம் நெடுஞ்செழியன் என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடும் இம்மன்னன் பல மலை சாதியினரையும் வென்றான். அவன் கரிகாற்சோழனின் சம காலத்தினனாக இருந்திருக்க வேண்டும். அவனது வீரம் பற்றியும், வீரர்கள் பால் அவன் கொண்டிருந்த பற்றினையும், நக்கீரர் இயற்றிய நெடுநெல்வாடை உரைக்கிறது. சிவபெருமானின் வெள்ளி அம்பலத்தில் இம்மன்னன் இறந்ததால் வெள்ளியம்பலத்துஞ்சிய பெருவழுதி என்றழைக்கப்பட்டான்.

## சங்ககால அரசியல்நிலை

### அரசன்

சங்க காலத்தில் முடியாட்சியின்றி வேறு ஆட்சி இல்லை. அரசன் இறைவனுக்கு ஒப்பாக வைக்கப்பட்டான். எனவே அவன் கோ என்றழைக்கப்பட்டான் இளவரசன் இளங்கோ எனப்பட்டான். அரண்மனை கோவிலுக்கு ஒப்பாக வைக்கப்பட்டது. நிலையான புகழைப் பெற்றிருந்தவனை மன்னன் என்றும் உயர்ந்த நிலையை எட்டியவனை வேந்தன் என்றும் அழைத்தனர். பல வெற்றிகளைப் பெற்று குறுநில மன்னர்கள் மீது ஆதிக்கம் உடையவன்

வேந்தன் என்றும் கொற்றவன் என்றும் அழைக்கப்பட்டனர். தொல்காப்பியர் காலத்திலேயே முடிமன்னர்களும் குறுநில மன்னர்கள் பலரும் இருந்தனர். மன்னனின் பிறந்த நாளைப் பெருநாளாகக் கொண்டாடினர். அந்நாளில் வரிகள் தள்ளுபடி, கைதிகள் விடுதலை செய்தல் போன்ற சலுகைகளைச் செய்தனர். முடிசூட்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. முடியாட்சியின் நாளிலிருந்து ஆட்சியாண்டை கணக்கிட்டனர். முடி, கொடி, வெண்கொற்றக்குடை, முரசு ஆகியவை மன்னனுக்குரிய சின்னங்களாகும்.

தந்தை வழி தாய் முறையில் மூத்த மகனுக்கு அரசுரிமை கிட்டியது. இளம் வயதினரும் அரச பதவிக்கு வந்தனர் என்பதற்குக் கரிகாலனும் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் சிறந்த எடுத்துக்காட்டாகும். வாரிசு இன்மையில் பட்டத்துயானை மாலையிட்டு மன்னனை தேர்ந்தெடுக்கும் வழக்கு இருந்தது. ஆனால் தேர்தல் முறையும், பெண்கள் அரியணையேறும் வழக்கமும் இல்லை. மக்களின் தலைவர்களாக மன்னர் விளங்கினர். அரசர்களை எதிர்த்துக் கிளர்ச்சிகள் எழவில்லை. மன்னனை விரட்டியடித்த வழக்கு அக்காலத்தில் இல்லை ஆனால் மன்னர்கள் தாமாக முடிதுறந்ததுண்டு.

**அரசவை**

அரசனின் அவை மன்றம், ஓல்கம், இரக்கை, வேட்டவை எனப்பல பெயர்களில் அழைக்கப்பட்டது. அரசவையில் அரசனின் இல்லத்தவர்களும் அரசு அலுவலர்களும் பொதுமக்களும் கூடினர். சுங்ககால மன்னர்கள் அரசவையில் புலவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டனர். புலவர்கள் இலக்கியம் பற்றி விவாதித்ததோடு அரசனிடம் குறைகண்டால் அதை திருத்தவும் செய்தனர். அரசவையின் தலையாயப் பணி அரசனுக்கு அறிவுரை கூறி சிறந்த முறையில் ஆட்சி அமைக்க உதவுவதாகும். ஆரசவை நிர்வாகத் தலைமையகமாக விளங்கியது எனலாம். ஆரசவை தலைநகரத்தில் செயல்பட்டது. பொதுமக்களின் விண்ணப்பங்கள் இதில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**ஐம்பெருங்குழு**

அரசனுக்கு ஆலோகனை சொல்லவும் ஆட்சி புரிவதில் துணை செய்யவும் ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்ற அமைப்புகள் இருந்தன. ஐம்பெருங்குழுவில் அமைச்சர், புரோகிதர், சோதிடர், மருத்துவர், மக்கள் பிரதிநிதி ஆகிய ஐவர் இடம் பெற்றிருந்தனர். அமைச்சர்கள் வரி வசூலிப்பது நீதி வழங்குவது ஆகியவற்றைக் கவனித்தனர். புரோகிதர்கள் மதசம்பந்தமான விழாக்களை நடத்தி வந்தனர். சோதிடர்கள் நல்ல காரியங்கள் நடத்துவதற்கும், மன்னன் போரில் ஈடுபடுவதற்கும் நல்ல நேரங்களை குறித்து கொடுத்தனர். மருத்துவர்கள் மன்னனுடைய உடல்நலத்தையும் நாட்டு மக்களின் உடல்நலத்தையும் பேணிவந்தனர். மக்கள் பிரதிநிதிகள் மக்களின் நலன்களையும் உரிமைகளையும் காத்து வந்தனர்.

**எண்பேராயம்**

எண்பேராயத்தில் கரணத்தியலவர், கர்மவிதிகள், கனகச்சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானைவீரர், இவுளி மறவர் முதலிய எண்மவர் இடம் பெற்றிருந்தனர். இவர்கள் மன்னன் நலத்தையும் மக்கள் நலத்தையும் பேணி நாட்டின் நன்மைக்காக அரசனுக்கு தேவையான ஆலோசனைகள் வழங்கி அவனுடைய செயல்களிலும் உறுதுணையாய் நின்றனர்.

**தூதுவர்கள்**

இளவரசர்களும், அந்தணர்களும், புலவர்களும் அரசரின் தூதுவர்களாக சென்றனர். அண்டைநாடுகளுக்கும், அயல்நாடுகளுக்கும் தூதர்கள் சென்றனர். மன்னனின் அயல்நாட்டுக் கொள்கையின் முடிவை எடுத்துரைக்கவும், நல்லுறவை ஏற்படுத்தவும் துப்பு அறிவிதற்கும் தூதர்கள் பயன்பட்டனர். கி.மு.18-ல் ரோம பேரரசர் அகஸ்டஸின் முடிசூட்டு விழாவில் கலந்து கொள்ள சென்ற பாண்டிய மன்னர்களின் தூதர்கள் ஏதன்ஸ் நகரின் வழியாக சென்றனர்.

**ஒற்றர்கள்**

பழங்கால மன்னர்களால் ஏராளமான உளவாளிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். அமைதிக் காலத்திலும் போர்க் காலத்திலும் வேவு பார்க்கப்பட்டது. சந்தேகக் குறிப்புகளை கொண்ட மாறுபட்ட ஒலிகள் மூலம் தம் செய்தியினை தெரிவிப்பர். அஞ்சாது இரகசியம் செய்தியறிந்து திறமையுடன் ஒற்றர்கள் செயல்பட்டனர்.

**படைநிர்வாகம்**

படைகள் ஆற்றல்மிக்கோரையும் வழரந்து செயல்படுவோரையும் போரில் விருப்பமுடை யோரையும் கொண்டு விளங்கியது. அரசரே படைகளுக்கு தேவையான படைக்கலங்களை நிறுவகித்தார். காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை என்ற வரிசைமுறை காணப்பட்டது. தானைத் தலைவன் அரசருக்கு அடுத்தப்படியாக காணப்பட்டான்.

**நீதிநிர்வாகம்**

அரசர்கள் நீதி வழங்கிட தகுதியுள்ளவர்களின் துணைகொண்டு செயல்பட்டனர். நகரங்களிலும், கிராமங்கிளலும் நீதிமன்றங்கள் காணப்பட்டன. நகரங்களில் அரசன் நீதி வழங்கினான். கிராமங்களில் அரசனின் பிரதிநிதிகள் நீதி வழங்கினர். ஆரணின் முற்றமே நீதிமன்றமாக செயல்பட்டது. வெளிப்படையாக விசாரணை நடைபெற்றது.கருக்கலைப்பு, பசுவின் மடியறுத்தல், பார்ப்பனர் கொலை ஆகியவைகளுக்கு அதிகபட்ச தண்டனைகள் அளிக்கப்பட்டது. தற்போது போல் பழைய காலங்களில் சட்டம் என்பது இல்லை. செய்த குற்றங்கட்கு ஏற்ப தண்டனைகள் அளிக்கப்பட்டது.

**அரசின் வருவாய் மற்றும் செலவு**

சங்க கால அரசர்கள் பல்வேறு விதமான வரிகளை வசூலித்தனர். நில உற்பத்தியில் 1/6 பங்கு நிலவரியாக வசூலித்தனர். நிலவரியே அரசின் முக்கிய வருவாய் ஆகும். சிற்றரசர்கள் தேற்கடிக்கப்பட்ட மன்னர்கள் முறைப்படி திறை செலுத்தினர். பயிர் விளைச்சல் இல்லாதபோது வரிகள் தள்ளுபடி செய்யப்பட்டன. வசூலிக்கப்பட்ட வரிகள் பொதுப்பணிக்கும், அறப்பணிக்கும் ஆலயபணிக்கும், ஏரி, குளங்கள், சாலைகள் போன்றவைகளை புதிதாக அமைப்பதற்கும், பழையவைகளை செப்பனிடுவதற்கும் செலவு செய்யப்பட்டது.

**கொடியும் சின்னமும்**

சங்ககால மன்னர்கள் தங்களுக்கென தனிக் கொடிகளையும் சின்னங்களையும் வைத்திருந்தனர். பாண்டியர் மீன்கொடி, சேரர் வில்கொடி, சோழர் புலிக்கொடியையும் கொண்டிருந்தனர். இவை தவிர ஒவ்வொரு மன்னனும் தங்களுக்கென தனி குதிரை, யாகை, தேர் ஆகியவைகளையும் கொண்டிருந்தனர்.

## சங்ககால பொருளாதார வாழ்க்கை

**விவசாயம்**

விவசாயம் மக்களின் தலையாய தொழில். அது மக்களுடைய வளத்துக்கும் மன்னனுடைய வளத்துக்கும் அடிப்படையாக விளங்கியது. நெல், கரும்பு வரகு, திணை, எள், அவரை பயறு போன்ற பல பயிர்களைப் பயிரிட்டனர். மருத நிலத்தில் நெல்லும் கரும்பும் முக்கிய பயிர்களாகும். பழங்கள், கிழங்குகள் போன்றவை குறிஞ்சி நிலத்தில் பயிரிடப்பட்டன.

நிலத்தின் வளமைக்கு காவிரி, வைகை, பெண்ணை, பாலாறு முதலிய ஆறுகள் துணைப்புரிந்தன. நீர் பாசனத்திற்கு கால்வாய்கள், மதகுகள்,ஏரிகள், குளங்கள் மூலம் பாசன வசதிகள் மேற்கொண்டனர். ஆடவர் மகளிர் சிறுவர்கள் அனைவரும் வேளாண்மையில் பங்கேற்றனர். உழவு தொழிலில் ஈடுபட்டவர் உழவர் என்றும் மகளிர் உழத்தியர் என்றும் அழைக்கப்பட்டனர். கலப்பை, ஏர், அரிவாள், கத்தி முதலிய டீவளான்மைக் கருவிகாளகும். கால்நடை வளர்ப்பு விவசாயத்தோடு இணைந்து இருந்தது. ஆடு, மாடு மேய்ப்பவர் ஆயர் அல்லது இடையர் என்று அழைக்கப்பட்டனர்.

**பிறத்தொழில்கள்**

வேளான்மைக்கு அடுத்து குறிப்பித்தக்க தொழில் நெசவு ஆகும். பருத்தி, பட்டு ஆடைகள் நெய்யப்பட்டன. ஆடைகளில் வண்ணம் சேர்த்தல், அழகுப்பூ வேலைகள் செய்தல், ஆகியவைப் பற்றி தழிழர் தெரிந்திருந்தனர். மிக மெல்லிய துகில், மற்றும் கம்பளி ஆடைகளும் நெய்தனர். தையல் கலைஞர்களும் இருந்தனர். பாண்டிய நாட்டிலும் பிறதுறைமுகங்களிலும் முத்துக் குளித்தல் நடைப்பெற்றது. பாண்டிய நாட்டு முத்து மேலை நாட்டவரை கவர்ந்தது. தேக்கு, சந்தன மரங்களினாலும் யானை தந்தத்தாலும் அழகிய பொருள்கள் செய்தனர். இரும்புக் தொழில் தோல்பதனிடுதல், தேன் எடுத்தல், மீன் பிடித்தல், உப்பு எடுத்தல், இரும்பு, வெண்கலம், செப்புப் பொருட்கள் செய்தல், கட்டிட வேலை செய்தல் முதலிய தொழில்களும் நடந்தன.

**அளவைகள் மற்றும் காசுகள்**

மா, வேலி முதலிய நில அளவை முறைகளும் நாழி, கலம் முதலிய முகத்தலளவைகளும், துலாம் கழஞ்சு முதலிய நிறுத்தலளவைகளும் இருந்தன. மா என்பது ஒரு வேலி நிலத்திற்குச் சமம். நாழி என்பது மரக்கால் அளவின் எட்டில் ஒரு பகுதி. 12 மரக்கால் சேர்ந்தது ஒரு கலம். சுங்ககாலத்தில் மூவேந்தர்களும் முதிதிரையிடப் பெற்ற காசுகளை பயன்படுத்தினர். காசுகளில் மேலை நாட்டுக் காசுகளே சங்ககால பொருளாதாரத்திற்கு எடுத்துக்காட்டாய் விளங்கின. காணம் என்றொரு பொற்காசு புழக்கத்தில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

**வாணிபம்**

**உள்நாட்டு வாணிபம்**

உள்நாட்டு வாணிபம் மிகச் சுறுசுறுப்புடன் நடைபெற்று வந்தது. பெரும்பாலும் பண்டமாற்று முறையிலேயே வாணிபம் நடைபெற்று வந்தது. எ வாணிகச் சாத்துக்கள் எனப்பட்ட வணிகர்கள் கூட்டம் உள்நாட்டுச் சந்தைகளில் உற்பத்தி பொருள்களை விற்று பணம் ஈட்டினர். ஊள்நாட்டு வாணிபத்திற்கு நாளங்காடி, அல்லங்காடி என இருவகை அங்காடிகள் இருந்தன. நாளங்காடி என்பது பகல் நேரஙத்திலும் அல்லாங்காடி இரவு

நேரத்திலும் செயல்பட்டன. இவை புகார் மதுரை முதலிய நகரங்களில் இருந்தன. பொருள்களின் விலையை எழுதி தொங்கவிடப்பட்டன. வணிகர் கூட்டமாக சென்று வாணிகம் செய்தனர். அக்கூட்டத்திற்கு வாணிகச் சாத்து என்று பெயர். கழுதை வண்டி, படகு, பாய்மரக் கப்பல்கள் சரக்குகளை கொண்டுச் செல்ல பயன்படுத்தப்பட்டன.

**அயல்நாட்டு வாணிபம்**

வெளிநாட்டு வாணிபம் மிக சிறப்பாக நடைப்பெற்றது. கிழக்கில் தென்கிழக்காசிய நாடுகளுடன் சீனத்துடனும் வாணிபத் தொடர்பு இருந்தது. மேற்கே யவன நாட்டவரும், மேற்காசியர்களும் உரோமானியர்களும் இந்திய பண்டங்களில் பெரும் விருப்பம் காட்டினர். ஐரோப்பாவின் பல பாகங்களுக்கும் இப்பண்டங்கள் சென்றன. கொங்கு நாட்டு தங்கமும், பாண்டி நாட்டு மத்தும், சந்தனமும், மிளகும், வாசனைப் பொருட்களும், இஞ்சியும், தந்தமும், ஏலம், கிராம்பு போன்றவைகளும் மேற்கு நாடுகளுக்கு ஏற்றுமதி ஆயின. மரவகைகள், எண்ணெய்கள், தேங்காய், கருப்பட்டி, போன்றவைகளும் வாணிப் பொருளாக விளங்கின. உயர்தரமான ஆடைகள், பட்டாடைகள், வண்ணபகட்டான ஆடைகள், விரிப்புகள், ஓவிய வேலைப்பாடுடைய பொருட்கள், வைரம், பிறவிலை உயர்ந்த கற்கள் ஆகியவைகளும் வெளிநாட்டு வணிகர்களை கவர்ந்தன. உயிருள்ள பிராணிகளும் கப்பல் ஏறி வெளிநாடுகளுக்குச் சென்றன. மயில், கிறி, குரங்கு, புலி போன்றவை இப்புண்ணியத்தை பெற்றன. தமிழகம் ஏற்றுமதி நாடாக மட்டும் விளங்கவில்லை. வெளிநாடுகளில் உற்பத்தியான பொருட்களை இறக்குமதியும் செய்தது. மேற்கு நாடுகளிலிருந்து உயர்வகை மது, கண்ணாடி சாமான், குதிரைகள் முதலியவை வரவழைக்கப்பட்டன. இலங்கையிலிருந்தும் பர்மாவிலிரந்தும் உணவு பொருட்கள் வந்தன. சீனத்திலிருந்து அழகிய விளிம்பு உடைய பட்டுகளும் சர்க்கரையும் வரவழைக்கப்பட்டன.

தமிழகத்து துறைமுகங்களில் அயலார் கலங்கள் குவிந்து கிடந்தன. பொறையாறும்,புகாரும், கொற்கையும் சிறந்த துறைமுகங்களாக விளங்கின. கோட்டாறும், மதுரையும், முசிறியும், உறையூரும் வெளிநாட்டு வணிகர்களின் ஆரவாரம் பெற்ற உள்நாட்டு நகரங்களாக விளங்கின.

**சங்க கால் சமயம்**

சைவமும், வைணவமும், பௌத்தமும், சமணமும் சங்க காலத்திலிருந்த சமயங்களாகும். பௌத்தமும், சமணமும் வருவதற்கு முன்பே மாயோன்,சேயோன், வேந்தன், வருணன் என்னும் தெய்வங்களை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்களில் உள்ள மக்கள் வழிப்பட்டனர் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

ஒவ்வொரு நிலத்திற்கும் ஒரு தெய்வம் என்ற வழிபாட்டுமுறை மக்களின் வழக்கத்தில் இருந்தது. குறிஞ்சி நில மக்கள் முருகனையும், முல்லை நில மக்கள் திருமாலையும் மருத நில மக்கள் இந்திரனையும், நெய்தல் நில மக்கள் வருணனையும், பாலை நில மக்கள் கொற்றவையையும் வழிபட்டனர்.

சிவ வழிபாடும் சங்ககால மக்கள் மத்தியில் காணப்பட்டது. சங்க இலக்கியங்களில் சிவன் என்ற சொல்லே காணப்படவில்லை. ஆனால் சிவனை வேறு பெயர்களில் குறிப்பிட்டுள்ளனர். அறிவின் முனைவன், கறை மிடற்கண்ணல், காரிண்ட கடவுள், நீலக்கடைக் காளிதன், ஆல்கெழு கடவுள், ஆலமர்ச் செல்வன் முழுமுதல்வன் போன்ற பல பெயர்களால்

சிவபெருமானை சங்கப் புலவர்கள் குறிப்பிடட்டுள்ளனர். இலங்கியங்களில் சிவனோடு சேர்த்து உமையவள் பேசப்படுகின்றனார். தனித்துக் காணும் பொழுது துர்க்கையாகக் காட்டப்பெறுகின்றார். சிலப்பதிகாரம் சக்தி வழிபாடு குறித்து பேசுகின்றது. பாலைக் கலியல் சிவனது எயில் வென்ற முக்கண் சிறப்பும், பிறவும் பேசப்படுகின்றது. சிவனது கடை தாழ்ந்த சடை பிறை அணிந்த சடை, முக்கண் கடைமிடறு போன்றவைகளை சங்க நூற்பாவடி எடுத்துக்காட்டுகின்றது.

சிவன் முழுமுதற் பொருளால் உலகம் அனைத்திற்கும் தோன்றுவதற்கு முதல் காரணம் ஐம்பெரும் பூதங்களை அடக்கி தானும் அதனுடன் கலந்து அலகிலா விளையாடலைப் புரிந்தார் என மதுரைக் காஞ்சியில் மாங்குடி மருதனார் குறிப்பிடுகின்றார். மேலும் சூலம் பிடித்த சுடர்ப்படை காலக்கடவுள் என்று குறிப்பிடுவது மூலம் சிவன் சூலம் பிடித்த சுடர்ப்படை உரியவனாக விளங்கினார் என்பது தெரிகின்றது.

**சங்க கால வைணவம்**

மாயோன், மால், நற்கை, கண்ணல், வெய்யோன், திருமார்பன், ஆழியன் என்று அழைக்கப்பட்ட திருமாலிடம் கைச் சக்கரம், சங்கு, வில், வாள், கௌமேதகர் ஆகிய ஆயுதங்களும் இருந்தன. சக்கரத்தினை நேமி, ஆழி திகிரி, எனவும், சங்கினை வளை,வலம்புரி, சங்கம் எனவும் அழைத்தனர். திருமடந்தை செய்வோர், தாமரையினாள், நல்லாள் எனத் திருமகளை அழைத்தனர். பிரம்மா திருமாலின் புதல்வர் எனப்பட்டார். அழகர்மலை, திருவரங்கம், வேங்கடம் போன்றவை திருமாலின் திருதலங்களாகும்.

**பிற வழிபாட்டு முறைகள்**

மக்களின் சமயக் கொள்கையில் கன்னி, நிழங்கடவுள்,பேய், கூனி ஆகியவற்றில் நம்பிக்கை இருந்தது. தெய்வங்களை சில மரங்களுடன் இணைத்து வழிபட்டனர். ஆல், அரசு, வேம்பு, கடம்பு, வில்வம் போன்ற மரங்களின் நிழலில் தெய்வ உருவங்களை வைத்து வழிபட்டனர். இன்றும் இந்த முறை தமிழர் சமுதாயத்தில் காணப்படுகின்றது. ஆல மரத்தடியில் சிவபெருமான் வீற்றிருந்தார் என்பதும் திருமால் ஆலிலைமேல் பள்ளி கொண்டார் என்பதும் புராண மரபுகள். சங்க கால மன்னர்களிடமும் மக்களிடமும் மதச் சகிப்புத்தன்மை காணப்பட்டது. மன்னர்கள் சமய வளர்ச்சிக்கு ஆதரவு அளித்தனர். இறை வழிப்பாட்டில் மக்கள் தீவிரம் காட்டினர்.

**களப்பிரர்கள்**

சங்ககாலம் முடிவுற்ற பின் கி.பி.மூன்றாம நூற்றாண்டு முதல் கி.பி. ஆறாம் நூற்றாண்டு முடிய ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகள் தமிழ் நாட்டைத் தமிழ் வேந்தர்கள் ஆண்டதாகச் சான்றுகள் கிடைக்கவில்லை. இக்காலத்தில் நாட்டில் குழப்பங்கள் ஏற்பட்டு களப்பிரர்கள் தமிழகத்திற்குள் புகுந்து தமிழ் மன்னர்களைத் தோற்கடித்து ஆட்சியை கைப்பற்றிக் கொண்டதாக தெரிகிறது. தமிழ் இலக்கியங்களான தமிழ் நாவலர் சரிதை, யாப் பெருங்கலம், பெரியபுராணம் ஆகியவை களப்பிரர் ஆட்சியை பற்றி குறிப்பிடுகின்றன. திருப்புகழூர்க் கல்வெட்டு நெற்குன்றம் கிழார் என்னும் கள்பிர மன்னனைப் பற்றிக் கூறுகிறது. காசாக்குடிச் செப்பேடுகளும், தளவாய்புரம செப்பேடுகளும், கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் பாண்டியன் கடுங்கோன் களப்பிரர்களைத் தோற்கடித்ததைக் கூறுகின்றன. கூற்றம் செப்பேடுகளும் முதலாம் நரசிம்மவர்மன் சோழர்கள் பாண்டியர்கள் ஆகியோரையும்

களப்பிரரையும் தோற்கடித்ததை கூறுகின்றன. எனவே சங்ககாலத்திற்குப் பின் தமிழகத்தில் ஏற்பட்ட களப்பிரர் ஆதிக்கம் கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரை நீடித்திருந்ததாகத் தெரிகிறது.

**களப்பிரர்கள் யார்?**

களப்பிரர்களைப் பற்றி தெளிவாக அறிய போதிய வரலாற்றுச் சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை. எனவே வரலாற்று ஆசிரியர்களும், அறிஞர் பெருமக்களும், ஆராய்ச்சியாளர்களும், இலக்கியங்களிலும், கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் காணப்படும் பெயர் மற்றும் இன, மொழி, சமய ஒற்றுமைகளை வைத்து பல கொள்கைகளை வகுத்துள்ளனர்.

கன்னடர்கள் களப்பிரர்களை ‘‘களம்பாளர்’’ என்றும் ‘‘களப்பரர்’’ என்றும் ‘‘களப்பாழர்’’ என்றும் கூறுகின்றனர். அவர்கள் தமிழர்களுமல்லர், ஆரியர்களுமல்லர், அவர்கள் பிராகிருதம், பாலி, ஆகிய மொழிகளைத் தங்களது மொழிகளாகப் போற்றி சமணம் பௌத்தம் ஆகிய மதங்களுக்கு ஆதரவு தெரிவித்தமையால் தமிழர்களாக இருக்கமுடியாது. அவர்கள் வடமொழிக்கும் ஆதரவு அளிக்கவில்லை. ஆகவே ஆரியர்களுமல்லர். அவர்கள் தாய்மொழி கன்னடமாக இருப்பதால் அவர்கள் திராவிட இனத்தை சார்ந்த கன்னடர்கள். கருநாடாக மன்னர் கன்னட நாட்டிலிருந்து வந்தான் என்று கூறப்பட்ட போதிலும் அவர்கள் எப்பகுதியில் ஆட்சி புரிந்தனர் என்பதை பெரியபுராணம் குறிப்பிடவில்லை. கன்னடநூல்களிலிருந்து கல்வெட்டுகளிலிருந்தும் கன்னட நாட்டில் ‘‘களப்பு’’ என்ற பகுதியில் அரசாண்டனர் என்று குறிப்பிடுகின்றனர்.

கன்னட நாட்டில் ஹொஸகேரட்டா தாலுகாவில் கிடைத்துள்ள வீரகல்சாசனம் ‘‘ஸ்வஸ்தி ஸ்ரீ மதுராளககளவர திருராஜ்யதல்’’ எனட்று குறிப்பிடுகிறது. குளப்பி என்பது களவர நாடு இதனைப் போன்றே கள்வர் நாடு, களப்பிரர் நாடு என்ற பெயர்கள் மற்ற சாசனங்களில் காணப்படுகின்றன.

கொடும்பாளூர் முத்தரையர்கள் தலைவனுக்குக் கள்வர், கள்வன் எனப்பட்ட பெயர் ஒன்று உண்டு எனவும் தமிழில் கள்வர் எனப்பட்டதே வட மொழியில் களப்பிரர் என ஆயிற்று. வேளாள களப்பார்களே களப்பிரர்கள் என்று அழைக்கப்பட்டனர். ‘‘புலயர்கள்’’ என்பவர்களே களப்பிரர்கள் என்றும் கூறுகின்றனர். இந்த கருத்துகளில் எதுவும் சரியானதென்று ஏற்று கொள்ளப்படவில்லை. வேங்கடமலைப்பகுதியில் புல்லி என்ற கள்வர் இனத் தலைவன் ஆண்டு வந்ததாக சங்க இலக்கியத்தில் கூறப்படுகிறது. கி.பி.மூன்று, நான்காம் நூற்றாண்டுகளில் சமுத்திரக்குப்தனின் படையெடுப்பாலும், சாதவாகனரின் வீழ்ச்சியாலும், பல்லவர்களுடைய கை ஓங்கி வந்தாலும் தொண்டை நாட்டில் நாட்டில் ஏற்பட்ட குழபங்கைள பயன்படுத்தி களப்பிரர்கள் தமிழகம் புகுந்து முதலில் தொண்டைம ண்டலத்திலும் பின் சோழ, பாண்டிய மண்டலங்களிலும் இருந்த நிலையான பரம்பரையான அரசுகளை கவிழ்த்து விட்டு நாடு முழுவதும் தங்கள் ஆட்சியை ஏற்படுத்தினர் என்றும் கூறுகின்றனர்.

**களப்பிரர் காலம்**

களப்பிரர் தமிழகத்தை தங்கள் கைவசம் பெற முயன்ற காலத்தைப் பற்றியும் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. வச்சிரநந்தியின் திராவிடர் சங்கம் (கி.பி.470) ஏற்படுவதற்கு முன்னரே களப்பிரர் ஆட்சி தமிழகத்தில் நிலவியிருந்தது. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியிலும் மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இருந்த தமிழக அரசியல்

சூழ்நிலைகள் களப்பிரர்களின் படையெடுப்புக்கு சாதகமாக இருந்தது. களப்பிரர் படையெடுத்து வந்தபொழுது ஆட்சி புரிந்து கொண்டிருந்த சேர, சோழ, பாண்டியர்களை பற்றி எச்செய்தியும் நமக்கு கிடைக்கவில்லை. அம் மன்னர்களின் பெயர்களும் தெரியவில்லை. இருப்பினும் களப்பிரர் மூவேந்தர்களையும் அவர்களின் கீழ்டங்கியிருந்த, குறுநிலமன்னர்களையும் அடக்கி வெற்றி கொண்டனர் என்று அறியமுடிகிறது.

**திராவிடச் சங்கம்**

கி.பி.470-ல் பூச்சிய பாதர் என்பவரின் மாணவரான வச்சிரநந்தி என்பார் மதுரையில் திராவிடச் சங்கம் ஒன்றை நிறுவினார். சமணக் கொள்கைகளை பரப்புவதே இச்சங்கத்தின் நோக்கமாகும். சமணக் கொள்கைகளை விளக்கும் நூல்களை வெளியிடுவது இதன் செயல்திட்டங்களில் ஒன்றாகும். புதினெண்கீழ்கணக்கு நூல்களில் பல இச்சங்க காலத்தில் இயற்றப்பட்டவைகளேயாகும். சீவகசிந்தாமணி, குண்டலகேசி, நீலகேசி (யசோதா காவியம்) போன்றவை இச்சங்கத்தின் தொண்டிலேயே வெளியான காவியங்களாகும். சிலப்பதிகாரமும், மணிமேகலையும், இச்சங்க காலத்தில் தான் இயற்றப்பட்டன எனக்கூறுகின்றனர்.

**களப்பிர மன்னர்கள்**

கி.பி.மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் படையெடுத்த களப்பிரர்கள் தமிழக மன்னர்களை வெற்றி கொண்டு தங்கள் ஆட்சியை ஏற்படுத்தினர் என்பதை இலக்கிய மற்றும் கல்வெட்டு செப்பேடு ஆதாரங்கள் மூலம் அறியலாம். களப்பிரர்கள் கொடியில் மீன், வில், புலி போன்ற சின்னங்கள் பொறிக்கப்பட்டிருப்பதை அடிப்படையாக வைத்து பார்க்கும் போது கள்பிரர்கள் முதலில் சேர, சோழ பாண்டிய நாடுகளை கைப்பற்றி இருக்கலாம் என்று எண்ணப்படுகிறது. பாண்டிய நாட்டில் களப்பிரர் ஆட்சி இருந்தது என்பதை மூர்த்தி நாயனார் புராணத்தின் மூலம் அறியலாம். மூர்த்தி நாயனார் பாண்டிய நாட்டிலிருந்த பொழுது மதுரையை களப்பிர மன்னன் ஒருவன் ஆட்சி புரிந்து வந்தான். அவனுக்கு வாரிசு கிடையாது. ஆதலால் அம்மன்னன் இறந்ததும் அக்காலத்து வழக்கப்படி பட்டத்து யானை மூலம் அடுத்த மன்னன் தேர்ந்தெடுக்கப்பட்டான். புட்டத்து யானை வணிகர் மகன் மூர்த்தியாருக்கு மாலையிட்டு மன்னன் ஆக்கியது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட மன்னன் எத்தனை ஆண்டுகள் ஆட்சி புரிந்தான என்பதும் அவனுக்கு பின் மீண்டும் களப்பிரர்கள் ஆட்சி எதுவரை நீடித்தது என்பதும் தெரியவில்லை.

சோழ நாட்டை ஆண்ட கூற்றவநாயனாரும் களப்பிரர்களில் ஒருவர். பெரிய புராணத்தின் மூலம் இவரது வரலாற்றை அறியலாம். இவர் களப்பாளன் குலத்தைச் சார்ந்தவர் என்று நம்பியாண்டார் நம்பி தனது திருத்தொண்டர் திருவந்தாதியில் குறிப்பிடுகின்றார். இலங்கை நூலான சூலவம்சம் களப்பிரரை ‘‘நிகந்தர்’’ என்று அழைக்கின்றது. அவர்களின் சூலவம்சம் நூலின் படி மொக்கல்லானன் என்ற சிங்கள அரச அரச குமாரன் களப்பிரரின் உதவி பெறும் பொருட்டு தமிழ் நாட்டிற்கு வந்ததாகவும், அவன் ஆதரவிற்கென்று ஒரு படையை நிகந்தர் அதாவது களப்பிரர்கள் கொடுத்ததாகவும் கூறப்படுகின்றது. சுமார் 300 ஆண்டு காலம் தமிழகத்தில் ஒரு முறையற்ற ஆட்சியை ஏற்படுத்தியவர்கள் களப்பிரர்கள் ஆவார்கள். களப்பிர மன்னர்களின் சாதனைகளை குறிக்கும் கல்வெட்டுக்கள் மற்றும் செப்பேடுகள் ஏதும் கிடைக்காததால் களப்பிர ஆட்சிகாலத்தை தமிழக வரலாற்றை ‘‘இருண்ட காலம்’’ என அழைக்கின்றோம்.

**களப்பிரரின் வீழ்ச்சி**

பாண்டியன் கடுங்கோன் கி.பி.6ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் களப்பிரரை வென்று பாண்டியப் பேரரசை மீண்டும் நலை நிறுத்தினான் என்று பாண்டியர் செப்பேடுகள் கூறுகின்றன. தளவாய்புர செப்பேடுகளில் “ கற்றறிந்தோர் திறல்பரவக்களப் பாடிரைக்களை கட்ட மற்றிரண்டோள் மாக்கடுங்கோன் மானம் பேர்த்தருளிய கோன்” என்று குறிபிடப்பட்டுள்ளது. பாண்டியன் கடுங்கோன் களப்பிரரிமிருந்து பாண்டிய நாட்டை கைப்பற்றிய அதே தருணத்தில் சோழநாட்டை பல்லவ மன்னன் சிம்மவிஷ்ணு களப்பிரரிடமிருந்து கைப்பற்றினான் என்று பள்ளன் கோவில் செப்பேடுகளும், வேலூர் பாளையம் செப்பேடுகளும் கூறுகின்றன. வேலூர் பாளைய சாசனத்தில் பகைவர்களின் ஆற்றலை அடக்கும் பலமுள்ளவனுமான சிம்மவாமனுக்கு வெற்றி வீரரான சிம்மவிஷ்ணு புதல்வனாகப் பிறந்தான். சிம்மவிஷ்ணு கமுகுத் தோட்டங்களும், நெல்வயல்களும் நிறைந்துள்ள காவிரி ஆற்றினால் அலங்கரிக்கப்பட்ட சோழ நாட்டை கைப்பற்றினான் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. சிம்மவிஷ்ணு சோழ நாட்டை கைப்பற்றினான் என்று கூறுகின்தேயொழிய சோழ மன்னனை வென்றதாக கூறவில்லை. ஆகவே அவன் படையெடுப்பின் போது களப்பிரர் ஆட்சி புரிந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகக் தெரிகின்றது. அதாவது சோழர்கள் களப்பிரர்களுக்கு அடங்கி இருந்தனர். அச் சோழமண்டலம் களப்பிரர் கைவசம் இருந்தது. பலலவ சிம்மவிஷ்ணு களப்பிரர் ஆட்சி புரிந்த சோழ நாட்டையை கைப்பற்றினான். குளப்பிரருக்கு அடங்கி இருந்த சோழர்கள் பின்னர் பல்லவர்களுக்கு அடங்கி இருந்தனர். இவ்வாறு களப்பிரர்களின் வனமை நலிந்து விட்டதால், போரரசர் நிலையின்று குறைந்து சிற்றரசர்களாக ஆகிவிட்டனர். சோழ நாட்டில் தஞ்சை, செந்தலை போன்ற இடங்களைப் பெற்றுக்கொண்டு பல்லவருக்கு அடங்கிய சிற்றரசர்களாக இருந்தனர். பிற்கால பல்லவர்கள் காலத்தில் முதலாம் நரசிம்மவர்மன், இரண்டாம் நந்திவர்மன், சாளுக்கிய மன்னர்களான முதலாம் விக்கிரமாதித்தியன், விஜயாதித்தன் முதலியோரும் களப்பிரர்களை வென்றவர்களேயாவர்.

**களப்பிரர்கள் ஆட்சியில் தமிழகத்தில் ஏற்பட்ட விளைவுகள்**

களப்பிரர்கள் காலத்தில் தமிழ் மொழிக்குத் தாழ்வும் பிராகிருதத்துக்கும், பாலி மொழிக்கும் அரசாங்கச் செல்வாக்கும் கிடைத்தன. ஆட்சி மொழியாக தமிழ் இல்லாவிட்டாலும் பௌத்த துறவிகளும், சமணமுனிவர்களும் தமிழ் வளர்ப்புப் பணியையும், தம் சமய வளர்ப்பு பணிகளில் ஒன்றாக மேற்கொண்டனர். மக்களின் வாழ்க்கையிலும், பண்பாட்டிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற அடிப்படையிலும் சமய வேறுபாடு இல்லாமல் இயற்கை நெறியோடு இணைந்த வாழ்வினை சங்கத்தமிழர் நடத்தி வந்தனர். ஆனால் களப்பிரர்கள் காலத்திலும் அதற்குப் பின்னும் தமிழக மக்கள் சமய சச்சரவுகளில் ஈடுபட்டு பார்ப்பனர்களின் பக்தி நெறியை மேற்கொண்டு சொர்க்கத்தைத் தேடி இவ்வுலக வாழ்க்கையை நரகமாக்கும் அளவிற்கு மாற்றப்பட்டனர். காட்டுத்தனமும், மதமும் ரோமப் பேரரசைத்தாக்கி வீழ்த்தியது போன்றே களப்பிரர்களின் காட்டு மிராண்டித்தனமும், பார்ப்பானிய மதமும் தமிழ் அரசுகளை வீழ்த்தி தமிழர் நாகரீகத்தையும் பண்பாட்டையும் பெரும் நெருக்கதலுக்கு உள்ளாக்கின.

## அலகு– 2

# பல்லவர்களின் தோற்றம்

**பல்லவர்கள் *வெளிநாட்*டவர்கள்**

பல்லவர் என்ற சொல்லும் சாக மரபின் ஒரு பிரிவினரான பார்த்தியரைக் குறிக்கும் ‘‘பஹ்லவர்’’ என்ற சொல்லும் ஒருவாறு ஒன்றுபட்டிருப்பதைக் கண்டு டாக்டர் ஸ்மித், வெங்கையா, ஜோவ்துாப்ரே, முதலானோர் பல்லவர்கள் பாரசீக நாட்டின் வட பகுதியிலிரந்த பார்த்தியர் என்றனர்.

வைகுந்த பெருமாள் ஆலயத்தில் காணப்படும் சிறிய சிற்பமொன்றில் இரண்டாம் நந்திவர்மனின் தந்தை விஹிரண்யவர்மன் யானை முகக்கிரிடம் ஒன்றை சூட்டிக்கொண்டு காட்சியளிக்கின்றார். இந்தக் கீரிடம் பாக்டீரிய மன்னர்களின் கிரிடத்தைப் பஎல் காணப்படுவதால் பல்லவர்கள் பாரசீகத்தினர் என்று திரு. வேங்கடசுப்பார் கூறுகின்றனர்.

**வெளிநாட்டுக் கோட்பாடு**

பல்லவர்கள் வெளிநாட்டவர்கள் என்றும் தமிழகத்தின் அரசியல் சூழ்நிலையில் ஏற்பட்ட நெருக்கடியான நிலைமையை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட வெளிநாட்டவர் தமிழகத்தின் மீது படையெடுத்து ஆட்சியாளர்களை வீழ்த்தி தங்கள் ஆட்சியை ஏற்படுத்திக் கொண்டனர் என்றும், புதிய ஆட்சியை ஏற்படுத்திக்கொண்ட மன்னர்கள் தங்கள் வம்சத்திற்கு ‘‘பல்லவர்கள்’’ என்று பெயர் சூட்டிக் கொண்டனர் என்றும் ஒரு சாரார் கருதுகின்றனர்.

**இலங்கையினரா அல்லது நாகர்களா?**

இலங்கையை அடுத்த மணிபல்லவம் என்பதே பல்லவர்களின் பிறப்பிடமாகும் என்று சி.இராச நாயகம் கூறுகின்றார். இவர் மணிமேகலைக் காப்பியத்தை ஆதாரமாக கொண்டு மணி பல்லவத்தைத ஆண்ட நாகர் மகளான பீலிவளை என்ற நாக கன்னிக்கு களவொழுக்கத்தின் பால் ஒரு மகன் பிறந்தான். மணிபல்லவத் தீவிலிருந்து தமிழகம் எந்து கொண்டிருக்கும் பொழுது அவன் வந்த கப்பல் உடைந்தது. ஆனால் அவன் தொண்டை மண்டலக் கொடியால் கற்றப்பட்டு கரை சேர்ந்தான் என அணிமேகலை கூறுகின்றது. இதனைக் கொண்டு அவன் தொண்டைமான் என்றும் இளம்திரையன் என்றும் அழைக்கப்பட்டான். ஆவன் ஆட்சி புரிந்த பகுதி தொண்டைம ண்டலம் எனப்பட்து. இவனே பெரும்பாணாற்று படையில் போற்றப்பட்ட தொண்டைமான் இளத்திரையனாவான்.

பல்லவர்கள் இந்தியாவிற்கு வெளியே இருந்து வந்தவர்கள் என்றால் அவர்கள் எப்போது இந்தியாவிற்கு வந்தார்கள் எங்கிருந்து இந்தியாவிற்கு வந்தர்கள் எப்படி வந்தார்கள், ஏன் வந்தார்கள் என்ற கேள்விகளுக்கு எங்கேயும் விளக்கம் தரப்படவில்லை. கல்வெட்டுக்கள், செப்பேடுகள் மற்றும் இலக்கியங்களும் இது பற்றி கூறவில்லை. ஆதலால் பல்லவர்கள் வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள் என்ற கூற்றினை பெரும்பாலான வரலாற்றுச் ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

**பல்லவர்கள் இந்தியவர்கள்**

பல்லவர்கள் இந்தியர்களே என்பது பெரும்பாலோரது கருத்து இவர்கள் இந்தியாவில் எப்பகுதியிலிருந்து இங்கு வந்தார்கள் என்பது எதிலும் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

சிலர் வடமேற்கு இந்தியாவைச் சார்ந்தவர்கள் என்றும் வட இந்தியாவை சார்ந்தவர்களென்றும் குறிப்பிடுகின்றனர். இன்னும் சிலர் குறும்பர்கள் என்றும், புலிந்தவர்கள் என்றும், சாதவாகனர்களின் வழித்தோன்றல்கள் என்றும் கூறுகின்றனர்.

**பல்லவர்கள் தமிழர்களே!**

கிள்ளி வளவன் என்ற சோழனுக்கும் இலங்கைக்கருகில் உள்ள மணிபல்லவம் என்ற தீவிலிருந்த நாக கன்னிகைக்கும் பிறந்த இளந்திரையன் தொண்டைமண்டலத்தை காஞ்சியிலிருந்து சோழனுக்கு அடங்கிய சிற்றரசனாக ஆளத்துவங்கினான். மணிபல்லவத்திலிருந்து வந்த இளந்திரையனின் பரம்பரையினரே பல்லவர்கள் என்று அழைக்கப்பட்டதாக சிலர் கூறுகின்றனர். தொண்டையர் என்ற சொல்லும் பல்லவர் என்ற சொல்லும் ஒரு பொருளையே குறிக்குமென்றும், சாதவாகனப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் காஞ்சியில் தொண்டையர்கள் ஏற்படுத்திய சுதந்திர அரசே பல்லவர்கள் அரசாகும் என்றும் சிலர் கூறுகின்றனர்.

பல்லவர்கள் தமிழர்கள் அல்லர் என்பதற்கு ஆதரவாக எடுத்துக்காட்டப்படுவது முற்காலப் பல்லவர்கள் தமிழல்லாத பிறமொழிகளில் பட்டயங்கள் வெளியிட்டதேயாகும். இந்த ஐயப்பாட்டை பேராசிரியர் என்.சுப்பிரமணியம் கீழ்கண்டவாறு தெளிவாக்குகிறார். கி.பி.இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் காவிரிபூம்பட்டிணம் கடல்கோளுக்கு இரையான பின்னர் சோழ மன்னன் காஞ்சிக்கு தன் தலைநகரை மாற்றியிருக்கக்கூடும். காஞ்சியிலிருந்த இளந்திரையன் காஞ்சியிலிருக்க விரும்பாமல் வேங்கடத்துக்கு வடக்கே சென்று தனியாக ஒரு சிற்றரசை ஏற்படுத்தியிருக்க கூடும். பின்னர் சாதவாகனர்களின் ஆதிக்கத்திற்குக் கட்டுப்பட்டு தங்களை தொண்டையர்கள் என்று கூறாமல் பல்லவர்கள் என்று வடமொழியில் கூறியிருக்கவேண்டும். சாதவாகனர்களுக்கு கட்டுபட்டு பல்லவர்கள் பிராகிருதம் மொழியில் தங்கள் ஆட்சியை நடத்தி வந்தனர். வடமொழிக்கும் ஆதரவு அளித்தனர். சாதவாகனப் பேரரசு சரிவடைந்த பின் சுதந்திரமடைந்த பல்லவர்கள் கி.பி.நான்காம் நூற்றாண்டின் துவகத்தில் மீண்டும் காஞ்சிபுரத்திற்கு வந்த பொழுது தங்களுடைய பழைய மொழியையும் மறந்திருக்க வேண்டும். மேற்கூறிய விளக்கங்களால் பல்லவர்கள் தமிழர்களாகத்தான் இருக்கமுடியும் என்று எண்ணப்படுகிறது. மேலே சொல்லப்பட்டுள்ள கருத்தக்களை அடிப்படையாக வைத்து பார்க்கும்போது பல்லவர்கள் தமிழர்கள் தான் என்று தோன்றுகின்றது. ஆனால் பின்வரும் வாதங்கள் பல்லவர்கள் தமிழர்கள் அல்ல என்பதை தெளிவாகக் கூறுகின்றது.

**பல்லவர்கள் தமிழர்கள் அல்ல**

பல்லவர்க் தமிழ் மரபினர் அல்ல என்பதை மட்டும் உறுதியாகச் சொல்லலாம். தொடக்க காலப் பல்லவரின் பட்டயங்கள், கல்வெட்டுக்களில் தமிழ் மொழியே கிடையாது. துனித் தமிழ் பெயர்களை சங்க காலத்தில் கண்டோம். ஊதாரணமாக நெடுஞ்செழியன், கரிகாலன்,செங்குட்டுவன் போன்றவைகள். ஆனால் எந்தப் பல்லவ அரசனும் தமிழ்ப் பெயர் கொள்ளவில்லை. சிம்மவிஷ்ணு, சிம்மவர்மன், நரசிம்மவர்மன் போன்ற பெயர்களையே பல்லவ மன்னர்கள் கொண்டுள்ளனர். விஜயநகரப்பேரரசர்கள் தெலுங்கு மன்னர்களாக இருந்த பொதிலும் தமிழில் கல்வெட்டுக்களை செதுக்கினர். இலக்கியங்களை பார்க்கும் பொழுதும் நந்திவர்மன் காலத்திற்கு பின் தானட இலக்கியம் தமிழ் மொழியில் ஏற்றம் பெறுகின்றது.

தமிழ் மொழியில் இந்த அளவில் வடமொழி கலப்பு சங்க காலத்தில் இல்லை. ஆதலால் பல்லவர்கள் தமிழ் மரபினர் அல்ல என்ற முடிவிற்கு அறிஞர் பெருமக்கள் வருகின்றனர்.

## முதலாம் மகேந்திரவர்மன்

முதலாம் மகேந்திரவர்மன் கி.பி.580-ல் அரியணை ஏறினான். இவனுக்கு பல பட்டப்பெயர்களும், புனை பெயர்களும் உண்டு. அவை மகேந்திர விக்ரமன், மகேந்திர போத்தராசா, சத்துருமல்லன், விசித்திர சித்தன்,குணபரன், மத்தவிலாசபிரகாசன். நரேந்திரன், சேத்தக்காரி, கலகப்பிரியன், சங்கீரணசாரதி, நரவர்கணன், பிரசிருப்பிரியன், போத்திரையன், விக்கிரமன், சித்திரகாரப்புலி என்பனவாகும்.

**படையெடுப்புகள்**

**சாளுக்கியப் படையெடுப்புகள்**

பல்லவர்களுக்கும் சாளுக்கியர்களுக்கும் கி.பி. 7-ம் நூற்றாண்டு முதல் தொடர்ச்சியாக போர் தொடங்கலாயிற்று. சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசி தனது பேரரசை கிழக்கிலும், மேற்கிலும், வடக்கிலும் பலப்படுத்திய பின்னர் தெற்கு நோக்கி விரிவுபடுத்த எண்ணினான். தேற்கில் கடம்பர், கங்கர், ஆலம்பர் மயூரர் போன்றவர்களை தோற்கடித்த பின்பு பல்லவ நாட்டின் மீது படையெடுத்தான் பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் தோற்கடித்து பல்லவ நாடு முழுவதையும் தன் வசப்படுத்த வேண்டும் என்று புலிகேசி எண்ணினான். புல்லவ மன்னன் மகேந்திரவர்மனுக்கும் சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசிக்கும் இடையே நடைபெற்றப் போரில் மகேந்திரவர்மன் தோற்கடிக்கப்பட்டான் என்றும், புலிகேசியின் பெரும் படையைக் கண்டு அஞ்சி காஞ்சி மன்னன் காஞ்சிக் கோட்டைக்குள் சென்று ஒழிந்து கொண்டதாகவும் புலிகேசியின் அய்ஹோல் கல்வெட்டு கூறுகின்றது. ஆனால் சாளுக்கிய மன்னன் புலிகேசியால் தலைநகர் காஞ்சியைக் காப்பாற்ற முடியவில்லை.

புலிகேசி பல்லவர் நாட்டை விட்டு சென்ற பின்னர் மகேந்திரவர்மன் இழந்த பகுதிகளை மீட்க முயன்றபோது மீண்டும் பல்லவ சாளுக்கிய போர் ஏற்பட்டது. மகேந்திரவர்மன் புலிகேசியையும் பிற பகைவர்களையும் ‘‘புள்ளலூர்’’ என்னுமிடத்தில் சந்தித்தான் என்றும் தொடர்ந்து நடைப்பெற்ற போரில் மகேந்திரவர்மன் புலிகேசியையும் ஏனைய பகைவர்களையும் தோற்கடித்தான் என்ற செய்தியை நந்திவர்மன் காலத்தில் வெளியிடப்பட்ட வடமொழி செப்புப் பட்டயமான ‘‘காசாக்குடி’’ பட்டயம் குறிப்பிடகின்றது.

அய்ஹோல் கல்வெட்டும், காசாக்குடி பட்டயமும் தங்களுடைய மன்னன் வெற்றி பெற்றதை குறிப்பிடுகின்றதே தவிர தெளிவாக யார்வெற்றி பெற்றார் என்பதைக் தெளிவாக குறிப்பிடவில்லை. எனினும் பல்லவ-சாளுக்கிய போர் பற்றி சில விளக்கங்கள் இவ்விரண்டும் ஆதாரங்கள் மூலம் நமக்கு கிடைக்கின்றது.

**சமயமும் கோயில்களும்**

கி.பி.3-ம் நூற்றாண்டு முதல் சமண சமயம் தமிழகத்தில் ஓங்கி இருந்தது எனலாம். அச்சமயம்வரைப் பல்லவர்கள் சமண வளர்ச்சிக்கு பல உதவிகள் புரிந்தனர். மகேந்திரவர்மனும் சமண சமயத்தவனாகவே ஆரம்பத்தில் இருந்தான். சைவர்களுக்கு அவன் பல கொடுமைகள் செய்தான் வயிற்று வலியால் வாடிய திருநாவுக்கரசர் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாறியதும் சமயத்துறையில் சைவம் தழைக்கலாயிற்று. சமணம் மறையலாயிற்று ஆத்திரமடைந்த சமணர் மன்னனை தூண்டி திருநாவுக்கரசருக்கு பல

கொடுமைகள் செய்தனர். கொடுமை செய்து மீண்டும் சமண சமயத்திற்கு மாற்ற நினைத்த மன்னனே மன மாற்றமடைந்து சைவ சமயத்தை தழுவினான். அதன் விளைாக சமணர்கள் பல கொடுமைக்குள்ளாயினர். திருப்பாதிரிப்புலியூரிலிருந்த சமண பள்ளிகளை அழித்து திருவதிகையில் ஒரு சிவன் கோயிலைக் கட்டி அதற்கு **குணபரம் ஈஸ்வரம்** என பெயரிட்டான். திருச்சியில் காணப்படும் கல்வெட்டு மகேந்திரனை குணபரன் என்றே குறிப்பிடுகின்றது. அதில் அவன் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறியதையும் குறிப்பிடுகின்றது. சுருங்க கூறின் மகேந்திரவர்மனின் சமய மாற்றமே சைவம் வளர பேருதவியாக இருந்தது.

மகேந்திரவர்மன் பல்லவ நாட்டின் பல இடங்களில் மலைக்குகை கோயில்களை குடைந்தான். மராட்டியத்தில் வாதாபியிலும் பள்ளதாக்கிலும் குகை கோயில்கள் காணப்பட்டாலும் மலை குகை கோயில்களை முதலில் குடைந்தவன் மகேந்திரவர்டன் ஆவார். இவன் காலத்தில் திருச்சிராப்பள்ளி, திருக்கழுகுன்றம், பல்லாவரம், தளவானூர், சீயமங்கலம், வல்லம் ஆகிய இடங்களில் சிவன் கோயில்களும் மாமண்டூர், மகேந்திரவாடி நாமக்கல், சிங்கவரம் ஆகிய இடங்களில் பெருமாள் கோயில்களும் மண்டகப் பட்டில் மும்மூர்த்தி கோயிலும் சித்தனவாசலில் சமணக் கோயிலும் மலைகளில் குடையப்பட்டன.

மகேந்திரவர்மன் தன் பெயர் நிலைத்திருக்க **“மகேந்திர மங்கலம்”** என்னும் ஊரை மாமண்டூரில் ஏற்படுத்தினான் அங்கு **சித்திரமேகத்தடாகம்** என்னும் ஏரி ஒன்றை அமைத்தான். மகேந்திரவாடி என்னும் ஊரை அமைத்து அங்கு மகேந்திரப்பள்ளி என்னும் சிவன் கோயிலை அமைத்தான்.

## முதலாம் நரசிம்மவர்மன்

காஞ்சி மன்னர்களுன் மிகச்சிறந்தவன் முதலாம் நரசிம்மவர்மன் ஆகும். மகேந்திரவர்மனின் புதல்வனாகிய இவன் தந்தையிடமிருந்து பரந்த பேரரசினைப் பற்று கி.பி.668 வரை சிறப்புடன் ஆட்சி செய்தான். இவன் வாதாபி சாளுக்கியருடன் போரிட்டு மாபெரும் வெற்றி பெற்று மாமல்லன் ஆனான். தொடர்ந்து இலங்கை மீது படையெடுத்து வெற்றி பெற்றான். சீன யாத்தரிகரான யுவான்சுவாங் இவனது காலத்தில் காஞ்சிக்கு வருகை தந்தார். மாமல்லபுரத்துத் திறந்த வெளிக்கலைகூடம் உருவாக்கப்பட்டது இவனது ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

### வாதாபிப்போர்கள்

மகேந்திரவர்மனுடன் சாளுக்கிய மன்னனான இரண்டாம் புலிகேசி போர் நடத்தித் தாக்குதல் நடத்தியதன் பொருட்டு பழி தீர்க்கும் எண்ணங்கொண்டு தக்க தருணத்திற்காக நரசிம்மன் காத்திருந்தார். பல்லவர்கள் சாளுக்கியர்களுக்கு இணையாக வலிமை பெற்று விளங்கியதை புலிகேசி விரும்பவில்லை. எனவே பல்லவர்களின் வலிமையை உடைக்கவும், அழிக்கவும் நினைத்த புலிகேசி பழைய நினைவுகளுடன் பல்லவ நாட்டின் மீது மீண்டும் படையெடுத்தான். காஞ்சிக்கு 20 கல் தொலைவில் மாமல்லனை சந்தித்தான். புலிகேசிக்கும், நரசிம்மவர்மனுக்கும் நடைப்பெற்ற போரில் சாளுக்கிய மன்னன் தோற்கடிக்கப்பட்டான்.

இரண்டாம் புலிகேசியை சாளுக்கியத் தலைநகரான வாதாபிவரை துரத்தி சென்று வாதாபி நகரை அழித்துப் பல்லவர்க்கு ஏற்பட்ட பழியை நரசிம்ம வர்மன் தீர்த்துக் கெணர்டான். ஆதனால்தான் ‘‘வாதாபி என்ற அரசனை அழித்த அகத்தியர்’’ போன்றவன் எனக் குறிப்பிடப்படுகின்றான். இவன் வாதாபீயின் நடுவில் வெற்றித்தூணை நிறுவினான் என்று

வேலூர் பாளைப் பட்டயங்கள் கூறுகின்றன. இவ்வாறு கைப்பற்றப்பட்ட வாதாபி நகரம் நரசிம்மவர்மனின் பதிமூன்றாவது ஆண்டு காலம் வரையில் பல்லவர்வசம் இருந்தது. இப்போரில் புலிகேசி இறந்திருக்க வேண்டும் என தெரிகின்றது. இவ்வாறு சாளுக்கியரைத் தோற்கடித்து வாதாபியை வென்றதால் **வாதாபி கொண்டான்** என்று நரசிம்மன் பெயர் பெற்றான்.

சாளுக்கியர் மரபின் வீழ்ச்சிக்கும் தாழ்ச்சிக்கும் பல்லவரே காரணமானவர் என்று விநாயதித்தனது சோரப்பட்டயம் தெரிவிக்கின்ற என்பதால் பல்லவர் படை வாதாபியைப்படு சேதமடையச் செய்திருக்க வேண்டும். வாதாபியிலிருந்து வரும்பொழுது அங்கிருந்த கணேசர் சிலை ஒன்று கொண்டு வரப்பட்டது. அதனை வாதாபி கணேசர் என்று கூறுவர். வுாதாபி படையெடுப்பில் நரசிம்மவர்மனுக்கும் துணை நின்ற பல்லவர் படைத்தளபதி பரஞ்சோதியே பின்னாளில் போர் ஆடை தவிர்த்து காவி ஆடை அணிந்த சிறுத்தொண்ட நாயனார் ஆவார்.

**இலங்கை படையெடுப்பு**

முதலாம் நரசிம்மவர்மன் பல்லவ நாட்டை ஆண்ட பொழுது இலங்கையில் மானவர்மனுக்கும் அட்டதத்தன் என்பவனுக்குமிடையே அரியனை போட்டி ஏற்பட்டது. அப்போட்டியில் அட்டதத்தன் மானவர்மனை நாட்டைவிட்டு விரட்டினான். வேறு வழியின்றி மானவர்மன் பல்லவனிடம் அடைக்கலம் புகுந்தான். அவனுக்கு உதவியாக நரசிம்மன் பெரும் கப்பற்படையொன்றை இலங்கைக்கு அனுப்பி வைத்தான். ஆனால் இலங்கையைச் சென்றடைந்த படைவீரர்கள் உடல் நலமின்றி இருக்கிறான் என்ற வாந்தியை நம்பி பொரில் ஈடுபடாமல் பல்லவ நாடு திரும்பினர்.

மீண்டும் இரண்டாவது முறை இலங்கை நோக்கி படையெடுப்புத் துவங்கியது. இம்முறை போரிட்டு பல்லவ வீரர்கள் வீரத்துடன் இலங்கை அரியனையை மானவர்மனுக்கு மீட்டுத் தந்தனர். இவ்வெற்றியைப் பற்றி கூறும் காசக்குடி பட்டயம் ‘‘நரசிம்மன் இலங்கை மீது போர் தொடுத்துப் பெற்ற வெற்றி, இராமன் அடைந்த வெற்றி போன்றது’’ என்று புகழ்ந்து கூறுகின்றது.

**பல்லவ-பாண்டியப் போர்**

தமிழகத்தின் தென்பகுதியில் இக்காலத்தில் பாண்டியர்கள் வெற்றிக்கொடி நாட்டி நின்றனர். இப்பொழுது அரிகேசரி பராங்குசன் ஆட்சி செலுத்தினான் அவன் சேரர், சோழர், களப்பிரர் மீது வெற்றி கண்டான். இவன் பல்லவ சாயுக்கிய போட்டியை பயன்படுத்திப ல்லவர் நாட்டின் மீது புகுந்து சங்கரமங்கை என்னும் இடத்தில் பல்லவர்களைப் புறம் கண்டான் என்று சின்னமனூர் செப்பேடு காட்டுகின்றது. பாண்டியன் சேரர்களையும், சோழர்களையும், களப்பிரர்களையும் சேர்த்துக் கொண்டு பல்லவர்களுடன் போருக்குச் சென்றான். நுரசிம்மன் பாண்டியர்களுடன் பிற தென்னகத்து அரசர்களுடன் போரிட்டான என்று கூரம்சாசனம் கூறுகின்றது. வடக்கில் சாளுக்கியர்கள் தொல்லையை தவிர்த்தான் என்றாலும், மாமல்லன் காலத்தில் தெற்கில் உள்ள பாண்டியர்களுடன் அதிகார வலிமைப் போட்டி ஓயவில்லை.

**பல்லவ கங்கர் போர்**

இரண்டாம் புலிகேசி மறைவிற்குப் பிறகு அவனுடைய புதல்வர்களான ஆதித்தவர்மனுக்கும், முதலாம் விக்கிரமாதித்தனுக்குமிடையே அரியணை போட்டி ஏற்பட்டது. அதில் ஆதித்தவர்மன், நரசிம்மவர்மனின் உதவியை நாடினான். விக்கிரமாதித்தன்

கங்கநாட்டை ஆண்ட துர்விநீதன் உதவியை நாடினான். நரசிம்மவர்மனை நாடிவந்த ஆதித்தவர்மனுக்கு ஒரு பெரும்படையை மட்டும் கொடுத்து உதவினான். ஆனால் துர்விநீதன் தானே படையை நடத்திச் சென்று பல்லவனால் அனுப்பப்பட்ட படைகளையும் ஆதித்தவர்மனையும் முறியடித்து, விக்கிரமாதித்தனை வெற்றி பெற செய்து அவனை சாளுக்கி மன்னனாக்கினான்.

**சீனப்பயணி யுவாங்சுவாங் வருகை**

நரசிம்மவர்மன் ஆட்சிக்காலத்தில் ஏறக்குறைய கி.பி.640-ல் சீனப்பயணி யுவாங்சுவாங் காஞ்சிபுரத்துக்கு வந்தார். அவருடைய குறிப்பிலிருந்து அன்றைய பல்லவ நாட்டைப்பற்றி பல செய்திகள் கிடைக்கின்றன. பல்லவ நாட்டு மக்கள் அஞ்சா நெஞ்சினர். உண்மைக்கு உறைவிடமானவர், கற்றவரையும் உயர்ந்த கொள்கைகளையும் மதிப்பவர்கள் என்று குறித்துள்ளார். காஞ்சிபுரம் 6 மைல் சுற்றளவு இருந்தது எனவும், அந்நகரில் 100 சங்கிராமங்கள் என்ற புத்தமடங்களும் பதினாயிரம் புத்தமத துறவிகளும் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார். சைவ, வைணவ, சமணக் கோவில்கள் ஏறத்தாழ 80 இருந்தன. திகம்பர சமணனர் பலர் திராவிட நாட்டில் இருந்தனர். அசோகனுடைய கல்தூண்கள் காஞ்சியை சுற்றிலும் இருப்பதாக கூறப்பட்டுள்ளது. நாலாந்தா பல்கலைகழக ஆசிரியர் தருமபாலர் என்பவர் காஞ்சிபுரத்தில் அது சீரும் சிறப்புடனும் வளர்ந்து வந்தது. காஞ்சி ஒரு துறைமுகமென அவர் குறிப்பிட்டது மாமல்லபுரத்தைக் குறிப்பதாகும். ஆங்கிருந்து பல கப்பல்கள் இலங்கைக்கு செல்கின்றன என்று குறிப்பிட்டுள்ளார். பாண்டி நாட்டில் பௌத்தம் அழியும் நிலையில் இருந்தது என்றும் கூறியுள்ளார்.

**கட்டிடக்கலை**

வெற்றி வீரனாக விளங்கிய நரசிம்மன் ஆக்கப்பணிகள் பல செய்தான். மல்லை என்று அறியப்பட்டு வந்த துறைமுகம் இவன் காலத்தில் புதுப்பிக்கப்பட்டது. மாமல்லபுரம் என்ற பட்டணத்தை தோற்றுவித்தான். தந்தையைப் பின்பற்றி அறப்பணியில் ஈடுபட்டான். தந்தையைப் போன்று முதலில் குடைவரைக் கோவில்கைளைத் தோற்றுவித்தான். இவன் அமைத்த கோவில்களில் பொதிகைகள், காடிகள் வெட்டப்பட்டிருந்தன. திறந்தவாயுடன் குந்திய நிலையில் உள்ள சிங்கங்கள் தூண்களைச் சுமந்தவாறு அமைக்கப்பட்டிருப்பதை காணலாம்.

நரசிம்மன் மகாபலிபுரத்தில் ஒரு திறந்த வெளிக்கலைக் கூடத்தை உருவாக்கினான். மகாபலிபுரத்தில் அவன் காலத்துக்கலை மூவகைக் கலை திறன்களை வெளிப்படுத்தின. அவை குடைவரைக் கோவில்கள், ஒற்றைக் கோவில்கள், கற்சிற்பங்கள் என்பவை. மகிடாசுரமண்டபம், வராக மண்டபம், திருமூர்த்தி மண்டபம் ஆகிய குகைக்கோவில்களை தந்தான். மண்டபங்கள் இறையகங்களைக் கொண்ட கோவில்களேயாகும். பஞ்சபாண்டவர் ரதங்கள் என்றழைக்கப்படும் தருமராசர் தேர், பீமசேனர் தேர், அர்ச்சுனன் தேர், திரௌபதி தேர், சககாதேவன் தேர் ஆகிய கவர்ச்சியான ஒற்றைக்கல் கோவில்களை உருவாக்கினான். பஞ்சபாண்டவர் ரதங்கள் என்பவை கோவில்களேயாகும். நரசிம்மனின் குகை கோயில் சிற்பங்கள் கவர்ச்சியானவை. இவை வாதாபி குகைக் கோவிலில் காணும் புராண செய்திகளைத் தரும் சிற்பங்களை ஒத்தவை. பாறைகளின் மீது புராண கதைகளை சிற்பம் வடித்து விளக்கினான். கோவர்த்தன மலையை கண்ணன் ஏந்தி நிற்கும் காட்சியை கங்கை அவதாரம் அல்லது அர்சுனன் தவம் ஆகியவை கவர்ச்சியான கலைவளங்களாகும்.

காஞ்சிபுரத்தில் தன் தந்தை கட்டியிருந்த கோட்டையை நரசிம்மவர்மன் புதுப்பித்தான். சைவ மத வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமம் அளித்தான். நரசிம்மவர்மன் சமய சகிப்புத்தன்மை மிக்கவன் என்பது யுவாங்சுவாங் எழுதி வைத்துள்ள பயணக் குறிப்பிலிருந்து தெரிய வருகிறது.

## பல்லவர் கால கட்டடிடக்கலை, கலை, இலக்கிய வளர்ச்சி

இவர்கள் காலத்தில் கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, நடனக்கலை, நாடக்கலை, இலக்கியம் மற்றும் கல்வி வளர்ச்சி சிறந்தோங்கின. பல்லவ மன்னன் முதலாம் மகேந்திவர்மன் கோயில் கட்டிடக்கலை வரலாற்றில் புதியதொரு அத்தியாயத்தை ஏற்படுத்தினான் என்பதை மண்டகப்பட்டு கல்வெட்டு மூலம் அறியலாம். மகேந்திரவர்மன் காலத்துக்கு முன் கோயில்கள் அழியக்கூடிய பொருள்களால் கட்டப்பட்டதென்றும் இவன் காலலத்தில் செங்கல், மரம், சுண்ணாம்பு, உலோகம் பொன்றவைகள் பயன்படுத்தாமல் வெறும் கற்களினாலேயே கோயில்கள் மும்மூர்த்திகளுக்கு அமைத்துள்ளான் என்றும் மண்டகப்பட்டு கல்வெட்டு கூறுகின்றது. பல்லவர்கால கட்டிடக்லை, கலை மற்றும் இலக்கிய கல்வி வளர்ச்சியை பின்வருமாறு பிரித்துப் பார்ப்போம்.

**குடைவரைக் கோயில்கள்**

பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் மலைகளை வெட்டிப் பிளந்தும், குன்றுகளை குடையச் செய்தும் குடைவரைக் கோயில்களை அமைத்தான். மலைகளின் அடிவாரத்திலும், உச்சியிலும் இடைப்பகுதியிலும் குடைவரைக் கோவில்களை அமைத்தான். மாமண்டூரிலும், மகேந்திர வாடியிலும், சிங்கவாரத்திலும், சீயமங்கலம், பல்லவரம் வல்லம், தளவானூர், திருக்கழுகுன்றம், திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களில் சிவாலயங்கள் குடைந்தான். மண்டகப்பட்டில் மும்மூர்த்தி ஆலயங்களை அமைத்தான். எனவே அவனை சேதகாரி என்பதில் வியப்பில்லை.

இவனது காலத்து குகைக் கோயில்களில் கருவறை, அர்த்தமண்டபம், முகமண்டபமும், வாயிற்காப்போர் மண்டபத்தின் வெளியே இருபுறங்களிலும் நின்ற கோலத்திலும் காணப்படுவர். தூண்களின் அடிப்பாகமும், மேற்பாகமும் சதுர வடிவினதாகவும், நடுப்பகுதி எண்கோண வடிவாகவும் காட்சி அளிக்கும். முதலாம் நரசிம்மவர்மன் தந்தையின் அடி சுவட்டில் குடைவரைக் கோவில்களையே அமைத்தான். இவன் காலத்தில் குடைவரை கோயிலின் வளர்ச்சி உச்சக்கட்டத்தை எட்டியது. முலையடியில் நரசிங்க பெருமாள் கோயிலும், திருச்சி மலையடிக் கோவிலும், நாமக்கல், திருநள்ளாறை, குடுமியாமலை, திருமயம் முதலிய இடங்களில் உள்ள கோவில்களும் நரசிம்மன் காலத்து குடைவரை கோயில்களுக்கு சிறந்த விளக்கமாக உள்ளன. இவற்றில் குடையும் சிற்பியின் கைவண்ணத்தை காணலாம். மகாபலிபுரத்தில் இவன் காலத்து குகை கோயில்களை காணலாம். குடைவரை கோவில்கள் சதுரப்பட்டமுடைய தூண்களை உடையவை. தூண்களின் அடியில் திறந்த வாயுடனிருக்கும் சிங்கங்கள் தூண்களை தலையில் தாங்கியிருப்பதைப் போன்று காட்சித் தருகின்றன. மாமல்லனது குடைவரைக் கோயில்கள் பெரும்பாலும் மாமல்லபுரத்திலேயே காணப்படுகின்றன. அவை கோனேரி மண்டபம், வராக மண்டபம், இராமனுஜர் மண்டபடம், ஆதிராகவர் மண்டபம், புலிப்புதர் மண்டபம், மகிஷாசுரமர்த்தினி மண்டபம் எனப்படுவன.

**ஒற்றைக்கலை கோயில்கள்**

ஒற்றைக்கல் இரத குகைக் கோயில்கள் மலையின் உட்புறம் குடையப்பட்டவைகள். முலையின் உட்புறத்தை குடைந்தது போலவெளிபுறத்தையும் அழகுபட செதுக்கி விமானங்கள் அமைத்து ஏற்படுத்தியதுதான் இரதம். ஒரு கோயில் துர்க்கைக்கும் மற்றவை தனியே பஞ்ச பாண்டவர் இரதங்கள் எனக் கூறப்பட்டன. அவை திரௌபதை இரதம், அர்ச்சுனன் இரதம், பீம இரதம், தருமராஜன் இரதம், சகாதேவன் இரதம் என்பவைகளாகும். மேலும் கணேசர் இரதம் வலையன் குட்டை இரதம், பிடாரி இரதம் ஆகியவை இதே பாணியில் செதுக்கப்பட்டுள்ளது. திரௌபதி இரதத்தின் விமானம் சதுரவீட்டின் குடிசைபோல் காணப்படுகின்றன. மேற்புறத்தில் எவ்வித வேலைப்பாடும் கிடையாது. வாயிற்காப்போர் பெண்களாக உள்ளனர். கருவறையில் எருமை தலை மேல் நின்ற நிலையில் காணப்படும். துர்க்கை நான்கு கரங்களுடன் காட்சித் தருகின்றாள். இந்த இரதத்தினை தொடர்ந்து அர்ச்சுனன் இரதம் காணப்படுகிறது. இரண்டும் ஒரே பீடத்தில் உள்ளன. பீடத்தின் அடியில் சிங்கம், யானை உருவங்கள் காணப்படுகிறது. சகாதேவன் இரதம் பௌத்த சைத்தியத்தை போல காணப்படுகிறது.

**கற்றளிகள் (Structural Temples)**

பல்லவர்காலக் கட்டிடக் கலையில் ஒரு புதிய மாற்றத்தை இராஜசிம்மன் ஏற்படுத்தினான். செதுக்கப்பட்ட கற்களைக் கொண்டு கருவறை அதன்மேல் விமானம், அர்த்த மண்டபம், முகமண்டபம், சுற்றுபுறசுவர் போன்றவற்றை ஏற்படுத்தினான். முாமல்லபுரத்து கடற்கரைக் கோவிலும் காஞ்சி கைலாசநாதர் ஆலயமும், வைகுண்டபெருமாள் ஆலயமும் சிறந்த கட்டுமான கோவில்கள் ஆகும். இவை தோற்றத்தில் சிறியதாக இருந்தாலும், பெரியவைகளாக கருதப்படுகின்றன. மாமல்லபுரம் கடற்கரை கோவிலையும் பனமலை சிவாலயத்தையும் எழுப்பிய இராஜசிம்மன் கோவில்கள் பார்வைக்கு தர்மராசர் தேரை போன்று காட்சி தருவது குறிப்பிடத்தக்கது. தட்டு தட்டுகளாக மேலெழும்பும் கோபுரம் சிறுத்து சிறுத்து செல்வதால் கோவில் அறை வேறாக தோன்றுவதில்லை.

இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் காஞ்சியில் வைகுந்த பெருமாள், முகதீஸ்வரர், மதாங்கேஸ்வரர் ஆலயங்கள் எழுந்தன. திருத்தணி விராட்டானேஸ்வரர் ஆலயம் எழுந்ததுடன் பல்லவர் கால கட்டுமான கோவிற்கலை உச்சக் கட்டத்தை எட்டியது. இவை நந்திவர்மன் காலகலையை காட்டுகின்றது. வைகுந்தபெருமாள் ஆலயம் கைலாசநாதர் ஆலயத்தை விட பெரியது. பிற்கால கோவில்கள் அளவால் பெரியவை. இதன் சிங்கத் தூண்களின் சிறப்புடன் காணப்படுகிறது.

**சிற்பக்கலை**

மகேந்திரவர்மன் காலம் தொட்டு சிற்பக்கலை படிப்படியாக வளர்ச்சியடைந்திருப்பதை பல்லவர் கோவில் சிற்பங்கள் காட்டுகின்றன. மகேந்திரன் கால இறையகத்துவாயில், காவலர்களின் சிற்பகங்கள் குறிப்பிடத்தக்கவை. தூண்களில் தோரணங்களும், சதுரபகுதியில் தாமரை மலர்களும் அழகுபடுத்துகின்றன. இரட்டை திருவாசி தோரணங்கள் கவர்ச்சியுடையவை. தளவானூரிலும், சீயமங்கலத்திலும் சிற்பக்கலையை காணலாம். திருச்சி குன்றின் நடுவில் காணப்படும் சிவாலயம் மகேந்திரன் காலத்தில் குடையப்பட்டது. அதன்மேற்கு சுவர்பதுமை கண்களை கவர கூடியவை. குங்காதரனை குறிக்கும் சிற்பம் கங்கை அணிந்த சிவனை கண் எதிரில் கொண்டு நிறுத்திய வண்ணம் அமைந்திருக்கின்றது.

நாமக்கல் மலைக் கோவில் மண்டபத்து தாழ்வாரமும் கோவில் சுவரில் திருமால் அவதாரத்தை உணர்த்தும் சுவர் சிற்பங்களும், மகேந்திரன் காலத்துச் சிற்பியின் கை வண்ணத்தையும் கற்பனைத் திறனையும் காட்டுகின்றன.

நரசிம்மன் காலத்துக் குகைக்கோவில் சுவர்கள் சிற்பச்சுவர்கள் என காட்சியளிக்கின்றன. புராணக் கதைகளை அவை கூறுகின்றன. கோவில் சுவர்களை அணி செய்யும் சிற்பங்கள் சுவர் என்ற எண்ணத்தை காண்போரில் மறைக்கின்றன. சிற்பங்கள் அவர்களைப் புராணக் கதைகளுக்கு இழுத்துச் செல்கின்றன. காவியம் சிற்ப வடிவில் கண் எதிரே காட்டப்படுகின்றது. அது சிற்பியின் திறன். நரசிம்மனின் மாமல்லபுரத்தை ஒரு திறந்த வெளிக்கலைக் கூடம் என்று கூறுவர். ஆங்கே பஞ்சபாண்டவர் ரதங்கள் என்று அழைக்கப்படும். ஒற்றைக் கற்கோவில்கள் பெரும் சிற்பக்கூடங்களாக அமைகின்றன. இருமாடி அர்ச்சுனர் ரதமும் அதில் நாற்சுவர்களிலும் செதுக்கப்பட்டிருக்கும் உருவச்சிலைகளும், பீமர்ரதத்துச் சிங்கதூண்களும் தர்மராசர் தேர்சிற்பங்களுடன் சகாதேவன் ரதத்துச் சிற்ப வேலைபாடுகளும் வியக்கதக்கவைகளாகும். இவற்றுக்குப் பின்னால் நிலை கொண்ட சிங்க உருவமும், யானை உருவமும் இயற்கையான உயிரோட்டத்துடன் தோன்றுகிறது.

மகாபலிபுரத்துப்பாறைச் சிற்பங்கள் சிற்பம் வழி புராணக் கதைகளை விளக்கி நிற்கின்றன. சிற்பம் அங்கே காவியமாக்கப்பட்டது. கோவர்த்தன மலையைக் கண்ணன் ஏந்தும் காட்சி, அர்ச்சுனன் தவம் என்னும் காட்சி, கங்கை அவதாரக் காட்சி ஆகிய 153 உருவங்களை கொண்டது. இரட்டையர் பணிபுரியும் காட்சியும் பசுகன்றை நக்கி நிற்கும் சிற்கமும், மான் பின் காலால் தலையை சுரண்டும் காட்சிகள் போன்றவை சிற்பியின் கற்பனையையும் கைத்திறனையையும் விளக்கி கொண்டிருக்கின்றன. கைலாசநாதர் ஆலயத்தின் சிற்பங்களும் வைகுந்த பெருமாள் ஆலயத்தின் சுவர் சிற்பங்களும் புராணங்களுடன் வரலாறு பேசுகின்றன. சிற்ப கலையின் வளர்ச்சி அங்கே உச்ச நிலையை எட்டியது எனலாம்.

**கைலாசநாதர் கோயில்**

பல்லவர் கோயில்களில் மிகவும் பெருமை வாய்ந்தது காஞ்சி கைலாசநாதர் கோயில் ஆகும். இதனை கட்டியவர் இராஜசிம்மன் கோயிலின் உள்ளே உள்ள கலைப்படைப்புகள் பார்ப்பவரை கவர்ந்திழுக்கக் கூடியவை. கோயிலின் உட்புற சுவர்முழுவதும் சிவன், உமையாள், முருகன், திருமால் ஆகியோரின் உருவங்கள் எழில் சிற்பங்களாகத் திகழ்கின்றன. கருவறையின் முன் மண்டபம் அழகான வேலைப்பாடுகளுடன் கூடிய தூண்கள் கொண்டது.

**பிறகலைக் கோயில்கள்**

திருச்சிக்கு அருகில் திருப்பத்தூரிலும், உத்திரமேரூரிலும், கூரத்திலும், திருவதிகையிலும், புதுக்கோட்டையிலும பல்லவர்கள் கோயில் கட்டினர். வைகுந்த நாதர் கோயில் என்னும் பரமேச்சுர விண்ணகரம் ஒன்றின் மேல் ஒன்றாக உள்ள மூன்று கருவறைகள் உடையது. பெருவிமானம் உடையது. பல்லவர் வரலாறு இங்கே வடிக்கப்பட்டுள்ளது. கூரம் கேசவப் பெருமாள் கோயில், திருவதிகை விரட்டானேசுவரர் கோயில், உத்திரமேரூர் சுந்தவரதர் கோயில் புதுக்கோட்டை குன்றாண்டர் கோயில் திருத்தணிகைக் கோயில் ஆகியன குறிப்பிடத்தக்கன.

**செப்பு திருமேனிகள்**

செப்பு திருமெனிகள் முழுவதும் கனமாக செய்யப் பெற்ற திருமேனிகள் என்றும், உள்ளே பொன்னாலாகச் செய்யபெற்ற திருமேனிகள் என்றும் இருவகைப்படும. தஞ்சை மாவட்டத்துப் பெருந்தோட்டத்தில் கிடைத்த திருமாலின் செப்பு திருமேனி மண்டகப்பட்டு, வல்லம், காஞ்சி முதலிய இடங்களில் காணப்பெறும் சிற்பங்களை நினைவுபடுத்துகிறது. சிங்கலூரில் பல்லவர் காலத்திய நெடுமாலின் செப்புத் திருமேனி திரவாலங்காட்டில் சோம சுந்தர் திருமேனி, மேலையூர் பொன்மூலாம் பூசப்பெற்ற மைத்திரேயரின் உருவம் கூரம் சிவன் ஊர்த்து, வஜாலுத்திருமேனி, கீழ்படிதலூர் நஞ்கணி கண்டரின் செப்பு படிமம், கொடிமுடிப்பள்ளி கொண்ட பெருமாள் செப்பு திருமேனி, வடக்காலத்தார் கோயில் சிவன், சிவகாமி செப்புத் திருமேனி ஆகியன குறிப்பிடத்தக்கவையாகும்.

**ஓவியக்கலை**

புல்லவர்கள் ஓவியக்கலைக்குப் புத்துயிர் கொடுத்தோர் ஆவார். மகேந்திரவர்மனுக்குச் சித்தரகாரப்புலி என்னும் பெயர் உண்டு. தட்சிண சித்திரம் என்னும் நூலுக்கு இவர் உரையெழுதினார். பனைமலைக் கோயிலும், திருமலைக் கோயிலும் மாமண்டூர்க் கோயிலிலும், காஞ்சி கைலாச நாதர் கோயிலிலும் பல்லவர் கால ஓவியங்களின் எஞ்சியுள்ள சிதைந்த பகுதிகளைக் காணலாம். புனைமலைக்கோயில் பார்வதியின் ஓவியம், அமராவதி சிற்பங்கள் போன்றும் சிறப்பானவை. கைலாசநாதர் கோயிலில் கொற்றவை, இலக்குமி முதலிய எழில் சித்திரங்கள் உள்ளன. மாமணடூரிலும், மல்லையிலும் இன்றும் அழிந்த ஓவியங்களைக் காணலாம்.

**இசைக்கலை**

குடுமியான் மலைக்கல்வெட்டில் ‘‘சித்தம் நமச்சிவாய’’ என்று தொடங்கப்படும் பலவகைப் பண்களையும் தாளவகைகளையும் விளக்கி கூறி இறுதியில் இந்த எட்டிற்கும் ஏழிற்கும் உரிய என்று கூறப்பட்டுள்ளது. திருமயத்திலுள்ள சிவாலயத்திலும் இசையயைப் பற்றிய நுணுக்கங்கள் காணப்படுகின்றன. மத்த விலாசத்திலும் இசை என்னுடைய செல்வம் என்று மகேந்திரன் கூறுகிறான். தேவார பாடல்களின் மூலம் அக்காலத்தில் இசைக்கருவிகள் இருந்தன என்பதை அறியலாம். யாழ், குழல், கின்னரி, கொக்கரி, ச்சசரி, வீணை தக்கை, மூழவம், மொந்தை, மிருதங்கம், மத்தளம், துந்துபி, தமருகம்,துடிதானம், உடுக்கை, கொடுகொட்டி, குத்தலம், குடமுலராரசம் போன்றவை முக்கிய இசைக்கருவிகளாகும். சுமயக் குறவர்களின் பாக்கள் பல இந்தளம், சீகரமரம், நட்டபாடை குறிஞ்சி. வியாழகுறிஞ்சி, புறநீர்மை, செவ்வழி, கொல்லி போன்ற தமிழ் பண்களின் பாடப்பட்டுள்ளன.

**நடனக்கலை**

பல்லவமன்னர்கள் குறிப்பாக மகேந்திரன், இராஜசிம்மன் போன்றோர் இசையுடன் நடனத்திலும் ஆர்வம் காட்டினர். புல்லவர் காலத்து சுவர் கோலங்கள் நடன மாதுக்களின் நடனக்கலை வடிவங்களைக் காட்டுகிறது. கோயில் மண்டபங்கள் வழி புராணக் கதைகள் பரப்பப்பட்ட காலத்தில் இசையுடன் நடனக்கலையும் வளர்ந்தது. சித்தன்ன வாசல் ஓவியம் காட்டும் நடனமாதின் நிலை நாதாந்த நடனத்தின் அமைப்பை தெளிவுபடுத்துகின்றது. இடப்பக்கத்து நிலை **லதா விரிசிக நடனத்தின்** 12 நிலையைக் காட்டுகின்றது. வைகுந்த

பெருமாள் ஆலயத்தில் உள்ள சிற்பங்கள் ஆடவர்கள் மற்றும் பெண்டிர்கள் நடனத்தில் பங்கேற்ற நிகழ்ச்சிகளை சுட்டிக்காட்டுகின்றது.

**நாடக்கலை**

மகேந்திரனின் மத்த விலாசப் பிரகசானம் ஓர் உயர்ந்த நகைச்சுவை நாடகமாகும். ஐசவ, வைணவக் கருத்துக்களைக் கொண்டு பக்தி நாடகங்கள் பரவின. ஊதணயன் கதையைக் கூறும் பெருங்கதை, நாடகத்தைப் பற்றி குறிப்பிடுகின்றது. மாணிக்கவாசகர் நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து என்றும், நம்மாழ்வார் பிறவிமாயக் கூத்தினையே என வரும் தொடர்கள் பல்லவர் கால நாடகப் பாங்கினை எடுத்துக்காட்டுகின்றன.

**இலக்கியக்கலை**

பல்லவர் காலம் பக்தி இயக்க காலம் ஆகும். நாயன்மார்களும், ஆழ்வார்களும் இறைவனைத் தங்களது தமிழ் இசைப்பாக்களால் நாளும் பாடி மக்களின் மனத்திலும், நினைவிலும், நெஞ்சிலும், பேச்சிலும், கண்ணிலும், இறைவனை நிறுத்தினர். தங்களின் பக்தியால் மக்களைப் பரவசப்படுத்தி தேன்மதுர இசையால் தமிழிசைப்பாக்கள் பாடினர். வடநூல் வழித்தமிழ் ஆசிரியர்கள் பலரால் காப்பிலக்கண நூல்கள் பல இயற்றப்பட்டன. சங்கயாப்பு பாட்டியல், மாபுராணம் முதலியன இக்காலத்தவை. புராணசாகரம், கலியாணகதை, அமர்தபதி, பிங்கலகேசி, மணியாரம் மந்திர்நூல், பாவைப்பாட்டு முதயியன இக்காலத்தவையே. முத்தொள்ளாயிரம் என்ற நூல் மூவேந்தர்களைப் பற்றி கூறுகிறது. இதில் மொத்தம் 150 பாக்கள் கிடைத்துள்ளன. சூளாமணி என்ற நூலைச் சமமணசமயத்தைச் சார்ந்த தோலா மொழித்தேவர் அருளினார். சிறிய காப்பியங்களில் ஒன்றான இது 12 காண்டங்களையும் 2131 பாக்களையும் உடையது. “பெருங்கதையை” கொங்குவேளிர் என்ற கங்க அரசன் இயற்றினான். இதில் பெண்ணின் பெருமைப்பற்றி கூறப்பட்டுள்ளது.

லோகவிபாகம், கிரதார் ஜீனியம், அவந்தி, சுந்தரிகதை, மத்த விலாசப் பிரகசனம், காவ்யா தர்சம் முதலிய வடமொழி நூல்கள் இக்காலத்தே தோன்றின. யாப்பெருங்கல விருத்தியுரை, பாரதவெண்பா, திருத்தொண்டத் தொகை, திருஅந்தாதி, நந்திக்கலம்பாகம், தேவாரத்திருமறைகள் ஆகியனவும் தோன்றியது இக்காலத்தில்தான்.

நந்திக்கலம்பகம் மூன்றாம் நந்திவர்மனைப்பற்றியும் அக்காலப் படையெடுப்புகளையும், பொருளாதார நிலையையும் கூறுகிறது. பாரதவெண்பா என்ற நுயால் மூன்றாம் நந்திவர்மனால் ஆதரிக்கப்பட்ட பெருந்தேவனாரால் இயற்றப்பட்டது. நாயன்மார்களும் ஆழ்வார்களும் பல இலக்கிய நூல் இயற்றி இலக்கியக் கலை வளர்ச்சிக்கு பெரும் தொண்டாற்றியுள்ளனர்.

## முதலாம் பாண்டியப் பேரரசு

கடைச்சங்க காலத்தில் இறுதியாக ஆட்சி செய்த சிறந்த பாண்டிய மன்னரான உக்கிரப் பெருவழுதிக்குப் பின் பாண்டியர் மண்டலத்தில் களப்பிரர்கள் ஆதிக்கம் ஏற்பட்டதென்றும் அது கி.பி.ஆறாம் நூற்றாண்டின் இறுதிவரை நீடித்ததென்றும் அதன் பின்னர் கடுங்கோன் என்ற பாண்டிய மன்னர் களப்பிரர் ஆதிக்கத்தை ஒழித்து பாண்டியர்கள் ஆட்சியை மீண்டும் ஏற்படுத்தினான் என்று கல்வெட்டுகளும் செப்பேடுகளும் கூறுகின்றது. வேள்விக்குடி செப்பெடுகள் பாண்டிய மன்னன் கடுங்கோனின் சாதனைகளை குறிப்பிடுகின்றது. கடுங்கோனுக்குப் பின் கி.பி.10-ம் நூற்றாண்டின் மத்திய காலம் வரை பாண்டிய மண்டலத்தில் பாண்டியராட்சியே நடைப்பெற்றது. பாண்டிய கடுங்கோனால் மீட்கப்பட்டு அமைக்கப்பட்ட

பாண்டியப் பேரரசு தமிழக வரலாற்றில் பாண்டியப் பேரரசுதமிழக வரலாற்றில் பாண்டியர்களின் முதல் பேரரசு எனப்படுகிறது.

**கடுங்கோன் (கி.பி.575-600)**

கி.பி.575-ல் பாண்டிய கடுங்கோன் களப்பிரர்களை தோற்கடித்து பாண்டிய நாட்டை மீட்டு மீண்டும் பாண்டியர்கள் ஆட்சியை ஏற்படுத்தினான். இங்ஙனம் பிற்காலத்துப் பாண்டியர்களின் பேரரசினை நிறுவ உதவிய கடுங்கோன் பல்யாகசாலை முதுகுடுமி பெருவழுதி வழி வந்தவன் என்று வேள்விக்குடி சாசனம் எடுத்து இயம்புகிறது.

**மாறவர்மன் அவணிசூளாமணி (கி.பி.600-625)**

கடுங்கோனால் துவங்கப்பட்ட பணிகளை அவன் மகன் அவணிசூளாமணி தொடர்ந்து நடத்தினான். இவனுடைய சாதனைகள் குறிப்பிடத்தக்கவையல்ல. எனினும் மாறவர்மன் என்ற பாண்டியர் குலப் பெருமையை ஏற்றவன் இவன் எனக் கருதலாம்.

**சடையவர்மன் செழியன் சேந்தன் (கி.பி.625-640)**

இவன் சேரர்களை வென்று வானவர் என்ற பெயரைப் பெற்றான். யுவான்சுவாங் என்ற சீனப்பயணி இவன் காலத்தில் காஞ்சிக்கு விஜயம் செய்தார். பாண்டியர் நாடு பஞ்சத்தின் கொடுமையில் சிக்கியிருந்தது என்றும், பாண்டிய நாட்டை ஆண்டு வந்த மன்னன் அப்போது மடிந்தான் என்றும் தனது பயணக்குறிப்புகளில் கூறியுள்ளார். திருநெல்வேலி மாவட்டத்தில் மலையடிக்குறிச்சியில் செழியன் சேந்தன் ஒரு குகைக் கோயிலை ஏற்படுத்தினான்.

**மாறவர்மன் அரிகேசரி (கி.பி.640-670)**

இவன் செழியன் சேந்தனின் மகன் இவனுக்கு நெடுமாறன், புலியன், மீனவன், நெரியன், வானவன், மாறன், பராங்குசன் பல பட்டப்பெயர்களும் உண்டு. இவன் சேர மன்னர்கள் மற்றும் பல குறுநில மன்னர்களையும் தோற்கடித்தான். சோழ நாட்டின் மீது படையெடுத்து உறையூரைக் கைப்பற்றினான். சமாதான உறவை விரும்பிய சோழ மன்னன் தனது மகள் மங்கையங்கரசியை மாறவர்மன் அரிகேசரிக்கு மணமுடித்து வைத்தான். பாண்டியநாட்டின் எல்லை இவன் காலத்தில் அதிகளவு விரிவடைந்தது. திருவிளையாடற் புராணத்தில் இவன் கூன் பாண்டியன் என்றும் சுந்தரபாண்டியன் என்றும் அழைக்கப்படுகின்றான்.

திருஞான சம்மந்தரால் மாறவர்மன் அரிகேசரி சமண மதத்திலிருந்மு சைவ சமயத்திற்கு மாற்றப்பட்டான். இதன்பின் துலாபாரம், இரணிய கர்ப்பம் போன்ற வேள்விகளை நடத்தினான். சமண சமயத்தினர் பலவிதமான துன்புறுத்தலுக்குள்ளாயினர். மதுரையில் இவன் காலத்தில் 7500 சமணர்கள் கழுவேற்றப்பட்டனர் என்று கதைகள் இருக்கின்றன. இவன் காலத்தில் முத்துக் குளியல் முக்கியத் தொழிலாக இருந்தது.

**மாறவர்மன் அரிகேசரி பராங்குசன்**

**(மாறவர்மன் இராஜசிம்மன் (கி.பி.710-765)**

இவன் கோச்சடையனின் மகன் ஆவான். இவன் காலத்தில் பல்லவ நாட்டில் அரியனை ஏறுவதில் சிறு குழப்பம் ஏற்பட்டது. பல்லவ மன்னன் இரண்டாம் நரசிம்மவர்மனின் இறப்பிற்கு பிறகு அரசு இருக்கைக்கு சித்திமேயனும், நந்திவர்ம பல்லமல்லனும் போட்டியிட்டனர். இப்பொட்டியில் பாண்டிய மன்னன் சித்திர மேயனுக்கு உதவி செய்தான். இதன் விளைவாக பல்லவர்களுக்கும், பாண்டியர்களுக்கும் இடையே நெடுவயல், குறுமடை, கொடும்பாளூர்

மண்ணிக்குறிச்சி ஆகிய இடங்களில் வைத்து போர் நடைப்பெற்றது. அனைத்து போர்களிலும் பாண்டியர்கள் வெற்றி பெற்றனர். இறுதியில் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள நந்திபுரக் கோட்டையை பாண்டியர்கள் முற்றுகையிட்டனர். ஆனால் உதயச்சந்திரன் என்ற பல்லவத் தளபதி முற்றுகையை உடைத்து சித்திரமாயனைக் கொன்று பாண்டியர் படைகளை பின்னுக்குத் தள்ளினார். பாண்டிய மன்னனையும், வெம்பை என்ற இடத்தில் சாளுக்கிய மன்னனையும் பின்னர் கங்கர்களையும் தோற்கடித்தப் புகழ் பெற்றான். மதுரை, வஞ்சி, உறையூர் போன்ற இடங்களில் இருந்த கோட்டையை இவன் புதுப்பித்தான். இவன் காலத்தில் பாண்டியப் பேரரசு வடக்கே காவிரியைத் தாண்டியும், வடமேற்கில் பாண்டிக் கொடுமுடிவரையிலும் பரவி இருந்தது.

**ஜெதில பராந்தக நெடுஞ்சடையன் (கி.பி.765-796)**

முதலாம் இராஜசிம்மனின் மகன் ஜெதில பராந்தக நெடுஞ்சடையன் கி.பி.765-ல் பாண்டிய மன்னனாக முடிசூட்டப்பட்டான். இவனுக்கு ஜெதிலன், பராந்தகன், வரகுணமகராஜா, மாறன் சடையன், நெடுஞ்சடையன் என்றெல்லாம் பட்டப்பெயர்கள் உண்டு. பதவிக்கு வந்த பல்லவ மன்னன் இரண்டபம் நந்திவர்மனை பெண்ணாடகத்தில் வைத்து தோற்கடித்தான். தனக்கெதிராக எழுந்த ஆய்வேளீரையும், நாட்டுக்குரும்பரையும் அடிபணிய வைத்தான். பல்லவ மன்னர்களின் துணையுடன் தன்னை எதிர்த்த தகடூர் மன்னன் அதியமானை வென்றான். அடுத்து கொங்குநாடும், வேணாடும் கைப்பற்றப்பட்டது. வெம்பில், விழிஞ்சம், அரிவுயூர் கோட்டை போன்றவைகள் அழிக்கப்பட்டது. பாண்டியராட்சி தொண்டைமண்டலம் மற்றும் கொங்கு மண்டல பகுதியிலும் பரவி நின்றது. முத்திரையர்களும் தோற்கடிக்கப்பட்டனர்.

பராந்தக நெடுஞ்சடையன் கரவந்தபுரத்தில் ஒரு கோட்டையைக் கட்டினான். கோங்கு நாட்டில் காஞ்சிவாய்ப் பேரூரில் விஷ்ணு கோயிலைக் கட்டினான். வேதியர் குலத்திற்கு அக்கிர காரங்களை எழுப்பினான். வைணவாகளுக்கு வாரி வழங்கினான். இவனது மந்திரியான மதுரகவி மதுரைக்கருகில் உள்ள ஆனை மலைக்கருகில் வைணவக் கோயிலை எழுப்பினான். முதல் பாண்டிய மன்னர்களில் தலைசிறந்த மன்னனாக கருதப்படும் இவனே வேள்விக்குடி செப்பேட்டை வெளியிட்டவன்.

சங்ககாலத்து பாண்டிய மன்னன் முதுகுடுமி பெருவழுதியால் கொற்கைகிழான் நற்கொற்றனுக்கு இறையிலியாகக் கொடுக்கப்பட்ட வேள்விக்குடி என்ற கிராமம் களப்பிரர்களால் பறிமுதல் செய்யப்பட்டது. அங்கு மீண்டும் மதலாம் பாண்டிய பேரரசு ஏற்படத்தப்பட்ட உடன் பாண்டிய மன்னன் வேள்விக்குடி கிராமத்தை மீண்டும் பிரமதேவ தானமாக கொற்கைகிழவன் வழியில் தோன்றிய நரசிங்கனுக்கு கொடுக்க பாண்டிய மன்னன் இட்ட சாசனமே வேள்விக்குடி சாசனமாகும். இச்சாசனத்தில் பாண்டியர்களைப் பற்றிய பல செய்திகள் கிடைக்கின்றன. ஆனைமலை, திருச்சி, அம்பாசமுத்திரம், திருச்செந்தூர், கழுகுமலை, ஏர்வாடி, போன்ற பல கல்வெட்டுகளை இம்மன்னன் நிறுவினான்.

**வரகுண பாண்டியன் (கி.பி.792-835)**

இவன் பாண்டிய நெடுஞ்சடையனின் பேரன் ஆகும். இவன் பல்லவர்களைத் கரூர் என்ற இடத்தில் வைத்து நடைபெற்ற போரில் தோற்கடித்தான். முத்திரையர்களை அடக்கினான். தென்பெண்ணாற்றங்கரையில் உள்ள அரசூர் வரை பாண்டியர் ஆட்சியை விரிவுபடுத்தினான்.

சைவ பற்றுடைய இம்மன்னனை மாணிக்க வாசகரும், பட்டினத்தாரும் புகழ்ந்து பாடினர். அம்பாசமுத்திரம் ஆலயத்திற்கு 296 பொற்காசுகளை வழிபாட்டு நிதியாக வழங்கினான். திருச்சிக்கு அருகில் உள்ள சிவன் கோயிலுக்கு திருவிளக்கேற்ற 130 கழஞ்சு பொன் கொடுத்தான்.

**சடையன் மாறன் (கி.பி.835-862)**

**(ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன்)**

இவன் வரகுணனின் மகன் ஆவான். ஏகவீரன், ஆவனிசேகரன், மாறவர்மன் போன்ற பட்டப்பெயர்களை பெற்ற இவன் செரர், பல்லவர், கங்கர், கலிங்கர்,ஈழவர்களாகிய இலங்கையர்கள் பொன்றவர்களைத் தோற்கடித்தான். இலங்கை மன்னன் முதலாம் சேனனை முழுமையாகத் தோற்கடித்து நகரங்களை கொள்ளையிட்டு, புத்த விகாரங்களை சூறையாடினான் என்றும் தனக்குப் பணிந்த சேனனை அருவிக்கரையில் அமர்த்திவிட்டு நாடு திரும்பினான் என்று மகாவம்சம் கூறுகின்றது. மேலும் விழிஞ்சம், குன்னூர் போன்ற இடங்களில் நடைப்பெற்றப் போர்களிலும் வெற்றி பெற்றான். ஆனால் தெள்ளாறு என்ற இடத்தில் வைத்து நடைபெற்ற போரில் பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மன் பாண்டிய மன்னனை தோற்கடித்தான். முதலாம் பாண்டியப் பேரரசு வீழ்ச்சிடைய தெள்ளாறு போர் ஒரு முக்கிய காரணமாகும்.

**இரண்டாம் வரகுணபாண்டியன் (கி.பி.895-905)**

ஸ்ரீமாற ஸ்ரீ வல்லபன் இறக்கும் போது பாண்டியர் நிலை சீர்குலைந்திருந்தது. ஈழ நாட்டார் கை ஓங்கியது. மதுரையில் மாயப்பாண்டியன் ஆட்சியைப் பெற்றிருந்தான். வடக்கில் பல்லவர்களும் சோழர்களும் வலிமை பெற்று பாண்டியர் நாட்டின் வடபகுதிகளை கைப்பற்றினர். புல்லவ நாட்டில் மூன்றாம் நந்தி வர்மனுக்குப்பின் அவன் புதல்வன் நிருபதுங்கன் அரசன் ஆனான். ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனின் மூத்த மகன் இரண்டாம் வரகுணன் நிருபதுங்கனுடைய உதவியுடன் மாயப்பாண்டியனின் ஆட்சியை ஒழித்து பாண்டிய நாட்டைக் கைப்பற்றினான். இந்நிகழ்ச்சிக்குப் பல்லவமன்னன் நிருபதுங்கனை அவன் தம்பி அபராஜிதன், சோழர் உதவியுடன் எதிர்த்தான். நிருபதுங்கனுக்கு வரகுணன் உதவினான். குி.பி.895-ல் நடைபெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருப்புரம்பியம் போரில் நிருபதுங்கனையும், வரகுணனையும் அபராஜிதன் தோற்கடித்தான்.இதன் விளைவா பாண்டியர்கள் வடபகுதியை விட்டு வெளியேறினார். சோழர்கள் முன்னேறினர். புாண்டியர்களின் வலிமை இறுதியாக ஒடுக்கப்பட்டது. இரண்டாம் வரகுணனின் அறப்பணிகளை திருச்செந்தூர் கல்வெட்டுக்களில் காணலாம்.

**பராந்தகப் பாண்டியன் (கி.பி.895-905)**

இவனுக்கு சடைநன் வர நாராயணன் என்ற பெயரும் உண்டு. இவள் பெண்ணாடகம், விழிஞ்சம் போன்ற கோட்டைகளை தகர்த்தான். உத்திரன் என்று குறுநில மன்னனை தோற்கடித்தான். சேரநாட்டு இளவரசி வானவன் மாதேவியை இவன் மணந்தான். அவள் நினைவாக திருநெல்வேலி மாவட்டத்தில் சேரன்மாதேவி என்ற ஊரை அமைத்தான்.

சின்னமனூர் பெரிய செப்பேடுகளை இயற்றிய இம்மன்னன் தஞ்சை கொடும்பளூர் மன்னர்களை வென்றான். சுமண சமயத்தை தழுவிய இவன் சமண பள்ளிகள் அமைக்க உதவினான். இலங்கை வேந்தன் காசப்பனின் துணையுடன் சோழர்களை வேலூரில் எதிர்த்து

தோல்வி கண்டான். எனவே சோழர்கள் முன்னேறி மதுரையை கைப்பற்றினர். வடக்கில் சோழர்கள் இராஷ்டிரக் கூடர்களுடன் பிரச்சினையில் மாட்டிக் கொண்டனர். இதைப் பயன்படுத்தி மூன்றாம் இராஜசிம்மனின் புதல்வர் வீரபாண்டியன் சோழர்களை தோற்கடித்தான். சோழன் தலைகொண்ட கோவீர பாண்டியனாக மதுரையில் தன்னாட்சி ஏற்படுத்தினான். இவன் காலம் முதல் சோழர் பாண்டியர் மோதல் வலுவடைந்தது. தொர்ந்து நடைபெற்ற போரில் சுந்தரச் சோழனால் தோற்கடிக்கப்பட்டு அவன் மகன் ஆதித்த சோழனால் வீரபாண்டியன் கொல்லப்பட்டான். இவனுடைய இறப்புடன் பாண்டியர்களின் முதல் பேரரசு முடிவுக்கு வந்தது. பாண்டிய மண்டலம் சோழப் பேரரசின் பகுதியாக மாறியது. மதுரையில் சோழ ஆளுநர்கள் ஆட்சி செய்தனர்.

## பக்தி இயக்கம்

களப்பிரர்கள் காலத்தில் தமிழ்ச் சமுதாயம் கட்டுண்டு கிடந்தது. சமணமும், பௌத்தமும் விரைந்து வளர்ந்தன. விடியலை நோக்கி ஏங்குகிற நிலை தமிழ் சமுதாயத்திற்கு ஏற்ப்பட்டது. பலர் சமய நம்பிக்கையை இழந்தனர். பல்லவர் தலைதூக்கிக் களப்பிரரை விரட்டியதும் இந்துச் சமயத்தினர் புத்துணர்வு பெற்றனர். இந்து மதத்திற்குப் புத்துயிர் கொடுக்கும் நோக்கத்துடன் பக்தி இயக்கத்ததைத் துவக்கினர். இந்து மதத்தின் ஒவ்வொரு பிரிவினரும் தமது பிரிவு மீது பரிவுக் கொண்டது மட்டுமின்றி எதிர்ப்பிரிவு சரிவு காண வேண்டும் என்றும் விரும்பினர். அத்தகைய பக்தி இயக்கம் கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை இருந்தது. அதன் அடிப்படை அம்சங்களை இங்கு ஆய்வு செய்யலாம்.

**சைவம்**

**நாயன்மார்கள்**

சைவ சமயத்தைப் புத்துயிர் பெறச் செய்யப் பலர் முயன்றனர். அவர்களில் அறுபத்து மூன்று நாயன்மார்கள் மிகவும் குறிப்பிடத்தக்கவர்கள். மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி என்கின்ற வகையில் மன்ன்ன பின்பற்றிய மதத்தைப் பின்பற்றும் மரபை மக்கள் கொண்டிருந்தனர். எனவே, நாயன்மார்கள் மன்னர்களைச் சைவ சமயத்தில் ஈடுபாடு கொள்ளச் செய்யப் பெரிதும் முயன்றனர். நாயன்மார்கட்கு சமுதாயத்தில் நல்ல மதிப்பு இருந்தது. நந்தனார், சிறுத்தொண்டர், அப்பர், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், காரைக்காலம்மையார், சுந்தரமூர்த்தி நாயனார் போன்றோர் முக்கியமான நாயன்மார்கள் ஆவர். திருநாவுக்கரசர் அவரது சகோதரி திலகவதி அம்மையாரால் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாற்றப்பட்டார். பல்லவன் முதலாம் மகேந்திரவர்மனைச் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாற்றினார் திருநாவுக்கரசர். தமது மூன்றாம் வயதில் பார்வதியிடம் ஞானப்பால் பெற்றாராம் திருஞானசம்பந்தர். இவர் கூன்பாண்டியன் எனும் பாண்டிய மன்னனின் தீராத வயிற்றுவலியைத் தீர்த்து அவரைச் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாற்றினார். சுந்தரமுர்த்தி நாயனாரின் திருமண நாளில் சிவபெருமான் தோன்றி அவரை தமது அடிமை வாதாடித் தடுத்தாட்கொண்டதாகப் புராணம்உள்ளது. கடவுளுக்காக எவ்வித இன்னல்களையும் தியாகத்தையும் செய்ய மனிதன் தயாராக இருக்கவேண்டும் எனும் கருத்தை உணர்த்தும் வகையில் இக்கதைகள் அமைந்துள்ளன.

**சைவச் சமயத்தினரின் வழிமுறைகள்**

சைவச் சமயத்தைப் பரப்பப் பலவிதமான விதிகள் மேற்கொள்ளப்பட்டன. சைவ இலக்கியங்கள் பன்னிரு திருமறைகளாக தொகுக்கப்பட்டன. சைவ சமயத்தை சேர்ந்த பெரியவர்கள் ஊர் ஊராக சுற்றினார்கள். ஒவ்வொரு ஊரிலும் தெருத்தெருவாகச் சமயப் பாடல்களை இசையுடன் பாடிச் சென்றனர். கோவில்களில் கூடிப் பக்தி இசை இசைத்தனர். மக்களை நேரடியாக சந்தித்து அவர்களை சைவ சமயத்தில் ஈடுபடுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மன்னர்களை சந்தித்து மதமாற்றம் செய்ய முயற்சிகள் மேற்டிகாள்ளப்பட்டன. மன்னனை மதமாற்றம் செய்ய அவனளித்த உடல் இன்னல்களை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டனர். மகேந்திரவர்ம பல்லவன் திருநாவுக்கரசரைச் சுண்ணாம்புக் காளவாயில் இட்டது போன்ற கடுமையான சோதனைகளை அவர் ஏற்று அவனை மனம் மாற்றிப் பின்னர் மதமாற்றம் செய்தார் எனத் தெரிகிறது. பிற மதத்தினரை வாதிட அழைத்து வாதத்தில் வெல்வதன் மூலம் தங்களது சமயத்தின் மகத்துவத்தை நிலை நாட்ட முயன்றனர்.

**சைவச் சமயப் பிரிவுகள்**

சைவச் சமயத்தில் சில உட்பிரிவுகளும் இருந்தனர். பசுபதம் எனும் பிரிவைச் சேர்ந்தவர்கள் கறுப்பு உடை அணிந்தனர்.இப்பிரிவில் மணமான, மணமாகாத ஆண்களும் பெண்களும் இருந்தனர். காலையும் மாலையும் உடலெங்கும் திருநீறு பூசி சிவலிங்கத்தின் வலப்புறம் மண்டியிட்டு தியானம் செய்வது அவர்களது பழக்கமாக இருந்தது.கபாலிகர்கள் என்போர் சிவனின் ஒரு வடிவமான கபாலிலை வழிப்பட்டனர். இவர்கள் எலும்புகளை மாலையாக்கி அணிந்தனர். கபாலத்தில் உணவை வைத்து உண்டனர். காளமுகர் எனும் பிரிவினரும் இருந்தனர். இவர்கள் திருநீரைப் பூசுவதுடன் அதனை உண்ணும் பழக்கத்தையும் கொணடிருந்தனர். கபாலத்தில் மது பானத்தை ஊற்றி அருந்தினர். தீவிரவாதிகளடங்கிய வீர சைவம் எனும் பிரிவில் இருந்தோர் சிறு லிங்கத்தை அடியில் கொண்ட மணிமாலையை அணிந்தனர். சக்தி வழிபாட்டை சிலர் முக்கியமாகக் கருதினர். சைவர்கள் யோகத்திற்கு மதிப்பளித்தனர். இவ்வாறு சைவ சமயத்தில் உட்பிரிவுகள் இருந்தன. நரபலியிடுதல் நடைமுறையில் இருந்தற்கான ஓரிரு சான்றுகள் உள்ளன.

**வைணவம்**

வைணத்தைப் பரப்பிய சமயப் பெரியவர்கள் ஆழ்வார்கள் ஆவர். ஆழ்வார்கள் பன்னிருவர். அவர்களில் ஆண்டாள் மட்டும் பெண் ஆழ்வாராவார். பொய்கையாழ்வார், திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார் போன்றோர் குறிப்பிடதக்கவராவர். திருமழிசையாழ்வார் முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் காலத்தில் வாழ்ந்தவர். திருமங்கையாழ்வார் கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவர் சமணத்தையும் பௌத்தத்தையும் கடுமையாகச் சாடினார். சைவர்களுடன் நட்பு கொண்டிருந்தார். திருமங்கையாழ்வாரின் வளர்ப்பு மகள் ஆண்டாள். சூடிக் கொடுத்த சுடர் கொடி என்றழைக்கப்படும் ஆண்டாளின் திருப்பாவை இன்றும் மார்கழிப் பனியில் தமிழகத்தின் வீதியில் ஒலிக்கிறது. அழுது சிரித்து ஆடிப்பாடித் தொழுததால் பேயாழ்வர் அபடபெயரினைப் பெற்றார். கொள்ளையடித்து வாழ்ந்த கள்ளர் குலத்தைச் சார்ந்தவர் திருமங்கையாழ்வார். சேர நாட்டின் சிம்மாசனத்தைத் துறந்து துறவி ஆனவர் குலசேகராழ்வார். இவவாழ்வார்கள் பக்தி நூல்கள் இயற்றியது மட்டுமின்றி பல வழியிலும் வைணவம் பரவப் பாடுபட்டனர்.

**விளைவுகள்**

தமது சமயப்பிரிவை வலுப்படுத்தும் நோக்குடன் சமயக்கொடுமைகளைச் செய்யவும் சமயப் பெரியோர் தயங்கவில்லை. மதஉணர்வின் காரணமாக பலர் துன்புறுத்தப்பட்ட செய்திகளைக் காணமுடிகிறது. நின்றசீர் நெடுமாறன் என்பான் சம்பந்தரின் தூண்டுதலால் மதுலையில் வாழ்ந்த சமணர்களைத் தோலுரித்தான் என ஒரு செய்தி கூறுகிறது. சமண, புத்த மதங்களை சேர்ந்தவர்களின் தலைகளை வெட்டியெறிவதே தனது தலையாய பணி எனத் தொண்டரடிப் பொடியாழ்வார் குறிப்பிடுகிறார். திருமங்கையாழ்வார் நாகப்பட்டினப் புத்த விக்ரத்தை கொள்ளையடித்து அங்கிருந்த பொன்னாலான புத்தர் சிலையை உருக்கி சீரங்கம் கோவிலை சீரமைப்புச் செய்தார்எனத் தெரிகிறது. திருவாவூர், பழையாறை போன்ற இடங்களில் சமணர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இரண்டாம் நந்திவர்ம பல்லவனும் பல சமணர்களின் தோலை உரித்து துன்புறுத்தியதாக தெரிகிறது. பக்தி இயக்கத் இந்துக்களிடையே பக்தியை மட்டுமின்றிச் சமயப் பகைமையையும் வளர்த்தது. பல சமண பௌத்த இலக்கியங்கள் அழிந்தன.

பக்தி இயக்கம் இந்து மதத்தின் புத்துயிர்ப்பிற்கு வித்திட்டது. பல பக்தி இலக்கியங்கள் தமிழின் வளத்திற்கு வழிகோலின. சமுதாய ஏற்றதாழ்வினை அற்ற நிலையை இவ்வியக்கம் வலியுறுத்தியது. சாதி, இனம், பிறப்புத் தரநிலை ஆகியவற்றின் அடிப்படையில் சமயப் பெரியவர்கள் மதிப்பிடவில்லை. மெயப்பொருள் நாயனாரும, குலசேகராழயவாரும் மணிமுடி துறந்த மன்னர்கள். கண்ணப்பர் வேட்டைக்காரர், திருமங்கையாழ்வார் கொள்ளைக்காரர், திருநீலகண்டர் குயவர், நந்தனார் பள்ளர், காரைக்காலம்மையார் வைசியர், அப்பர் வெள்ளாளர், சம்பந்தர் பிராமணர். இவ்வாறு சமயப் பெரியோர்களிடையே வேளாளரிருந்தனர். வேடுவர் இனத்தவர், பஞ்சமர் இனத்தவர், பரதர் இனத்தவர், அந்தணர் இனத்தவர், பெண்டிரும் இருந்தனர். எனவே, பக்தி இயக்கம் சாதியுணவிற்கு அப்பாற்பட்டு திகழ்ந்தது. பிறப்பால் உயர்ந்தவனில்லை என்பதை இது வலியுறுத்துகிறது. பக்தி இயக்கத்தின் காரணமாகப் பல புதிய கோயில்கள் தோன்றின. பக்தி நூல்களிலிருந்த பாடல்களை இசையுடன் பாமரனும் பாடத் தலைப்பட்டான்.

**முதலாம் இராஜராஜ சோழன்**

இரண்டாம் பராந்தகச் சோழனுக்கும் வானவன் மாதேவிக்கும் மகனாக பிறந்த இராஜ ராஜசோழனின் இயற்பெயர் **அருண்மொழி வர்மன்** ஆகும். **இராஜகேசரி** என்ற பட்டம் புனைந்த இவன் இராஜராஜ என்று தனது மூன்றாம் ஆட்சியாண்டு முதல் அழைக்கப்பட்டான். இராஜராஜ சோழனின் வருகையுடன் சோழர் வரலாறு ஒரு புதுத்திருப்பத்தைக் கண்டது.

**படையெடுப்புகள்**

**காந்தாளூர்ச்சாலை**

தற்போதைய திருவனந்தபுரத்திற்கு தெற்கில் உள்ளப் பகுதிதான் முந்திய காலத்தில் காந்தாளூர்ச் சாலை என அழைக்கப்பட்டது. இது சேரநாட்டிற்கு உட்பட்ட பகுதி ஆகும். சேர நாட்டின் மன்னன் பாஸ்கர ரவிவர்மன் என்பவனாகும். உத்தம சோழனுக்கும் பாஸ்கர ரவிவர்மனுக்கும் சில கருத்து வேறுபாடுகள் உண்டு. இதை பழி தீர்த்துக் கொள்ளவே ராஜராஜன் சேரநாடு மீது படையெடுத்தான். சேர நாட்டின் கடற்படைத் தளமான காந்தளூர்ச்சாலை அழிக்கப்பட்டு அருகில் உள்ள விழிஞ்சமும் கைப்பற்றப்பட்டது.

சோழர்களுக்கு எதிராக காந்தளூர்ச் சாலைக்கடலில் அணிவகுத்து நின்ற மரக்கலங்களை அழித்ததன் பொருட்டு **காந்தளூர்ச் சாலை கலமருத்தருளிய** என்ற பட்டப் பெயரைப் பெற்றான். சேர மண்டலத்தின் தெற்கில் வேணாட்டில் கைப்பற்றிய பகுதிகளில் நிர்வாக ஒழுங்கேற்படுத்தினான். குமரி, சுசிந்திரம், கோட்டாறு ஆகிய பகுதிகள் உள்ளிட்ட பிரதேசத்தை **இராசஇராச தென்னாடு** என்று பெயரிட்டான்.

**கொல்லம்**

இரண்டாவது முறையாக சேர நாட்டின் மீது படையெடுத்தான். உதயகிரிக் கோட்டை தகர்த்தெறியப்பட்டது. கொல்லம் கைப்பற்றப்பட்டது. கொல்லத்தையும் அதனை சார்ந்த கொடுங்களூரையும் கைப்பற்றியதால் **கீர்த்தி பராக்கிரமன்** என்ற பெயர் பெற்றான். இப்போரில் மகன் இராஜேந்திரன் படைத் தளபதியாக பணியாற்றினான்.

**குடமலைநாடு**

தற்போதைய குடகு முன்னால் குடமலை நாடு என்று அழைக்கப்பட்டது. குடமலை நாட்டு மன்னன் சோழ தூதன் ஒருவனை இழிவுபடுத்தியதால் அந்நாடு சோழ படையெடுப்பிற்கு உள்ளானது. குடகு நாட்டு மன்னனை தோற்கடித்து புறமுதுகிட்டு ஓட வைத்தான்.

**பாண்டிய நாட்டுடன் போர்**

தனது சேர நாட்டு படையெடுப்பிற்கு பின் இராஜராஜன் தனது கவனத்தை பாண்டிய நாட்டின் மீது செலுத்தினான். பாண்டியநாட்டு மீது படையெடுத்து அந்நாட்டு மன்னன் அமரபூஜங்கனை தோற்கடித்தான். பாண்டிய நாடும், சோழப் பேரரசோடு இணைக்கப்பட்டது. இப்போர் பற்றி திருவாலங்காடு செப்பேடுகள் விரிவாக விளக்குகின்றன.

**ஈழப்படையெடுப்பு**

ஈழ மன்னன் ஐந்தாம் மகிந்தன் சோழ மன்னனின் எதிரியான பாண்டியர்களுக்கு உதவி செய்தான். இதை விரும்பாத சோழ மன்னன் ஈழம் என்றழைக்கப்படும் இலங்கை மீது படையெடுத்தான். மகன் இராஜேந்திரனை இலங்கைப் படையெடுப்புக்கு தளபதியாக அனுப்பினான். ராஜேந்திரனைப் பார்த்த இலங்கை மன்னன் ஈழ நாட்டின் தென்பகுதிக்குச் சென்று பதுங்கினான். இதனை பயன்படுத்திக் கொண்டு இராஜேந்திரன் இலங்கையின் வடபகுதி முழுவதையும் எளிதாகக் கைப்பற்றினான். இதற்கு ‘‘மும்முடி சோழமண்டலம்’’ என்று பெயரிடப்பட்டது. இலங்கையின் அப்போதைய தலைநகர் அனுராதபுரம் அழிக்கப்பட்டது. பொலனருவையை மும்முடி சோழ மண்டலத்தின் தலைநகராக்கினான். பொலனருவாயில் சிவ ஆலயம் ஒன்றையும் சோழர்கள் எழுப்பினர்.

**கங்கபாடி, நுளம்பாடி, தடிகைப்பாடி வெற்றி**

பாண்டியர், சேரர், சிங்களருடைய நாடுகளை வென்று மும்முடிச் சோழன் என்றப் பட்டப் பெயரை இராஜராஜன் பெற்றான். இதன்பின் இவனது கவனம் வடதிசை நோக்கித் திரும்பியது. சேலம் மாவட்டத்தின் வடபகுதியான கங்கபாடிப் பகுதியை மேலை கங்கர்கள் ஆட்சி வந்தனர். தழைக்காடு அதன் தலைநகரமாகும். கர்நாடக மாநிலத்தின் கீழ் பகுதியையும், பெல்லாரி மாவட்டத்தையும் கொண்ட நுளம்பாடியை பல்லவரின் ஒரு பிரிவினராகிய நுளம்பர்கள் ஆண்டு வந்தனர். இவ்விரு பகுதிகளையும் எளிதில் கைப்பற்றி இறுதியில் தடிகைப்பாடியையும் கைப்பற்றினான்.

**கல்யாணி சாளுக்கியருடன் போர்**

கல்யாணியைத் தலைநகரமாகக் கொண்ட மேற்கு சாளுக்கியர் மீது படையெடுத்தான். துங்கபத்திரா நதிக்கரையில் சாளுக்கிய படைகளுடன் போரிட்டு வெற்றி பெற்றான். இதன்விளைவாக துங்கபத்திரா நதி வரை சோழ அரசு விரிவாக்கம் பெற்றது. துங்கத்திரா நதி சோழப் பேரரசின் வடக்கு எல்லை ஆக்கப்பட்டது.

**வேங்கி சாளுக்கியருடன் போர்**

சாளுக்கியரில் ஒரு பிரிவினர் வேங்கியை தலைநகரமாகக் கொண்டு கிழக்குப் பகுதியை ஆண்டு வந்தனர். இவர்கள் வேங்கிச் சாளுக்கியர் அல்லது கிழக்குச் சாளுக்கியர்கள் என பெயர் பெற்றனர். இராஜராஜன் காலத்தில் சாளுக்கிய அரசில் சில சிக்கல்கள் ஏற்பட்டது. சக்திவர்மன் என்ற சாளுக்கிய மன்னனை பதவி இறக்கம் செய்து விட்டு வீமன் என்ற ஒருவன் அரியணையை அபகரித்துக் கொண்டான். சக்திவர்மன் சோழ மன்னனின் உதவியை நாடினான். சோழ மன்னன் வேங்கி மீது படையெடுத்த வீமனை தோற்கடித்து பதவியிறக்கம் செய்து சக்திவர்மனை கொண்டு வேங்கியின் மன்னராக்கினார். அவனுடைய தம்பி விமலாதித்தனுக்கு தனது தகள் குந்தவையை மணமுடித்து வைத்தார். இத்திருமண உறவு சோழர்களுக்கும் கீழைச் சாளுக்கியர்களுக்கும் உள்ள உறவை மென்மேலும் வளர்த்தது.

**அரபிக்கடல் தீவுகளின் மீது போர்**

இராஜராஜன் தனது ஆட்சியின் இறுதி கட்டத்தில் **முன்னிருப்பளந்தீவு பன்னீராயிரம்** என்று அறியப்பட்ட இலட்சத்தீவுகள் மற்றும் மாலத் தீவுகள் மீது படையெடுத்தான். தன் வசமிருந்த பெரிய கடற்படையின் உதவியுடன் அரபிக்கடலிலுள்ள தீவுகள் கைப்பற்றப்பட்டன. இவ்வாறு பாண்டி மண்டலம், சேர மண்டலம், தொண்டை மண்டலமாகிய ஜெயங்கொண்ட சோழ மண்டலம், கங்கை மண்டலம், கொங்கு மண்டலம், நுளம்பாடி, இலங்கையாகிய மும்முடி சோழ மண்டலம், முன்னிருப் பளந்தீவு பன்னிராயிரம் ஆகியவைகள் சோழப்பேரரசின் கீழ் கொண்டுவரப்பட்டன.

**இராஜராஜனின் பிற பணிகள்**

தன் வாழ்க்கையில் தோல்வி என்பனையே தழுவாத மாமன்னன் இராஜராஜன். தான் பெற்ற பரந்த பேரரசினை ஒருமுகப்படுத்தி அதில் நிர்வாக வசதிகளைப் பெருக்கினான். நிர்வாக வசதிக்காக பேரரசு பல மண்டலங்களாகவும், மண்டலங்கள் நாடுகளாகவும், நாடுகள் வள நாடுகளாகவும் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனி நிர்வாகத் தலைவர்கள் நியமிக்கப்பட்டனர். ஆனால் இவர்கள் அனைவரும் அரசின் ஆணைக்கு கட்டுப்பாட்டே நடக்க வேண்டும். நில அளவை முறையை ஏற்படுத்தி வரி விதிக்கும் முறையை சீர்படுத்தினான். விவசாயிகளுக்கு அனைத்துவித உதவிகளும் செய்யப்பட்டன. நீர்பாசன சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. தலைநகர் தஞ்சையில் சிவனுக்காக தஞ்சை பெரிக்கோயில் கட்டினான். இது இராஜராஜேசுவரம் என்றும் அழைக்கப்படுகின்றது.

**முதலாம் இராஜஜேந்திரச் சோழன்** (கி.பி.1012 முதல் கி.பி.1044 வரை)

கி.பி.1014-ல் இராஜராஜன் இறந்த பின்பு அவன் மகன் முதலாம் சோழ மன்னனாக முடி சூட்டப் பெற்றான்.

**படையெடுப்புகள்**

இராஜேந்திர சோழனின் ஆறாம் ஆட்சியாண்டில் இயற்றப்பட்ட திருவாலங்காட்டுச் செப்பேடுகளும், இருபத்தி நான்காம் ஆட்சி ஆண்டு இயற்றப்பட்ட கல்வெட்டுகளும் அவனுடைய போர்ச் செய்திகளை விளக்குகின்றன. அவனது வெற்றிகளைக் குறிப்பிடும் பல மெய்க்கீர்த்திகளும் கல்வெட்டுக்கிளல் காணப்டுகின்றன. வடக்கே கங்கையிலிருந்து தெற்கே கடாரம் வரை தனது பேரரசை விரிவுபடுத்தினான். கிழக்கேயுள்ள வங்காள விரிகுடா கடலை சோழர்களின் ஏரியாக மாற்றினான். இவனது ஈழ நாட்டு வெற்றியை மகாவம்சம் குறிப்பிடுகின்றது.

**ஈழ நாட்டுப்போர்**

முதலாம் இராஜராஜனால் தோற்கடிக்கப்பட்ட இலங்கை மன்னன் ஐந்தாம் மகிந்தன் இராஜேந்திரன் காலத்தில் ரோகண நாட்டிலிருந்து பெரும் படையுடன் மீண்டும் இலங்கையின் வடபகுதிக்கு வந்து சோழர்களிடம் இழந்த பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டு தன்னை அரசனாக முடிசூட்டிக் கொள்ள முயற்சி செய்தான். இதையறிந்த இராஜேந்திரச் சோழன் ஒரு பெரும்படையை இலங்கைக்கு அனுப்பி அவனை தோற்கடித்து ஈழ நாட்டின் மணிமுடிகளையும், அரசிரயயும், அரசிளங்குமாரிகளையும், படைகள் மற்றும் அந்நாட்டு செல்வம் அனைத்தையும் இராஜேந்திரன் பெற்றான். இலங்கை மன்னரிடம் பாண்டியர் அடைக்கலம் வைத்திருந்த சுந்தர மணிமுடியையும், இந்திரனின் ஆரத்தையும் சோழமன்னன் கைப்பற்றி மீட்டான். அஞ்சி ஓடிய ஐந்தாம் மகிந்தன் சிறைபிடிக்கப்பட்டு சோழநாட்டிற்கு கொண்டு வரப்பட்டான். இங்கு அவன் பன்னிரெண்டு ஆண்டுகள் கழித்து இறந்ததாக கூறப்படுகிறது. ஈழநாடு சோழ நாட்டின் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டது.

**சேரநாட்டுப் படையெடுப்பு**

இராஜஜேந்திரன் ஆட்சி காலத்தில் சேர மன்னன் பாஸ்கர ரவிவர்மன் தனது நாட்டின் விடுதலையை நிலைநாட்ட முயன்றான். இதையறிந்த சோழ மன்னன் சேரநாட்டின் மீது படையெடுத்தது சேரப்படைகளை காந்தளூரில் வைத்து முறியடித்தான். வெற்றி பெற்ற சேரநாட்டின் நிர்வாகப் பொறுப்பிற்கு பல அதிகாரிகளை நியமித்தான். விழிஞ்சத்திற்கு ராஜராஜேந்திர சோழப்பட்டி என்றும், கோட்டாற்றிற்கு இராஜேந்திர மம்முடி சோழ நல்லூர் என்றும் பெயரிட்டான். கோட்டாற்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சோழப்படைகளின் பொறுப்பை விஜயாதித்த விக்கி அண்ணனிடத்தில் விட்டிருந்தான். சேர மண்டலத்தின் நிர்வாகப் பெறுப்பை சடையவர்ம சுந்தரச்சோழன் பொறுப்பில் விட்டான். இவ்வாறு சேர நாடு சோழ நாட்டின் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது.

**பாண்டிய நாட்டுப்போர்**

இராஜராஜ சோழன் இறந்தவுடன் சோழர் ஆட்சியின் கீழ் இருந்த பாண்டியர் நாடுகள் சோழர் மேலாதிக்கத்தை ஏற்க மறுத்தனர். எனவே இராஜேந்திர பாண்டிய நாட்டிற்கு ஒரு பெரும் படையை அனுப்பி பாண்டிய நாட்டில் ஓர் அரண்மனையை எழுப்பி அதில் சோழ பாண்டியன் என்ற பட்டத்துடன் தன் மகனான சுந்தரச்சோழனுக்கு சடையவர்மன் சுந்தரச்சோழ பாண்டியன் என்ற பெயர் சூட்டி அங்கிருந்து ஆட்சிபுரிய வைத்தான்.

**சாளுக்கியப் போர்**

மேலைச்சாளுக்கியர்கள் சோழர்களின் வடக்கு எல்லையில் தொல்லை கொடுத்தனர். எனவே இராஜேந்திரன் மேலைசாளுக்கிய மன்னன் ஜெயசிங்கனுக்கு எதிராக போர் தொடுத்தான். இராஜேந்திரன் பெரும்படையுடன் சென்று சாளுக்கிய மன்னனை முயங்கி (மஸ்கி) என்ற இடத்தில் வைத்து தோற்கடித்தான். தோல்வியடைந்த சாளுக்கிய மன்னருக்கு கலிங்கரும், ஒட்டவியசர்களும் உதவி செய்தனர். இதனால் இரய்ச்சூரை அவன் மீட்டு மீண்டும் வாலாட்டினான். இதன் விளைவாக சோழர் வடக்கு நோக்கி படையெடுத்து இரட்டப்பாடி முழுவதையும் கைப்பற்றினான்.

வேங்கியில் விமலாதித்தன் மரணத்திற்குப்பின் அவன் மகன் இராஜராஜ நரேந்திரன் வேங்கி அரியணையில் அமர இயலவில்லை. ஏழாம் விஜயாதித்தன் என்பவன் சாளுக்கிய ஜெயசிம்மன் உதவி பெற்று அவனை எதிர்த்தான். இராஜராஜ நரேந்திரன் இராஜேந்திரசோழனின் உதவியை நாடினான். இராஜஜேந்திர சோழன் உடனே பெரும்படையை உதவிக்கு அனுப்பி வைத்தான். அப்படை விஜயாதித்தனை தோற்கடித்து விரட்டி இராஜராஜ நரேந்திரனை வேங்கி அரியனையீல் அமர்த்தியது. வேங்கி அரசியல் உறவை மேலும் வலுப்படுத்த விரும்பிய சோழன் தன் மகள் அம்மங்கை தேவியை வேங்கி இளவரசனுக்கு மணமுடித்துக் கொடுத்தான்.

**கங்கை படையெடுப்பு**

தென்கோடியிலும் ஈழத்திலும் சேர நாட்டிலும் வடக்கு எல்லையில் இரட்டபாடியிலும் வெற்றி கண்ட இராஜேந்திரன் வட இந்தியா நோக்கி படையெடுத்தான் சாளுக்கியர்களுக்கு கலிங்கர்களும் ஓட்டசிஷயர்களுகம் உதவினர். எனவே கலிங்கர்களும் ஓட்டவிஷயர்களும் முதலில் தாக்கப்பட்டு பணிந்தனர். முன்னேறிய சோழர்படை கங்கை நதிவரை படையெடுத்து பல வெற்றிகளை குவித்தது. வழியில் சோழர் படை சக்கரகோட்டம், மண்ணைக்கோணம், பஞ்சப்பள்ளி, முசுங்கிதேசம், இந்திர ராஷ்டிரா, ஒட்டவிஷயா கோசலநாடு, தண்டபுத்தி, தக்காணலடம், வங்காளதேசம் ஆகிய நாடுகளை தோற்கடித்து இறுதியாக உத்திரலாடம் நாட்டை அடைந்து அந்நாட்டு மன்னன் மகிபாலனைத் தோற்கடித்தது. வெற்றிப் பெற்ற சோழர்படை கங்கை நீரைக் கொண்டுவந்து இந்த வெற்றியின் நினைவாக கட்டிய கங்கை கொண்ட சோழபுரத்தில் கட்டிய சோழகங்கம் என்ற ஏரியில் கொட்டி **கங்கா ஜலமயம் ஸ்தம்பம்** என்று கொண்டாடினான். இந்த மாபெரும் வெற்றியைச் சிறப்பிக்க **கங்கை கொண்ட சோழன்** என்ற பட்டத்தை கொண்டான்.

**கடாரம் படையெடுப்பு**

இராஜேந்திரசோழனின் வெற்றிகளுள் மிகச் சிறந்தது அவன் கடல் கடந்து கப்பற்படை அனுப்பி ஜாவா சுமித்திராபோர்னியோ பகுதிகளை உள்ளடக்கிய ஸ்ரீவிஜய பேரரசை வென்றது ஆகும். அதுவே கடாரம் வெற்றி எனப்படுகிறது. சோழப்பேரரசிற்கும் சீனப்பேரரசிற்குமிடையில் நடைபெற்ற வாணிபம் இப்பேரரசின் வழியாக நடைபெற்றது. அதற்கு இடையூறு விளைவித்தால் இப்படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டது என கூறப்படுகிறது.

கடாரம் படையெடுப்பின் போது ஸ்ரீவிஜயம் பண்ணை மலையூர், மாயிருடிங்கம், இலங்காசோகம் பப்பாளம், இலிம்பங்கம் இலாமுரிசேதம், நக்காவாரம், கடாரம் ஆகிய பகுதிகளை கைப்பற்றினான் என நம்பப்படுகின்றது. இப்பெயர்களை நோக்க இவை யாவும்

மலேயாவிலும் சுமத்திராவிலும் அவைகளை சூழ்ந்த இடங்களிலும் அமைந்து காணப்படும் பகுதிகளாகவே உள்ளன என அறியலாம்.

இராஜேந்திரன் காலத்தின் இறுதியில் அவனது மைந்தன் இராஜாதிராஜன் போர் புரிந்தான். முதலில் வேணாட்டு மன்னனை வென்று அவனைக் கொன்றார். பின்னர் கூபக நாட்டு மன்னனையும் மூஷக மரபைச் சேர்ந்த எலிமலைக்கு அருகிலுள்ள இராம குடநாட்டு மன்னனையும் குழப்பம் விளைவித்த சேர பாண்டியர்களையும் வென்றான் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

**சோழர் கால ஆட்சிமுறை**

அதிகாரகக்குவியல் பெற்ற மைய நிர்வாகத்தையும் தன்னாட்சி உடைய கிராம நிர்வாகத்தையும் இணைத்த ஒரு சிறந்த ஆட்சி முறையை வகுத்தனர். மத்தியில் ஏதேச்சதிகாரத்தை கையாண்டவர்கள் கிராமங்களிலும், ஊர்களிலும் சுயாட்சியை வைத்திருந்தது ஒரு சிறந்த முறையாகும்.

**அரசன்**

அரசன் ஆட்சித் துறையின் தலைவராக விளங்கினார். அனைத்து அதிகாரங்களும் அரசன் கையில் குவிந்திருந்தன. அரசர், பேரரசர், சக்கரவர்த்தி என்றெல்லாம் மன்னர்கள் அழைக்கப்பட்டனர். ஒவ்வொரு மன்னரும் ஆட்சி புரிந்து கொண்டிருக்கும் போதே தங்கள் வாரிசுகளை நியமித்தனர். இம்முறை வாரிசு உரிமைப் போர் வராமல் தடுத்தது. மன்னர்கள் மக்களின் இறையாக கருதப்பட்டன. மன்னருக்கு பல மனைவியர்கள் இருந்த போதும் பட்டத்தரசியாக ஒருவரே காணப்பட்டார். அரசியர்களுக்கும் அதிகாரம் கொடக்கப்பட்டிருந்தது. எல்லா நிர்வாகப் பணிகளுக்கும் மன்னரே தலைவர் ஆவார். அரசன் அடிக்கடி நாட்டைச் சுற்றிப் பார்க்கும் பழக்கத்தை மேற்கொண்டான். இது நிர்வாகம் திறம்பட செயல்பட ஏதுவாக இருந்தது.

**அமைச்சர்குழு மற்றும் அரசியல் அதிகாரிகள்**

சோழ மன்னர்கள் ஏதேச்சதிகாரத்தை விரும்பினாலும், அவர்களுக்கு அரசியல் சம்மந்தப்பட்ட விஷயங்களில் ஆலோசனைக்கூற அமைச்சர் குழுவும் இருந்தது. அமைச்சர்கள் நிர்வாகத்திலும், நீதி வழங்குவதிலும், வரி விதிப்பதிலும் நாட்டின் பாதுகாவலுக்கும் ஆலோசனைக் கூறினர். உயர் அதிகாரிகள் பெருந்தரம் என்றும், சிறுதரம் என்றும் பிரிக்கப்பட்டனர். அரசாங்க வேலைப் பார்ப்போருக்கு மாதந்தோறும் சம்பளம் வழங்கப்படவில்லை. மாறாக நிலங்கள் கொடுக்கப்பட்டது. இந்நிலத்தை அவர்கள் விற்கவோ, மாற்றவோ முடியாது. இதிலிருந்து வரும் வருமானத்தை வாழ்நாள் பூராவும் அனுபவித்தக் கொள்ளலாம். திருவாய்க்கேழ்வி, திரமந்திர ஓலை, திருமந்திர ஓலை நாயகம், விடையில் அதிகாரி போன்றவர்கள் அரசாங்க அதிகாரிகள் ஆகும். இவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி பொறுப்புகள் கொடுக்கப்பட்டிருந்தன. திருவாய்க்கேழ்வி, மன்னன் இடும் ஆணையைக் கூறுபவன். திருமந்திர ஓலை நாயகம் தலைமைச் செயலாளர், விடையில் அதிகாரி மன்னருக்கு செய்திகளை தெரிவிப்பான். ஆணத்தி மற்றும் திருமந்திர ஓலை என்பவர்கள் செய்திகளை அனுப்புபவர்கள். நாட்டதிகாரி உள்நாட்டுத் தலைவன், நாடுகாவல் அதிகாரி கலகம் வராமல் தடுப்பவர். நூட்டின் மத்தியில் தலைநகர் இருப்பதை சோழமன்னர்கள் விரும்பினர். ஆகையால் தலைநகரை தஞ்சையிலிருந்து கங்கை கொண்ட

சோழபுரத்திற்கு மாற்றினர். திருவாரூர், ஆயிரக்கல், சிதம்பரம், காஞ்சி ஆகிய இடங்களில் துணைத் தலைநகரங்களை வைத்திருந்தனர்.

**மண்டல ஆட்சி**

நிர்வாக வசதிக்காக பேரரசு பல மண்டலங்களாக பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு மண்டலமும் பல வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு வளநாடும் பல நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. நாடுகளை அடுத்த சிறிய பிரிவு சதுர்வேதிமங்கலம் மற்றும் ஊர் என்பவைகளாகும். ஒவ்வொரு சதுர்வேதிமங்கலமும் பல சிற்றூர்களை கொண்டிருந்தன. ஒவ்வொருமண்டலங்களுக்கும் தனித்தனியாக ஆளுநர் நியமிக்கப்பட்டனர். அனேகமாக அரச குடும்பத்தைச் சார்ந்தவர்களே ஆளுநர்களாக நியமிக்கப்பட்டனர். மண்டலங்களில் அமைதிகாப்பகம் மற்றும் சிற்றரசர்களை கண்காணிப்பதும் ஆளுநர்களின் முக்கியமான பணி ஆகும். சோழப் பேரரசு ஒன்பது மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவைசோழமண்டலம், சோணாடு, இராஜராஜ பாண்டிய மண்டலம், தொண்டைநாடு, மும்முடி சோழமண்டலம், இலங்கைமுடி கொண்ட சோழமண்டலம், கங்கபாடி, நிகிரிலிச் சோழ மண்டலம், நுளம்பாடி, அதிராஜராஜ சோழ மண்டலம், கொங்கு நாடு, மலைமண்டலம் - சேரநாடு, வேங்கைநாடு என்பவைகளாகும். ஐமய அரசின் ஆணைகளை செயல்படுத்துவதும் மண்டலங்களின் நிலவரங்கள் பற்றிய அறிக்கையை மைய அரசுக்கு அனுப்புவதும் ஆளுநர்களின் முக்கியமான வேலைகளில் ஒன்றாகும்.

மேலும் மன்னனுடன் தொடர்பு கொண்டு நெருங்கிப் பணிசெய்வோர் அணுக்கச் சேவகம் என்றும், அரண்மனையில் பணி புரிவோர் அகப்பரிவாரம் என்றும், அரண்மனைக் கணக்குகளை சரிபார்ப்போர் திருமுகக் கணக்கு என்றும் மன்னரின் ஏவல் கேட்போர் உழைச் சுற்றனுார் என்றும் மன்னன் பல இடங்களுக்குச் செல்லும்போது அவனது வருகையை தெரிவித்து மக்கள் கூட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரி கட்டியங்காரன் என்றும் கல் வெட்டுக்கள் கூறுகின்றன.

**படையும், போர் முறையும்**

சோழர் படைகளை இருவகைகளாகப் பிரிக்கலாம். ஆவை தரைப்படை, கடற்படை என்பவைகளாகும். தரைப்படையில் யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை போன்ற பிரிவுகள் இரந்தன. படைகளின் தளபதியாக இருந்தவர்கள் மாதண்ட நாயகன் மற்றும் சேனாதிபதி என்ற பெயர்களில் அழைக்கப்பட்டனர். மாதண்ட நாயகன் அனைத்து படைகளுக்கும் தலைவன். போர்க்கருவிகளை ஆறுவகைகளாகப் பிரிக்கலாம். ஆவை எய்ப்படை (வில்லம்பு படை) எறிபடை (வட்டேறு வேற்படை) குத்து படை (ஈட்டி வேல்குத்தம்) வெட்டுப்படை(வாள்) அடிபடை(மழு, தண்டு) தடுபடை (கவசம் கேடயம்) என்பவைகளாகும்.

சோழர்கள் தங்கள் கப்பற்படையின் வலிமையால் அரபிக்கடல் தீவுகளையும்,ஈழத்தையும், கடாரத்தையும் பிற தென்கிழக்காசியத் தீவுகளையும் வென்றனர். வங்காள விரிகுடாவை சோழப்பேரரசின் ஏரி என்று கூறுமளவிற்கு கிழக்கு கடற்கரைப் பகுதி முழுவதையுமே தம் வயப்படுத்தி இருந்தனர். கடற்படையின் துணையோடு கடல் கடந்த நாடுகளிலும் சோழர்களால் தங்கள் பேரரசை விரிவுபடுத்த முடிந்தது.

**அரசின் வருவாய்**

நிலவரி அரசின் முக்கிய வருவாய் ஆகும். நிலங்களை அளந்து திட்டப்படுத்தி வரிகள் விதிக்கப்பட்டன. விளைச்சல் இல்லாத காலங்களில் 1/3 பகுதியை வரியாக வசூலித்தனர் என்று கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிலவரியை பணமாகவோ அல்லது பொருளாகவோ அல்லது இரண்டுமாகவோ செலுத்தலாம்.

நிலவரியில்லாத பிறவரிகள் குடிமை என்று கூறப்பட்டன. ஒவ்வொரு தொழிலுக்கும் உரிய சிறப்புப் பெயரால் தொழில் வரியை குறிப்பிட்டு அமைத்தனர். குசக்காணம், செக்கிறை,ஈழம் பூச்சி, இடைப்பாட்டம், கண்ணாலக்காணம், வண்ணாரப்பாறை, ஒடக்கூலி, காடு காவல் வரி, இரவு வரி என்பன அவற்றில் சிலவாகும்.

வேளிநாட்டு படையெடுப்பின் போது கொள்ளையடிக்கப்பட்டு கவர்ந்து வரப்பட்ட விலையுயர்ந்த பொருள்கள் அரசாங்க கருவூலத்தை நிரப்பியது. குறுநில மன்னன் செலுத்தும் காப்புத் தொகையும் அரசின் முக்கிய வருவாய் ஆகும். வரி வசூலிப்பதில் அரசு மிகவும் கடுமையாக இருந்தது. வரிபாக்கியிட்டோர் நிலங்களை விற்கும் அதிகாரத்தை அரசு கையாண்டது.

**அரசின் செலவினங்கள்**

அரசருக்கும், அரசவை நடைமுளைகளுக்கும் பொது வருவாயிலிருந்து செலவிடப்பட்டது. இது தவிர படை நிர்வாகத்துக்கும், பொதுப்பணிக்கும் செலவிட்டனர். சாலைகள் அமைத்தல்,பாலங்கள் கட்டுதல், படகுத்துறைகள் அமைத்தல், அணைக்கட்டுதல், கால்வாய் வெட்டுதல் பொன்றவை சோழர்கால பொதுப்பயிகளில் முக்கியமானவைகளாகும்.

**நீதி நிர்வாகம்**

அரசன் நீதித்துறையின் தலைவன். அரசவையே உச்ச நீதிமன்றமாக விளங்கியது. அரச துரோகக் குற்றங்களை அவனே நெரில் விசாரித்து தண்டனை வழங்கினான். சிலைத்திருட்டு, கொலை செய்தல், நியாயமற்ற முறையில் வரிவசூல் செய்வது, அரசன் ஆணையை எதிர்த்து கிளர்ச்சி செய்தல், திருட்டு, விபச்சாரம், வழிப்பறி, பொய்கையொப்பம் போன்றவைகள் பிற குற்றங்களாகும். குற்றம் புரிந்தவர்களுக்கு அதிகபட்ச தண்டனை நாடு கடத்தல் அல்லது சிறை வாசம் போன்றவைகளாகும். சிறிய குற்றம் புரிந்தவர்களட அவ்வூரிலுள்ள கோயில்களுக்கு ஒன்று அல்லது இரண்டு நந்தா விளக்குகள் வாங்கி கொடுக்க வேண்டும்.

## சோழர்களின் உள்ளாட்சி முறை அல்லது கிராம ஆட்சிமுறை

சோழர் ஆட்சி முறையின் சிறந்த அம்சம் சுயாட்சி முறையாகும். சோழநாட்டு ஊர்கள், சிற்றூர்கள், பேரூர்கள், மூதூர்கள், கிராமங்கள் பட்டினங்கள், பாக்கள் என அழைக்கப்பட்டது. பிராமணர்கள் குடியிருப்பு அக்கிரகாரம், சதுர்வேதிமங்கலம் என்ற பெயர்களில் அழைக்கப்பட்டது.

விவசாயிகள் குடியிருப்பும், குடியிருப்பைச் சார்ந்த பகுதிகளும் ஊர் எனப்பட்டன. இத்தகைய ஊர்களில் ஊரவைகள் இருந்தன. கிராமங்களில் அவை **கிராம சபை** எனப்பட்டன. முதலாம் பராந்தகச் சோழனாலட கி.பி.918-921 ஆகிய ஆண்டுகளில் வெளியிடப்பட்ட உத்திரமேரூர் கல்வெட்டு கிராம சபைகளின் அமைப்பையும், வேசைகளையும் மிகத் தெளிவாக விளக்குகின்றது. இதைப்போன்று பிள்ளைப்பாக்கம் கல்வெட்டு, நாகப்பட்டினம்,

திருச்சி பொன்ற இடங்களில் காணப்படும் கல்வெட்டுக்களும் சோழர்கால கிராம சபை பற்றிக் குறிப்பிடுகின்றது.

**உத்திரமேரூர் சதுர்வேதிமங்கலத்து சபை அமைப்பு**

கிராமங்கள் சிறிய, சிறிய பிரிவுகளாக பிரிக்கப்பட்டன. இவைகள் வார்டு என்று அழைக்கப்பட்டன. ஒரு கிராமத்தில் 30 வார்டுகள் வரை இருந்தது. வார்டை வட்டம் என்றும் அழைப்பர். வார்டில் உள்ள குடும்பம் ஒவ்வொன்றும், ஒருவரை கிராம சபைக்கு உறுப்பினராக தேர்ந்தெடுத்து அனுப்பலாம். குிராம சபைக்கு உறுப்பினர்கள் குடவோலை முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டனர். கிராம சபையில் உறுப்பினர் ஆவதற்கு சில தகுதிகள் தேவை. ஆவை பின்வருமாறு

உறுப்பினராகத் தகுதி

- சொந்த மனையில் குடியிருக்க வேண்டும்.
- கால் வேலி நிலம் இருக்க வேண்டும்.
- அரைக்காணி நிலமுடையார் ஆயின் ஒரு வேதமாவது தெரிந்திருக்க வேண்டும்.
- வயது 35-க்கு மேல் 70க்குள் இருக்க வேண்டும்.
- கடந்த மூன்றாண்டிற்குள் எந்த வாரியத்திலும் உறுப்பினராய் இருந்திருக்கக் கூடாது.

**உறுப்பினர் ஆவதற்கு தகுதியற்றோர்**

- வாரிய உறுப்பினராய் இரந்து கணக்கு காட்டதவர்.
- கணக்கு காட்டாதவரது உறவினர்கள்
- தகாதவர்களுடன் சேர்ந்தவர்கள்
- ஐம்பெரும் பாதகம் புரிந்தோர்
- பிறர் பொருட்களை திருடியவர்கள்
- குற்றம் காரணமாக கழுதைமேல் ஏற்றப்பட்டவர்கள்
- குள்ளக் கையெழுத்து போட்டவர்கள்

மேலே சொல்லப்பட்டுள்ள நபர்கள் அனைவரும் கிராம சபையில் உறுப்பினர் ஆவதற்கு தகுதியற்றோர்கள் ஆகும்.

**குடவோலை முறை**

கிராம சபை உறுப்பினர்கள் குடவோலை முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒவ்வொரு வார்டும் குடும்பு எனப்பட்டது. ஒவ்வொரு குடும்பிற்கும் ஒவ்வொரு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். உத்திரமேரூரில் முப்பது குடும்புகள் இருந்தன. கிராம சபையில் உறுப்பினர் ஆவதற்கு தகுதி உடையவர்களின் பெயர்களைத் தனித்தனி ஓலையில் எழுதி அக்குடும்பின் பெயர் வரையப்பெற்ற ஓலை ஒன்றை சேர்த்துக் கட்டி குடத்திலிடுவர். முப்பது குடும்பிற்கும் முப்பது கட்டுகள் இருக்கும். ஒன்றும் அறியாச் சிறுவனைக் கொண்டு ஒரு குடும்பிற்குரிய ஓலைக்கட்டை அவிழ்த்து குடத்தில் கொட்டி ஓர் ஓலையை எடுக்கச் செய்வர். ஆவ்வாறு எடுக்கப்ட்ட ஓலையில் உள்ள பெயரினரே ஒரு குடும்பின் பிரதிநிதி. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம சபை உறுப்பினர்கள் பின்னர் பல்வேறு வாரியங்களில் உறுப்பினர்களாக அமர்த்தப்படுவர். கிராம சபை நிர்வாக வசதிக்காக பல வாரியங்களாக பிரித்து செயல்பட்டது.

**வாரியப் பிரிவு**

உத்திரமேரூர் கிராம சபையின் முப்பது உறுப்பினர்களின் முதல் 12 பேர்கள் சம்வற்சர வாரியத்திற்கும் அடுத்த 12 பேர்கள் தோட்ட வாரியத்திற்கும் மீதமுள்ள 6 பேர்கள் ஏரி வாரியத்திலும் பணியமர்த்தப்பட்டனர். மீண்டும் குடவோலை தேர்தல் முறை மூலம் 12 பேர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். அதில் 6 பேர் பொன் வாரியராகவும் மீதமுள்ள 6 பேர் பஞ்ச நிவாரண வாரியராகவும் பணி அமர்த்தப்படுவர். இவர்களின் பதவி காலம் ஒரு ஆண்டு ஆகும்.

**வாரியங்களின் பணிகள்**

சாம்சத்ர வாரியம் ஊரின் பொதுக் காரியங்களை கவனித்துக் கொள்ளும். ஏரிவாரியம் ஊரின் நீர் நிலைகளை கண்காணித்து விவசாயத்திற்கு ஏற்ற சூழ்நிலைகளை உருவாக்கிக் கொடுக்கும். தோட்டவாரியம் விளைநிலங்கள், புறம்போக்கு நிலங்களை கணக்கெடுத்து அரசிற்கு சமர்ப்பிக்கும். பஞ்சவாரியம் பஞ்சத்தை சமாளிக்க ஊர் மக்களிடம் தானியம் வாங்கி சேகரித்து பாதுகாத்து வைக்கும். பொன் வாரியம் கிராம சபைக்கு வரும் பொன்னை மதிப்பிட்டு அறிக்கை சமர்ப்பித்தல் வேலையை செய்தது.

கிராம சபை ஊழியர்கள் அரசுக்கு பொறுப்பாளிகளாவார்கள். குடமையில் தவறும் சபையினருக்குத் தண்டனை கொடுக்கப்பட்டது. பொது நிதிகள் கிராம சபையின் பெயரில் வைக்கப்பட்டது. தேவதான கிராமங்களின் சபைகள் பணமும், பொன்னும், பொருளும் வசூலித்து சேமித்தன. கிராம சபைகள் தனித்தும், கூட்டாகவும் செயல்பட்டது. முரசு கொட்டி கிராம சபை கூடுமிடம் மற்றும் கூடும் நேரம் அறிவிக்கப்பட்டது. கோயில் மற்றும் மண்டபங்களில் சபை கூடும். கிராம சபைகள் நீதிமன்றங்களாகவும் செயல்பட்டன. தவறு செய்தவர்களை தண்டித்து அபராதம் விதித்தது. களவு, விபச்சாரம், ராஜதுரோகம் போன்றவைகளுக்கு கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்டன. இத்தண்டனைகள் அரசின் முன் அனுமதி பெற்ற பின்னரே நிறைவேற்றப்பட்டன. சபையிலுள்ள மூத்த அங்கத்தினர்கள் நீதிபதிகளாக செயல்பட்டனர்.

**கிராம நிர்வாகத்தில் உள்ள பிற ஊழியர்கள்**

மத்தியஸ்த்தன், கரணத்தான், பாடிகாப்பான், தண்டுவான், அடிகீழ் நிற்பான் ஆகியோர் ஊதியம் பெற்று பணிபுரிபவர்கள் ஆகும். கரணத்தான் சபைக் கணக்கை சமர்பிக்க வேண்டும். பாடிகாப்பான் திருட்டு, கொலையிலிருந்து மக்களை காப்பவன், மத்தியஸத்தன் நடுவனாக இருந்தான் அடிகீழ் நிற்பான் கிராம சபை அங்கத்தினருக்கு உதவி செய்பவன். குிராம சபையில் பெண்களுக்கு தனி இட ஒதுக்கீடு இல்லை.

## சோழர் கால இலக்கிய கலை, கல்வி கட்டிடக்கலை வளர்ச்சி

பல்லவர்களைப் பொன்று சோழர்களும் இலக்கியம், கலை. குல்வி, கட்டிடக்கலை போன்றவற்றின் வளர்ச்சிக்கு மிகுந்த தொண்டாற்றியுள்ளனர். சைவ, சமண, வைணவ இலக்கியங்கள் வளர்ந்து கருத்தாளமுடைய தத்துவ இலக்கியங்களை தோற்றுவித்தன. சிற்பக்கலை, ஓவியக்கலை, நடனக்கலை, நாடகக்கலை, இசைக்கலை ஆகிய அனைத்து கலைகளும் அபரிமித வளர்ச்சிக் கண்டது. கல்வி கூடங்கள் திறக்கப்பட்டு முறையான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். வேதம், இலக்கணம், மருத்துவம் போன்ற பாடங்கள் மாணவர்களுக்கும் கற்பிக்கப்பட்டது. கட்டிடக்கலைகள் நன்கு வளர்ச்சியடைந்தது. தஞ்சை

பெரிய கோயில், கங்கை கொண்ட சோழபுரம், சோழ அரண்மனைகள் போன்றவை இதற்கு சான்றுபகருகின்றன.

**காப்பியங்கள்**

சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவகசிந்தாமணி என்ற ஐந்தினுள் முதல் இரண்டும் சங்க காலத்தவை. மற்றவை சோழர் காலத்தவை. குண்டலகேசியை நாதகுத்தனார் என்பவர் இயற்றினார். இது பௌத்த கதையை கூறுகிறது. சீவக சிந்தாமணியை திருத்தக்கத்தேவர் என்ற சமண துறவி எழுதினார். சீவகன் எட்டுப் பெண்களை திருமணம் புரிந்த வரலாற்றைக் கூறி அவன் வீடுபேறு அடைந்த கதையை கூறுகிறது.

**ஐஞ்சிறு காப்பியம்**

உதயண குமார காவியம், நாககுமார காவியம், யசோதா காவியம், சூளாமணி, நீலகேசி போன்றவற்றோடு சமண பௌத்த காப்பியங்களும் தோன்றின. சூளாமணி 2331 பாக்களைக் கொண்டது. தோழாமொழித்தேவர் இதை இயற்றியவர். **மேரு மந்திர புராணத்தை** வாமாணாச்சாரி இயற்றினார்.

**இலக்கண நூல்கள்**

புத்தமித்திரரின் வீர சோழியம், ஐயனாரிதனாரின் புறப்பொழின் வெண்பாமாலை, அமிர்தசாகரின் யாப்பெருங்கலம்நூற்கவிராசரின் நம்பியக பொருள், பவணத்தியடிகளின் நன்னூல், குணவீர பண்டிதரரின் நேமிநாதம் மற்றும் வச்சணந்திமாலை, தண்டியியின் தண்டியலங்காரம் போன்றவைகள் சோழர் காலத்தில் இயற்றப்பட்ட இலக்கண நூல்கள் ஆகும்.

**சமய இலக்கியங்கள்**

**தேவாரப்** பாடல்கள் பல்லவர் காலத்தில் அப்பர், சம்மந்தர், சுந்தரர் ஆகியோரால் பாடப்பட்டவை. அப்பாடல்களை ஒன்று திரட்டி நம்பியாண்டவர் நம்பி என்பவர் தேவாரம் என்ற இலக்கியமாக தொகுத்தார். பிரபந்த பாடல்கள் வைஷ்ணவ அடியார்களான ஆழ்வார்களால் பாடப்பட்டவை. அவை நாதமுனி என்பவரால் நாலாயிரம் பாடல்கள் கொண்ட இலக்கியமாக தொகுக்கப்பட்டன. இது **நாலாயிர திவ்ய பிரபந்தம்** என்று பெயர் பெற்றது.

**சேக்**கிழாரால் இயற்றப்பட்ட சமய இலக்கியநூல் பெரிய புராணம். ஈது அறுபத்தி மூன்று சிவனடியார்களின் பக்தி வாழ்க்கைப் பற்றி கூறுகின்றது. கல்லாடரின் **கல்லாடம்** என்ற இலக்கிய நூலில் சிவபெருமானின் திருவிளையாடல்கள் விவரிக்கப்பட்டுள்ளன. கம்பர் இயற்றிய கம்பராமாயணம் தமிழில் தலைச்சிறந்த காவியங்களுள் ஒன்று ஆகும்.

**சமய சார்பற்ற நூல்கள்**

ஜெயங்கொண்டாரின் கலிங்கத்துபரணி, குலோத்துங்கனின் கலிங்கத்துப் படையெடுப்பு பற்றி குறிப்பிடுகின்றது. ஒட்டக் கூத்தரின் **மூவருலா** சோழ மன்னர்கள் விக்ரம சோழன், இரண்டாம் இராஜராஜன், இரண்டாம் குலோத்துங்கன் ஆகியோர் பற்றி விவரிக்கின்றது. புகேழந்திப் புலவரின் **நளவெண்பா**, சங்ககாலப்பெண்பால் புலவரால் இயற்றப்பட்ட ஆத்திச்சூடி போன்றவை அறநெறிகளை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

**நிகண்டுகள்**

திவாகர முனிவரால் இயற்றப்பட்ட திவாகரம் அவரது குமாரரின் பிங்கல நிகண்டு, மண்டல புருடரின் சூடாமணி நிகண்டு, கயாதர முனிவரின் கயாதர நிகண்டு ஆகியவை சோழர் காலத்தில் இயற்றப்பட்டவை.

**சிற்பக்கலை**

சோழர்கால கலைஞர்கள் கல்லிலும், வெண்கலத்திலும் தங்கள் கை வண்ணங்களைக் காட்டினர். சோழர் காலத்திய திருமேனி உருவங்கள் பக்தர்களுக்கு இறை உருவத்துடன் நெருக்கம் ஏற்படச் செய்தது. சோழர் கால சிற்பங்கள் பல தோற்றங்களில் வடிவமைக்கப்பட்டன. அவை தெய்வச் சிலைகள், மனித உருவங்கள், நாயன்மார்களின் வடிவங்கள், நடன மாதர்களின் நடன மடிமங்கள், வாயிற்காப்போரின் சிற்பங்கள், விலங்குகளின் உருவங்கள் முதலானவைகளாகும். கோயில்களில் மன்னர், அரசியார் உருவங்களும் பொறிக்கப்பட்டன. தாராசுரம் கோயிலில் 63 நாயன்மார்களின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளது. தில்லை கிழக்கு கோபுரம், தஞ்சை, திருப்புவனம் போன்ற இடங்களில் நடன மாந்தர்களின் சிற்பங்களும் இராமாயண வரலாற்று சிற்பங்களும் காட்சியளிக்கின்றன.

ஐவணவ ஆலயங்களில் மூவகை காலத்தில் திருமாலின் திருஉருவத்தை செதுக்கினர். ஆவை நின்ற திருமேனி, அயர்ந்த திருமேனி, கிடந்த திருமேனி எனப்படுகின்றன. சமயப் புரவலர்களாகிய சிவனடியார்களின் உருவங்கள், திருமாலடியார்களின் பதுமைகளும் செதுக்கி வரிசையில் நிற்க வைத்தனர். திருப்புவன கம்கேஸ்வரர் ஆலயத்தில் நிலைபெற்ற பெண்டிர், வாயிற்காவலர் உருவச்சிலைகள் உள்ளன.

வெண்கல உருவச்சிலைகள் அமைப்பதில் தான் சோழர்கள் சிறந்து காணப்பட்டனர். சோழர்கால வெண்கலசிலைகள் உலகப் புகழ் பெற்றவை. அவைகளுள் மிகவும் சிறப்பானது தட்சிணாமூர்த்தி வடிவில் சோழர் காலத்தில் வார்த்த சிதம்பரம் நடராஜனின் திருஉருவச் சிலையாகும். நுட்ப வேலைப்பாடுகளுடன் கூடிய இச்சிலை கலையழகு மிக்கதாகும். மேலும் கோயில்களில் 63 நாயன்மார்களின் வார்ப்புச் சிலைகள் காணப்படுகின்றது. மூலவர்கள் போன்று உற்சவ மூர்த்திகளும் வார்ப்புச் சிலைகளில் வடிக்கப்பட்டுள்ளன. இன்றும் தஞ்சைக்கருகில் உள்ள கும்பகோணம் என்ற ஊரில் வெண்கலச் சிலைகள் வடிக்கும் தொழில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**ஓவியக்கலை**

சிற்பக்கலை போன்று ஓவியக் கலையிலும் சோழர்கள் சிறந்து விளங்கினர். தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலில் தீட்டப்பட்டுள்ள வண்ண ஓவியங்கள் அழகில் அஜந்தா ஓவியங்களுக்கு நிகரானவை. அவை சேரமான் பெருமாளும் சுந்தரரும் கைலாயம் செல்லும் காட்சி, சுந்தனாரை திருமணத்தின்போது சிவன் தடுத்தாட் கொண்ட காட்சி, நடராஜரை வழிபடும் சோழ மன்னனது ஓவியம் போன்றவைகளாகும். நுடன மாதர்களின் கால்கள் பின்னப்பட்ட விதமும், கைகளை உயர்த்தி இடையை நெளித்து காதளவோடிய கண்களால்பார்க்கும் காந்தப் பார்வையும், மேலே அணிந்துள்ள பலவகைப்பட்ட ஆபரணங்களின் வனப்பும் ஓவியக்கலையின் சிறப்பைக் காட்டுவதோடு நடனக் கலையையும் விளக்குகின்றது.

**கல்வி**

கல்வி இரு வகைகளில் நடைபெற்றது. வேத கல்வி நிலையங்கள் வைதீகர்களுக்கு மட்டும் கல்வியளித்தன. பொதுமக்கள் வழா நிகழ்ச்சியின் போது சேப்படும் புராணங்களின் மூலம் கல்வி பெற்றனர். சோழநாட்டில் அடிப்படை கல்சி நிலையங்களும், உயர் கல்வி நிலையங்களும் இருந்தன. வேதியர் குல மாணவர்களுக்கு பல சலுகைகள் வழங்கப்பட்டன. எண்ணாயிரம் என்னுமிடத்தில் உள்ள கல்வெட்டுக்களின் மூலம் இராஜேந்திரன் எண்ணாயிரம் என்னுமிடத்தில் எழுப்பிய கல்வி நிலையத்தில் 340 மாணவர்களும் 14 பேராசியர்களும் இருந்தனர் என்று தெரியவருகின்றது. திருமுக்கூடல் கல்வெட்டு கோயில் நிர்வாகத்தின் கீழ் ஒரு கல்லூரி இருந்ததையும், திருவிடைமருதூர், திருவடைக்கழி, அணியூர், எண்ணூர் போன்ற இடங்களில் உள்ள கல்வெட்டுக்கள் வேதம், இலக்கணம், மருத்துவம் போன்றவை பயிற்றுவிக்கப்பட்டதைப் பற்றியும் கூறுகின்றன. கல்வி நிலையங்கள் கண்டிப்பான ஒழுக்கவிதிகளை கொண்டிருந்தன. மாணவர்கள் மனப்பாட முறையில் கல்வி கற்றனர்.

**சோழர் காலத்து கட்டிடக்கலை**

சோழர்கள் காலத்தில் வானாளாவிய கற்கோயில்களை எழுப்பினர். இக்கோயில்கள் ஆலயப் பணிக்கு எடுத்துக்காட்டாவும் மக்களின் சமய வாழ்க்கையின் நடுநாயகமாகவும் இருந்தன. கோயில்களின் தூண்களிலும் சுவர்களிலும் அழகிய சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டன. சோழர் காலத்து நகரங்களும், அரண்மனைகளும் திட்டமிட்டு அமைக்கப்பட்டவைகளாகும். தஞ்சையும், கங்கைகொண்ட சோழபுரமும் சோழர்களின் காலத்தில் திட்டமிட்டு வடிவமைக்கப்பட்ட நகரங்கள் ஆகும்.

**தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில்**

சோழர் கட்டிடக்கலைக்கு விளக்கம் கூறி நிற்கும் தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில் மாமன்னர் இராஜராஜனால் எழுப்பப்பட்டது. இந்த ஆலயம் ஏழு ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டது. (கி.பி.1003-1010) கோயில் 500 அடி நீளமும் 200 அடி அகலமும் உடையது.இதன் கோபுரம் 14 அடுக்குடையது. கோபுரத்தின் உயரம் 216 அடி ஆகும். அதன் உச்சியில் 25 அடி சதுரத்தில் 80 டன் எடையுடைய ஒற்றைக்கல் உள்ளது. இது அக்காலத்து பொறியியல் சாதனைக்கு விளக்கமளிக்கின்றன. கருவறை, உட்புற சுற்று மண்டபம், மகா மண்டபம், ஸ்நான மண்டபம், நர்த்தன மண்டபம், வாத்திய மண்டபம் போன்றவை கோயிலின் பிறபகுதிகளாகும். கோயிலின் முன் ஒரே கல்லில் அமைக்கப்பட்டுள்ள நந்தி சுமார் மூன்று மீட்டர் உயரமுடையது. இக்கோயிலுக்கு இராஜராஜேசுவரம், பிரகதீஸ்வரம் என்ற பெயர்களும் உண்டு.

**கங்கை கொண்ட சோழீச்சுரம் (கங்கை கொண்ட சோழபுரம்)**

கங்கை கொண்ட சோழீச்சுரம் கங்கை படையெடுப்பின் நினைவாக முதலாம் ராஜேந்திரனால் கட்டப்பட்டது. இதன் அமைப்புகள் அனைத்துமே தஞ்சை பெரியக் கோயில் போன்று காணப்படுகின்றது. இதன் கோபுரம் 160 அடி உயரமுடையது. ஏட்டு தளங்களை உடையது. இதன் வெண்கலப் பதுமைகள் இயற்கையான அழகை பெற்றுள்ளன. 12 ராசிகளையும், நவக்கிரகங்களையும் விளக்கும் பகுதிகள் சிறந்த கலைத்திறனுக்கு எடுத்துக்காட்டு. உட்சுவர்களும் தூண்களும் வெற்றிடத்துடன் இருப்பதைக் காணலாம்.

எனவேதான் தஞ்சைக் கோயில் ஆண்பொலிவு கொண்டிருக்கும்போது கங்கை கொண்ட சோழபுரத்து ஆலயம் பெண்மை அழகுடன் விளங்குகின்றதென்றும் கூறுவர்.

**பிறக்கோயில்கள்**

**முதலாம்** குலோத்துங்கனால் சூரியனார் கோயில் கட்டப்பட்டது. இக்கோயில் கும்பகோணத்தில் அமைந்துள்ளது. சூரியனுக்கென்று கட்டப்பட்ட மதல் கோயில் இது. இதைப்போன்று கொனார்க் என்ற இடத்தில் சூரியனுக்கு தனிக்கோயில் கட்டப்பட்டுள்ளது. கற்றாலையில் காணப்படும் தனிக்கோயில்கள் விநாயகர், கரூர்த்தேவர், சண்டேதவரர் போன்றவை குறிப்பிடத்தக்க பிற கோயில்களாகும்.

மேலக்கடம்பூரிலுள்ள அமிர்தகடேசுவரம் ஆலயம், கீழப்பழுவூரிலள்ள குலோத்துங்க சோழீச்சுரம், திருவையாரில் உள்ள கோயில் முதலியன குலோதுங்க சோழன் காலத்தில் கட்டப்பட்டுள்ளது. இரண்டாம் இராஜேந்திரன் தாராசுரத்தில் ஐராவதேசுவரக் கோயிலைக் கட்டினான். இதன் விமானம் நான்கு தளங்களை உடையது. இராஜ கம்பீர மண்டபம், சக்கரங்களோடு குதிரைகளைப் பூட்டி இழுத்துச் செல்லும் தேர் போன்ற வடிவமுடையது.

**அரண்மனைகள் மற்றும் நகரங்கள்**

சோழ மன்னர்கள் ஆடம்பரத்தை விரும்பினர். தலைநகரிலும் துணைத் தலைநகரிலும் அரண்மனைகளை எழுப்பினர். அரண்மனையில் சித்திரக்கூடம், விளையாடுவதற்குப் பொழில்கள், அந்தப்புரம் போன்றவைகள் அமைக்கப்பட்டிருந்தன. அரண்மனையைச் சுற்றி அகழிகள் அமைக்கப்பட்டிருந்தன.

சோழர்கள் நகரங்களை நன்கு வடிவமைத்தனர். இராஜராஜன் தஞ்சையை வடிவமைப்பதிலும், அராஜேந்திரன் கங்கை கொண்ட சோழபுரத்தை வடிவமைப்பதிலும் மிகுந்த கவனம் செலுத்தினார்கள். முதலாம் இராஜாதி இராஜன் காலத்தில் மன்னார்குடியிலுள்ள ஜெயங்கொண்ட சோழீச்சுரம் கட்டப்பட்டது.

## இரண்டாம் பாண்டியப் பேரரசு

கி.பி.10 ஆம் நூற்றாண்டிலிருந்து சோழ ஏகாபதிபத்திற்கு அடிபணிந்திருந்த பாண்டிய அரசு கி.பி.13-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தன்னுரிமை பெற்ற நாடாக தலைதூக்கி கி.பி.14-ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை தென்னிந்தியாவின் தலைசிறந்த வல்லரசாக விளங்கியது.

**முதலாம் மாறவர்ம சுந்தரபாண்டியன்**

பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்த சடைவர்மன் குலசேகரப் பாண்டியனின் சகோதரான மாறவர்ம சுந்தரபாண்டியன்கி.பி.1216ல் இளவரசு பட்டம் சூட்டப்பட்டான். தன் தமையன் காலத்தில் மூன்றாம் குலோதுங்கன் மதுரை மீது தாக்கியதை பழி தீர்த்துக் கொள்ள பா்டிய மன்னன் சோழ நாடு மீது படையெடுத்தான். சோழ மன்னரைத் தோற்கடித்ததுடன் நில்லாமல் உறையூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள கட்டிடங்கள் அனைத்தையையும் தீக்கிரையாக்கினான். பட்டினப்பாலை பாடிய உருத்திரங்கண்ணனாருக்கு கரிகாறசோழன் பரிசாக வழங்கிய பதினாறு கால்மண்டபம் தவிர பிற கட்டிடங்கள் அனைத்தும் தரைமட்ட மாக்கப்பட்டனவாம். பின் சோழரின் இரண்டாம் தலைநகராகிய பழையாறையில் வீராபிஷேகம் செய்து கொண்டு சிதம்பரம் நடராசரை வணங்கி மதுரை திரும்பினான். திரும்பி வரும் வழியில் பாண்டிய மன்னன் பொன்னமராவதியில் தங்கி இருந்தான். அப்போது மூன்றாம்

ராஜேந்திர சோழன் பாண்டிய மன்னரிடம் சரணடைந்து இழந்த சோழ அரியணையை மீண்டும் பெற்றான். மூன்றாம் இராஜ இராஜன் பாண்டிய மன்னனுக்கு திறை செலுத்தும் குறுநில மன்னனாக மாற்றப்பட்டான். இந்நிகழ்ச்சிக்குப் பின் பாண்டிய மன்னன் **சோணாடு வழங்கியருளிய** என்ற பட்டப் பெயரை சூட்டிக் கொண்டான்.

சில ஆண்டுகள் கழித்து சோழ மன்னன் பாண்டியருக்கு செலுத்த வேண்டிய திறையை செலுத்தவில்லை. வெகுண்டடெழுந்த பாண்டிய மன்னன் சோழநாட்டின் மீது மீண்டும் தாக்குதல் நடத்தினான். தாக்குதலுக்கு தாக்கு பிடிக்க முடியாத சோழமன்னன் ஹொய்சாள் மன்னனின் உதவியை பெறும் பொருட்டு வடக்கு நோக்கி சென்றான். ஆப்பொழுது பல்லவ குறுநில மன்னன் கோப்பெரும் சிங்கன் சோழ மன்னனை சிறைபிடித்து **சேர்ந்த மங்கலம்** என்ற இடத்தில் சிறையிலடைத்தான். இதையறிந்த வீர நரசிம்மன் என்ற ஹொய்சாள நாட்டு மன்னன் பெரும் படையுடன் வந்து சோழ மன்னனை பல்லவர்களிடமிருந்து மீட்டு மீண்டும் அவனை சோழ அரியணையில் அமர்த்தினான். பின்னர் ஹொய்சாள மன்னன் பாண்டியர்களையும் தோற்கடித்து பாண்டியர் வசம் இருந்த சோழ நாட்டுப் பகுதிகளையும் மீட்டு மீண்டும் அதை சோழனுக்கே அளித்தான். இச்செய்தியை **சத்திய கர்ணாமிர்தம்** என்ற கன்னட நூல் கூறுகின்றது.

கொங்கு நாட்டு ஆட்சியுரிமைப் பற்றி தகராறு புரிந்த இரு கொங்கு இளவல்களை சமாதானப்படுத்தி அங்கு தன் மேலாதிக்கத்தை நிலை நாட்டினான். சுந்தர பாண்டியனுக்கு கலியுகராமன் அதிசயப் பாண்டியத்தேவன் போன்ற பட்டப் பெயர்களும் உண்டு.

**இரண்டாம் மாறவர்ம சுந்தரப் பாண்டியன் (கி.பி.1238-1251)**

இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் மூன்றாம் இராஜேந்திர சோழன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து வந்து சுந்தரப்பாண்டியனைத் தாக்கி தோற்கடித்தான். ஆனால் ஹொய்சாள மன்னன் வீரசோமேசுவரன் தலையிட்டு சுந்தரபாண்டியனை மீண்டும் பாண்டிய நாட்டுக்கு மன்னனாக்கினான்.

**முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் (கி.பி.1251-1268)**

இவன் முதலில் சேர நாட்டின் மீது படையெடுத்து சேரமன்னன் இரவி உதய மார்த்தாண்டனை தோற்கடித்தான். பிறகு சுந்தரபாண்டியன் கண்ணூரில் தங்கி இருந்து தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்திய ஹொய்சாள மன்னன் வீரசோமேஸ்வரனை தோற்கடித்தான் சோழ நாட்டின் மீது படையெடுத்து சோழ மன்னனை வெற்றி கண்டு பாண்டியனுக்கு ஆண்டுதோறும் திறை செலுத்தும் படி செய்தான். பின்னர் சேர்ந்தமங்கலத்தை ஆண்டு வந்த காடவர்கோன் கோப்பெருஞ்சிங்கனை தோற்கடித்தான். பின் ஆண்டுதோறும் பாண்டியனுக்கு திறை செலுத்தும் நிலைக்கு கோப்பெருஞ்சிங்கன் தள்ளப்பட்டான்.

**சடையவர்மன் சுந்தரபாண்டியன்**

கி.பி.1254-ல் இலங்கையின் மீது படையெடுத்து இலங்கை அரசனை வென்று காணிக்கையாக யானைகளையும், மணிகளையும் பெற்றான். அடுத்து வாணர்களையும், கொங்கர்களையும் வென்றடக்கி அவர்தம் மகதநாட்டையும், கொங்குநாட்டையும் தம் பேரரசோடு இணைத்தான். தெலுங்கு சோழ மன்னன் கண்ட கோபாலனை தோற்கடித்துக் கொன்று காஞ்சிபுரத்தைக் கைப்பற்றினான். இறுதியாக காகத்திய கணபதியை தோற்கடித்து நெல்லூரில் வீராபிஷேகம் புரிந்து எம்மண்டலமும் கொண்டருளிய மகாராஜராஜன் என்ற

பட்டபெயரையும் புனைந்து கொண்டான். இவ்வாறு பாண்டிய நாட்டு அரியணையேறிய ஆறே ஆண்டுகளில் சடையவர்ம சுந்தரபாண்டியன்சேரர், சோழர், காடவர், ஹொய்சாலர், சிங்களர் ஆகியோர்மீது வெற்றி கொண்டு பாண்டியர்களின் மேலாதிக்கத்தை வடபெண்ணை முதல் தெற்கில் தென்குமரி வரை பரவச் செய்தான்.

சமய பக்தி மிகுந்த இப்பாண்டியன் சைவர்களின் புனித ஸ்தலமாகிய தில்லையம் பதியிலும், வைஷ்ணவர்களின் புனித ஆலயமான ஸ்ரீரங்கத்திலும் பல திருப்பணிகள் செய்துள்ளான். தில்லையம்பல பதியில் மேலைக் கோபுரத்தைக் கட்டியதோடல்லாமல் பொற்கூரை வேய்ந்து கோயில் பொன் வேய்ந்த பெருமாள் என்ற சிறப்புப் பெயரையும் பெற்றான். திருவவரங்கத்தில் உள்ள அரங்கநாதர்கோயிலுக்கு பெற்காசுகளை தானமாக வழங்கினான். ஸ்ரீபரமேசுவர, காஞ்சிபுரங் கொண்டான் மரகதப் பரிதிவி போன்ற சிறப்புப் பெயர்களும் இவனுக்கு உண்டு. தனது ஆட்சியின் முடிவில் எல்லாம் தலையான பெருமாள் என்று பெயர் பெற்று அப்பெயரில் நாணயமும் அச்சிட்டான். சமய சகிப்புத் தன்மையை பின்பற்றினான். சமண பள்ளிகளுக்கு நன்கொடைகள் கொடுத்தான்.

**மாறவர்மன் குலசேகரப்பாண்டியன் (கி.பி.1268-1310)**

முதலாம் சடையவர்மன் சுந்தரப்பாண்டியனை அடுத்து மாறவர்மன் குலசேகரப் பாண்டியன் பாண்டிய பேரரசனாக முடிசூட்டிக் கொண்டான் இவன் காலத்தில் பாண்டியராட்சி சேரநாடு, கொங்குநாடு, சோழநாடு, தொண்டை நாடு,ஈழநாடு ஆகிய இடங்களில் மேலும் விரிவடைந்தது. சேர நாட்டின் மீது படையெடுத்து வெற்றி கண்டு **எம்மண்டலமும் கொண்டருளிய கொல்லம் கொண்டான்** என்ற சிறப்புப் பெயரினைப் பெற்றான். சோழ மன்னன் மூன்றாம் இராஜேந்திரனையும் போசாள மன்னனையும் தோற்கடித்தான்.

இவன் காலத்தில் ஈழ நாட்டில் குழப்பம் ஏற்பட்டது. இதனை பயன்படுத்திக் கொண்டு இவனும் இவனது தம்பிமார்களும் ஆரிய சக்கரவர்த்தி என்ற படைத்தளபதியின் தலைமையில் சிங்களம் மீது படையெடுத்தனர். அப்பொழுது மூன்றாம் பாரக்கிரமபாகு இலங்கையை ஆட்சிபுரிந்தான். பாண்டியப் படைகள் இலங்கையில் பேரழிவை ஏற்படுத்தின. சுபகிரி என்ற கோட்டை கைப்பற்றப்பட்டது. அங்கு இருந்த புத்தரின் பல்லை அபகரித்துக் கொண்டு தமிழகம் திரும்பினான். இந்நிகழ்ச்சிக்குப்பின் இலங்கை மன்னன் மதுரை வந்து பாண்டிய மன்னரோடு நட்புறவுக் கொண்டு புத்தர் பல்லை திரும்ப பெற்றுச் சென்றான். பிற்காலத்தில் அந்த பல்லிற்கு இலங்கையில் உள்ள கண்டியில் ஒரு கோயில் கட்டப்பட்டது. இவனது 20-ஆம் ஆட்சியாண்டில் இயற்றப்பட்ட சேரன்மாதேவி கல்வெட்டில் இவன் மலைநாடு, சோழநாடு, இரு கொங்கு நாடுகள்,ஈழநாடு, தொண்டை நாடு ஆகியவற்றை வென்ற செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தாலிய நாட்டில் உள்ள வெனிஸ் நகரத்தைச் சார்ந்த மார்க்கோபோலோ, மாறவர்மன் குலசேகர பாண்டியன் காலத்தில்பாண்டிய நாட்டிற்கு வருகை புரிந்தார். பாண்டிய நாட்டைச் சுற்றி பயணம் செய்த மார்க்கோபோலோ தமது குறிப்புகளில் பாண்டியர் ஆட்சியைப் பற்றி உயர்வாக குறிப்பிட்டுள்ளார். அக்காலத்தில் பாண்டிய மண்டலத்தில் நடைபெற்ற குதிரை வர்த்தகம் பற்றியும், தூத்துக்குடியில் நடைபெற்ற முத்துக்குளியல் பற்றியும், தூத்துக்குடிக்கு அருகாமையிலிருக்கும் காயல்பட்டினம் சிறந்ததொரு துறைமுகமாக விளங்கியதென்றும் தனது குறிப்புகளில் கூறியுள்ளார். மேலும் தம் பயணக் குறிப்புகளில்

பாண்டிய நாட்டிற்கு அயல்நாட்டார் செல்ல விரும்பினர் என்றும், நாட்டுமக்கள் மேலாடையின்றி உலவினர் என்றும், சகுனங்களிலும், ஜோதிடங்களிலும் மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர் என்றும் கூறியுள்ளார். உடன்கட்டை ஏறுதல் தேவதாசி முறை, தாம்பூலம் தரித்தல், உணவுப் பழக்கம், போர்முறை, செல்வசெழிப்பு ஆகியவை பற்றியும் சுவையான தகவல்களை தருகின்றார். பாண்டியர் ஐவர் ஆட்சி புரிந்தனர் என்றும் மிகுந்த செல்வத்தை திரட்டி வைத்திருந்தனர் என்றும் கூறியுள்ளார்.

மாறவர்ம குலசேகரனுக்கு சுந்தரபாண்டியன், வீர ாண்டியன் என்ற இரு புதல்வர்கள் இருந்தனர். சுந்தர பாண்டியன் பட்டத்தரசியின் மகன். வீரபாண்டியன் மற்றொரு மனைவியின் மகன். அவர்களுள் சுந்தரப்பாண்டியனின் திறமையைப் பாராட்டி அவனுக்கே ஆட்சிப் பொறுப்பை அளித்தான் மன்னன். ஆனால் வீரபாண்டியனுக்கு இது பிடிக்கவில்லை. ஆத்திரமடைந்த வீரபாண்டியன் மன்னனைக் கொலை செய்துவிட்டு ஆட்சியைக் கைப்பற்றினான்.

**மாலிக்கபூரின் படையெடுப்பு**

தென் இந்தியாவின்மீது படையெடுத்த முதல் முஸ்லீம் மன்னன் டெல்லி சுல்தான் அலாவுதீன் கில்ஜி ஆகும். இவன் வட இந்தியாவில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிய பின்னர் தென் இந்தியா மீது தனது கவனத்தை திருப்பினான். பாண்டியர்களின் ஆட்சியின்போது தமிழகத்தின் மீது படையெடுத்தனர். இம்மன்னனது தென் இந்தியப் படையெடுப்பை இவனது படைத்தளபதி மாலிக்கபூர் தலைமையேற்று நடத்தினான்.

**தென் இந்திய படையெடுப்பிற்கான காரணங்கள்**

- அலாவுதீன் கில்ஜி இளவரசராக இருக்கும் பொழுதே தேவகிரியின் யாதவ மன்னனை தோற்கடித்து தேவகிரியிலிருந்து விலையுயர்ந்த பொருட்களை கவர்ந்து சென்றிருந்தான். இந்த மோகமே அவனை தென்னகத்தின் மீது மீண்டும் படையெடுக்கத் தூண்டியது.
- முஸ்லீம் மன்னர்கள் இந்துக்களின் மீது போர் தொடுப்பதை தங்களது புனித கடமையாக கருதினர். இந்த எண்ணம் தான் டெல்லி சுல்தானையும் தென் இந்தியா மீது படையெடுக்கத் தூண்டியிருக்கலாம்
- தென்னக கோயில்கள் செல்வங்களின் இருப்பிடமாகத் திகழ்வதை டெல்லி சுல்தான் நன்கு அறிவான். இதனை கொள்ளையடித்து டெல்லிக்கு கவர்ந்து வர தனது படைத்தளபதி மாலிக்கபூரை அனுப்பினான்
- தென்னகத்தில் நிலவிய குழப்பமான அரசியல் சூழ்நிலை மாலிக்கபூரின் தென்ன படையெடுப்பிற்கு ஊக்கமளித்தது.
- அலாவுதீன் கில்ஜி வடஇந்தியாவில் மட்டுமில்லாமல் தென்னகத்திலும் தனது வலிமையை நிலைநாட்ட விரும்பினான்.

**தமிழகப் படையெடுப்பிற்கான காரணங்கள்**

- பாண்டிய பேரரசில் ஏற்பட்ட அரியணைப் போட்டி மாலிக்கபூரின் தமிழக படையெடுப்பிற்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்கியது. பாண்டியமன்னன் குலசேகரப் பாண்டியனின் புதல்வர்களாகிய சுந்தரப் பாண்டியன், வீர பாண்டியன் ஆகியோருக்கிடையே அரியணைப் போட்டி ஏற்பட்டது. இப் போட்டியில் வீரபாண்டியன்

தன்னுடைய சகோதரன் சுந்தரப் பாண்டியனை தோற்கடித்து தந்தை குலசேகரப் பாண்டியனையும் கொலை செய்தான். தாக்குதலுக்கு தாக்கு பிடிக்க முடியாமல் சுந்தரப் பாண்டியன் வடக்கு நோக்கிச் சென்று டெல்லி சுல்தான் அலாவுதீன் கில்ஜியின் உதவியை நாடினான். உடனடியாக அலாவுதீன் கில்ஜி மாலிக்கபூரை பாண்டிய நாட்டு அரசியலில் தலையிட ஆணைப்பிற்பித்தான்.

- மாலிக்கபூர் ஹொய்சால நாட்டின் மீது படையெடுத்தபோது, அந்நாட்டு மன்னன் வீரபல்லாளனர் பாண்டியனின் உதவியை நாடினான். அப்பொழுது ஆட்சியிலிருந்த வீரபாண்டியனும் பெரும்படை ஒன்றை அனுப்பி ஹொய்சால மன்னனுக்கு உதவி புரிந்தான். இதனால் ஆத்திரமடைந்த மாலிக்கபூர் தமிழகத்தின் மீது படையெடுக்க முற்பட்டான.
- கில்ஜி வம்சத்தினர் தென்னகமெங்கும் இஸ்லாம் மதத்தை பரப்ப வேண்டம் என்று எண்ணினர். தென்னக நாடுகளை கைப்பற்றாமல் அவர்களுடைய இந்த எண்ணம் ஈடேறாது. ஆதலால் இஸ்லாம் மதத்தை தமிழகத்தில் பரவ செய்ய வேண்டும் என்ற எண்ணமும் கில்ஜி வம்சத்தினரை தமிழகத்தின் மீது படையெடுக்க துாண்டியது.

**மாலிக்கபூரின் தென்னக படையெடுப்புகள்**

தென்னிந்தியாவில் உள்ள நான்கு அரசுகளின் செல்வ செழிப்பு, பலவீனம், குழப்பமான அரசியல் சூழ்நிலை ஆகியவையே மாலிக்கபூரின் படையெடுப்பிற்கு அடிப்படை காரணமாக அமைந்தது. இவனது தென் இந்திய படையெடுப்பு நான்கு தென்னக அரசுகளுடன் நடைபெற்றது.

**தேவகிரி படையெடுப்பு (கி.பி.1307)**

கி.பி.1294-ல் ஒருமுறை தேவகிரி அரசு அலாவுதீன் கில்ஜியின் தாக்குதலுக்கு உள்ளாகி தோற்கடிக்கப்பட்டு திறை செலுத்த சம்மதித்ததிருந்தது. ஆனால் கடந்த மூன்று ஆண்டுகளாக தேவகிரி மன்னர் ராமசந்திர யாதவ் திறைப்பணம் செலுத்தவில்லை. கோபமடைந்த டெல்லி சுல்தான் மாலிக்கபூர் தலைமையில் ஒரு பெரும்படையை தேவகிரிக்கு அனுப்பினான். இம்முறையும் தேவகிரி மன்னன் தோற்கடிக்கப்பட்டார். மேலும் முன்னாளைய குஜராத் மன்னரின் மகளான தேவலாதேவிக்கு தேவகிரி மன்னர் அடைக்கலம் கொடுத்தார். மாலிக்கபூர் தேவலாதேவியை சிறைபிடித்து டெல்லிக்கு அனுப்பினார். இந்நிகழ்ச்சிக்குப்பின் தேவகிரியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. புதிதாய் அரியணையேறிய சங்கரதேவர் சுல்தானுக்குத் திறை செலுத்த மறுத்ததால் மூன்றாம் முறையாக அந்நாட்டின் மீது படையெடுக்க நேர்ந்தது. தேவகிரி மன்னர் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார். தேவகிரி அரசு டில்லி சுல்தானியத்துடன் இணைக்கப்பட்டது.

**வாரங்கல் வெற்றி (கி.பி.1307-1310)**

இரண்டாம் பிரதாபருத்ரன் வாரங்கல் ஆட்சி செய்து வந்தார். கி.பி.1307-ல் மாலிக்கபூர் தலைமையிலான டெல்லி சுல்தானியப் படை அவரை தோற்கடித்து டில்லி சுல்தானுக்கு கப்பம் கட்டும்படி செய்தார்.

**துவார சமுத்திர படையெடுப்பு (கி.பி.1310-1311)**

மூன்றாம் பல்லாளர் துவார சமுத்திரத்தின் மன்னர் ஆவார். மாலிக்கபூர் ஹொய்சால நாட்டின் மீது படையெடுத்து மூன்றாம் பல்லாளரை தோற்கடித்தான். இப்படையெடுப்பில்

மாலிக்கபூருக்கு பல சிற்றரசர்களும் உதவி செய்தனர். ஹொய்சால மன்னர் மூன்றாம் பல்லாளர் டெல்லி அரசுக்கு கப்பம் செலுத்தவும் ஒப்புக் கொண்டார்.

**மாலிக்கபூரின் மதுரை படையெடுப்பு (கி.பி.1311)**

மதுரையில் பாண்டிய மன்னன் மாரவர்மன் குலசேகரப் பாண்டியன் இறந்ததும் அவரது இரு பிள்ளைகளான வீரபாண்டியன் சுந்தரபாண்டியன் ஆகியோருக்கிடையே வாரிசுமைப் போர் மூண்டது. இப்போரில் தோற்கடிக்கப்பட்டு விரட்டப்பட்ட சுந்தரபாண்டியன் டெல்லி சுல்தானின் உதவியை நாடினான். சுல்தான் தனது படைத்தளபதி மாலிக்கபூரை அனுப்பி மதுரையைச் சூறையாடினான்.

கி.பி.1311-ஆம் ஆண்டு மார்ச் 10-ஆம் நாள் **மாபார்** என்று முகமதிய வரலாற்றாசிரியர்களால் அழைக்கப்பட்ட தமிழ் நாட்டின் மீது படையெடுப்பதற்காக துவார சமுத்திரத்திலிருந்து மாலிக்கபூர் புறப்பட்டான். உறையூருக்கு அண்மையிலிருந்த வீரபாண்டியனின் தலைநகரான **பீர்துால்** என்ற இடத்தை நோக்கி மாலிக்கபூர் தன் படைகளை செலுத்தினான். வீரபாண்டியனின் படையில் பணிபுரிந்து வந்த சுமார் 20,000 முஸ்லீம் படைவீரர்கள் தக்க சமயத்தில் தம் கடமைகளை மறந்து மாலிக்கபூரின் படையோடு சேர்ந்துக் கொண்டனர். வீரபாண்டியன் நாட்டை விட்டட ஓடிவிட்டான். பீர்துாலை கைப்பற்றிக் கொண்ட மாலிக்கபூர் கண்ணனூாரை நோக்கி விரைந்தான். கண்ணனூாரிலிருந்து மாலிக்கபூர் சிதம்பரம் சென்று அங்குப் பொன்னம்பலத்தை அடியோடு பெயர்த்துக் கொண்டு கோயிலையும் தீ வைத்து கொளுத்தி, ஊரையும் சூறையாடி ஏராளமான மக்களையும் கொன்று குவித்தான். சிதம்பரத்திலிருந்து மாலிக்கபூர் திருவரங்கம் வந்து கோயிலை இடித்து பாழாக்கி விட்டு மதுரையின் மேல் பாய்ந்தான். மாலிக்கபூரின் தாக்குதலை முன்கூட்டியே அறிந்திருந்த சுந்தர பாண்டியன் மதுரையை கைவிட்டு இரண்டு மூன்று யானைகளை மட்டும் விட்டு விட்டு மற்ற எல்லாச் செல்வங்களையும் தன்னுடன் எடுத்துக் கொண்டு தலைமறைவாகி விட்டான். இதனால் பெரிதும் ஏமாற்றமடைந்த மாலிக்கபூர் வெகுண்டு மீனாட்சி அம்மன் கோயிலுக்குத் தீயிட்டான்.

மாலிக்கபூரின் மதுரை படையெடுப்பை பல்வேறு கோணங்களில் வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். சுந்தரப் பாண்டியன் தன் சித்தப்பாவான விக்கிரம பாண்டியனுடன் சேர்ந்து மாலிக்கபூரை எதிர்த்து போரிட்டு அவனை விரட்டியடித்தனர் என்று வாசுப் என்பவரின் குறிப்பு கூறுகின்றது. இன்னும் சிலர் மாலிக்கபூர் தனது மதுரை படையெடுப்பிற்குபின் கோயில்களை சேதப்படுத்துவதில்லை என்று முடிவு செய்தான் என்றும் கூறுகின்றனர். மாலிக்கபூர் மதுரையில் வெற்றி பெற்ற பின்னர் இராமேசுவரத்தை நோக்கி படையெடுத்து சில இந்துக் கோயில்களை இடித்து பெரும் பொருளை கைப்பற்றியதோடல்லாமல் அங்கு மசூதி ஒன்றையும் கட்டினான் என்று முஸ்லீம் வரலாற்று ஆசிரியர் பெரிஷத்தா கூறுகின்றார். ஆனால் சீவல் என்பவர் இதை மறுகின்றனர். மேலும் மாலிக்கபூர் இலங்கை மீது படையெடுத்தார் என்றும் பெரிஷத்தா கூறுகின்றனர். இது எந்த அளவிற்கு உண்மை என்பது தெரியவில்லை.

மாலிக்கபூரை தொடர்ந்து அலாவுதீன் கில்ஜியின் மகன் முபாரக்ஷா கி.பி.1317-ம் ஆண்டு தமிழகத்தின் மீது படையெடுத்தான். இப்போது மீண்டும் மதுரையில் அரியணைப் போட்டி ஏற்பட்டது. வீரபாண்டியனுக்கு திருவாங்கூர் மன்னன் ரவி வர்ம குலசேகரப் பாண்டியன்

உதவி செய்தான். முபாரக்ஷா குஸ்ரூகான் என்பவன் தலைமையில் தமிழகத்திற்கு படையை அனுப்பி இருந்தான். ஆனால் நடைபெற்ற போரில் குரூஸ்கான் தோற்கடிக்கப்பட்டான்.

## மதுரை சுல்தானியர்களின் தோற்றமும் வளர்ச்சியும்

முகமது பின் துக்ளக்கின் ஆட்சியின் சீர்கேடுகளால் அவனுடைய நாட்டின் வலிமை குறைந்தது. திறை செலுத்த வேண்டிய சிற்றரசர்கள் யாரும் திறை செலுத்தாமல் தன்னுரிமைப் பெற்ற நாடுகள் போன்று தனித்தியங்க ஆரம்பித்தனர். வடக்கே முகமது பின் துக்ளக் தனக்கெதிரான புரட்சிகளை அடக்குவதில் ஈடுபட்டிருந்ததைப் பயன்படுத்தி தெற்கே இருந்த டெல்லி சுல்தானின் பிரதிநிதியாகிய ஜலாலுதீன் அசென்ஷா தன்னை தன்னாட்சி பெற்ற மதுரையின் சுல்தானாக பிரகடனப்படுத்திக் கொண்டார். இவ்விதம் கி.பி.1335-ஆம் ஆண்டு பாண்டியர் ஆட்சி செய்த மதுரையில் சுல்தானின் ஆட்சி நிறுவப்பட்டது. பின் மதுரையை வெவ்வேறு சுல்தான்கள் கி.பி.1333 முதல் 1378 வரை ஆட்சி செய்தனர்.

ஜலாதுதீன் அசென்ஷாவால் வெறும் ஐந்து வருடங்களே மதுரையை ஆட்சி புரிய முடிந்தது. இச்சுல்தான் இவன் பெயரில் தங்கம் மற்றும் வெள்ளியினால் ஆன நாணயங்களை வெளியிட்டான். கி.பி.1340-ஆம் ஆண்டு இவனது பிரபுகளில் ஒருவனாகிய அலாவுதீன் தௌஜி என்பவனால் இவன் கொல்லப்பட்டான். பின் அலாவுதீன் உதௌஜி மதுரையின் சுல்தான் ஆனான். இவன் ஒரு வருட காலமே மதுரையை ஆண்டான். இவனது ஆட்சி காலத்தில் ஹொய்சால மன்னன் தமிழகத்தின் மீது படையெடுத்தான். கி.பி.1341-ஆம் ஆண்டு ஹொய்சாள மன்னன் தோற்கடிக்கப்ட்டு கொல்லப்பட்டார்.

அலாவுதீன் உத்தௌஜிக்குப் பின் அவனது மருமகன் குத்புதீன் என்பவன் மதுரையின் சுல்தானாக பதவி ஏற்றான். ஆட்சி பொறுப்பேற்ற நாற்பது நாட்களுக்குள் இவன் கொல்லப்பட்டான் இவனை தொடர்ந்து கியாஸ் உத்தீன் தம்கானி என்பவன் ஆட்சி பொறுப்பேற்றான். இவன் ஒரு கொடுங்கொல் மன்னர் போன்று செயல்பட்டான். முஸ்லீம் அல்லாதவர்களை மிகவும் துன்புறுத்தினான். இவனது காலத்தில் போசள மன்னன் மூன்றாம் வல்லாளன் தென்னகத்தை முஸ்லீம்களின் ஆதிககத்திலிருந்து விடுவிக்க எண்ணினான். கண்ணனூரில் முஸ்லீம் பாதுகாப்பு படைகள் தங்கியிருந்தது. வல்லாளன் ஒரு படையை அனுப்பி மதுரையை முற்றுகையிட்டான். இந்த முற்றுகை ஆறு மாத காலம் நீடித்தது. முஸ்லீம் படைவீரர்கள் வல்லாளனுக்கு பணிந்து 14 நாட்கள் போர் நிறுத்தம் செய்யக் கோரினர். புல்லாளனும் சம்மதித்தான். ஆனால் முஸ்லீம் படைகள் ஒப்பத்தை மீறி கியாசுதீன் தலைமையில் பெரும்படையுடன் சென்று ஹொய்சாள மன்னன் பல்லாளனை தோற்கடித்தான். தோற்கடிக்கப்பட்ட வல்லாளன் மதுரை கொண்டு செல்லப்பட்டான். கி.பி.1341-ல் அங்கே கொல்லப்பட்டான். அவன் உடலில் வைக்கோலை திணித்து இந்துக்களின் எச்சரிக்கைக்காக மதுரை மதிற்சுவரின்மேல் தொங்கவிடப்பட்டது. அங்கே தொங்கவிடப்பட்டிருந்த அச்சடலத்தை இபின் பதுாதா கி.பி.1342-ல் கண்ணுற்றார். இந்நிகழ்ச்சியை அவர் தன்னுடைய குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். கியாசுதீன் தன்னுடைய இறுதி காலத்தில் காலரா நோயினால் பாதிக்கப்பட்டு இறந்தான்.

கியாசுதீனைக் தொடர்ந்து நசீர் உத்தீன் எனபவன் மதுரையின் சுல்தான் ஆனான். இவன் கி.பி.1341 முதல் 1356 வரை மதுரையை ஆண்டான். இவனும் ஒரு கொடுங்கோல் மன்னன்தான். இவனுக்குப்பின் அடில்ஷா என்பவன் மதுரை சுல்தான் ஆனான். இவன்

கி.பி.1356 முதல் 1361 வரை ஆட்சி செய்தான். பக்ருதீன் முபாரக்ஷா என்பவன் அடுத்த சுல்தான் ஆகும். இவனது ஆட்சி காலம் கி.பி.1361 முதல் 1370 வரை ஆகும்.

**மதுரை சுல்தானியர்களின் வீழ்ச்சி**

மதுரையில் சுல்தானியர்களின் ஆட்சி மிகவும் கொடுமையாக இருந்தது. இந்துக்கள் பலவிதமான சித்திரவதைக்கு ஆட்படுத்தப்பட்டனர். இந்நிகழ்ச்சிகள் இந்து மக்களை உன்றுபடுத்தியது. சில தென்னிந்திய மன்னர்களும் ஒன்று சேர்ந்தனர். பல்லாளனின் மறைவை கேள்வியுற்ற ஹரிசுரர் கி.பி.1334-ல் தன்னுடைய சகோதரான **புக்கரைப்** பெரும்படையுடன் மதுரைக்கு அனுப்பி வைத்தான் அப்படை குர்பத் கசன் ஹங்கு என்ற சுல்தானை தோற்கடித்து புக்கரின் மகனான வீரகுமார கம்பன் மீண்டும் ஒரு படையெடுப்பை மதுரை மீது நடத்தினான். இப்படையெடுப்பின் மூலம் மதுரை சுல்தானியர்களின் ஆதிக்கம் முற்றிலும் ஒடுக்கப்பட்டு முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இந்நிகழ்ச்சியை குமாரக் கம்பணின் மனைவி கங்காதேவி எழுதிய **மதுரா விஜயம்** என்ற நூல் சிறப்பாக விளக்குகின்றது.

பாண்டியர்களின் செல்வாக்கு மதுரையில் அறைந்ததும் இராஜ கம்பீரத்தை தலைநகராகக் கொண்டு சாம்புவராயர்கள் ஆட்சி புரியத் தொடங்கினர். அவர்களையும் அடக்கி, மதுரை சுல்தானியத்தையும் ஒழித்துக் குமாரகம்பணர் தமிழகத்தில் விஜயநகர ஆட்சியை தோற்றுவித்தார்.

## மதுரை நாயக்கர்கள், தஞ்சை நாயக்கர்கள்

### திருமலை நாயக்கர்

மதுரையை ஆண்ட நாயகர்களில் மிக முக்கியமானவர் திருமலை நாயக்கராவர். இவர் முதலாம் முத்துவீரப்ப நாயக்கரின் தம்பியாவார். முத்துவீரப்ப நாயக்கர் 1623-ல் மறைந்ததும் இவர் ஆட்சிப் பொறுப்பேற்றுர். இவரது அண்ணன் காலத்தில் தலைநகர் திருச்சிக்கு மாற்றப்பட்டிருந்தது. அதனை மீண்டும் மதுரைக்கு மாற்றிச் சிறப்பான முறையில் ஆட்சி செய்தார் திருமலை நாயக்கர்.

### போர் வெற்றிகள்

திருமலைநாயக்கர் பொறுப்பேற்று சிறிது காலத்திலேயே முதலாவது மைசூர் போர் நிகழ்ந்தது. மைசூர் மன்னனின் படைகள் திண்டுக்கல்லை முற்றுகையிட்டன. அப்போது திண்டுக்கல்லின் பாளையக்காரராக இருந்தவர் அரங்கண்ண நாயக்கர் என்பவராவார். அவருக்கு உதவ இராமயப்பன் என்பாரது தலைமையில் ஒரு படையை அனுப்பினார் திருமலை மன்னர். 1625ல் நடைபெற்ற இப்போரில் மைசூர் படைகள் தோற்றோடின. 1634ல் கப்பம் கட்டமறுத்த திருவிதாங்கூர் மன்னர் மீது போர்தொடுத்து அவரை அடக்கினார் திருமலை மன்னர். இப்போரிலும் திருமலை நாயக்கரின் படைகளை வழிநடத்திச் சென்றவர் இராமயப்பன் ஆவார். 1637ல் சேதுபதி நாட்டில் ஏற்பட்ட குழப்பத்தை அடக்கவும் இராமயப்பன் தலைமையில் ஒரு படை சென்றது. இம்முறையும் இராமயப்பன் வெற்றியுடன் திரும்பி வந்தார். போர்க்களங்களில் வெற்றி வீரனாக திகழ்ந்த இராமயப்பன் 1648ல் இறந்தார். அவரது வீர வரலாற்றை இராமயகப்பன் அம்மானை எனும் நூலின் வாயிலாக அறியலாம். 1641ல் விஜய நகரப் பேரரசர் மூன்றாம் ஸ்ரீரங்கன் என்பார் தனது மேலாதிக்கத்தை நிலைநாட்ட மதுரை மீது படையெடுத்து வந்தார். திருமலை நாயக்கர் கோல்கொண்டா சுல்தானின் உதவியை நாடினார். கோல்கொண்டா, பிஜப்பூர் ஆகியவற்றின் சுல்தான்கள் செஞ்சியை கைப்பற்றினார்கள். விஜய

நகரப் படைகள் விரட்டியடிக்கப்பட்டன. திருமலைநாயக்கர் விஜயநகரப் பேரரசிடமிருந்து முழுமையாக விடுதலை பெற்றார்.எனினும் முஸ்லீம்கள் கைப்பற்றிய செஞ்சியை மீட்க திருமலைநாயக்காரால் முடியவில்லை. 1656ல் இரண்டாம் மைசூர் போர் ஏற்ப்பட்டது. மைசூர் மன்னர் தனது தளபதி அம்பையா என்பாரின் தலைமையில் மதுரையை நோக்கி ஒரு படையை அனுப்பி வைத்தார். அப்படை சத்தியமங்கலத்தைக் கைப்பற்றி மதுரையை நோக்கி முன்னேறியது. இப்படையிலிருந்த மைசூர் போர் வீரர்கள் மிகக் கொடுரமான சில செயல்களில் ஈடுப்பட்டனர். தமிழகத்தில் பிடிப்பட்ட எல்லா மக்களுடைய மூக்குகளையும் அறுத்தார்கள். அறுக்கப்பட்ட மூக்குகளை மூட்டை மூட்டையாக மைசூருக்கு அனுப்பப்பட்டன. எனவே இப்போர் மூக்கறுப்புப் போர் எனப்படுகிறது. இப்போர் தொடங்கியபோது திருமலைநாயக்கர் உடல் நலமின்றி இருந்தார். எனவே இரகுநாத சேதுபதி பெரும்படையுடன் மோதுமாறு வேண்டினார். இரகுநாத பெரும்படையுடன் மைசூர் படைகளை முறியடித்து பிடிப்பட்டவர்களின் மூக்குகளை அறுத்தார். மைசூர் வரையில் அப்படைகள் விரட்டி செல்லப்பட்டது. வெற்றியுடன் திரும்பிய இரகு நாதசேதுபதிக்கு திருமலை சேதுபதி என்ற சிறப்பு பட்டத்தை திருமலை நாயக்கர் வழங்கினார். மேலும் இரகு நாதசேதுபதி கப்பம் கட்டுவதிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

**ஐரோப்பியருடனான தொடர்பு**

இராபர்ட்-டி-நோபிலி எனும் இத்தாலிய கிறிஸ்துவ பாதிரியார் சமய நோக்குடன் தமிழகம் வந்தார். தமிழகத்தீலருக்கின்ற துறவி போல வாழ தொடங்கினார். தன்னை ரோமாபுரி அய்யர் என்று அழைத்துக்கொண்டார். குடுமியும் பொட்டும் வைத்துக் கொண்டும் கூட கிறிஸ்துவனாக இருக்கலாம் எனப்போதித்தார். இவர் கிறிஸ்துவ மதத்தை இந்தியமயமாக்க முயன்றார் என்பதால் இவரது மதத்தொண்டு கிறிஸ்துவ சமய உயர்மட்டத்தினால் தடை செய்யப்பட்டது. ஆனால் தனது கருத்துரிமைக்காக போராடி பன்னிரண்டாண்டுகள் கழித்து அவ்வுரிமையைப் பெற்றார். அதனைப் பயன்படுத்திப ல தமிழர்களை கிறிஸ்துவராக்கினார். திருமலை நாயக்கர் இவரது சமயத்தொண்டிற்கு ஆதரவளித்தார். திருமலை நாயக்கரின் காலத்தில் தமிழகத்தில் போர்த்துக்கீசியருக்கும் டச்சுக்காரருக்குமஇடையில கடும் வாணிகப் போட்டியிருந்தது. துவத்தில் திருமலை நாயக்கர் நடுநிலை கொள்கை வகித்தார். ஆனால் இராமநாதபுரம் சீமையில் சேதுபதி இரண்டாம் சடையத் தேவருடன் இவர் போர் நடத்திய போது போர்த்துக்கீசியர் இவருக்கு உதவினார்கள். அவர்கள் உதவியைப் பாராட்டி அவர்களுக்குக் பல சலுகைகளை வழங்கினார் திருமலை நாயக்கர். இதனால் டச்சுக்காரர்களின் வெறுப்பிற்கு ஆளானார். போர்த்துக்கீசியரின் தூண்டுதலில் 1648ல் டச்சுக்காரர்களை அவர் காயல்பட்டினத்திலிருந்து விரட்டினார். சினமடைந்த டச்சுக்காரர்கள் திருச்செந்தூரையும் தூத்துக்குடியையும் கைப்பற்றினர். இவ்வாறு ஐரோப்பியரிடையில் ஒரு பயனிக்கும் கொள்கையைப் பின்பற்றி தனக்கு இழப்பு வராமல் இருக்கும் வகையில் திருமலை நாயக்கர் செயல்படவில்லையெனக் கூறப்படுகிறது.

**திருப்பணிகள்**

போர்களங்களில் வெற்றி வாகை சூடியதால் மட்டுமின்றி பல திருப்பணிகள் செய்ததாலும் திருமலை நாயக்கர் சிறப்புப் பெறுகிறார். மதுரையின் கிழக்கு வாயிலில் அமைந்துள்ள மாரியம்மன் தெப்பக்குளம் அவரால் உருவாக்கப்பட்டது. தென்னகத்திலேயே

மிகப் பெரிய தெப்பக்குளமாக அது விளங்குகிறது. இவர் மீனாட்சி கோயிலுக்கு எதிரில் புதுமண்டபம் எனும் அழகான மண்டபத்தைக் கட்டுவித்தார். நாயக்க வம்சத்தை சேர்ந்த பத்து நாயக்கர்களின் ஆளுயரச் சிலைகள் இம்மண்டபத்தை அலங்கரிக்கின்றன. சிற்ப வேலைபாடுகள் அமைந்த இம்மண்டபம் இன்று வாணிப நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டு சீரழிந்து நிற்கின்றது. இந்திய இசுலாமிய கட்டிடக்கலையின் கலப்பாக மாடிபரும் அரண்மனையைக் கட்டினார் திருமலை நாயக்கர். அக்கால கட்டிடக் கலையின் சிறப்பபை எடுத்துச் செல்லும் வண்ணம் இன்றும் அந்த அரண்மனை பொலிவுடன் திகழ்கிறது.

**இராணி மங்கம்மாள் (1689 – 1706)**

திருமலை நாயக்கருக்கு பிறகு இரண்டாம் முத்து வீரப்ப நாயக்கர் என்பார் அரியனை ஏறி சில காலத்தில் மாண்டார். அவருக்குப் பின் 1659 முதல் 1682 வரை சொக்கநாத நாயக்கர் ஆண்டார். அவருக்குப் பின் 1689 வரை மூன்றாம் முத்துவீரப்ப நாயக்கர் ஆண்டார். அவர் இறந்த போது அவரது மனைவி கருவுற்றிருந்தார். ஒரு ஆண் குழந்தையைப் பெற்றுவிட்டு தன் நாயகனான நாயக்கரைத் தேடி விண்ணுலகம் சென்றார். அந்த ஆண் குழந்தையின் பாட்டியும் சொக்கநாதரின் மனைவியுமான இராணி மங்கம்மாள் 1689 முதல் தன் பேரனுக்குப் பகா ஆட்சியாளராக ஆட்சி செய்தார். மதுரையை ஆண்ட நாயக்கர்களில் இராணி மங்கம்மாளும் முக்கியமானவர்.

**இராணி சந்தித்த போர்கள்**

முகலாயப் பேரரசர் அவுரங்கசீப் தக்காணத்தைத் தனதாக்கிக் கொள்ளபெரும் முயற்சி செய்து வெற்றியும் பெற்றார். அவரது தளபதி சல்பிகார்கான் என்பார் ஒரு படையுடன் மதுரையை நோக்கி வந்தார். வலுவுடன் வந்த முகலாயப் படையுடன் மோதல் விவேகமற்றது என எண்ணிய மங்கம்மாள் முகலாயருக்கு பெரும் பொருளை அன்பளிப்பாக கொடுத்து அவர்கட்கு உட்பட்டு ஆள ஒப்புக்கொண்டார். 1697ல் திறை செலுத்த மறுத்த திருவிதாகூர் மன்னனை மங்கம்மாளின் படைகள் வென்று திரும்பின. மங்கம்மாளின் படைகளை நரசப்பன் என்பார் வழிநடத்தி சென்றார். 1700ல் மங்கம்மாளின் படைகள் தஞ்சையை தாக்கி வெற்றி பெற்றது. மறவர் நாட்டில் இரகுநாத சேதுபதி மதுரைக்கு அடிபணிய மறுத்தார். கிழவன் சேதுபதி என அழைக்கப்பட்ட அவருக்கு எதிராக 1702ல் மங்கம்மாள் படைகளை அனுப்பினார். ஆனால் அவர்களிடம் மதுரைப் படை தோல்வியுற்றது.

**மங்கம்மாளின் இறுதி நாட்கள்**

மங்கம்மாளின் இறுதி நாட்கள் பற்றி பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. அவரது இறுதிக் காலத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் மாண்டார் எனச் சிலர் குறிப்பிடுகின்றார்கள். பேரன் விஜய ரங்க சொக்கநாதன் வயதிற்கு வந்த பின்னரும் ஆட்சிப் பொறுப்பை அவரிடம் அளிக்கமறுத்ததால் அந்திமக் காலத்தில் மங்கம்மாள் அல்லலுற்றார் எனத் தெரிகிறது. தனது ஐம்பத்தைந்தாவது வயதிலும் அச்சையா என்ற அமைச்சர் மீது அவர் மையல் கொண்டதால் அவருக்கு இந்நிலை ஏற்பட்டது என்பாரும் உண்டு. இக்கூற்றினை டாக்டர் கிருஉிணசாமி அய்யங்காரும் சத்தியநாதய்யரும் ஒப்புக் கொள்ள மறுக்கின்றனர்

அதிகார மாற்றம் தொடர்பாகப் பேரனுடன் எழுந்த கருத்து வேறுபாடே மங்கம்மாளின் இன்னலுக்கு காரணமாக இருந்தது.

**மங்கம்மாளின் அறப்பணிகள்**

மங்கம்மாள் மக்கள் நலம் காக்கும் அரசியாகச் செயல்பட்டார். இவர் காலத்தில் மேற்க்கொள்ளப்பட்ட பொதுப்பணிகள் ஏராளம். சாலையோர சத்திரங்கள், குடிநீர்க் கிணறுகள் ஆகியவை பல உருவாக்கப்பட்டன. மங்கம்மாளின் பொதுப்பணிக்கு எடுத்துக்காட்டாக மங்கம்மாள் சத்திரம் இன்றைக்கும் மதுரையில் நின்று கொண்டிருக்கிறது. மங்கம்மாள் கலைக்கும் கல்விக்கும் பேராதரவு தந்தார். பல கோயில்களில் திருப்பணிகள் செய்தார். கோயிலகளுக்கு மட்டுமன்றி மசூதிக்கும் கொடை வழங்கினார். பிராமணர்களுக்கு மட்டுமன்றி கிறிஸ்துவர்களுக்கும் சலுகைகள் செய்தார். மதுரைப் பகுதியில் இவரது காலத்தில் பல கிறிஸ்துவர்கள் குடியேறினார்கள். சேதுபதி நாட்டில் ஜான் பிரிட்டோ என்ற பாதிரியார் கொலை செய்யப்பட்டதால் பல கிறிஸ்துவர்கள் பாதுகாப்புத் தேடி மதுரை வந்தனர். பல அறப்பணிகளும் பொதுப்பணிகளும் செய்து மக்களின் மனங்களில் மாறாத இடம் பெற்றார் மங்கம்மாள்.

**மீனாட்சி**

விஜயரங்க சொக்கநாதன் ஆண் குழந்தையின்றி இறந்தார். எனவே அவரது மனைவி மீனாட்சி அரசியாக ஆளத் துவங்கினார். மகன் விஜய குமாரமுத்து திருமலையைத் தத்தெடுத்துக் கொண்டார். ஆனால் பங்காரு திருமலை மீனாட்சியைத் துக்கியெரிந்து தானே அரசாள விரும்பினார்.மதுரையிலும், தஞ்சையிலும் திறை பெற்று வருமாறு ஆற்காட்டு நவாபு ஒரு படையை அனுப்பினார். இந்த வாய்ப்பை பயன்படுத்திதான் அரியனையைக் கைப்பற்ற வேண்டுமென பங்காரு திருமலை விரும்பினார். ஆனால் மீனாட்சி சந்தா சாகிப்பிற்கு பெரும் பணத்தைக் கொடுத்து திருப்பி அனுப்பினார். மீண்டும் ஒரு முறை சந்தா சாகிப் படையுடன் வந்ததாகக் கூறப்படுகிறது. திருச்சியிலிருந்த மீனாட்சியிடம் சில பொய் வாக்குறுதிகளைக் கூறிக் கோட்டைக்குள் நுழைந்தார் சந்தா சாகிப். மீனாட்சிக்கு எந்தவித ஆபத்தும் வராதுஎன சிவப்புத் துணியில் சுற்றப்பட்ட குரானின் மீத அவர் ஆணையிட்டார். ஆனால் ஆணையையும் மீறி திருச்சிக்கோட்டையையும், திண்டுக்கல்லையும், மதுரையயும் கைப்பற்றினார். மீனாட்சியை ஏமாற்ற சிவப்புத்துணியில் செங்கல்லைச் சுற்றி குரான் எனப் பொய்யுரைத்தார் சந்தாசாகிப் என வில்கஸ் என்பார் கூறுகின்றார். சந்தாசாகிப்பின் மீது மீனாட்சி மையல் கொண்டிருந்தார் என ஓர்ம் என்பார் கூறுகிறார். எது எவ்வாறெனினும் ஏமாந்த மீனாட்சி 1733ல் தற்கொலை செய்து கொண்டார். தீயில் தீய்ந்தாள் எனச் சிலரும் நஞ்சுண்டு மாண்டாள் எனச் சிலரும் கூறுகிறார்கள். மீனாட்சி மறைவுடன் மதுரை நாயக்கர் பரம்பரை அழிந்தது.

**தஞ்சை நாயக்கர்கள்**

சேவப்ப நாயக்கர் என்பாரை விஜயநகர பேரரசர் அச்சுதராயர். 1532ல் தஞ்சையின் நாயக்கராக நியமித்தார். சோழ மண்டலமும் தொண்டைம ண்டலத்தின் ஒரு பகுதியும் இவரது ஆட்சியின் கீழ் இருந்தது. 1560 வரை ஆண்ட இவருக்குப் பின் இவரது மகன் அச்சுதப்ப நாயக்கர் ஆட்சிப் பொறுப்பேற்றார்.இவரது காலத்தின் தலைக்கோட்டைப் போர் நிகழ்ந்து விஜயநகரம் வீழ்ந்தது. எனினும் இவர் தொடர்ந்து விஜயநகரப் பேரரசுக்கு விசுவாசத்துடன் நடந்துக் கொண்டார். இவருக்குப் பின் 1600 ல் அரியணையேறிய அவரது மகன் இரகுநாத நாயக்கர் 1633 வரை ஆண்டார். அவருக்குப்பின் அரியணையேறியவர் விஜயராகவ நாயக்கர் என்பவராவார். இவரது காலத்தில் விஜயநகர மன்னன் முன்றாம் ஸ்ரீரங்கன் தமிழகம் நோக்கிப்

படையுடன் வந்தார். திருமலை நாயக்கர் விஜயநகர மன்னனுக்கெதிராக திட்டம் தீட்டியபோது இவர் காட்டிக் கொடுத்தார். பிஜப்பூர், கோல்கொண்டா சுல்தான்கள் படையெடுத்தப் போது ஓடி ஒளிந்தார். 1673ல் மதுரையின் நாயக்கராக இருந்த சொக்கநாத நாயக்கர் தஞ்சைமீது போர்தொடுத்த போது அந்தப்புரப் பெண்களையெல்லாம் கொன்றுவிட்டுத் தானும்மாண்டார். சொக்கசாத நாயக்கர் அழகிரி என்பாரைத் தஞ்சையை ஆளும் பொறுப்பில் அமர்த்தினார். விஜயராகவ நாயக்கரின் மகன் செங்கமலதாசு என்பார் நாகப்பட்டினத்தில் ஒரு வணிகரிடம் வளர்ந்து வந்தார். விஜயராகவ நாயக்கரின் அமைச்சராக இருந்தவெங்கண்ணா பிஜப்பூர் சுல்தானின் உதவியுடன் செங்கமலதாசைத் தஞ்சையின் அரியணையில் அமர்த்த முயற்சித்தார். பிஜப்பூர் சுல்தான் தனது தளபதி வெங்காஜி என்காரைத் தஞ்சையை நோக்கி அனுப்பினார். வெங்காஜி அழகிரியை விரட்டி விட்டு செங்கமலதாசை அரியணையில் அமர்த்தினார். வெங்கண்ணாவின் சூழ்ச்சிகள் காரணமாகத் தஞ்சையில் அனுமதி நிலவவில்லை. எனவே 1675ல் வெங்காஜி தானே முடிசூட்டிக்கொண்டு தஞ்சையில் மராட்டியராட்சியைத் துவங்கினார். இத்துடன் தஞ்சை நாயக்கர் பரம்பரை அழிந்தது.

## நாயக்கர் கால அரசியல், கலை, கட்டிடக் கலை, சமூகம்

**அரசியல்**

நாயக்கர்கள் விஜயநகரப் பேரரசிற்கு உட்பட்டே ஆளத்துவங்கினர். ஆனால் காலப்போக்கில் அவர்கள் சுதந்திலமாகச் செயல்பட்டனர். தலைக்கோட்டைப் போருக்குப் பின்னர் விஜயநகர பேரரசின் மேலாதிக்கம் மிகவும் குறைவாபவே இருந்தது எனலாம். நாயக்கர்கள் பரம்பரை உரிமையின் அடிப்படையில் பட்டம் சூட்டினர். நாயக்கர்கள் தமது நிலப்பரப்பை பாளையங்களாகப் பிரித்தனர். மதுரை நாயக்கர்களின் நிலப்பரப்பு 72 பாளையங்களாகப் பிரிக்கப்பட்டது என்பர். பாளையங்கள் இருந்தப்போதிலும் நாயக்கர் பல அதிகாரங்களை தம்மிடம் வைத்திருந்தார். நாயக்கருக்கு ஆட்சிதுறையில் உதவிய அதிகாரிகளில் முக்கியமானவர் தனவாய் என்பார் ஆவார். சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவது இவரது முக்கிய பணியாக இருந்தது. அன்னிய நாட்டினரோடான உறவைப் பராமரிக்கும் முக்கியப் பொறுப்பும் அவருக்கு உண்டு. தளவாயை கட்டுப்படுத்தும் அதிகாரம் நாயக்கருக்கு மட்டுமே இருந்தது. அவர்கள் நாயக்கர்களின் படைகட்கு தலைமையேற்றுச் செருகளமும் சென்றனர். இராமயய்யன், அரியநாதர், நரசப்பன், போன்றோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். பிரதானி என்பார் ஆட்சித்துறையின் தலைமை அதிகாரியாக திகழ்ந்தார். கணக்கன், ஸ்தனாதிபதி எனும் கணக்குத் துறை அலுவலர்கள் பற்றியும் அறிய முடிகிறது. நாயக்கர் தமது பகுதியைச் சில மாநிலங்களாகவும் பிரித்தனர். ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு அளுநர் நியமிக்கப்பட்டார். பாளையங்களின் ஆட்சித்துறையை அவர்கள் கண்காணித்தனர். கிராமம் ஆட்சித்துறையின் அடிப்படை அலகாக இருந்தது. கிராமங்கள் ஓரளவு சுயாட்சி உரிமை பெற்றிருந்தன.

நாட்டின் முக்கிய வருவாயாக திகழ்ந்தது நிலவரி வருவாயாகும். பாளையக்காரர்களின் கப்பமும் பிறவரிகளும் வருவாயில் அடங்கின. கப்பம் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப மாறுபட்டது. நாயக்கர்கள் தமது வருவாயைப் படை அமைப்பு, காவல்த்துறை, பொதுப்பணித்துறை, அறப்பணிகள் ஆகியவற்றிற்காகச் செலவிட்டனர். எல்லா நாயக்கர்களுமே அறப்பணிக்காக அதிகம் செலவிட்டனர். கிராம அளவிலே நீதித்துறை அமைப்புகள் செவ்வனே

செயல்ப்பட்டன. எனவே மத்திய அமைப்பிற்கு நீதித் துறை செயற்பளு குறைந்தது. தண்டனைகள் மிகவும் கடுமையாக இருக்கவில்லை. நாயக்கர்களின் படையில் காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, ஒட்டகப்படை ஆகிய பிரிவுகள் இருந்தன.

**சமுதாயம்**

நாயக்கர்கள் காலத்தில் சாதிகள் சமுதாயத்தில் மிக ஆழமாக பதிந்திருந்தன. பிராமணர்கள் சமுதாயத்தில் மிக உயர்ந்த நிலையிலிருந்தார்கள். கோயில்களில் பூசாரிகள் மட்டுமின்றி அரசனுக்கு ஆலோசனை கூறும் அதிகாரிகளாகவும், பிரதானிகளாகவும், தளவாய்களாகவும் இருந்தார்கள். இராமப்பய்யன் எனும் புகழ்பெற்ற தளபதி ஒரு பிராமணர் ஆவார். சாதிகளிடையே திருமண உறவுகள் தடை செய்யப்பட்டிருந்தன. கம்மாள சாதியில் இருந்து ஐந்து உட்பிரிவுகளிடையே திருமண உறவு இருக்கக் கூடாது என முத்து வீரப்பன் காலத்தில் ஆணையிடப்பட்டிருந்தது. ஒவ்வொரு சாதியைச் சேர்ந்தவர்களும் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வசித்தார்கள். சாதிகளின் பெயர்களிலேயே தெருக்கள் அமைந்திருந்தன. இடங்கை, வலங்கைப் பிரிவுகளிடையே அடிக்கடி மோதல்கள் நிகழ்ந்தன. இவ்வாறு சாதிப்பிரிவுகள் ஆழமாக பதியவும் சில மூடநம்பிக்கைகள் பரவவும் சில முக்கியமான அதிகாரிகள் திட்டமிட்டே செயல்பட்டார்கள். நாயக்கர்களும் அவர்களுக்கு துணையாக நின்றார்கள்.

பிராமணர்கள் சைவ உணவை மட்டுமே உண்டார்கள். மற்றவர்கள் அசைவ உணவையும் விரும்பி உண்டனர். பெண்கள் ஆடம்பர ஆடை அணிகலன்களை விரும்பினார்கள். வேட்டையாடுவதும் குதிரையேற்றமும் பொதுவாக பொழுதுப்போக்குகள். கோலாட்டம், கும்மி போன்றவை பெண்கள் பெரிதும் விரும்பினர். திருமலை நாயக்கர் காலத்தில் பல திருவிழாக்கள் கொண்டாடப்பட்டன. சித்திரை திருவிழா, புட்டுத்திருவிழா, தெப்பத்திருவிழா, ஏகாதசி, பௌர்ணமி, அமாவாசை, சிவராத்திரி, நவராத்திரி போன்றவை கொண்டாடப்பட்டன. மதுரை ஒரு திருவிழா நகரமாக மாறியது.

**சமயம்**

நாயக்க மன்னர்கள் பொதுவாக வைணவர்களாக இருந்தனர். சிறந்த பக்திமான்களாக இருந்த அவர்கள் பல்வேறு அறப்பணிபளைச் செய்தார்கள். சக்தி வழிபாடும் இவர்கள் காலத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்தது. இவர்களுடைய காலத்தில்தான் மதுரை மீனாட்சி கோயில் சிறப்பெய்தியது. நாயக்கர்கள் பொதுவான சமயநோக்குக் கொண்டிருந்தார்கள். சிவன்கோயில்களுக்கும் திருப்பணி செய்தார்கள். கிறிஸ்துவ சமயத்தினரின் வழிபாட்டிற்கும் வசதிகள் செய்து கொடுத்தார்கள். 1592ல் கிறிஸ்துவ சமயப் பரப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இராபர்-டி-நோபிலி என்பராது சமய பரப்பு முயற்சிகளுக்கு திருமலை நாயக்கர் பேருதவி செய்தார். பல இந்துக்கள் கிறிஸ்தவராயினர். இந்த மத மாற்றத்திற்கு எதிர்ப்புகளும் கிளம்பின. மத மாற்றம் செய்யப்பட்டவர்கள் துன்புறுத்தப்பட்டனர். சேதுபதி நாட்டில் ஒரு பாதிரியார் கொலை செய்யப்பட்டார். திருச்சியில் ஆளுநரே கிறிஸ்துவர்களைத் துன்புறுத்தினார். எனினும் இதுபோன்ற சமயங்களில் நாயக்கர்கள் தலையிட்டு கிறிஸ்துவர்களுக்கு ஆதரவும் பாதுகாப்பும் அளித்தனர். கிறிஸ்துவ சமய பரப்பு முயற்சிகளின் காரணமாக வைணவப் பிரிவுகளிடையே பூசல் மறைந்து இரு பிரிவினரும் இணைந்து கிறிஸ்துவத்தை எதிர்த்தனர். உயர்குல இந்துக்களை மதமாற்றம் செய்யும் முயற்சியில் கிறிஸ்துவ சமயப் பெரியார்கள் அதிகமாக வெற்றி காண முடியவில்லை. எனவே

சமுதாயத்தின் அடிமட்டத்தில் இருந்தோரை மதமாற்றம் செய்யும் முயற்சியில் ஈடுப்பட்டனர். பொருளாதாரத்தில் தாழ்ந்திருந்த மக்களுக்கு சில வசதிகளைச் செய்து கொடுக்க தலைப்பட்டனர். நாயக்கர்கள் காலத்தில் இசுலாமிய சமயத்தினர் சில பகுதிகளில் வாழ்ந்தனர். அவர்கள் குறிப்பிடதக்க சமயச் சச்சரவுகளிலோ நடவடிக்கைகளிலோ ஈடுபடவில்லை எனலாம்.

**கலை, கட்டிடக்கலை**

திருமலைநாயக்கர் கட்டிடகலைக்குச் சிறப்பளித்தார். அவரது அரண்மனையும் வண்டியூர்த் தெப்பக்குளமும், புதுமண்டபமும் இன்றும் நின்று அவரது புகழ் பாடுகின்றன. கோயில் திருப்பணிகள் செய்வதில் ஆர்வம் காட்டினர். திருப்பரங்குன்றம் முருகன் கோயில், அழகர் கோயில், திருவில்லிபூத்தூர் ஆண்டாள் கோயில், திருவானைக் காவல் சிவன்கோயில், நெல்லையிலுள்ள நெல்லையப்பர் கோயில் ஆகியவை அவரது திருப்பணிகளால் சிறப்பெய்தின. மீனாட்சிஅம்மன் கோயிலைப் புதுப்பித்து முக்குறுணிப் பிள்ளையாருக்கென தனியான இடம் அமைத்தார். கோயில் நிர்வாக சீரமைப்பிற்கு வகை செய்தார் திருமலைநாயக்கர். நாயக்கர்கள் இசைக்கு முக்கியத்துவம் அளித்தனர். அவர்கள் அமைத்த கோயில்களில் காணப்படும் இசைத்தூண்கள் அதனை செப்புகின்றன. சிதம்பரத்திலும் காஞ்சியிலும் அவர்களது கட்டிடக்கலைத்தொண்டு காட்சியளிக்கிறது. நாயக்கர்களின் கட்டிடக்கலை முறை சோழர், பாண்டியர். விஜயநபரப் பேரரசர் ஆகியோரது கட்டிடக்கலை முறைகளின் கலப்பாக அமைந்தது. அவர்களது முறைகளை பின்பற்றியே நாயக்கர்கள் தமது முறையை அமைத்தனர். எனவே, நாயக்கர்களின் கட்டிடக்கலை முழுமையான திராவிட முறை எனலாம்.

## மராட்டியர்கள்

தஞ்சை நாயக்கர்களின் விவகாரத்தில் தலையிட தனது தளபதி வெங்காஜியை அனுப்பினார் பிஜப்பூர் சுல்தான். குழப்பங்கள் தொடர்ந்ததால் வெங்காஜி முடிசூட்டிக் கொண்டு தமிழகத்தில் மராட்டியர் ஆட்சியைத் துவங்கினார்.

**வெங்காஜி (1676-1684)**

இவருக்கு எக்கோஜி என்ற பெயரும் உண்டு. தான் பெற்ற நிலப்பரப்பை மிகுந்த கவனத்துடன் ஆட்சி செய்தார். மக்களுக்குப் பயனளிக்கு பல நீர்ப்பாசனத் திட்டங்கள நடைமுறைப்படுத்தினுர். இவருக்குப் பல திசைகளிலிருந்து ஆபத்துகள் வந்ததால் தனது திலையை வலுப்படுத்திக் கொள்ள மக்களின் மீது கடுமையான வரிகள்லித்தார் எனவும் கூறப்படுகிறது. 1676-ல் மராட்டிய தலைவர் சிவாஜி கர்நாடகத்தின் மீது படைடுெத்து வந்தார்.

அவரது படையெடுப்பு பெரும் அளவிலான அரசியல்கள் மாற்றங்கள் ஏற்படுத்தவில்லை. எனினும் வெங்காஜி பல இன்னல்களை அனுபவிக்க வேண்டியிருந்தது. 1684ல் வெங்காஜி மறைந்த பின்னர் ஹாஜி என்ற அவரது மூத்த மகன் பட்டமேற்றார். இவர் 1712 வரை ஆட்சி செய்தார்.

**முதலாம் சரபோஜி (1712-1728)**

ஹாஜியின் சகோதரர் முதலாம் சரபோஜியாவர். இவர் இராமநாதபுரத்தில் ஏற்ப்பட்ட வாரிசுரிமைப் போரில் தலையிட்டார். முதலாம் சரபோஜி 1728ல் மறைந்த போது தஞ்சையில் வாரிசுரிமைக் குழப்பம் ஏற்ப்பட்டது. வெங்காஜியின் கடைசி மகன் துக்கோஜி என்பார் அரியணையேறினார். அவர் இராமநாதபுர அரசின் விவகாரங்களில் தலையிட்டார். மதுரை

அரசியாக இருந்த மீனாட்சியை அகற்றி அதனைக் கைப்பற்ற விரும்பினார். ஆனால் அவரது முயற்சிகள் பலிக்கவில்லை. ஆற்காட்டு நவாப்பின் படைகள் இவரது ஆட்சிக்காலத்தில் தஞ்சையை தாக்கின. அதிகமான பணத்தைக் கொடுத்து அமைதியை விலைக்கு வாங்கினார் துக்கோஜி. 1737ல் இவர் மறைந்தபோது இவரது மகன் பாபாசாகிப் அரியணையேறினார். அவர் சையது என்ற படைத்தளபதிக்கு முக்கியத்துவம் கொடுத்தார். சையது சதி செய்து பாபாசாகிப்பைக் கொன்றார். 1737ல் பாபாசாகிப்பின் மனைவி சுஜானாபாய் என்பார் ஆட்சிப் பொறுப்பேற்றார். ஆனால் குறுகிய காலத்திலேயே முதலாம் சரபோஜியின் முறையற்ற மைந்தன் ஒருவர் அரியணையேறினார். அவர் சித்தூஜி அல்லது காட்டுராஜா என அழைக்கப்பட்டார். பாபாசாகிப்பின் தம்பி காட்டுராஜாவை அரியணையிலிருந்து இறக்க பிரெஞ்சுக்காரர்களின் உதவியை நாடினார். சையாஜி என அழைக்கப்பட்ட இவர் 1738ல் தஞ்சையில் அரியணையேறினார். 1739ல் சையாஜி தூக்கியெறியப்பட்டு பிரதாப் சிங் என்பார் அரியணையேறினார்.

**பிரதாப்சிங் (1739-1763)**

அவரது ஆட்சிக் காலத்தில் முக்கிய நிகழ்ச்சிகள் நடந்தன. தஞ்சையை வலுப்படுத்தப் பல முயற்சிகள் மேற்க்கொண்டார். ஆற்காட்டு நவாப் நிஜாம் உல்முல்க் என்பார் தஞ்சையை முற்றுகையிட்டார். அவருக்கு பெரும் தொகையளிப்பதாக வாக்களித்து தன் அரியணையை காப்பாற்றிக் கொண்டார் பிரதாப்சிங். 1749ல் சந்தா சாகிப்பும் முஜாபர் ஜங்கும் பிரெஞ்சு உதவியுடன் தஞ்சையைத் தாக்கினர். பிரதாப்சிங் முகமதுஅலி மற்றும் ஆங்கிலேயர் உதவியை நாடினார். அவர்கள் வரும்வரை சமரசப் பேச்சுவார்த்தையைக் காலம் தாழ்த்தினார். முகமதுஅலி ஆங்கிலேயப்படையுடன் தஞ்சையைக் நோக்கி வந்ததும் சந்தாசாகிப்பும் முஜாபர் ஜங்கும் பின்வாங்கினார்கள். பின்னர் திருச்சிக்கோட்டையை ஆங்கிலேயர் முற்றுகையிட்டபோது பிரதாப்சிங் அவருக்கு உதவினார். சுந்தாசாகிப் மனாக்ஜி என்ற மராட்டியத் தளபதியிடம் சரணடைந்தார். சரணடைந்த சந்தாசாகிப்பை ஈவு இரக்கமின்றிக் கொன்றார் மனாக்ஜி. 1763ல் பிரதாப்சிங் மாண்டார். அவரைத் தொடர்ந்து துல்ஜாஜி என்பார் அரியணையேறி 1787 வரை ஆட்சி செய்தார். துல்ஜாஜி மைசூர் மன்னர் ஹைதர் அலிக்கு உதவி செய்தார். ஆற்காட்டு நவாப்பின் படைகள் 1771ல் தஞ்சையைத் தாக்கின. இத்தாக்குதலில் நிலைகுலைந்த துல்ஜாஜி நவாப் கேட்டதற்கெல்லாம் ஒப்புக்கொண்டார். 1773ல் நவாப்பின் இரண்டாவது தாக்குதல் நிகழ்ந்தது. இத்தாக்குதலில் துல்ஜாஜியும் அவரது உறவினர்களும் கைதிகளானார்கள். 1773ல் ஏப்ரல் முதல் 1776 வரை தஞ்சைப் பகுதியில் ஒரு பயங்கர ஆட்சி நிலவியது. தஞ்சையில் வரி வசூலிக்கும் பொறுப்பு ஒரு டச்சுக் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டது. தஞ்சை மக்கள் சொல்ல முடியாத இன்னலுக்கு ஆளானார்கள். ஆங்கிலேய கம்பெனி 1776ல் மீண்டும் துல்ஜாஜியை அரியணையில் அமர்த்தியது. ஆனால் கம்பெனியின் பல நிபந்தனைகளுக்குட்பட்டே அவர் ஆளமுடிந்தது. 1780ல் மைசூரின் ஹைதர்அலி படையெடுத்து வந்து பல அழிவுகளைச் செய்து விட்டு திரும்பினார். ஆயிரக்கணக்கான ஆண்கள், பெண்கள், குழந்தைகளை அவர் இசுலாமியராக்கியதாகக் கூறப்படுகிறது. துல்ஜாஜி 1787ல் மறைந்தார். துல்ஜாஜிக்கு மகன் இல்லை. எனவே சரபோஜி எனும் சிறுவனை வாரிசாக அறிவித்துத் தனது சகோதரன் அமர்சிங்கை பகர ஆட்சியாளராக நியமித்தார். அமர்சிங்கின. பலவீன நிலையைப் பயன்படுத்தி ஆங்கிலேயர் ஒரு உடன்படிக்கை செய்து

கொண்டனர். இவ்வுடன்படிக்கையின்படிபல சலுகைகளை ஆங்கிலேயர் பெற்றனர். அமர்சிங் சிறுவனாக இருந்த பட்டத்து இளவரசனை சரிவர நடத்தவில்லை. ஆங்கிலேயரின் உதவியுடன் சரகோஜி 1792ல் அரியணை ஏறினார். இவர் இரண்டாம் சரபோஜி என அழைக்கப்படுகிறார். 1792ல் ஆங்கிலேயருடன் புதிய உடனபடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 1833ல் இரண்டாம் சிவாஜி பொறுப்பேற்றார். இவர் 1855ல் மகனின்றி மறைந்தார். அவகாவிலிக் கொள்கையை மேற்கொள் காட்டித் தஞ்சை ஆங்கிலேயரால் எடுத்துக்கொள்ளப்பட்டது. தஞ்சையில் மராட்டியர் ஆட்சி முடிவடைந்தது.

## மராட்டியர் ஆட்சி-சில அம்சங்கள்

### ஆட்சித்துறை

தஞ்சையில் மராட்டியரின் ஆட்சி ஏற்ப்படுத்தப்பட்டவுடன் மராட்டிய நாட்டிலிருந்து பல பிராமணர்களும் பிராமணர் அல்லாதோரும் தஞ்சைக்கு கொண்டு வரப்பட்டனர். ஆட்சித்துறையில் பிராமணர்கட்கு அதிகம் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. வெங்காஜி மராத்தியை ஆட்சி மொழியாக்கினார். எனினும், பின் வந்த மராட்டிய மன்னர்கள் தமிழுக்கு ஆதரவளித்தனர். அரசனிடமே அனைத்து அதிகாரங்களும் குவிந்திருந்தன. மந்திரி என்ற அழைக்கப்பட்ட அமைச்சர் தளவாய் எனப்பட்ட தளபதி திவான் எனப்பட்ட வருவாய் அதிகாரி, புரோகிதர் எனப்பட்ட சமய ஆலோசகரும் முக்கியமான அதிகரிகளாக இருந்தனர். நிலவரி முக்கியமான வருவாயாக இருந்தது. அது அடிக்கடி அதிகமாக்கப்பட்டது. தஞ்சைநாடு பட்டுக்கோட்டை, மன்னார்குடி, கும்பகோணம், மாயவரம், திருவடிஎனும் ஐந்து சபாக்களாக பிரிக்கப்பட்டது. சோழர் காலத்திலிருந்தே நடைமுறையிலிருந்த கிராம ஆட்சித்துறை தொடர்ந்து பின்பற்றப்பட்டது. தஞ்சை மராட்டிய மன்னர்கள் நீதித்துறை தலைவர்களாக விளங்கினர். பண்டிதர்களின் உதவியுடன் தீர்ப்புக்களை வழங்கினர். பிரதாப்சிங் தனியான நீதிமன்றம் ஒன்றினை அமைத்தார்.

### சமுதாயம்

சாதிமுறை ஆழமாக பதிந்திருந்தது. பிராமணர்கள் உயர் மட்டத்தில் இருந்தனர். பிராமணர்கட்கு பல மானியங்கள் வழங்கப்பட்டன. இந்துமதச் சடங்குகள் ஒழுங்காகப் பின்பற்றப்பட்டது. பசுவதை தடைசெய்யப்பட்டது. சகுனங்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தன. வடமொழி முக்கியத்துவம் பெற்றது. தெலுங்கு மொழியும் போற்றப்பட்டது. தமிழ் உரிய இடம் பெறவில்லை. இரண்டாம் சரபோஜி காலத்தில் சரஸ்வதி மகால் எனும் நூலகம் உருவாக்கப்பட்டது. சுவார்ட்சு எனும் கிறிஸ்துவச் சமய பரப்பாளர் பல பள்ளிகளை உருவாக்கி ஆங்கிலக் கல்வியை அறிமுகம் செய்தார். பெண்கள் உடன்கட்டையேறும் வழக்கம் அரச குடும்பத்தினரிடையேயும் பிரபுக்கள் குடும்பங்களிலும் இருந்தது. மராட்டிய மன்னர்கள் பல மனைவிகளையும் ஆசை நாயகிகளையும் வைத்திருந்தனர். வடமொழியில் கல்விமானாக விளங்கிய நீலகண்ட தீட்சிதர், இராமபத்ர தீட்சிதர் போன்றோர் மராட்டிய மன்னர்களின் ஆதரவை பெற்றனர். மராட்டிய மன்னர்கள் இசையைப் போற்றினர். இரண்டாம் சரபோஜியின் அவையில் தியதகராஜர், முத்துச்சாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரி ஆகிய மூன்று இசை வல்லுனர்கள் இருந்தனர்.இரண்டாம் சரபோஜி சங்கீத மகால் ஒன்றினைக் கட்டினார். மருத்துவத்துறையின் மேம்பாட்டிற்கும் மராட்டிய மன்னர்கள் ஆதரவளித்தனர். புதிய

பெரிய கட்டிடங்கள் எவற்றையும் அவர்கள் கட்டவில்லை. எனினும் சில கேரியல்கள் அவர்கள் புதுப்பித்தனர்.

மராட்டிய மண்ணிலிருந்து வந்து தமிழகத்தில் தங்கள் ஆட்சியை ஏற்படுத்திச் சில அடையாளச் சின்னங்களை விட்டு மறைந்தனர்

**ஆற்காட்டு நவாப்புகள்**

திருமலைநாயக்கரின் வேண்டுகளின்படி பிஜப்பூர் சுல்தானின் படைகள் 1646ல் கர்நாடத்தை தாக்கின. செஞ்சி அவர்கள் வசமாகியது. ஆதனை மீட்க திருமலைநாயக்கர் மேற்கொண்ட முயற்சிகள் பயனற்றுப் போயின. 1690ல் அவுரங்கசீப்பின் ஆணைப்படி சுல்பிகார்கள் செஞ்சியை முற்றுகையிட்டனர். 1697ல் செஞ்சி அவர் வசமாகியது. 1710ல் ஆற்காட்டைத் தலைநகரமாகக் கொண்ட கர்நாடகத்தின் நவாப்பாக அவுரங்கசீப் சதத்துல்லாகானை நியமித்தார்.

**சதத்துல்லாகான் (1710-1732)**

ஆற்காட்டு நவாபுகளின் ஆட்சியைத் துவங்கிய முதல் நவாபு இவரே. இவரது காலத்தில் வடக்கே ஓங்கோரிலிலிருந்து தெற்கே செஞ்சி வரையிலும் ஆற்காட்டின் எல்கை பரவியிருந்தது. இவரது ஆட்சிக் காலத்தில் செஞ்சி இராஜாதேசிங்கின் ஆட்சியில் இருந்தது. இராஜாதேசிங்கு திறை செலுத்த மறுத்ததால் இவர் செஞ்சி மீது படையெடுத்தார். 1713ல் நவாப்பின் முற்றுகை நிகழ்ந்தது. இராஜாதேசிங்கு போரில் தோற்று வீரமரணமடைந்தார்

**தோசுத்து அலி (1732-1740)**

1732ல் சதத்துல்லாகான் மழறந்த பின்னர் அவரது சகோதரர் தோசுத்து அலி ஆட்சிப் பொறுப்பேற்றார். இவரது காலத்தில் இவரது மகன் சப்தர் அலி மற்றும் மருமகன் சந்தா சாகிபு ஆகியோர் பொறுப்பில் மதுரை, திருச்சி, திருநெல்வேலி ஆகியவற்றை நோக்கி படையை அனுப்பினார். 1738ல் சந்தா சாகிபு மதுரை அரசி மீனாட்சியை ஏமாற்றியதால் அவர் தற்கொலை செய்து மாண்டார். 1740ல்மராட்டியர் கர்நாடகத்தின் மீது படையெடுத்தனர். மராட்டியருடன் மோதியதில் தோசுத்து அலி மாண்டார். ஒரு கோடி ரூபாய் கொடுத்து சப்தர் அலி அமைதியை விலைக்கு வாங்கினார். 1741ல் மராட்டியர் மீது மீண்டும் படையெடுத்து சந்தா சாகிபைச் சிறைபிடித்து சென்றனர்.

**சப்தர் அலி 1740-1742)**

தோசுத்து அலியின் மறைவிற்கு பின்னர் அவரது மகன் சப்தர் அலி நவாப்பானார். ஆனால், குறுகிய காலத்திலே அவரது மைத்துனர் முர்த்தாசா அலி தன்னை நவாபாக பிரகடனம் செய்து கொண்டார். ஆனால் கடை வீரர்களின் எதிர்ப்பின் காரணமாக வேலூரை விட்டு ஓடினார். இதற்கிடையில் சப்தர் அலியின் மகனான சையத் முகமதுகான் எனும் சிறுவனை ஆங்கிலேயர் ஆட்சி பொறுப்பில் அமர்த்தினர். ஆற்காட்டில் நடக்கின்ற குழப்பங்களைத் தக்காண சுபேதாராக இருந்த நிசாம் உல்முல்க் கண்ணுற்று ஒரு படையுடன் வந்தார். சையத் முகமத்கான் நீக்கப்பட்டு கோசா அப்துல்லாகான் நவாபாக ஆக்கப்பட்டார். அவரும் விரைவில் மாண்டார்.

**அன்வருதீன் கான் (1743-1749)**

கோசா அப்துல்லாகான் மறைந்த பின்னர் அன்வருதீன்கானை நவாபாக நியமித்தார் ஐதராபாத் நிசாம். ஆன்வருதீனின் காலத்தில் தான் ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரர்களும்

தமது வாள்வலிமையையும் இராஜதந்திரத் திறமையையும் கர்நாடகத்தில் சோதித்துக் கொண்டனர். கர்நாடகப் போர்கள் பற்றிய விபரங்களை பின்வரும் பக்கங்களில் காணலாம். 1749ல் நடந்த ஆம்பூர் போரில் அன்வருதீன் மாண்டார்.

**முகமது அலி (1749-1795)**

ஆன்வருதீனைத் தொடர்ந்து ஆற்காட்டின் ஆட்சிப் பொறுப்பையேற்றவர் முகமது அலி. ஆற்காட்டின் விவகாரங்களில் பிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயரும் தலையிட்டனர். முகமது அலிக்கு வாலாஜா என்ற பெயரும் உண்டு. சென்னையில் சேப்பாக்கத்தில் ஒரு அரண்மனையைக் கட்டினார் முகமது அலி. ஆவர் 1795ல் மறைந்தார்.

**உம்தத்-உல்-உமாரா (1795-1801)**

முகமது அலியின் மகன் உம்தத் உல் உமாரா 1795ல் ஆட்சிப்பொறுப்பேற்றார். இவரும் அதிகமான கடன்களை வாங்கிஅன்னியரின் செல்வாக்கில் சீரழிந்தார். இவருடன் ஒரு புதிய ஒப்பந்தம் செய்ய ஆங்கிலேயர் முயன்ற வேளையில் 1801ல் மாண்டார். அவருடைய மகன் அலி உசேன் காலத்திலும் அத்தகைய முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அலி உசேன் புதிய ஒப்பந்தம் செய்ய மறுத்ததால் அசீம்-உத்-தௌலா என்பாரை ஆற்காட்டின் அரியணையில் ஆங்கிலேயர் அமர்த்தினர். ஆனால் ஆற்காட்டின் நிர்வாகப் பொறுப்பு ஆங்கிலேயர் வசமாகியது எனலாம். முகம்மது கவுசு என்பார் கடைசி நவாபாக இருந்தார். அவர் வாரிசின்றி 1855ல் இறந்ததால் அவகாசிலிக் கொள்கையின்கடி ஆற்காடு ஆங்கிலேயர் வசமாகியது. ஆற்காட்டு நவாப்பின் ஆட்சி முடிவடைந்தது.

## ஆற்காட்டு நவாபின் ஆட்சி-சில அம்சங்கள்

**ஆட்சித்துறை**

முகலாயப் பேரரசின் கீழ் ஐதராபாத்தில் ஒரு ஆளுநர் இருந்தார். அவர் நிசாம் என அறியப்பட்டார். ஐதராபாத் ஆளுநருக்குக் கட்டுபட்டவராக ஆற்காட்டு நவாபு இருந்தார். பாலாற்றின் கரையில் அமைந்துள்ள ஆற்காடு இவர்களின் தலைநகர் ஆற்காட்டு நவாப் தனது ஆட்சிக்கு உட்பட்ட பகுதியை இரண்டு சுபாக்களாக பிரித்தார். நெல்லூர், செங்கல்பட்டு, ஆற்காடு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய ஆற்காடு ஒரு சுபாவாகவும் திருநெல்வேலி, மதுரை, திருச்சி ஆகியவற்றை உள்ளடக்கிய திருச்சிராப்பள்ளி சுபாவும் அமைந்திருந்தன. ஒவ்வொரு சுபாவும் பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. மாவட்டம் பல பர்கானாக்களாகப் பிரிந்திருந்தது.முகலாய அரசில் இருந்ததுபோல் கனுங்கோ, முஸ்தாபி, பேஹ்கார், காஜி, பௌஜ்தார் போன்ற அதிகாரிகள் இருந்தனர். அமல்தார் என்பார் வரிவசூலுக்கு பொறுப்பாக இருந்தார். நவாப்பின் வருவாயில் நிலவரியே முக்கிய பங்கு வகிக்கிறது. சில கட்டாயப் பரிசுகளும் மக்களிடம் வசூலிக்கப்பட்டன. நவாபுகள் தமது தனிப்பட்ட செலவிற்கும் அன்னியரின் கடன்களை அடைக்கவும் அதிகமான பணத்தைச் செலவிட்டனர். மக்களின் நல்வாழ்விற்காக எதுவும் செலவிடப்படவில்லை. இந்துக்களின்வழக்குகளை இந்து சமய தலைவர்கள் விசாரித்தனர். காஜிகள் இசுலாமியரின் வழக்குகளை விசாரித்தனர் பௌஜ்தார்கள் குற்றவியல் வழக்குகளை கேட்டுத் தீர்ப்பளித்தனர். படையில் காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, ஆயுதப்படை ஆகிய பிரிவுகள் இருந்தன. படை வீரர்களிடையே சில நேரங்களில் குழப்பங்கள் நிகழ்ந்ததாகவும் தெரிகிறது. கிராமம் மிகவும் சிறிய ஆட்சித்துறை அலகாக அமைந்தது. கிராமத் தலைவர் கிராம ஆட்சிக்குப் பொறுப்பாக

இருந்தார். அவருக்கு உதவ கர்ணம் இருந்தார். ஊர் காவலுக்கு காவல்காரர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். கிராமத்தில் ஏற்பட்ட விவகாரங்களைக் கிராம மன்றம் விசாரித்துத் தீர்த்தது.

**சமுதாயம்**

ஆற்காட்டு நவாப்பின் எல்கைக்குள் திருச்சி, மதுரை, ஆற்காடு மாவட்டப் பகுதிகளில் முஸ்லீம்கள் அதிகமாக இருந்தனர். பல மராட்டியர்களும் கர்நாடகத்தில் குடியேறினர். ஐரோப்பியரின் வருகை காரணமாகப் பல கிறிஸ்துவர்களும் இருந்தனர். கிறிஸ்துவச் சமயப் பரப்பாளர்களின் முயற்சியால் பல இந்தியர்கள் கிறிஸ்துவராயினர். தெலுங்கு பேசும் ரெட்டியர்கள், நாயக்கர்கள், ராஜாக்கள், நாயுடுகள், செட்டியர்கள் போன்ற பல பிரிவினர் தமிழகத்திற்குள் குடியேறினர். இதன்காரணமாக பல்வேறு மொழிகளைப் பேசுவோர் அருகருகே இணைந்து வாழும் நிலையேற்றபட்டது. மதுரை நாயக்கர்கள் அதிகமான சௌராஷ்டிரக் குடும்பங்களை குடியேற்றியிருந்தனர். சாதிமுறைகளை ஆழமாகப் பின்பற்றிய பழமைவாதச் சமுதாயமாக அன்றைய சமுதாயம் இருந்தது. பிராமணர்கள் சமுதாய அமைப்பில் மேலாதிக்கம் பெற்றிருந்தனர். சகுணங்களை மக்கள் நம்பினர். சாதகம் கணிப்பில் நம்பிக்கை கொண்டிருந்தனர்.விதவைகள் கெட்ட சகுணத்தின் அடையாளமாக கருதப்பட்டன. மக்கள் சமய பொறையுடன் வாழ்ந்தனர். பிராமணர்களிடையே சிறுபிராயமணம் நடந்தது. கலப்பு திருமணங்கள் தடை செய்யப்பட்டிருந்தன. தேவதாசிகள் சமுதாயத்தில் அங்கம் வகித்தனர். ஐரோப்பியக் கம்பெனிகள் ஆப்பிரிக்காவிலிருந்து அடிமைகளைக் கொண்டு வந்து தொழிற்சாலையில் பணியில் அமர்த்தினர். நெசவு வேளாண்மைக்கு அடுத்தப்படியான தொழிலாக திகழ்ந்தது.

தஞ்சையில் மராட்டியர் ஆட்சியும், கர்நாட்டகத்தில் நவாபுகளின் ஆட்சியும் நாயக்கர்கள் ஆட்சியும்,ஐரோப்பியரின் வருகையும் மேலாதிக்கமும் தமிழகத்தில் பல்வேறு மொழிகள் பேசிப்பல்வேறு சமயப் பிரிவுகளைப் பின்பற்றுவோர் தோன்ற வபை செய்தது. இம்மாற்றங்களின் காரணமாகத் தமிழ்ச் சமுதாயத்தில் பல மாற்றங்கள் ஏற்ப்பட்டன.

## இராமநாதபுரம் சேதுபதிகள்

இராமநாதபுரத்தை ஆண்ட மறவர் தலைவர் சேதுபதியென அழைக்கப்பட்டார். சேதுசமுத்திரம் எனப்படும் இராமேஸ்வரத்தைக் காத்ததால் இவர்களுக்கு இப்பெயர் ஏற்பட்டிருக்கவேண்டும். மதுரையை ஆண்ட முத்துகிருஹ்ணப்ப நாயக்கர் காலத்தில் முதலாம் சடைக்கத்தேவர் மறவர் நாட்டின் தலைவராக நியமிக்கப்பட்டார். இவர் 1605 முதல் 1622 வரை ஆட்சி செலுத்தினார். தமது பகுதியில் சட்ட ஒழுங்கை நிலைநாட்டினார். சேதுபதியின் பெயரில் நாணயம் வெளியிடவும் நாயக்கர் அனுமதித்தார். சடைக்கத்தேவர் இராமேஸ்வரம் இராமநாதசுவாமி கோயிலில் சில திருப்பணிகளை செய்து மானியமும் வழங்கினார். இவரை தொடர்ந்து குட்டன் சேதுபதி 1636 வரை ஆண்டார். அவருக்கு மகன் இல்லாததால் அவரால் தத்தெடுக்கப்பட்ட இரண்டாம் சடைக்கதேவர் 1636 முதல் 1645 வரை ஆட்சி செய்தார். குட்டன் சேதுபதிக்கு ஆசைநாயகியின் மூலம் தம்பி என்ற மகன் இருந்ததாகவும் அவனைத் திருமலைநாயக்கர் அரியணையில் அமர்த்தமுயன்றதாகவும் தெரிகிறது. இராமப்பய்யன் தலைமையில் வந்த நாயக்கர் படை இரண்டாம் சடைக்கத்தேவரை கைதுசெய்து சென்றது.

எனினும் மறவர் நாட்டில் குழப்பம் நிலவியதால் அவரை மீண்டும் அரியணையில் அமர்த்தினார் திருமலைநாயக்கர். இரண்டாம் சடைக்கத்தேவர் மறைந்தபோது மீண்டும் குழப்பம் நிலவியது.

**இரகுநாத சேதுபதி (திருமலை சேதுபதி- 1645-1670)**

இராமநாதபுரத்தை ஆண்ட சேதுபதிகளில் முக்கியமானவர் இவர். இவர் தஞ்சையைத் தாக்கி மன்னார்கோயில், தேவகோட்டை,அறந்தாங்கி ஆகிய பகுதிகளை கைப்பற்றினார். திருமலைநாயக்கர் மீது அளவற்ற பற்றுக் கொண்டிருந்தார். மைசூர் படைகள் மதுரையைத் தாக்க வந்தபோது திருமலைநாயக்கருக்கு உதவிக் கரம் நீட்டியவர் இவர். மூக்கறுப்புப் போரில் மைசூர் படைகளை முறியடித்து மூக்கறுத்து விரட்டினார். இவரது சேவையை பாராட்டி திருமலை சேதுபதி என்னும் பட்டத்தை திருமலை நாயக்கர் வழங்கினார். முஸ்லீம் படையெடுப்பின்போதும் திருமலை நாயக்கருக்கு இவர் பெரிதும் உதவினார். திருமலை நாயக்கர் பேரன் சொக்கநாதன் காலத்தில் நாயக்கர் பிடியிலிருந்து விடுபட இவர் முயற்சித்தார். திறை செலுத்த மறுத்த தேவரை ஒடுக்க சொக்கநாத நாயக்கர் படையுடன் இராமநாதபுரம் வந்தார். நாயக்கரின் படைகள் வெற்றி பெற்றன. ஆனால் தொடர்ந்து தாக்கும் பொறுப்பைத் தளபதிகளிடம் விட்டு விட்டு சொக்கநாக நாயக்கர் மதுரை திரும்பினார். இவ்வாய்ப்பை பயன்படுத்தி இரகுநாத சேதுபதி நாயக்கர் படையை முறியடித்து விரட்டினார். இவர் இராமேஸ்வரம் இராமசுவாமி கோயிலில் சுற்றுப் பிரகாரம் கட்டினார்.இரகுநாத சேதுபதி கல்விக்கும் கலைக்கும் முக்கியத்துவம் அளித்தார். இக்காரணத்தால் இவர் சிறப்புப்பெறுகிறார். இவரைத் தொடர்ந்து கட்டையத் தேவர் என்பார் ஆட்சிபொறுப்பேற்றார். அவர் நாயக்கரின் படைகளால் கைது வெய்யப்பட்டு மதுரை கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவர் திடீரென மரணமடைந்ததால் இராமநாதபுரத்தில் வாரிசுரிதைக் குழப்பம் ஏற்பட்டது.

**இரண்டாம் இரகுநாத சேதுபதி**

கட்டையத்தேவரின் ஆசைநாயகியின் மைந்தனாக இவர் கருதப்படுகின்றாா. இவர் அரியணைக்கு உரிமையுள்ளவர் என்ற பொருளில் கிழவன் என அழைக்கப்பட்டார். இவரது ஆட்சி காலத்தில் இராமநாபுரம் வலுப்பெற்றது. இராமநாதபுரம் கோட்டையை வலுப்படுத்தினார். தனது படையில் புதிய வீரர்களைச் சேர்த்துப் பயிற்சியளித்தார். மதுரையில் ருஸ்தம்கான் என்பார் சொக்கநாதரை அரியணைவிட்டு இறக்கிவிட்டு அதிகாரத்தைக் கைப்பற்றினார். கிழவன் சேதுபதி வேறு சிலருடைய உதவியுடன் திருச்சி சென்று சொக்கநாதருக்கு அரியணையை மீட்டுத் தந்தார். அதனால் மனம் மகிழ்ந்த சொக்கநாத கிழவன் சேதுபதிக்கு ‘பரராஜகேசரி’ எனும் பட்டத்தை அளித்தார். சொக்கநாதரின் தளபதி குமாரபிள்ளை என்பாரை கிழவன் சேதுபதியிடம் பணிசெய்ய அனுப்பினார்.

மதுரை நாயக்கரிடமிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள கிழவன் சேதுபதி விரும்பினார். மதுரையை தாக்குவதற்கு தஞ்சை மராட்டியரின் உதவியை கிழவன் சேதுபதி பெற்றார். நாயக்கருக்கு எதிராக அவர் எடுத்த முயற்சிகளைத் தளபதி குமாரப்பிள்ளை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார். அவரது கிளர்ச்சியை ஒடுக்கி அவரைக் கொன்றார் சேதுபதி. தஞ்சைப் படைகளும் இராமநாதபுரம்படைகளும் சில வெற்றிகளை ஈட்டின. தஞ்சைக்கும் சேதுபதிக்கும் இடையிலான நட்பு நீடிக்கவில்லை. சேதுபதி தஞ்சைக்குச் சொந்தமான அறந்தாங்கி, திருமயம், பிரான்மலை ஆகியவற்றைக் கைப்பற்றினார். சேதுபதியை ஒடுக்க இராணிமங்கம்மாள் தஞ்சை மராட்டியருடைய உதவியுடன் ஒரு பெரும் படையை அனுப்பினார்.

அப்படையும் தோற்றுத் திரும்பியது. இத்தாக்குதலுக்குப் பிறகு சுதந்திர ஆட்சியைக் கிழவன் சேதுபதி பிரகடனம் செய்தார்.

கிறிஸ்துவ சமயத்தினர் மதமாற்ற நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். கிழவன் சேதுபதி இதனை எதிர்த்தார். ஜான் டி பிரிட்டோ என்ற கிறிஸ்துவப் பாதிரியாரைக் கொல்ல ஆழணயிட்டார். அதனை சமயம் சார்ந்த கொடூரச் செயல் எனச் சிலர் குறிப்பிடுகிறார்கள். ஆனால் ஜான் டி பிரிட்டோவின் நடவடிக்கைகள் சேதுபதிக்குஎதிராக இருந்தன. மக்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில்தான் சேதுபதி பிரிட்டோவைக் கொன்றார் என டாக்டர் எஸ்.கதிர்வேல் வாதாடுகிறார். கிறிஸ்துவ சமயப் பரப்பாளர்களுக்கு எதிராக இவர் நடவடிக்கைகள் மேற்கொண்டதால் மதம் மாறிய பலர் மதுரைக்கு ஓடினார்கள்.

கிழவன் சேதுபதி ஒரு திறமையான ஆட்சியாளராகவும் தளபதியாகவும் விளங்கினார். இந்து மதத்தைப் போற்றினார். திருவாடானை, காளையார் கோயில் ஆகிய இடங்களில் உள்ள கோயில்களுக்கு மானியம் வழங்கினார். அவரது சீமையில் மதமாற்றம் நடைபெறாமல் தடுத்தார். முகவை ஊரணி எனும் பெரிய குளத்தை வெட்டினார். இவரது காலத்தில் இராமநாதபுர கோட்டை வலுப்படுத்தப்பட்டது. டச்சுக்காரர்களுடன் நல்ல உறவினை கொண்டிருந்தார். இவரது காலத்தில் புகலூரிலிருந்து தலைநகர் இராமநாதபுரத்திற்கு மாற்றப்பட்டது. 1709ல் கடுமையான பஞ்சம் இராமநாதபுத்தைத் தாக்கியது. முப்பத்தாறு ஆண்டு காலம் ஆட்சி செய்த கிழவன் சேதுபதி 1710ல் தனது எண்பதாவது வயதில் மரணமடைந்தார். அவருடன் அவரது நாற்பத்தேழு மனைவியர் உடன்கட்டையேறியதாகக் கூறப்படுகிறது.

கிழவன் சேதுபதி வாரிசு இல்லாமல் மறைந்ததால் திருவுடையத் தேவர் என்ற இரகுநாத சேதுபதி ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தப்பட்டார்.

**சேதுபதிகளின் ஆட்சி-சில அம்சங்கள்**

சேதுபதிகள் மதுரை நாயக்கருக்குட்பட்டவர்களாகத் துவக்க காலத்தில் இருந்தார்கள். ஆனால் கிழவன் சேதுபதி காலத்தில் அவர்கள் சுதந்திரமாக ஆளத்துவங்கினார்கள். இராமநாதபுரம் அரியணை பரம்பரை உரிமையில் கொடுக்கப்பட்டது. எனினும் அரியணை அபகரிக்கப்பட்ட நிகழ்சிசிகளும் உண்டு. மதுரை நாயக்கரின் ஆட்சித்துறை அமைப்பு இராமநாதபுரத்திலும் பின்பற்றப்பட்டது. தளவாய், பிரதானி, இராயசம் எனப்பட்ட அதிகாரிகள் இருந்தார்கள். நாடு காக்கின்ற பணி பாளையக்காரர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தது. இப்பணி தேசக்காவல் என அறியப்படுகிறது. பெருவழிகளைக் காக்கின்ற பணி பாதைக்காவல் என அறியப்பட்டது. இதற்கென தனியான காவல்காரர்கள் இருந்தார்கள். ஊர்க்காவலுக்கென கிராமக் காவலாளிகள் இருந்தார்கள். நீதித்துறை அதிகாரிகளைச் சேதுபதி வைத்திருந்தார். எனினும் கிராம அளவிலும் நீதிபரிபாலனம் செய்யப்பட்டது.இராமநாதபுரம் சேதுபதி பொதுவாக மற்ற சீமைகளின் பாளையக்காரர்களைவிட முக்கியத்துவம் பெற்றுத்திகழ்ந்தார். சேதுபதிகள் தமிழ் இலக்கியத்திற்கும், கலைக்கும் இசைக்கும் முக்கியத்துவம் கொடுத்தார்கள். பிற்காலத்தில் மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் இவர்களால் தொடங்கப்பட்டது. சீதக்காதி, படிக்காசுப்புலவர், உமறுப்புலவர், சர்க்கரைப்புலவர், சவ்வாதுப் புலவர் போன்றோர்இவர்களால் ஆதரிக்கப்பட்டவர்கள். இந்துமதத்தை காக்க இவர்கள் பெரும் முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

# அலகு - 5

## 4. பாளையக்காரர் முறை

**தோற்றம்**

பாளையம் எனும் சொல் ஒரு படை முகாமைக் குறித்தது. பாளையத்திற்குத் தலைமை தாங்கியவர் பாளையக்காரர் எனப்பட்டார். ஆனால் பாளையக்காரர் முறை ஒரு நிலமானிய முறையாக விசுவநாத நாயக்கரின் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. விசுவநாத நாயக்கர் விஜயநகரத்திலிருந்து வரும்போதே தனது உறவினர் பலரை உடன அழைத்து வந்தார். மதுரை மண்டலத்தில் புதிய வாழ்வு கிடைக்குமென்ற பேராசையுடன் அவர்கள் வந்தார்கள். அவர்களைத் திருப்திப்படுத்தும் அவசியம் விசுவநாத நாயக்கருக்கு இருந்தது. ஏற்கனவே காலம் காலமாக சிறு நிலப்பகுதிகளை ஆண்ட தமிழகத் தலைவர்களும் இருந்தார்கள். பாண்டியர்களின் வழிவந்த பல சிற்றரசர்களும் இருந்தார்கள். கன்னடம், தெலுங்கு மொழி பேசுகின்ற கலவர மனப்பாங்கு கொண்ட சில பேர்களும் இருந்தார்கள். இவர்கள் அனைவரையும் திருப்திப்படுத்த வேண்டிய அவசியம் விசுவநாத நாயக்கருக்கு இருந்தது. எனவே அரியநாதருடன் ஆலோசனை செய்து தமது நாட்டை எழுபத்திரண்டு பாளையங்களாக அவர் பிரித்தார். ஒவ்வொரு பாளையத்தின் தலைவரும் பாளையக்காரர் எனும் பட்டம் பெற்றார். அவர்களுக்குச் சில சிறப்புரிமைகளும் வழங்கப்பட்டன.

**பாளையக்காரரின் ஆட்சித்துறை**

பாளையக்காரர்கள் ஓர் அரசாங்க அமைப்பை அமைத்து ஆட்சித் துறையை உருவாக்கினார்கள். பாளையக்காரருக்கென அரசவை இருந்தது. அவருக்கு ஆட்சித் துறையில் உதவி செய்யப் பிரதானி அல்லது தளவாய் என்ற முக்கியமான அதிகாரியும் மற்றும் பல அதிகாரிகளும் இருந்தனர். நாயக்கருடனும் மற்ற அரசர்களுடனும் அதிகாரப்பூர்வமான செய்தித் தொடர்புகள் வைத்துக் கொண்டார்கள். அவர்கட்கெனத் தனியான படைப் பிரிவுகள் இருந்தன. தங்களுக்கெனத் தனியான விளை நிலங்களை வைத்துக் கொண்டு மற்றவற்றை வேளாண்மை செய்தவர்கட்கு வழங்கினார்கள். இவ்வாறு ஓர் அரசரைப் போல் அரசாங்க அமைப்பும் ஆட்சித் துறையும் ஒவ்வொரு பாளையத்திலும் இருந்தன. பாளையக்காரர்கள் தமது நிலங்களில் பயிரிடவும் போர்க்காலங்களில் படைகளை நடத்தில் செல்லவும் செரோகர்கள் எனப்பட்டோரை நியமித்துக் கொண்டனர்.

**பாளையக்காரர்களின் பணிகளும் அதிகாரங்களும்**

பாளையக்காரர்கள் தமது பாளையத்திலிருந்து நிலங்களிலிருந்து வருவாயைத் பெறும் அதிகாரத்தைப் பெற்றிருந்தனர். அக்காலத்தில் நிலம் கரிசல், செவ்வல், பொட்டல், வெப்பல் என நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இப்பிரிவுகளின் விளைச்சல் தன்மை மாறுப்பட்டதாக அமைந்திருந்தது. அதற்கேற்ப அவற்றில் பயிர் செய்தல் நடைபெற்றது. நிலங்களைப் பயிரிட்டோரிடமிருந்து கணிசமான விளைச்சலைத் தமக்குரிய வரியாகப் பாளையக்காரர்கள் பெற்றுக் கொண்டனர். வரி விகிதம் நிலையானதாக இருக்கவில்லை. பாளையக்காரர்கள் தங்களது பாளைய ஆட்சி உரிமைக்காக ஒரு குறிப்பிட்ட தொகையை ஆண்டுதோறும் நாயக்கருக்கு வழங்கினர். போர்காலத்தில் நாயக்கர் குறிப்பிடுகின்ற அளவு படைவீரர்களை அவர்கள் அனுப்பி வைக்க வேண்டிய கடமையும் அவர்கட்கு இருந்தது.

நாயக்கரின் பிறந்த நாள் மற்றும் முக்கிய விழாக்கள் போன்ற சமயங்களில் நாயக்கருக்கு அன்பளிப்புகள் அளித்தனர்.

**காவல் முறை**

பாளையக்காரர்கள் தங்கள் பாளையங்களின் ஆட்சியாளர்களாகவே செயல்பட்டனர். தங்கள் பாளைய மக்களிடமிருந்து வரிவசூல் செய்வது மட்டுமின்றிச் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதும் அவர்கள் கடமையாக இருந்தது. அதற்காகப் போர்ப்படையை மட்டுமின்றி ஒரு காவல் முறையையும் நடைமுறைப்படுத்தினர். பாளையக்காரர்களின் காலத்திற்கு முன்னரே காவல்துறை தமிழகத்தில் வழக்கத்தில் இருந்தது.

**குடிக்காவல்**

மிகப் பழங்காலந் தொட்டே இம்முறை பின்பற்றப்பட்டதாகத் தெரிகிறது. குடிக்காவல் பொறுப்பு பொதுவாகத் தென் மாவட்டங்களில் மறவர்களிடம் இருந்தது. ஒவ்வொரு கிராமத்திலும் மக்களின் உடைமைகளை அவர்கள் காத்தனர். ஒவ்வொரு கிராமத்திலும் நூறு காவல்காரர்களாவது இருந்தனர். அவர்கள் தங்களைப் பத்துப் பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டு காவல் பணிபுரிந்தனர். அவர்களின் ஊழியத்திற்கான ஊதியம் ஊர் மக்களால் பணமாகவோ பொருளாகவோ வழங்கப்பட்டது. காவலை மீறித் திருட்டு நடைபெற்றால் திருட்டு போன பொருளின் மதிப்பைக் காவல்காரர்கள் ஈடுகட்ட வேண்டும் என்ற விதியும் இருந்தது. பெரும்பாலும் காவல்காரர் பணி பரம்பரை உரிமையில வந்தது. குடிக்காவல் என்பது ஸ்தலக்காவல் என்றும் அழைக்கப்பட்டது. பாளையக்காரர் முறை அறிமுகம் செய்யப்பட்ட பின்னர் இது பெரிதும் மாற்றமடைந்தது.

**பாளையக்காரர்களும் காவல்முறையும்**

பாளையக்காரர்கள் தங்கள் பாளையங்களில் அரசர்களைப் போன்றே செயல் பட்டார்கள். நாயக்கர்கள் காலத்தில் நாயக்கர்கட்குச் சொந்தமான நிலங்கள் இருந்தன. அவையன்றிப் பாளையக்காரர்கட்குச் சொந்தமான நிலங்களும் இருந்தன. நவாபுகளின் காலத்தில் அவை சர்க்கார் நிலங்கள் என அறியப்பட்டன. தங்கள் அதிகாரங்களைச் செயற்படுத்தும் வலிமையான கருவியாகத் தேசக்காவல் எனும் முறையைப் பாளையக்காரர்கள் அறிமுகம் செய்தனர். நாயக்கர் அல்லது சர்க்காருக்குச் சொந்தமான கிராமங்களிலும் பாளையக்காரர்கள் காவல்காரர்களை நியமித்தனர். தேசக்காவல் எனும் இம்முறையின் கீழ் காவலர்கள் கிராமங்களைக் காவல் காத்தனர். அத்தகைய காவல் பணிக்ககாகக் கிராம மக்கள் அவர்கட்கு ஊதியம் வழங்கினர். பெருஞ்சாலைகளில் வழிப்பறி, எல்லைப் பகுதிகளில் கொள்ளை மற்றும் கிராமங்களில் சட்டங்களை மீறுதல் போன்ற குற்றங்களைச் செய்தோரைத் தடுக்கவும் அத்தகையோரைக் கண்டறிந்து தண்டனைக்கு உள்ளாக்கவும் இவர்கள் பயன்படுத்தப்பட்டனர். தொடக்கத்தில் நல்ல முறையில் செயல்பட்ட தேசக்காவல் முறை காலப்போக்கில் சீர்கெட்டுப் போனது.

தேசக்காவலில் ஈடுபட்ட காவல்காரர்கள் அதிகமான கட்டணங்களை வசூலித்தனர். கட்டணங்களை வசூல் செய்ய வன்முறை சார்ந்த வழிமுறைகள் பின்பற்றப்பட்டன. கட்டணங்கள் கட்டத் தவறிய கிராமத்தினர் துன்புறுத்தப்பட்டனர். கிராம மக்கள் சவுக்கால் அடிக்கப்பட்டனர். அவர்களது கால்நடைகள் காவலர்களால் பறிக்கப்பட்டன. கிராம மக்கள் அனைவரையும் கிராமத்தை விட்டு வெளியே செல்லவிடாமல் கிராமத்திற்குள்ளே சிறை

வைக்கும் கொடுமையும் நிகழ்ந்தது. சில சமயங்களில் காவல்காரர்கள் கொலைகளையும் செய்தனர். விளைச்சல் சரியாக இல்லாத காலங்களில் தேசக்காவலுக்கான கட்டணங்களைச் செலுத்தக் கிராமத்தினர் அல்லலல்பட்டனர். ஏரிகள், தறிகள், கடைகள் போன்றவற்றிற்குத் தனியான காவல் கட்டணங்களும் விதிக்கப்பட்டன. சர்க்காருக்குச் சொந்தமான நிலங்களில் வேளாண்மை செய்தவர்களைத் துன்புறுத்தத் தேசக்காவல் முறையைப பாளையக்காரர்கள் பயன்படுத்தியதாகவும் கூறப்படுகிறது. தேசக்காவலுக்கான காவல்காரர்களை நியமனம் செய்யவும் பாளையக்கரார்கள் பெரும் தொகையைப் பெற்றனர்.

நவாபுகளின் ஆட்சியிலும் தேசக்காவல் முறை தொடர்ந்தது. கிழக்கிந்தியக் கம்பெனி அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் மாற்றங்கள் செய்யப்பட்டன. தேசக்காவல் பணியில் மறவர்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்ட நிலையை மாற்றி மற்றவர்களையும் ஈடுபடுத்தினர். இதன் காரணமாக மறவர்கட்கும் புதியவர்கட்கும் இடையில் மோதல்கள் நிகழ்ந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே ஆங்கிலக் கம்பெனி பாளையக்காரர்களையும் அவர்கள் நடைமுறைப் படுத்திய தேசக்காவல் முறையையும் ஒழுங்குபடுத்தும் முயற்றியில் இறங்கியது. அதிகமான அதிகாரங்களைக் கம்பெனி பெற்ற பின்னர் 1801ல் தேசக்காவல் முறையை முற்றிலும் ஒழித்தது. எனினும், மாறுப்பட்ட வடிவில் இம்முறை கிராமங்களில் தொடர்ந்தது.

**வீரபாண்டிய கட்டபொம்மன்**

தென்னகத்தில் கப்பமும் வரியும் வசூலிக்கும் உரிமை கம்பெனியாருக்குச் சட்ட பூர்வமாக ஏற்பட்டிருந்தது. இவ்வாறு வரி வசூலிப்பதற்காக செயின்ட் ஜார்ஜ்கோட்டை ஆங்கிலேயர்கள் ‘கலெக்டர்’களை நியமித்தனர். அவர்களுக்கு உதவ ஆங்காங்கு ராணுவமும் இருந்தது.

இந்நிலையில் மதுரை, திருநெல்வேலிப் பிரதேசத்தில் சிற்றரசு புரிந்து வந்த பாளையங்களிற் சில இவ்வுரிமையைப் புறக்கணித்து வரி கொடாமல் இருந்தன. அவை ஒன்றோடொன்று எந்நேரமும் சண்டையிட்டுக் கொண்டிருந்ததால் நாட்டில் நிலவிய அமைதியின்மையோடு வரிகொடாமையும் சேர்த்து அத்தகைய பாளையங்களை வற்புறுத்தி வரி வசூலிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. பெரும்பான்மைப் பாளையக்காரர்கள் வரி கொடுத்தனர். ஒரு சிலர் வரிகொடுக்க வேண்டியதை ஒப்புக்கொண்டு, உண்மையில் கொடுப்பதைத் தவிர்த்து வந்தனர்: ஒரு சிலர் வரி கொடுக்காமல் இருந்ததோடு வரி வசூலிக்கும் உரிமை நவாபுக்கோ ஆங்கிலேயருக்கோ இல்லை என்றும் கருதினர். ஆங்கிலேயரின் வரி வசூல் உரிமையை ஏற்றுக்கொண்ட பாளையக்காரர்களில் முக்கியமானவர் எட்டையபுரம் பாளையக்காரர் ஆனால் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரர் போன்ற சிலர் வரி கொடுக்க மறுத்தனர். 18-ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில், பாஞ்சாலங்குரிச்சியை ஆண்ட பாளையக்காரர் பெயர் வீரபாண்டிய கட்டபொம்மன் என்பது. இவர் முன்னோர்கள் விசயநகரப் பேரரசுத் தொடக்ககாலத்தில் ஆந்திர நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்து சிறிது சிறிதாகத் தங்கள் நிலைமையை முன்னேற்றிக்கொண்டு பாளையக்காரர் ஆனவர்கள். வீரபாண்டிய கட்டபொம்மன் ஆங்கிலேயருக்கு வரி கொடுக்க மறுத்தார். அப்போது ராமநாதபுரம் அரசு ஆங்கிலேயர் வசமிருந்தது. புதுக்கோட்டைத் தொண்டைமான் ஆங்கிலேயருடைய நண்பர்.

பாஞ்சாலங்குரிச்சி எட்டையபுரத்தின் அருகில் உள்ள ஒரு சிற்றூர். அவ்வூரையாண்ட கட்டபொம்மனுக்கும் எட்டையபுரம் சிற்றரசருக்கும் பகைமை இருந்தது. அன்றியும் அவர் ஆங்கிலேயருக்கு வரியும் தர மறுத்தார். ஆதலால் கர்னல் மாக்ஸ்வெல் என்னும் ஆங்கிலேயத் தளபதி கட்டமொம்மனை வரி கட்டும்படி கூறினார். ஆனால் பாஞ்சாலங்குரிச்சிப் பாளையக்காரர் அதைப் பொருட்படுத்தவில்லை. ஆகவே மதுரையிலிருந்து கலெக்டர் ஜாக்ஸன் என்பவர் 1798 பெப்ருவரியில் கட்டபொம்மனுக்கு உறுதியான கடிதம் ஒன்றில் வரி கட்டும்படி வேண்டி எழுதினார். கட்டபொம்மன் பதிலிறுக்கவில்லை. அவ்வாண்டு ஆகஸ்டு மாதத்தில் அனுப்பப்பட்ட இன்னொரு கடிதத்தின் விளைவாக கட்டபொம்மன் கலெக்டரைக் காண இசைந்து மதுரைக்குச் சென்றவர் அங்கு கலெக்டரைக் காணாமல், அக்கலெக்டர் சென்றவிடமெல்லாம் பின்தொடர்ந்து சென்று, கடைசியில் ராமநாதபுரத்தில் சந்தித்தார். கலெக்டர் தன்னைச் சிறைப்பிடிக்கத் திட்டமிட்டிருந்ததாகக் கருதிய கட்டபொம்மன் தனது தோழர்களோடு அங்கிருந்து தப்பிச் சென்றார். கலெக்டர் அலுவலகத்திற்கு முன்பு, இக்குழப்பத்தில் கர்னல் கிளார்க் என்னும் ஒரு ஆங்கிலேயர் கொல்லப்பட்டார். பிறகு ராமநாதபுரத்தைக் கொள்ளையடித்து விட்டுக் கட்டபொம்மன் தன்னூர் திரும்பினார். கட்டபொம்மனோடு கலெக்டரைக் காணச் சென்றிருந்த அவரது வக்கீல் சுப்ரமண்யப்பிள்ளை என்பவர் ஆங்கிலேயரிடம் சிக்கிக் கொண்டார்.

ஜாக்ஸனையடுத்து லூஷிங்டன் என்பவர் மதுரையில் கலெக்டரானார். அவர் பாஞ்சாலக்குரிச்சியிருந்து வசூலாக வேண்டிய வரியை வற்புறுத்திப்பெறத் திட்டமிட்டார். இதற்கிடையில் ஆங்கிலேயரால் திருச்சி சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட சுப்ரமண்யப் பிள்ளை பாஞ்சாலங்குரிச்சிக்குத் திரும்பினார் அவர் ஆங்கிலேயர் பாளையங்கோட்டையில் பிரிக்கெட் என்பார் பாதுகாவலில் சேமித்து வைத்திருந்த ஏராளமான நெற்குவைகளைக் கவர்ந்து சென்றார். இந்நிகழ்ச்சியில் ஓரளவு உயிர்சேதமும் நேர்ந்தது. இதையெல்லாம் கட்டபொம்மன் தடுக்கவுமில்லை, கண்டிக்கவுமில்லை. ஆகவே மதுரையிலிருந்து ஆங்கிலேயப் படைத்தலைவர் மேஜர் பானர்மென் என்பவர் கட்டபொம்மனை நேரில் வந்து இந்நிகழ்ச்சிகளுக்குச் சமாதானம் கூறும்படி விதித்தார். கட்டபொம்மன் சரிவரப் பதில் கூறாததால், பாஞ்சாலங்குரிச்சி கோட்டை தகர்க்கப்படவே, கட்டபொம்மனும் அவரோடு சிலரும் கோட்டையை விட்டுத் தப்பிப் புதுக்கோட்டைக்கு ஓடிவிட்டனர். பாஞ்சாலங்குரிச்சிக்கோட்டை சின்னாட்களில் கைப்பற்றப்பட்டது. கட்டபொம்மனின் தம்பியான ஊமையன் என்பவரும் மற்ற சகோதரர்களும் சிறைப்பிடிக்கப்பட்டு பாளையங்கோட்டைச் சிறையில் அடைக்கப்பட்டனர். சுப்ரமண்யப் பிள்ளையைப் பிடித்துத் தூக்கிலிட்டனர். கோட்டை தரைமட்டமாக்கப்பட்டது.

கட்டபொம்மனைப் புதுக்கோட்டை மன்னர் விசயரகுநாதத் தொண்டைமான் என்பவர் ஏவலர்களைக் கொண்டு சிறைப்பிடித்து ஆங்கிலேயர் வசம் ஒப்புவித்து விட்டார். அப்பாளையக்காரரை மேஜர் பானர்மென் பிற பாளையக்காரர் முன்னிலையில் விசாரணை செய்து அவர் ராஜதுரோகக் குற்றவாளி என்று நிர்ணயித்து 1799 அக்டோபர் 16-ஆம் நாள் கயத்தாறு என்னுமிடத்தில் தூக்கிலிட்டுவிட்டார்.

**ஐரோப்பியர் வருகை**

இந்திய வரலாற்றில் வழித்தடத்தை மாற்றியமைத்த நிகழ்சிசிகளில் குறிப்பிடத்தக்கவொன்று வாஸ்கோடகாமாவின் இந்திய வருகையாகும். கி.பி.1498 ஏப்ரல் 22-

ஆம் நாள் அவர் கள்ளிக்கோட்டை வந்திறங்கிய நிகழ்ச்சி ஐரோப்பியரின் இந்திய வருகை எனும் பொயதோர் நிகழ்வின் துவக்கமாக அமைந்தது. தமது முதல் வருகையின் போது மூன்று மாதங்களும், தமது இரண்டாவது வருகையின் போது (1501-1503) மூன்று ஆண்டுகளும் அவர் இந்தியாவில் தங்கியிருந்தார். போர்ச்சுக்கீசியரின் இந்திய வணிகத்திற்குக் கால்கோள் நாட்டியவர் இவரே. இந்தியாவிற்கும் மேலை நாடுகளுக்கு இடையிலுமான வணிகத் தொடர்பு நீண்டதொரு வரலாறாகும். கி.பி.ஏழாம் நூற்றாண்டு முதல் அராபிய வணிகர்கள் மேலைநாட்டிற்கும் இந்நியாவிற்கு மிடையிலான வணிகத்தில் இடைத்தரகர்கள் போன்று செயல்பட்டு வந்தனர். கான்ஸ்டாண்டி நோபிள் வழியாகவே வணிகம் நடைபெற்றது. கி.பி.1453-ல் கான்ஸ்டாண்டிநோபிளைத் துருக்கியர் கைப்பற்றிக் கொண்டனர். ஐரோப்பியரின் வணிகத்திற்குத் துருக்கியர் தடை விதித்தனர். எனவே கீழை நாடுகளுடனான வணிகத்தால் இலாபம் ஈட்டி வந்த வணிகர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டனர். தரை வழி வணிகப் போக்குவரத்து தடைப்பட்டதால் கடல்வழி கண்டறியும் முயற்றியில் ஐரோப்பிய நாடுகள் ஈடுபட்டன. மறுமலர்ச்சி இயக்கம் விளைவித்த புத்தணர்ச்சி புதிய மார்க்கங்களும், புதிய நாடுகளும் கண்டறியும் ஆவலைத் தூண்டுவதாய் அமைந்தது. கப்பல் கட்டும் தொழில் வளர்ச்சியும், திசை காட்டும் கருவி கண்டறியப்பட்டமையும் கடற்பயண முயற்சிகளுக்குத் துணை புரிந்தன. இத்தகைய சூழ்நிலையில், பல ஐரோப்பிய நாடுகளின் அரசுகளும், தனி நபர்களும் மேற்கொண்ட முயற்சிகள் ஆக்கப்பூர்வமான பல வரலாற்று நிகழ்வுகளுக்கு வித்திட்டன.

**போர்ச்சுக்கீசியர்கள்**

கடல்வழி கண்டுபிடிப்பதில் முன்னோடிகளாய்த் திகழ்ந்தவர்கள் போர்ச்சுக்கீசியராவர். சில சிறப்பு அம்சங்கள் போர்ச்சுக்கீசியரின் இம்முயற்சிகளுக்குச் சாதகமாய் அமைந்திருந்தன. அயைாவன: 1. நீண்டதொரு அட்லாண்டிக் கரையினை அந்நாடு பெற்றிருக்கிறது. 2. ஆப்பிரிக்கக் கரைகளும் மிக அருகிலேயே அமைந்துள்ளன. 3. கடற் பயணங்களில் அனுபவம் உடையவர்களாய் போர்ச்சுக்கீசியர்கள் இருந்தனர். 4. மூர்களுடனான புனிதப்போரின் தொடர்ச்சியாக அவர்களை ஆப்பிரிக்கக் கடற்பகுதிகளிலும் தாக்கினர். எனவே ஆப்பிரிக்க மேற்குக் கடற்பகுதிகளிலிருந்து தெற்கு நோக்கிச் சென்று புதிய கடற்பாதைகளைக் கண்டறியத் தலைப்பட்டனர்.

**வாஸ்கோடகாமா**

கடற் பயணங்களையும், புதிய கண்டுபிடிப்புக்களையும் போர்ச்சுக்கீசிய நாட்டு இளவரசர் ஹென்றி (1393-1460) பெரிதும் ஆதரித்தார். கடற்பயணம் மேற்கொள்பவர்களுக்கு அறிவியல்பூர்வமான பயிற்சி வழங்கிடப் பள்ளியொன்றினை நிறுவிய இவர் வராலாற்றேடுகளில் மாலுமி ஹென்றி (ர்நசெல வாந யேஎபையவழச) என்று சிறப்பிக்கப்படுகிறார். போர்ச்சுக்கீசிய மாலுமிகள் கி.பி.1471-ல் நில நடுக் கோட்டைக் (நுஙரயவழச) கடந்தனர். 1481-ல் காங்கோ நதியைச் சென்றடைந்தனர். 1487-ல் பார்த்தலோமியா டயஸ் (டீயசவாழடழஅநற னுயைண) என்பவரால் மேற்கொள்ளப்பட்ட கடற்பயணம் புயலின் சீற்றத்தால் திசைமாறி ஆப்பிரிக்காவின் தெற்கு முனையைச் சென்றடையச் செய்தது. புயல்முனை எனப் பெயரிடப்பட்ட அப்பகுதி பின்னாளில் புதிய கண்டுபிடிப்புகளுக்கான நம்பிக்கையை வழங்கியதால் ‘நன்னம்பிக்கை முனை’ எனப்பட்டது. போர்ச்சுக்கீசிய மன்னர் இம்மானுவேலின் ஆதரவுடன் வாஸ்கோடகாமா

என்ற போர்ச்சுக்கீசிய மாலுமி, டயசு போன்றே ஆப்பிரிக்காவின் அட்லாண்டிக் கடற்பகுதி வழியே நன்னம்பிக்கை முனையைச் சுற்றி இந்தியப் பெருங்கடலில் உள்ள மொசாம்பிக சென்றடைந்தார். அங்கு சில இந்தியக் கப்பல்களைக் கண்ணுற்றார். அக்கப்பல்களின் மாலுமிகளின் சேவையைப் பணம் கொடுத்துப் பெற்றார். அவர்களின் உதவியுடன் 1498 ஏப்ரல் 22-ஆம் நாள் இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பகுதியிலுள்ள கள்ளிக்கோட்டை வந்தடைந்தார்.

வாஸ்கோடகாமாவின் இவ்வருகை மேலை நாட்டிற்கும் இந்தியாவிற்கு மிடையிலான நேரடிக் கடல் வழியின் தொடக்கமாக அமைந்தது. போர்ச்சுக்கீசியரின் இந்தியாவுடனான வணிக விரிவாக்கத்திற்கு முன்னோடியாகவும் அமைந்தது.

**டச்சுக்காரர்கள்**

பதினேழாம் நூற்றாண்டின் துவக்கத்தில் வணிக நோக்குடன் இந்தியாவிற்கு டச்சுக்காரர்கள் வருகை புரிந்தனர். போர்ச்சுக்கீசியரைப் போன்று வணிக மையங்களை உருவாக்கினர். இவர்களது வருகையால் போர்ச்சுக்கீசியரின் வணிகம் பெரிதும் பாதிக்கப்பட்டது. சிறிது காலமே இந்தியாவில் செல்வாக்குப் பெற்றிருந்தனர். ஆங்கிலேயரின் குடியேற்ற நடவடிக்கைகள் காரணமாக இவர்களது செல்வாக்கு படிப்படியாகக் குறைந்தது.

**தொடக்க நிலை**

நீண்ட காலமாக டச்சுக்காரர்களின் முக்கியமான வணிகப் பொருள் ஆசியாவின் நறுமணப் பொருட்களாகும். ஆதிக லாபம் தரும் இப்பொருட்களை ஆசியாவிலிருந்து அவர்கள் நேரடியாக கொள்முதல் செய்யவில்லை. போர்ச்சுக்கலின் லிஸ்பன் துறைமுகத்திலிருந்து அவற்றைப் பெற்று வளமான வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர். 1580-ல் இரண்டாம் பிலிப் மன்னரான போது போர்ச்சுக்கல் ஸ்பெயினுடன் இணைக்கப்பட்டது. ஸ்பெயின் கத்தோலிக்க நாடு. ஆனால் டச்சுக்காரர்களின் நாடான ஹாலந்து புராட்டஸ்டண்டு நாடு. எனவே ஸ்பெயின அரசு லிஸ்பன் துறைமுகத்தில் வணிகம் செய்யும் உரிமையை டச்சுக்காரர்களுக்குத் தடைசெய்து ஆணை பிறப்பித்தது. எனவே, வணிகப் பொருட்களை நேரடியாக ஆசிய நாடுகளிடமிருந்து பெற டச்சசுக்காரர்கள் முடிவு செய்தனர். 1592-ல் ஆம்ஸ்டர்டாம் நகர வணிகர்களால் வணிகக் குழுமம் ஒன்று உருவாக்கப்பட்டது. அதன் தலைவரான கார்னீலியஸ் ஹூட்மன் (Comelius Houtman) 1595-ல் முதல் பயணத்தை மேற்கொண்டார். நன்னம்பிக்கை முனையைச் சுற்றி 1596-ல் ஜாவா சென்றடைந்தார். ஒரு கப்பல் நிறைய வணிகப் பொருட்களை ஏற்றிக் கொண்டு தாய்நாடு திரும்பினார். இதனைத் தொடர்ந்து மிகக் குறுகிய காலத்திலேயே ஏறத்தாழ பதின்மூன்று புதிய வணிகக் குழுமங்கள் தோன்றின. 1602-ல் அவை அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு டச்சு கிழக்கிந்திய வணிகக் குழு உருவாக்கப்பட்டது. அதே ஆண்டில் ஹாலந்து அரசு இக்குழுவிற்குக் கீழை நாடுகளுடன் வணிகம் செய்ய உரிமை வழங்கிப் பட்டயம் அளித்தது. போட்டி வணிகக் குழுக்களுடன் போரிடவும், வணிக மையங்களை நிறுவவும், கிழக்கிந்திய நாடுகளுடன் உடன்படிக்கைகள் செய்து கொள்ளவும் இப்பட்டயம் வணிகக் குழுவிற்கு உரிமை வழங்கியது.

இலாபம் தரக்கூடிய இந்திய வணிகத்தின்பால் நாட்டம் கொண்ட டச்சுக்காரர்கள் 1605-ல் மசூலிப்பட்டிணத்திலும், 1608-ல் தேவனாம்பட்டிணத்திலும், 1610-ல் புலிக்கோட்டையிலும் (Pulicat) வணிக மையங்களை நிறுவினர். சூரத், சின்சுரா, பாட்னா, தூத்துக்குடி, கொல்லம்,

கிராங்கனூர், கொச்சி, கண்ணனூர் ஆகிய இடங்களிலும் தங்கள் வணிக மையங்களை அமைத்தனர். 1689-ல் நாகப்பட்டினத்தைத் தங்களது தலைமையிடமாக்கிக் கொண்டனர்.

போர்ச்சுக்கீசியரைப் போன்று மதம் மாற்றும் முயற்சிகளில் டச்சுக்காரர்கள் ஈடுபடவில்லை. வணிகத்தின் மூலம் பெறும் இலாபமே அவர்களது இலக்காக இருந்தது. இண்டிகோ, நறுமணப் பொருட்கள், பட்டு துணி வகைகள், அரிசி. அபினி ஆகியவை முக்கியமான வணிகப் பொருட்களாகும். ஆனால் காலப்போக்கில் அடிமை வணிகத்தில் ஈடுபட்டனர். எனவே இந்தியரின் வெறுப்பிற்கு உள்ளாயினர்.

**ஆங்கிலேயர்கள்**

இந்தியாவின் வளமான வர்த்தகம் பிற பல ஐரோப்பிய நாடுகளை ஈர்த்தது. வணிக நாட்டம் மிகுதியாகக் கொண்டிருந்த ஆங்கிலேயர் இந்தியாவிற்கு வருகை புரிந்தனர். உலகை வலம் வந்த டிரேக்கின் பயணமும், ஸ்பானிய ஆர்மடாவினை இங்கிலாந்து வென்றதும் ஆங்கிலேயர் கீழை நாடுகளுடன் வணிக உறவு கொள்ள ஊக்கமளிப்பதாய் அமைந்தன. 1599-ல் இலண்டன் மேயர் தாமசு சுமைத் (Thomas Smythe) தலைமையின் கீழ் இலண்டன் வணிகர்கள் ‘இலண்டன் வணிகக் குழுமம்’ ஒன்றை அமைத்தனர். இக்குழுவின் வேண்டுகோளின் பலனாக கீழை நாடுகளுடன் வணிகம் மேற்கொள்ள அனுமதி வழங்கும் பட்டயம் ஒன்றினை இலண்டன் வணிகக் குழுவிற்கு அரசியார் 1600 டிசம்பர் 31ல் வழங்கினார். பதினைந்து ஆண்டு காலம் வணிகம் செய்யும் தனியுரிமையை இப்பட்டயம் வழங்கியது.

**தொடக்க நிலை**

பங்குதாரர்களடங்கிய இவ்வணிகக் குழுமத்தின் நிர்வாகம் பங்குதாரர்களால் ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுக்கப்படும் 24 உறுப்பினர் அடங்கிய நிர்வாகக் குழுவால் நிர்வகிக்கப்பட்டது. துவக்கத்தில் தனி நபர்களும், கூட்டுறவு முறையிலும் கீழை நாடுகளுடன் வணிகம் செய்தனர். ஈட்டிய இலாபத்தைப் பங்குதாரர்களுக்கும் வழங்கினர். முதல் இரண்டு பயணங்களின் போதும் நறுமணத் தீவுகளே அவர்களது இலக்காக அமைந்தது. 1608-ல் வில்லியம் ஹாக்கின்சு (William Hawkins) தலைமையில் மேற்கொள்ளப்பட்ட மூன்றாவது பயணத்தின் போது இந்தியாவில் சூரத் வந்திறங்கினர். இங்கிலாந்து மன்னர் முதலாம் ஜேம்ஸின் வணிகச் சலுகைகள் கோரும் கடிதத்தை ஜஹாங்கீரிடம் வழங்கினார். மூன்றாண்டு காலம் முகலாய அரசவையில் தங்கியிருந்தார். எனினும், போர்ச்சுக்கீசியரின் செல்வாக்கு முகலாய அரசவையில் மிகுதியாக இருந்ததால் சாதகமான வணிகச் சலுகைகளைப் பெற இயலாது போயிற்று.

**சென்னைப்பட்டணம்**

1611-ல் மசூலிப்பட்டிணத்திலும் ஆராம்கான் என்னுமிடத்திலும் வணிக மையங்கள் அமைக்கப்பட்டன. 1640- விஜய நகரப் பேரரசின் பிரதிநிதியான சந்திரகிரி அரசரிடமிருந்து பிரான்சிஸ் டே என்பவர் சென்னையைக் குத்தகைக்குப் பெற்றார். அவ்வரசரின் தந்தை சென்னப்பன் நினைவாக சென்னப்பட்டினம் எனப் பெயரிட்டு அங்கு கோட்டை ஒன்றினைக் கட்டினார். அக்கோட்டையே புனித ஜார்ஜ் கோட்டையாகும். சென்னையைச் சுற்றிய சில சிறிய கிராமங்களும் வணிகக் குழுமத்தின் அதிகாரத்தின் கீழ் வந்தன. 1653-ல் சென்னை தனி மாகாணமாக்கப்பட்டது. ஆரன்பேகர் (யுயசழெ டீயமநச) முதல் ஆளுநராக் நியமிக்கப்பட்டார்.

## பிரெஞ்சுக்காரர்கள்

### கம்பெனியின் தோற்றம்

பிரான்சு நாட்டினரின் முதல் வாணிபக் கப்பல் 1527 டையு கடற்கரையை முத்தமிட்டது. ஆங்கிலேயக் கப்பல்கள் வருவதற்கு ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகட்கு முன்னர் இது நிகழ்ந்தது. அதன் பின்னர் பல தனிப்பட்ட முயற்றிகளைப் பிரெஞ்சு வணிகர்கள் மேற்கொண்டனர். பிரெஞ்சு அரசர் 14ஆம் லூயியின் காலத்தில் அவரது நிதியமைச்சர் கால்பர்ட் (calbert)டின் தீவிர முயற்சியால் 1664ல் பிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனி துவக்கப்பட்டது. பிரெஞ்சு மக்களுக்குக் கீழைநாட்டு வாணிபத்தில் அதிகமான ஆர்வம் இருக்கவில்லை. கிழக்கிந்தியக் கம்பெனியில் முதலீடு செய்ய மக்களிடம் இருந்து முதலீடுகளை பிரெஞ்சு அரசாங்கம் வரவேற்ற போது மிகக் குறைவானவர்களே ஆர்வம் காட்டினர். அரசாங்கத்தின் மீது அவர்களுக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. வாணிபக் கம்பெனியில் முதலீடு எனும் பெயரில் அரசாங்கம் மறைமுகமாக வரி விதிப்பை மேற்கொள்ள முயற்சிப்பதாக எண்ணினர். கடல் கடந்து சென்று வாணிபம் செய்து பொருள் குவிக்க வேண்டும் எனும் உள்ளல் அவர்கள் உள்ளங்களில் எழவில்லை. எனவே, கடுமையான முயற்சிக்குப் பின்னரும் பிரெஞ்சு அரசாங்கத்தால் குறியீடு செய்யப்பட்ட தொகையினை முதலீடாகப் பெற இயலவில்லை. குறையை நிறைவாக்கவும் மக்கள் மத்தியில் நம்பிக்கையை உருவாக்கவும் பிரெஞ்சு அரசர் கணிசமான தொகையை வழங்கினார். அரசின் பங்கீடு அதிகமானதாக இருந்ததால் இக்கம்பெனி பிரெஞ்சு அரசாங்கத்தின் துறை போன்றே இயங்கியது.

### தொடக்க நிலை

பெப்பர் என்ற பிரெஞ்சு முகவர் முகலாயப் பேரரசர் அவுரங்கசீப்பை அணுகினார். அவுரங்கசீப் பிரெஞ்சு வாணிபத்திற்குச் சாதமாக வழங்கிய ஆணைப்படி 1667 டிசம்பர் திங்களில் சூரத்தில் ஓர் உற்பத்திசாலை நிறுவப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1669ல் மசூலிபட்டினத்தில் மற்றொரு உற்பத்திசாலை உருவானது. பிரெஞ்சு நாட்டின் வாணிப நிர்வாகப் பொறுப்பில் இருந்த பிரான்சிஸ்கரான் பிரான்சின் வாணிபம் பெருகப் பெரும் முயற்சிகளை மேற்கொண்டார்.

## ஆங்கிலேயரின் வருவாய்த் திட்டம்

### காரன்வாலிஸின் நிலையான திட்டம்

காரன்வாலிசின் நிலையான நிலவரி திட்டம் 1793ஆம் ஆண்டு மார்ச் திங்களில் இருபத்து இரண்டாம் நாளில் நடைமுறைக்கு வந்தது. அத்திட்டம் ஜமீன்தார்களை நிலச் சொந்தக்காரர்களாக ஏற்றுக் கொண்டது. விவசாயிகளிடமிருந்து வசூல் செய்யும் குத்தகைத் தொகையில் பத்தில் ஒன்பது பங்கினை அவர்கள் கம்பெனிக்குச் செலுத்த வேண்டும் என விதிக்கப்பட்டது. அறிக்கையின் இரண்டாவது உறுப்பு இத்திட்டம் நிலையானது என அறிவித்தது. தங்களுக்குச் சொந்தமான நிலத்தை அடமானம் வைக்கவும் விற்கவும் ஜமீன்தார்கள் உரிமை பெற்றிருந்தனர். கம்பெனிக்கு நிலவரியை ஒழுங்காக வசூல் செய்து கொடுப்பது ஜமீன்தார்களின் பொறுப்பென அறிவிக்கப்பட்டது. வரியினைச் செலுத்தாதவர்களைத் தண்டிக்கும் பொறுப்பை கம்பெனி ஏற்றுக் கொண்டது.

**நிலையான திட்டத்தின் நிறைகள்**

நிலையான திட்டம் ஜமீன்தார்கட்குப் பெரும் நலன்களைச் செய்தது. எனவே அவர்கள் புதிய நிலப் பகுதிகளை விளைச்சல் நிலமாக்குவதில் ஆர்வம் காட்டினர். இதனால் உணவு உற்பத்தி அதிகரித்தது. நிலையான திட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் ஜமீன்தார்கள் பொறுப்பேற்றவுடன் வாரிசுக் கப்பம் எனும் கட்டணத்தைச் செலுத்தினர். நிலங்களை விற்கவும் அவர்கட்கு உரிமை அளிக்கப்படவில்லை. ஆனால் நிலையான திட்டத்தில் நிலத்தை விற்க உரிமையளிக்கபட்டதால் நிலத்தின் மதிப்பு உயர்ந்தது. இதற்கு முன்னர் அடிக்கடி நிலவரி திட்டங்கள் மாற்றப்பட்டமையால் ஜமீன்தார்களால் ஓரளவு பணத்தைச் சேமிக்க முடிந்தது. எனவே, பிற்காலத்தில் அவர்கள் அந்தப் பணத்தை தொழிலகங்களில் முதலீடு செய்தனர். இத்திட்டத்தால் தனது ஆண்டு வருமானத்தைச் சரியாகக் கணக்கிட அரசாங்கத்தால் முடிந்தது. ஒவ்வொரு ஆண்டும் வரித்திட்டம் செய்ய வேண்டிய பொறுப்பு குறைந்ததால் அரசாங்கத்தின் செயற்பாட்டின் திறமை அதிகமாகியது. ஆங்கிலேயருக்கு இது இன்னுமொரு முக்கிய நலனைச் செய்தது. வலிமை பெற்ற செல்வம் படைத்த ஜமீன்தார்கள் எனும் சமூகப் பிரிவை இது ஏற்படுத்தியது. அவர்கள் ஆங்கிலேயருக்கு விசுவாசத்துடன் நடந்து கொண்டனர்.

**குறைகள்**

நிலையான திட்டத்தில் சில குறைகளும் இருந்தன. இந்தியாவில் வலிமை மிக்க நிலப்பிரபுக்கள் தோன்ற அது வகை செய்தது. இங்கிலாந்தின் பாராளுமன்றத்தில் பல பிரபுக்களுக்கு உதவவே இத்திட்டத்தினை வடித்தனர் என ஏ.யு.சுமித் கூறுகிறார். காரன்வாலிஸ் ஒரு நிலப்பிரபு. எனவே ஜமீன்தார்கட்குச் சாதகமாக இத்திட்டம் அமைக்கப்பட்டது. எனினும், கம்பெனி மிக அதிகமான தொகையைக் கேட்டதால் சில ஜமீன்தார்கள் பாதிக்கப்பட்டனர். அவர்கள் தங்களது நிலங்களை விற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்வாறு பல ஜமீன்தார்கள் சீரழிந்தனர். விவசாயிகள் இத்திட்டத்தால் அதிகமான பாதிப்பைச் சந்தித்தனர். அவர்கள் குத்தகைதாரர்கள் எனும் நிலையில் வைக்கபட்டனர். எனவே அவர்கள் எந்நேரத்திலும் வெளியேற்றப்படலாம் எனும் அச்சம் அவர்களிடையே வளர்ந்தது. ஜமீன்தாரர்கட்குச் சொந்தமான நிலத்தில் வியர்வையால் நீர்பாய்ச்சி வேளாண்மை செய்த போதிலும் அவர்களது உழைப்பு விழலுக்கு இறைத்த நீராய் அவர்கட்குப் பயனற்றுப்போனது. ஏழை விவசாயிகள் ஜமீன்தார்களின் தயவில் வாழ்ந்தனர். பல ஜமீன்தார்கள் நகரங்களில் பெரிய கட்டிடங்களைக் கட்டி வசதிகளுடன் அங்கு வாழத் துவங்கினர். ஒரு விதத்தில் இத்திட்டம் ஆங்கிலேயரின் அரசையும் பாதித்தது. இத்திட்டத்தால் ஜமீன்தார்களின் பணப்பைகள் கொழுத்தனவேயொழிய ஆங்கிலேயரின் பணப்பெட்டியில் குறிப்பிட்ட தொகைகள் தான் விழுந்தன. அரசின் வருவாய் அதிகமாகாமல் நிலையாக இருந்தது. ஆனால் அதன் செலவு அதிகமாயிற்று. எனவே வேளாண்மையில் ஈடுபடாத மக்கள் மீதான வரியை அரசாங்கம் அதிகரித்தது. இவ்வரிக் கூடுதலால் மக்கள் பாதிக்கப்பட்டனர்.

**தாமஸ் மன்றோவின் ரயத்வாரி முறை**

காரன் வாலிசால் ஏற்படுத்தப்பட்ட நிலையான முறை வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய பகுதிகளில் நடைமுறையில் இருந்தது. தென்புலத்தில் வரி அமைப்பு முறை தீராத ஒன்றாகவே இருந்தது. 1807 வாக்கில் தெற்கில் சில மாவட்டங்கள் நிலையான வரிவிதிப்பு முறையின் கீழிருந்தன. மலபார், கனரா, கோயம்புத்தூர், ஆற்காடு, திருச்சி, மதுரை,

திருநெல்வேலி போன்ற மாவட்டங்கள் நிலையான முறையின் கீழ் வரவில்லை. இம்மாவட்டங்களில் ஜமீன்தாரி முறை பொருத்தமானதாகக் கருதப்படவில்லை. எனவே தாமஸ் மன்றோ புதிய முறை பற்றிய ஆய்வினைச் செய்து தனது அறிக்கையைச் சமாப்பித்தார். அவர் அறிமுகப்படுத்திய புதிய முறைக்கு ரயத்வாரி முறை எனப்பெயராகும்.

**ரயத்வாரி முறை**

இம்முறை சாகுபடி செய்பவரை நிலத்தின் உடமையாளராக ஏற்றுக் கொண்டது. சாகுபடி செய்பவர் நிலத்தை அடமானம் வைக்கவோ விற்கவோ உரிமை அளிக்கப்பட்டார். குத்தகை கட்டிய சாகுபடி செய்பவரே உரிமையாளராக கருதப்பட்டார். நிலவரி விளைச்சலில் மூன்றில் ஒரு பங்காக நிர்ணயிக்கப்பட்டது. சாதாரணமாக மோசமான விளைச்சல், இயற்கை விபத்து போன்றவற்றிற்காக வரியை இரத்து செய்வதற்கோ குறைப்பதற்கோ வகை செய்யப்படவில்லை. கர்ணம் என்று அழைக்கப்பட்ட வருவாய்த்துறை ஊழியர்களிடம் வரி வசூல் செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் கலெக்டரின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டனர். தாமஸ் மன்றோ, சென்னை மாநிலத்தில் கலெக்டராகப் பணியாற்றியவர். கலெக்டராகப் பணியாற்றி அனுபவத்தின் அடிப்படையில் அவர் ரயத்வாரி முறையை வகுத்தார். 1807ல் ஐரோப்பாவிற்குச் சென்ற மன்றோ 1820ல் சென்னை திரும்பி அதன் ஆளுநராகப் பொறுப்பேற்றார். ரயத்வாரி முறையைச் சில நிலைகளில் அறிமுகப்படுத்தினார்.

**மதிப்பீடு**

வங்காளத்தின் நிலையான நிலவரி முறையைவிட மன்றோவின் ரயத்வாரி முறை நல்ல முறையாகக் கருதப்பட்டது. ரயத்வாரி முறையில் ஜமீன்தார்களுக்கு இடமில்லை. விவசாயிகள் நில உடமையாளராகக் கருதப்பட்டனர். நிலத்தை அடமானம் வைக்கவும் விற்கவும் அவர்கள் உரிமை பெற்றனர். நிலையான வரி விதிப்பு முறையை விட இம்முறையில் விவசாயிகள் அதிகமான நன்மை பெற்றனர். இந்திய மக்கள் மீது மன்றோ அக்கறை கொண்டிருந்ததால் வரிவிகிதத்தைக் குறைக்கப் பெரிதும் முயற்சித்தார். அவரது பெரும் முயற்சியின் காரணமாகவே வரிவிகிதம் ஏறத்தாழ ஐம்பது அல்லது ஐம்பத்தைந்து சதவிகிதத்திலிருந்து மூன்றில் ஒரு பங்காகக் குறைக்கப்பட்டது. கம்பெனியின் பணிகளில் இந்தியர்கட்கு வாய்ப்பளிக்க வேண்டும் எனவும் மன்றோ விரும்பினார்.

ரயத்வாரி முறையில் சில குறைகளும் இருந்தன. அரசின் நிலவருவாய் தொகையளவில் நிர்ணயிக்கப்பட்டது. அது உண்மையில் ஒரு விவசாயி வைத்திருந்த நிலத்தின் அளவையோ அதிலிருந்து பெறப்பட்ட விளைச்சலின் அளவையோ அல்லது விளைபொருட்களின் விலைகளையோ பொருத்து அமையவில்லை. எனவே இம்முறை விவசாயிகட்குப் பல இன்னல்களைத் தோற்றுவித்தது. அவர்களால் தங்களின் வரிகளை ஒழுங்காகச் செலுத்த முடியவில்லை. சரியான விளைச்சல் இல்லாத சமயங்களில் வரிக்குறைப்பு செய்ய வகை செய்யப்படவில்லை. இதன் காரணமாக வரி கொடுக்க இயலாத விவசாயிகள் மிக அதிமான வட்டிக்கு தனிப்பட்ட கடன்வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இரத்தத்தை அட்டை உறிஞ்சுவது போல் அவர்களின் உழைப்பின் பயனைக் கடன் கொடுத்தவர்கள் உறிஞ்சி விட்டனர். வரிவசூல் செய்ய கடுமையான முறைகள் பின்பற்றப்பட்டன. விவசாயிகளைத் துன்புறுத்தல் சாதாரணமாக நடந்தது. வரி கொடுக்காதவர்களை வரி கொடுக்கும வரை ஓரிடத்தில் அடைத்துத் துன்புறுத்தினர். உணவு

உண்ணவும் இயற்கைக் கடன்களைச் செய்யவும் கூட அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. சில சமயங்களில் குனிந்த நிலையில் அவர்கள் கட்டி வைக்கப்பட்டுத் துன்புறுத்தப்பட்டனர். மிகவும் கடுமையான தண்டனை அவர்களது தலைமுடியைக் கழுதை அல்லது எருமையின் வாலில் கட்டி இழுக்கச் செய்த செயலாகும். சிலருக்கு எலும்பு மாலைகள் அணிவிக்கப்பட்டன. இத்தகைய கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன எனும் உண்மை இங்கிலாந்தின் பாராளுமன்றம் நடத்திய விசாரணையின் போது வெளியிடப்பட்டது.

**பிற முறைகள்**

வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய பகுதிகளில் ஜமீன்தாரி முறை நடைமுறையில் இருந்தது. சென்னை மாநிலத்தில் ரயத்வாரி முறை பின்பற்றப்பட்டது. பம்பாயிலும் ரயத்வாரி முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

## தென்னகப் புரட்சி (1800-1801)

**அரசியல் காரணங்கள்**

இந்த மண்ணின் மாந்தரையும் அவமானப் படுத்தும் வகையில் ஆங்கிலக் கம்பெனி நடந்து கொண்டது. பொருள் விற்றுப் பொருள் சேர்க்க வந்தோர் புலம் சேர்த்து இந்நாட்டின் மக்களையே விலங்குகளாய் நடத்தும் நிலை வந்தது. மைசூரின் திப்பு ஆய்கிலேயருடனான மோதலில் தோல்வியின் கசப்பையே சந்தித்தார். அவரது பகுதிகளில் பலவற்றைக் கம்பெனி கைப்பற்றியது. துணைப் படைத்திட்டத்தைப் பல சோம்பேறி அரசரகள் இனிதாக வரவேற்றனர். விளக்கில் தாவும் விட்டில்களாகப் பரங்கியர் விரித்த அப்பொறியில் சிக்கினர். கம்பெனியில் படை தனது எல்லைக்குள் இருந்ததால் அவர்கள் பாதுகாப்பை பற்றிக் கவலையற்றிருந்தனர். மேலும் மக்களைத் துன்புறத்தவும் தலைப்பட்டனர். இவ்வாறு ஓரளவு பெரிய அரசுகளைத் தன் வயப்படுத்திய கம்பெனி சிற்றரசுகளின் மீது கவனத்தைத் திருப்பியது. தென்னகத்தில் ஜமீன்தாரர்களும் பாளையக்காரர்களும் கம்பெனிக்குச் செலுத்த வேண்டிய கப்பத்தைக் கட்ட மறுத்தனர். ஹைதர் அலி, திப்பு ஆகியோருக்கு உதவிகள் செய்தனர். தோல்விகளைக் கண்டு துவளாமல் அன்னியரை எதிர்ப்பதென உறுதி கொண்டனர். பாளையக்காரர்களை அடக்கி வைக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்த கம்பெனி தனது படைப்பிரிவுகளை அனுப்பத் துவங்கியது.

**பொருளாதாரக் காரணங்கள்**

கம்பெனியின் பொருளாதாரச் சுரண்டல் மக்களை வெகுவாகப் பாதித்தது. வரிகள் மிக அதிகமாக உயர்த்தப்பட்டன. காலக்கிரமமான ஆய்வுகள் செய்யக் கம்பெனி தனது அதிகாரிகளை அனுப்பியது. அவர்கள் மக்களைத் துன்புறுத்தினர். ஏழை விவசாயிகட்கு விளைச்சலில் கிடைத்த பங்கு குறைந்தது. வரிகட்ட முடியாமல் திணறிய விசாயிகள் நிலங்களை விட்டு வெளியேற்றப்பட்டனர். அவர்களுடைய நிலங்கள் புதியவர்கட்குக் கொடுக்கப்பட்டன. கம்பெனியில் வீரர்கள் கிராமங்களின் வழியே செல்லும் போது அங்கிருந்த கால்நடைகளையும், உணவுத் தானியங்களையும் சூறையாடிச் சென்றனர். கம்பெனியைத் திருப்திப்படுத்துவதில் சிற்றரசர்களும் சிரமப்பட்டனர். ஐரோப்பிய லேவாதேவிக்காரர்களிடம் அதிகமான வட்டிக்குக் கடன் வாங்கினார்கள். கடனைத் திருப்பித் தர இயலாதவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டனர். தென்னகத்தில் தொழிலகங்கள் செயலற்றுப்போயின. கம்பெனியில் வாணிபத்தாலும் கம்பெனி ஊழியர்கள் நடத்திய தனிப்பட்ட வாணிபத்தாலும் குடிசைத்

தொழில்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. மக்களின் துயரத்தை அதிமாக்கப் பல இயற்கை இன்னல்களும் நிகழ்ந்தன. 1798ல் வான் பொய்த்ததால் பஞ்சம் தலைவிரித்தாடியது. பட்டினியால் பலர் மாண்டனர். கம்பெனி தன்னிடமிருந்த தானியங்களை மிக அதிகமான விலைக்கு விற்றது. இவ்வகையில் பொருளாதார நிலை வெகுவாக மக்களைப் பாதித்தது.

**போக்கு**

தென்னக அரசுகளின் கூட்டமைப்பு இரண்டு முக்கியமான முடிவுகளை மேற்கொண்டது. அதில் பங்கு பெற்ற சிற்றரசர்கள் ஆங்கிலேயருக்கு எதிரான போரட்டத்தில் ஒற்றுமையுடன் செயல்பட முடிவு செய்தனர். இரண்டாவது முக்கியமான முடிவு போர்முறை பற்றியதாகும். கொரில்லாப் போர்முறையைப் பின்பற்ற அவர்கள் தீர்மானித்தனர். கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் தங்கள் அரசுகளைச் சில பகுதிகளாகப் பிரித்தனர். ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு தளபதி பொறுப்பாக நியமிக்கப்பட்டார். மருதுபாண்டியர் மதுரைக்கும், கோபால நாயக்கர் திண்டுக்கல்லிற்கும், கான் இ ஜகான் கோயம்புத்தூருக்கும், கேரளவர்மா மலபாருக்கும், கிருஷ்ணப்ப நாயக்கர் மேற்கு மைசூர்ப் பகுதிக்கும், தூன்தாஜி வாக் மராட்டியப் பகுதிக்கும் பொறுப்பேற்றனர். மிக விரிவான செயல்திட்டம் அமைக்கப்பட்டது. போருக்குத் தேவையான உணவுப்பொருட்கள் திரட்டப்பட்டன. பர்மா, ஸ்ரீலங்கா போன்ற இடங்களிலிருந்து உணவுப் பொருட்கள் வாங்கப்பட்டன என்றும் கூறப்படுகிறது. பழைய ஆயுதங்கள் புதுப்பிக்கப்பட்டுக் காடுகளில் புதைத்து வைக்கப்பட்டன. காளையார்கோயில் ஓர் ஆயுதச்சாலையாக மாறியது 1800ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் விருப்பாட்சி எனுமிடத்தில் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் கூடினர். அக்கூட்டத்திற்க்கு கோபால நாயக்கர் தலைமையேற்றார். அக்கூட்டத்தில் சில முக்கியமான முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. கோயம்புத்தூரில் முதல் தாக்குதலைத் துவக்குவது என முடிவு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து மற்ற இடங்களிலும் மோதல்களைத் துவக்க முடிவு செய்தனர்.

1800ஆம் ஆண்டு ஜுன் திங்களில் தூன்தாஜி வாக் என்பாரின் தலைமையில் புரட்சிக்காரர்கள் பெட்நூரையும் சிமோகாவையும் கைப்பற்றினர். சவனூர், குடாக் ஆகிய பகுதிகளும் அவர்களின் கீழ் வந்தன. அதே நேரத்தில் மைசூரில் கிருஷ்ணப்ப நாயக்கரின் தலைமையில் புரட்சி வெடித்தது. ஜமாலாபாத் எனுமிடத்தில் ஆங்கிலப்படை தோற்கடிக்கப்பட்டது. மலபாரில் கேரள வர்மா தனது அதிகாரத்தை நிலைநாட்டினர். மற்றும் பல பகுதிகளும் அவரால் கைப்பற்றப்பட்டன. கர்னல் ஆர்தர் வெல்லெஸ்லி புரட்சிக்காரர்களை அடக்கும் பொறுப்பினைப் பெற்றார். அவர் ஆங்கிலப் படையினை முழுவதுமாகத் திரட்டினார். பேஷ்வாவின் உதவியையும் நிசாமின் உதவியையும் பெற்றுக் கொண்டார். தூன்தாஜி வாக்கிற்கு எதிராகத் தனது முதல் நடவடிக்கையைத் துவக்கினார். தூன்தாஜி ஓரளவு எதிர்த்துப் போராடிய பின்னர் போர்க்களத்தில் வீரமரணம் அடைந்தார். பின்னர் வெல்லெஸ்லி தனது கவனத்தை கிருஷ்ணப்ப நாயக்கரிடம் திருப்பினார். கிருஷ்ணப்ப நாயக்கரும் சிறிது எதிர்ப்பிற்குப் பின்னர் வீழ்ந்தார். அவர் கைது செய்யப்பட்டார். மலபாரில் ஆங்கிலேயர் தமது சூழ்ச்சி நாடகத்தை ஆடினர். ஏமன் நாயர் என்பாரைப் பணம் கொடுத்துத் தமது பக்கம் இழுத்தனர். வர்மாவின் பலவீனங்கள் பற்றிய இரகசியங்கள் அனைத்தையும் அறிந்து கொண்ட கம்பெனிப்படை 1801 நவம்பர் 30ஆம் நாள் அவரை எளிதாக முறியடித்தது.

தமிழகத்தில் பரங்கியர்க்கு எதிரான புரட்சி வரிவானதாகவும் வீரம் மிக்கதாகவும் திகழ்ந்தது. 1801ல் ஊமைத்துரையும் அவரது ஆதரவாளர்களும் சிறையிலிருந்து தப்பித்தனர். அவர்கட்டு ஆதரவாக ஏறத்தாழ 30,000 பேர்கள் சேர்ந்தனர். பாஞ்சாலங்குறிச்சிக்கும் ஸ்ரீவைகுண்டத்திற்கும் இடைப்பட்ட பகுதிகளை அவர்கள் கைப்பற்றினர். மார்ச்சுத் திங்களில் அவர்கள் தூத்துக்குடியை நோக்கிச் சென்று அதனையும் தம்வயப்படுத்தினர். புரட்சியாளர்களின் வளர்ச்சி கண்டு மிரட்சியடைந்த வெள்ளையர் அரசாங்கம் உடனடியாக நெல்லைச் சீமைக்கு புதிய படையினை அனுப்பி வைத்தது. மக்காலே என்பார் புரட்சியாளரை எதிர்த்துப் போரிட்டுத் தோல்வியடைந்தார். அக்னூ என்பார் ஆங்கிலப்படையின் தலைமைப் பொறுப்பில் வைக்கப்பட்டார். அவர் புரட்சியாளர்களை அடக்குவதில் ஓரளவு வெற்றி கண்டார். ஊமைத்துரையும் அவரது ஆதரவாளர்கள் சிலரும் சிவகங்கைச் சீமைக்குச் சென்றனர். மறவர் நாடு முழுவதும் புரட்சியாளர்கள் கைகளில் இருந்தது. அவர்கள் மதுரையையும் கைப்பற்ற முயன்றனர். 1801 ஜுன் திங்களில் புரட்சி தஞ்சைக்குப் பரவியது. தஞ்சையின் விவசாயிகள் புரட்சிக்கு ஆதரவளித்தனர். அக்னூ மிகுந்த முயறசிகளை மேற்கொண்டு புரட்சியை அடக்க முயற்சித்தார். ஜுன் மத்தியில் அவர் இராமனாதபுரம் சென்றடைந்தார். தொண்டிக்கு ஆயுதம் தாங்கிய ஆங்கிலக் கப்பலொன்று அனுப்பப்பட்டது. அது புரட்சியாளர்கள் உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யப் பயன்படுத்திய படகுகளை நாசம் செய்தது. புரட்சியாளர்கட்கு ஆயுதங்களும் உணவுப் பொருட்களும் கிடைப்பது தடைப்பட்டது. மருதுபாண்டியரின் தலைமையில் புரட்சியாளர்கள் வீரத்துடன் போரிட்டனர். ஏறத்தாழ மூன்று திங்கட்காலம் அக்னூவால் எதையும் சாதிக்க முடியவில்லை. செப்டம்பர்த் திங்களில் ஒரே சமயத்தில் காளையார் கோவில் மீது மூன்று பக்கங்களில் இருந்து தாக்குதல் நடத்த ஆணையிட்டார். இன்ஸ், பிளாக்கர்ன், மக்காலே ஆகிய மூவரும் மூன்று பிரிவுகட்குத் தலைமையேற்று இத்தாக்குதல்கட்கு வழி நடத்தினர். வீரத்துடன் போரிட்ட புரட்சியாளர்கள் மும்முனைத் தாக்குதலில் வீழ்ச்சியடைந்தனர். 1801 ஆம் ஆண்டின் இறுதிக்குள் புரட்சியில் தலைமையேற்றவர்கள் அனைவருமே கைது செய்யப்பட்டனர். அவர்களில் பலர் மக்கள் முன்னிலையில் தூக்கிலிடப்பட்டனர்.

**புரட்சியின் தோல்விக்கான காரணங்கள்**

புரட்சியாளர்கள் தங்களது திட்டத்தைச் சரியாகச் செயல்படுத்தவில்லை. அவர்களது திட்டப்படி ஒரே நேரத்தில் எல்லா இடங்களிலும் புரட்சி தோன்றியிருக்க வேண்டும். புரட்சி துவங்கியதும் தென்பகுதிக்கு அதற்கான அடையாளச் சங்கேதத்தை அனுப்பும் பொறுப்பை மராட்டியர் ஏற்றனர். குதிரை எனும் சொல் சங்கேதமாக முடிவு செய்யப்பட்டது. ஆனால், வடக்கிலிருந்து சங்கேதச் சொல் வரவில்லை. எனவே மராட்டியத்தில் நடந்த புரட்சியும் தமிழகப் புரட்சியில் ஒரே நேரத்தில் வெடிக்கவில்லை. மேலும் கர்நாடகம், மைசூர், தஞ்சாவூர், ஐதராபாத், திருவிதாங்கூர் ஆகிய பகுதிகளின் ஆட்சியாளர்கள் ஆங்கிலேயரின் அடிவருடிகளாய் இருந்தனர். புரட்சியை அடக்க அன்னியருக்கு உதவும் புல்லுருவிகளாய் அவர்கள் செயல்பட்டனர். துவக்கத்தில் கொரில்லாப் போர் முறையைப் பின்பற்றுவது எனப் புரட்சியாளர்கள் முடிவு செயதிருந்தனர். ஆனால் தூன்தாஜி வாக் அம்முறையைப் பின்பற்றாது தவறு செய்தார். பேஷ்வா, நிசாம் ஆகியோரது பகுதிகளையும் அவர் ஊடுருவியதால் அவர்கள் சினம் கொண்டு ஆங்கிலேயர் பக்கம் சாய்ந்தனர். கேரளவர்மா அவரது தளபதி

ஒருவரின் துரோகம் காரணமாகத் தோல்வியைத் தழுவ நேர்ந்தது. ஆங்கிலேயரின் போர் வசதிகள் அதிகமாக இருந்தன. தென்னகக் கூட்டமைப்பு அரசர்களிடம் செய்தித் தொடர்பு வசதிகள் இருக்கவில்லை. இத்தகைய காரணங்களால் தென்னகப் புரட்சி தோல்வியடைந்தது.

**விளைவுகள்**

தென்னகப்புரட்சி தாயகப்பற்றுக் கொண்ட தலைவர்களின் தோல்வியில் முடிவடைந்தது. புரட்சியை வழிநடத்திய பல்வேறு தலைவர்களும் கடுமையான தண்டனைக்கு உள்ளாகினர். இப்புரட்சியில் மக்களின் பங்கேற்பு கணிசமாக இருந்தது. மக்கள் ஆதரவு அவசியம் என்பதைப் புரட்சியை வழி நடத்திய தலைவர்கள் புரிந்து செயற்பட்டனர். தென்னகப் புரட்சியில் புரட்சியாளர்களின் பக்கம் கடுமையான உயிரிழப்பு ஏற்பட்டது. தென்னகப் புரட்சி கம்பெனியாரின் எண்ணங்களிலும் சில மாற்றங்களை உருவாக்கியது. ஆதிக்க சக்தியை நிலைநாட்டி விட்டதாக உறுதி செய்து கொண்ட அவர்கள் ஆட்சித்துறையில் மாற்றங்களைச் செய்யத் தலைப்பட்டனர். தென்னகப் புரட்சி இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் நடைபெற்ற முதல் புரட்சி என்பது குறிப்பிடத்தக்கது. இப்புரட்சியின் முடிவில் ஆங்கிலேயரது ஆட்சிமுறை விரிவாகச் செயல்படத் தொடங்கியது.

## வேலூர்க் கிளர்ச்சி (1806)

**காரணங்கள்**

வேலூர்ச் சிறைச்சாலை வீழ்ந்துவிட்ட போராளிகளின் மையமாக இருந்தது. திப்புவின் வீழ்ச்சிக்குப் பின்னர் அவரது மகன்களும் மகள்களும் வேலூரில் சிறைவைக்கப்பட்டனர். திப்புவின் பல போர் வீரர்களும் அங்கு கைதிகளாக இருந்தனர். பாளையக்காரர்கள் கிளர்ச்சி மற்றும் தென்னகப் புரட்சி ஆகியவற்றில் வீழ்ந்த தலைவர்கள் தூக்குக் கயிற்றுக்கு முத்தமிட்டு மறைந்தனர். அவற்றில் ஆங்கிலேயரை எதிர்த்த பலரும் கைதிகளாக வேலூரில் வாடினர். இவர்களது உள்ளங்களிலெல்லாம் விடுதலை நெருப்புக் கனன்று கொண்டிருந்தது.

தமிழக ஆட்சியாளர்களின் பல்வேறு கிளர்ச்சிகளிலும் போர்களிலும் பங்கேற்றுத் தங்களது சொத்துக்களையும் உறவுகளையும் இழந்து வாடிய பலர் ஆங்கிலப் படையில் வீரர்களாகச் சேர்ந்திருந்தனர். வயிற்றுப் பிழைப்பிற்காகக் கம்பெனியில் படைப்பிரிவில் பணிசெய்த போதும் அவர்கள் பழைய நினைவுகளை முற்றிலும் மறக்கவில்லை. இவ்வாறு வேலூர் வாழ்ந்து கெட்டதாலும் வீழ்ந்து விட்டதாலும் விம்மிக்கொண்டும் வெம்பிக்கொண்டும் இருந்த நெஞ்சங்களின் கூடாரமாகியது.

கம்பெனியின் சிப்பாய்கள் பின்பற்றவேண்டிய சில புதிய ஒழுங்குமுறைகள் அறிவிக்கப்பட்டன. அக்னூவின்தொப்பி என்ற புதிய தொப்பியை அணியுமாறு இராணுவ வீரர்களுக்குக் கட்டளையிடப்பட்டது. பழைய தொப்பியை விட்டுப் பிரிய பல இராணுவ வீரர்கட்கு விருப்பமில்லை. சிப்பாய்கள் வளவளப்பாகச் சவரம் செய்யப்பட்ட கன்னங்களுடன் இருக்க வேண்டும் என்ற விதி கொண்டுவரப்பட்டது. தாடியைத் தங்களது சமயத்தின் ஓர் அடையாளமாகக் கருதிய முஸ்லீம்கள் இந்த விதிமுறையை வெறுத்தனர்.

இந்துச் சிப்பாய்களின் மனம் புண்படும்படியாகவும் சில ஒழுங்கு முறைகள் நடைமுறைக்கு வந்தன. சிப்பாய்கள் காதில் வளையங்கள் அணியக் கூடாது என்றும் அவர்கள் தங்கள் சாதிகளின் அடையாளங்கள் எவற்றையும் நெற்றியில் அணியக்கூடாது என்றும் தடைவிதிக்கப்பட்டது. இத்தகைய மாற்றங்களை ஏற்றுக் கொள்ள இந்துச் சிப்பாய்கள்

தயாராக இல்லை. சிப்பாய்கள் பசு மற்றும் பன்றித் தோலால் செய்யப்பட்ட காலணிகளை அணியுமாறு ஆணையிடப்பட்டது. அவ்வாணையும் இந்து மற்றும் முஸ்லீம் வீரர்களின் சமய உணர்வுகளைப் பாதிக்கும் வண்ணம் அமைந்தது. சிப்பாய்களைக் கிறிஸ்த்துவ சமயத்திற்கு மாற்றும் முயற்சியில் ஆங்கிலக் கம்பெனி இறங்கியதாக அவர்கள் ஐயுற்றனர். புதிய விதிமுறைகளைப் பின்பற்றத் தயங்கிய வீரர்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர். விதிமுறைகளைப் பின்பற்றாதவர்கள் சவுக்கடி போன்ற தண்டனைக்கும் உள்ளாகினர்.

இத்தகைய சூழ்நிலையைத் திப்புவின் புதல்வர்களும் புதல்வியரும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். சிப்பாய்கள் மத்தியில் தாயகத்தை விடுவிக்க வேண்டும் என்ற உணர்வினை அவர்கள் தட்டி எழுப்பினர். முகமதியரின் ஆட்சியை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் வேலூர்க் கிளர்ச்சி நிகழ்ந்தது என்ற கருத்து ஆங்கிலேயரின் அறிக்கையில் சொல்லப்பட்டது. ஆற்காட்டில் வாழ்ந்த சிலருடன் சிறையிலிருந்த திப்பு சுல்தானின் வழித்தோன்றல்கள் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதற்கும் ஆதாரங்கள் உள்ளன. அவர்களது விடுதலை வேட்கையும் ஆட்சி மீட்சி ஆசையும் தூண்டுகோலாக அமைந்தன. சித்தூரிலிருந்த சிப்பாய்களுடன் அவர்கள் தொடர்பு கெண்டனர் என்றும் ஐதராபாத்தில் கிளர்ச்சி தொடர்பான இரககியக் கூட்டங்கள் நடந்தன என்றும் ஆங்கிலக் கம்பெனியின் உளவாளிகளின் அறிக்கை உறுதி செய்கிறது.

**போக்கு**

வேலூர் புரட்சி 1806 ஆம் ஆண்டில் சூலைத் திங்கள் பத்தாம் நாள் அதிகாலையில் ஏற்பட்டது. இந்தியச் சிப்பாய்கள் ஆங்கிலேய அதிகாரிகளின் தங்குமிடங்களை நோக்கிச் சுடத் துவங்கினர். மிக விரைவில் அவர்கள் கோட்டையைத் தம் வயப்படுத்தினர். சிற்றரசர்கள் கைதிகளாக அடைபட்டுக்கிடந்த சிறைக் கூடங்களை நோக்கி அவர்கள் ஓடினர். படேஹைதரின் யெரைக் கூவி அழைத்தனர். அவரைத் தங்களது புதிய நவாபாக ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தனர். திப்புவின் கொடி கோட்டையில் ஏற்றப்பட்டது. கர்னல் கில்லஸ்பி என்பார் வேலூரை விடுவிக்க ஒரு படைப்பிரிவுடன் விரைந்து வந்தார். சிப்பாய்களை முறியடித்து அவர் கோட்டையை மீட்டார். அப்போது நிகழ்ந்த மோதலில் ஏறத்தாழ 113 ஐரோப்பியரும் 350 சிப்பாய்களும் மாண்டனர். ஏறத்தாழ ஐநூறு சிப்பாய்கள் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு வேலூர் புரட்சி தோல்வியில் முடிவடைந்தது.

**புரட்சியின் தன்மை**

வேலூர் புரட்சி ஆங்கிலேயருக்கு எதிராக வெடித்தது. அப்புரட்சி பற்றி வெவ்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. படை அமைப்பில் சில புதிய மாற்றங்களைச் செய்ததே புரட்சிக்கான ஒரே காரணம் எனச் சொல்வாருண்டு. புரட்சியாளர்கள் முஸ்லீம் ஆட்சியை ஏற்படுத்த ஒரு சதித்திட்டம் வகுத்தனர் எனவும் அதற்காகவே வேலூர் புரட்சி நடத்தப்பட்டது எனவும் கூறுவாருண்டு அப்போது சென்னையில் ஆளுநராக இருந்த வில்லியம் பெண்டிங் ஒரு விசாரணை நடத்தினார். அதன் முடிவில் இந்து மதத்திலோ இஸ்லாம் மதத்திலோ தலைப்பாகையைப் பயன்படுத்துவதற்கு எதிராக எதுவுமில்லை என அவர் அறிவித்தார். இப்புரட்சி பற்றி விசாரணை நடத்திய மன்றமும் புதிய மாற்றங்களை புரட்சிக்கான காரணங்கள் அல்ல என முடிவு செய்தது. சிறையிலிருந்த சிற்றரசர்களே புரட்சியைத் தூண்டினர் என விசாரணை மன்றம் முடிவு செய்தது. புதிய சீருடை அறிமுகம் செய்தது ஒரு

காரணமாகக் கூறப்பட்டதேயொழிய இஸ்லாமியரின் ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதே புரட்சியின் உண்மையான நோக்கம் என கிரடாக் எனும் படைத்தளபதி கருத்துக் கூறினார். கம்பெனியால் எவ்வித முடிவிற்கும் விரைந்து வர முடியவில்லை. புதிய சீருடை அறிமுகம் காரணமாக மனக்கசப்பு சிப்பாய்களிடையே பரவியது. அதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி ஆட்சி மாற்றம் செய்யும் நோக்கத்துடன் முன்னாள் அரசர்கள் செய்த முயற்சியின் விளைவே வேலூர் புரட்சி எனக் கம்பெனியின் இயக்குநர்கள் மன்றம் முடிவு செய்தது. இதனைச் சிலர் தலைப் பாகைப் புரட்சி எனவும் குறிப்பிடுவதுண்டு.

டாக்டர் கு.இராஜய்யனின் கருத்துப்படி வேலூர் புரட்சி திட்டமிடப்பட்ட ஒன்றாகும் 1806 ஜூலை 13ஆம் நாள் ஒரே சமயத்தில் பல இடங்களில் புரட்சியைத் துவக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் அவசரப்பட்ட ஒரு ஜமீன்தார் புரட்சி முன்னரே ஏற்படக் காரணமாக இருந்தார். 1857 நடந்த புரட்சிக்கு முன்னோடி வேலூர் புரட்சி என வீரசவார்க்கர் குறிப்பிடுகிறார். ர்.சௌத்ரி என்பாரும் அத்தகைய கருத்தினைக் கொண்டுள்ளார்.

**விளைவுகள்**

ஆங்கிலக் கம்பெனி தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டது. கிரடாக், பெண்டிங் ஆகிய இருவரும் அவர்களது பதிவிகளிலிருந்து திருப்பி அழைக்கப்பட்டனர். படே ஹைதர் கல்கத்தாவிற்கு அனுப்பப்பட்டார். புடைப்பிரிவைத் தீவிரமான கட்டுப்பாட்டின் கீழ் வைக்க கம்பெனி அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டது. கட்டுப்பாட்டு அதிகாரங்கள் ஐரோப்பியரின் கைகளில் கொடுக்கப்பட்டன. ஐரோப்பியப் படைவீரர்களின் எண்ணிக்கை அதிகமாக்கப்பட்டது. கம்பெனியின் கட்டுப்படுத்தும் முயற்சி ஓரளவு வெற்றி பெற்றது என்றே சொல்லாம். ஏனெனில் 1857ல் வடபுலத்தில் புரட்சி ஏற்பட்டபோது தென்னாட்டில் சிப்பாய்கள் எவ்வித ஆதரவும் அளிக்கவில்லை.

அன்னியரின் ஆட்சிக்கு எதிரான விடுதலைப் போருக்கு முகவுரை எழுதியவர்கள் தென்னகத்துப் புரட்சி வீரர்கள். தென்னகப் புரட்சி முதல் இந்திய விடுதலைப் போராக அமைந்தது. அதில் எஞ்சிய வீரர்களின் முயற்சியே வேலூர் புரட்சி எனலாம். இப்புதிய முயற்சியில் தோற்ற பின்னர் தென்னகத்தில் விடுதலை வேட்கை நசுக்கப்பட்டது. தென்னகப் புரட்சியும் வேலூர்ப் புரட்சியும் தேசப் பற்று உடையவர்களால் மேற்கொள்ளப்பட்டன. விடுதலை அவர்களது இலட்சிய நோக்கமாக இருந்தது. தெளிவான திட்டமிடலும் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது.

## தமிழகமும் விடுதலைப் போராட்டமும்

## சட்டமறுப்பு இயக்கம்

ஆங்கிலேயர்கள் சில வாக்குறுதிகளை அவ்வப்போது அளித்த போதிலும் தேசிய இயக்கத்தினரின் கோரிக்கைகள் முழுமையாக நிறைவு பெறவில்லை. குறிப்பாக 1929 அக்டோபர் 31ல் வைசிராய் இர்வின் பிரபு இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்து விரைவில் வழங்கப்படும் என்றார். சாதகமான நிகழ்வுகள் எவையும் ஏற்படாத நிலையில் 1930 பிப்ரவரி 15ல் வன்முறை சாராத சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்குமாறு காந்திக்கு காங்கிரஸ் செயற்குழு அதிகாரமளித்தது. சட்டமறுப்பு இயக்கம் உப்புச் சத்தியாகிரகத்துடன் தொடங்கியது. மார்ச் 12ல் காந்தி தனது புகழ் பெற்ற தண்டியாத்திரையைத் தொடங்கினார்.

**பிரகாசம் நடத்திய உப்புச் சத்தியாக்கிரகம்**

உப்புச் சத்தியாக்கிரகத்தை மற்ற இடங்களிலும் நடத்தலாம் என காந்தி அறிவித்தவுடன் 1930 ஏப்ரல் 13ம் தேதி கூ.பிரகாசமும் நாகேசுவரராவும் சென்னைக் கடற்கரையில் உப்புக் காய்ச்சினார். உப்பைக் காய்ச்சுவதன் மூலம் உப்புச் சட்டத்தை மீறிய அவர்கள் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர். இரண்டு நாட்களுக்குப் பின்னர் உப்புச் சத்தியாக்கிரகத் தியாகிகளைத் தலைமை தாங்கி அவர்களை அழைத்துச் சென்றபோது அவர் கைது செய்யப்பட்டார். இம்முறை அவர்கள் மீது வேறு குற்றங்கள் சுமத்தப்பட்டு ஒவ்வொருவருக்கும் ரூ.500 அபராதம் விதிக்கப்பட்டது. அவர்கள் அபராதம் கட்ட மறுத்ததால் அவர்களுடைய கார்களை போலீசார் பறிமுதல் செய்து ஏலத்தில் விட்டனர். இச்செயலைப் பலரும் கண்டித்தனர். பல வணிகர்கள் நன்கொடை அளித்துப் புதிய கார்களை வாங்கி அவர்களுக்கு அளித்தனர். ஏப்ரல் 22ம் நாள் நடந்த ஓர் அமைதிப் போராட்டத்தில் காவல் துறையினர் தாக்குதல் நடத்தினர். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து 27ம் நாள் கடற்கரையில் நடந்து ஒரு பொதுக்கூட்டத்தில் காவல் துறையினர் தடியடி செய்து துப்பாக்கிச்சூடும் நடத்தினர். அதில் இருவர் உயிர் இழந்தனர். பொதுவாக இச்சட்ட மறுப்பு இயக்கம் அமைதியாக நடைபெற்றது. ஆனால் அரசாங்கத்தின் அடக்குமுறை காரணமாக கோயம்புத்தூர்,குமாரபாளையம், ஆற்காடு, வேலூர், குடியாத்தம், திண்டிவனம் போன்ற இடங்களில் மக்கள் எதிர்ப்பு இயக்கங்களை நடத்தினர்.

**வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரகம்**

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைமை இடம் திருச்சிக்கு மாற்றப்பட்டிருந்தது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்த இராஜாஜி வேதாரண்யத்தில் உப்புச் சத்தியாக்கிரத்தை நடத்த எண்ணியிருந்தார். உப்புச் சத்தியாக்கிரகத் தொண்டர்களைத் திருச்சியிலிருந்து வழி நடத்திக் கால்நடையாகவே வேதாரண்யம் செல்வது என்ற முடிவு செய்திருந்தார். முன்னேற்பாடாக மாவட்டங்களில் சுற்றுப் பயணங்களைச் செய்து மக்கள் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தி நிதியும் திரட்டினார். இதில் பங்கேற்க முந்நூறு தொண்டர்கள் சென்னை, மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மற்றும் சேலம் ஆகிய இடங்களிலிருந்து மனுச் செய்திருந்தனர். அவர்களில் நூறு பேர்களை இராஜாஜி தெரிவு செய்திருந்தார். 1930 ஏப்ரல் 13ம் நாள் இராஜாஜி தலைமையில் திருச்சியிலிருந்து தொண்டர்கள் புறப்பட்டனர். உப்புச் சட்டத்தை மீறுகின்ற வரையில் அவர்களை கைது செய்ய வேண்டாம் என அரசாங்கம் ஆணை இட்டிருந்தது. ஆனால் தஞ்சை மாவட்ட நீதிபதி சத்தியாக்கிரகத் தொண்டர்களுக்கு உதவுபவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று எச்சறித்தார். அதையும் மீறி தொண்டர்கள் சென்ற இடங்களிலெல்லாம் மக்கள் விருந்து உபச்சாரங்கள் செய்தனர். நடைப்பயணத்தின் களைப்புத் தெரியாமல் இருக்க நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை எழுதிய கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது என்ற பாடலை வழி நெடுகப் பாடிச் சென்றனர்.

ஏப்ரல் 30ம் நாள் போராட்டக்குழு வேராரண்யத்தை அடைந்தது. மறுநாள் காலை அகஸ்தியன்பள்ளி என்னுமிடத்தில் இராஜாஜியின் தலைமையில் பன்னிரெண்டு பேர் உப்பு சேகரித்தனர். சட்டத்திற்குப் புறம்பாகச் சேகரித்த உப்பை காவல் துறையினர் பறிமுதல் செய்ய முயன்றனர். காவல் துறையினர் இராஜாஜியை மட்டும் கைது செய்தனர். மற்றவர்கள்

அமைதியாகக் கலைந்து சென்றனர். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு குழு இதுபோன்று உப்பைச் சேகரித்தது. மாலை நேரங்களில் தொண்டர்கள் பொதுக் கூட்டங்களை நடத்தினார்கள். அவர்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் காவல் துறையினர் மு.சந்தானம் மற்றும் வேதரத்தினம் பிள்ளை உட்படப் பல தொண்டர்களைக் கைது செய்தனர். ஒவ்வொரு நாளும் தொண்டர்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்தது. அவர்களுக்கான நிதி வசதியை வு.ளு.ளு.இராஜன் செய்து வந்தார். மே 29ம் நாள் T.S.S.இராஜனும் ருக்மணி லட்சுமிபதியும் கைது செய்யப்பட்டார்கள். மேலும் போராட்டத்தைத் தொடரவிடாமல் செய்யத் தொண்டர்களின் முகாமை காவல் துறையினார் அடித்து நொறுக்கினர். உப்புச் சட்டத்தை மீறிய குறத்திற்காக இராஜாஜிக்கு ஆறுமாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அதுபோன்ற தண்டனை பிற தலைவர்களுக்கும் கிடைத்தது. முதல் முறையாக இப்போராட்டத்தில் பெண்கள் பங்கேற்றனர். வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகம் மக்கள் மத்தியில் பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியது. திட்டமிட்டுக் கட்டுப்பாட்டுடன் செய்யப்பட்ட இப்போராட்டம் வெற்றிகரமாக அமைந்தது. 1931 மார்ச் 4ம் நாள் காந்தி இர்வின் ஒப்பந்தம் செய்யப்பட்டதால் சட்டமறுப்பு இயக்கம் நிறுத்தி வைக்கப்பட்டது. அதிகாரப்பூர்வமாகச் சட்டமறுப்பு இயக்கம் நிறுத்தப்பட்ட பின்னரும் தமிழகத்தில் பல இடங்களில் அது தொடர்ந்தது.

**வெள்ளையனே வெளியேறு இயக்கம்**

**சென்னைக்குப் பேராபத்து**

இரண்டாவது உலகப்போரில் 1942 தொடக்கத்தில் ஜப்பான், சிங்கப்பூர், மலேசியா மற்றும் அந்தமான் தீவுகளைக் கைப்பற்றியது. அவ்வாண்டு ஏப்ரலில் சென்னையின் பாதுகாப்பு கேள்விக் குறியானது. சென்னைத் துறைமுகம் ஜப்பானியரின் குண்டு வீச்சிற்கு உள்ளானது. அவசியமில்லாத மக்களைச் சென்னையைவிட்டு வெளியேறுமாறு அரசாங்கம் ஆணையிட்டது. சென்னை நகரில் எஞ்சியிருந்த மக்களுக்குக்கூடப் போதுமான உணவுப் பொருட்களை அளிக்க முடியவில்லை. பெரும்பாலான வீடுகள் மூடிக்கிடந்தன. நகரமே இயக்கமற்றது போன்று தோற்றமளித்தது. ஜப்பான் தென்னிந்தியாவை ஊடுருவலாம் என்ற அச்சம் எழுந்தது. அத்தகைய ஜப்பானிய ஊடுருவலைச் சந்திக்கப் போதுமான பிரிட்டிஷ் படைகள் இங்கிருக்கவில்லை. இந்நிலையில் இந்தியர்கள் போரில் பிரிட்டனுக்கு உதவவேண்டும் என ஆங்கிலேயர்கள் விரும்பினர். இந்தியத் தேசியக் காங்கிரசையும் முஸ்லீம் லீக்கையும் இந்தியச் சமஸ்தானங்களையும் திருப்திப்படுத்தும் வண்ணம் கிரிப்ஸ் தனது கருத்துரைகளை 1942 மார்ச்சில் அறிவித்தார். கிரிப்ஸ் தூதுக்குழுவின் கருத்துரைகள் நிராகரிக்கப்பட்டன.

**ஆகஸ்ட் தீர்மானம்**

அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டி 1942 ஆகஸ்ட் எட்டாம் நாள் வெள்ளையர்களை நாட்டை விட்டு வெளியேறக் கோரிய தீர்மானத்தை நிறைவேற்றியது. இங்கிலாந்து வெளியேறியதும் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய தேசிய அரசாங்கம் உருவாக்கப்பட வேண்டும் என்பதையும் இத்தீர்மானம் வலியுறுத்தியது. இத்தீர்மானத்திற்குச் செவிசாய்த்து ஆங்கிலேயர்கள் வெளியேறாவிடில் சத்தியாக்கிரகம் தொடங்கப்படும் எனக் காந்தி அறிவித்தார். செய் அல்லது செத்துமடி எனத் தமது தொண்டர்கட்கு அவர்

ஆணையிட்டார். ஆகஸ்ட் 9ம் நாள் காந்தியும் பிற முக்கியத் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர்.

**தமிழகத்தில் தீவிரப் போராட்டம்**

தமிழகக் கல்லூரிகளில் மாணவர்கள் வகுப்புகளைப் புறக்கணித்தனர். பச்சையப்பன் கல்லூரி மற்றும் லோயலா கல்லூரி மாணவர்களைக் கலைக்கக் காவல்துறையினர் தடியடி நடத்தினர். மாநிலமெங்கும் பல இடங்களில் அறப்போராட்டங்கள் நடந்தன. இரயில்கள் மறிக்கப்பட்டன. மாநிலக் கல்லூரி மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். காந்தியையும் மற்றத் தலைவர்களையும் விடுதலை செய்யக் கோரி மாணவர்கள் போராடினர். கல்லூரியில் வகுப்புகட்கு வராத மாணவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு கல்வித்துறை இயக்குநர் கல்லூரி முதல்வர்கட்கு ஆணையிட்டார்.

பல்வேறு தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்தார்கள். சென்னையில் சில இடங்களில் கள்ளுக்கடை மறியலும் நடைபெற்றது. பல இடங்களில் அஞ்சல் பெட்டிகட்குத் தீ வைக்கப்பட்டது. உயர்நீதிமன்றக் கட்டிடத்தில் தீ வைக்க முயன்றனர். சென்னையில் முத்தையால்பேட்டை எனுமிடத்தில் காவல்நிலையத்தின் மீது குண்டு வீசப்பட்டது. தென்னாற்காடு, வடஆற்காடு, திருச்சி, நந்தியால், அனந்தப்பூர், செங்கல்பட்டு, கோவை, மதுரை, முகவை, நெல்லை ஆகிய மாவட்டங்களில் பல இடங்களில் பல்வேறு போராட்டங்கள் வெடித்தன. கடையடைப்பு, ஊர்வலங்கள், தீ வைப்பு, தொலை பேசிக் கம்பத்தைக் தாக்குதல் போன்ற பல நிகழ்ச்சிகள் பரவலாக நிகழ்ந்தன. போத்தனூருக்கும் சிங்கநல்லூருக்கும் இடையில் ஆயுதங்கள் ஏற்றிவந்த ஓர் இரயில் கவிழ்க்கப்பட்டது. மதுரையில் காவல் துறையினரால் கட்டுப்படுத்த முடியாத நிலையில் இராணுவம் வரவழைக்கப்பட்டது. இராஜபாளையம், காரைக்குடி, திருவாடானை மற்றும் பூலாங்குறிச்சி ஆகிய முகவை மாவட்ட ஊர்களில் தீ வைப்புச் சம்பவங்கள் பல நிகழ்ந்தன. தஞ்சை மாவட்டத்தில் திருவையாறு, தஞ்சாவூர், மன்னார்குடி மற்றும் கும்பகோணம் ஆகிய இடங்களில் வன்முறை வெடித்தது. நெல்லை மாவட்டத்தில் குலசேகரப்பட்டினத்தில் ஓர் உப்புத் தொழிற்சாலை தகர்க்கப்பட்டது.

**ஆங்கிலேயரின் அடக்குமுறை**

உலகப்போரில் இந்தியர்களின் ஒத்துழைப்பைப் பெறப் பல முயற்சிகளை மேற்கொண்ட ஆங்கிலேயர்கள் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை நடத்திய காங்கிரஸ்காரர்கள் மீதும் மக்கள் மீதும் அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டது. இவ்வியக்கத்திற்கு ஆதரவாகத் தீர்மானங்கள் நிறைவேற்றிய உள்ளாட்சி அமைப்புகள் முடக்கப்பட்டன. போராட்டங்களில் ஈடுபட்ட மாணவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. காங்கிரஸ் குழுக்கள் சட்டத்திற்குப் புறம்பானவை என அறிவிக்கப்பட்டது. பத்திரிக்கைகள் கடுமையான தணிக்கைக்கு உள்ளாகின. அமைதியான கூட்டங்களும் முடக்கப் போராட்டங்களும் கூடத் தடை செய்யப்பட்டன. சத்தியமூர்த்தி, ம.பொ.சிவஞானம், காமராஜர்,வு.பிரகாசம், ஏ.ஏ.கிரி போன்ற தலைவர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டனர்.

## வ.உ.சிதம்பரம் பிள்ளை

தூத்துக்குடி மாவட்டத்தில் ஒட்டப்பிடாரம் எனுமிடத்தில் 1872ஆம் ஆண்டு செப்டம்பர் ஐந்தாம் நாள் உலகநாத பிள்ளை மற்றும் பரமாயி ஆகியோர்க்கு மகனாகப் பிறந்தார். இவருக்கு நான்கு இளைய சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் இருந்தனர். ஒட்டப்பிடாரத்தில் கல்வியைத் தொடங்கிய இவர் தூத்துக்குடி கால்டுவேல் உயர்நிலைப் பள்ளியில் பள்ளிக் கல்வியையும் திருநெல்வேலி ம.தி.தா இந்துக் கல்லூரியில் பட்டப்படிப்பையும் நிறைவு செய்து திருச்சியில் கணபதி ஐயர் மற்றும் ஹரிஹர ஐயர் ஆகியோரிடம் சட்டம் பயின்றார். 1895ல் ஒரு வழக்கறிஞரான வ.உ.சி.வள்ளியம்மை என்பாரை மணந்தார். 1901 முதல் மனைவி மறைந்த பின்னர் மீனாட்சி என்பாரை மணந்து கொண்டார்.

**தேசிய இயக்கத்தில் பங்கேற்பு**

வ.உ.சி.இளம் வயதிலேயே தேசிய உணர்வுடன் விளங்கினார். தேசிய இயக்கம் தொடர்பான வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கட்காக இலவசமாக வழக்காடினார். தேசிய இயக்கத்தின் ஓர் அங்கமான சுதேசி இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டார். தர்ம சங்க நெசவுச் சாலை எனும் அமைப்பையும் சுதேசி பண்டக சாலை எனும் அமைப்பை உருவாக்கினார். இவையிரண்டும் மக்களிடையே சுதேசி உணர்வை வளர்ப்பதற்காக உருவாக்கப்பட்டன. சேலம் விஜயராகவாச்சாரியார் என்பாருடன் ஏற்பட்ட தொடர்பின் காரணமாக இவர் ஒரு தீவிரவாதியானார். பல இடங்களில் கூட்டங்கள் நடத்தித் தீவிரவாதத்தைப் பிரச்சாரம் செய்தார். வ.உ.சி.யின் சொற்பொழிவுகள் பல இளைஞர்களை ஈர்த்தன.

**சுதேசிக் கப்பல் நிறுவனம்**

சுதேசி உணர்வில் திளைத்த வ.உ.சி. ஒரு மாறுபட்ட சுதேசி முயற்சியை மேற்கொண்டார். அக்காலத்தில் தூத்துக்குடியில் இயங்கிய ஆங்கிலேயக் கப்பல்கள் கொள்ளை லாபம் ஈட்டின. சுதேசிக் கப்பல்களை மிதக்கவிட முடிவு செய்தார் வ.உ.சி. மிகுந்த முயற்சிகளை மேற்கொண்டு 1906ல் சுதேசிக் கப்பல் கம்பெனியைத் தொடங்கினார். இக்கம்பெனிக்குக் கப்பல்கள் வாங்கத் திலகரின் உதவியை நாடினார். திலகரும் தனது சீடரான வ.உ.சி.க்கு உதவி செய்தார். காலியா, லோவா எனும் இரு கப்பல்கள் இந்தியச் சுதேசி இயக்கத்தின் எழுச்சியைப் பறைசாற்றிப் புறப்பட்டன. அக்கப்பல்கள் இயக்கத் தொடங்கியதை மகிழ்ச்சியுடன் பாராட்டிச் சுப்பிரமணிய பாராதியாார் தனது இந்தியா இதழில் கருத்துப் படங்களை வெளியிட்டார். தமிழ் இதழில் முதன்முதலாக வெளியிடப்பட்ட கருத்துப் படங்களாக அவை அமைந்தன. சுதேசிக் கம்பெனியை நசுக்கும் பொருட்டு ஆங்கிலக் கம்பெனியினர் தங்களது கட்டண விகிதங்களைக் கணிசமாகக் குறைத்தனர். இதனால் சுதேசிக் கம்பெனி இழப்பைச் சந்திக்க நேரிட்டாலும் வ.உ.சி. மனம் தளராது தொடர்ந்து செயற்பட்டார்.

**தீவிரச் செயற்பாடு**

பிபின் சந்திரபாலை மதராஸ் மாகாணத்திற்கு வரழைத்துப் பல கூட்டங்களில் பேசச் செய்தார் வ.உ.சி. பால் பேசிய கூட்டங்களில் தீவிரவாத வித்துக்கள் விதைக்கப்பட்டன. சுதேசி மற்றும் சுயராஜ்யம் ஆகிய இலட்சிய முழுக்கங்களை அவர் முழங்கினார். வந்தே மாதரம் என்ற விடுதலைப் போரின் போர் முழுக்கத்தை முழங்கினார். தென்னகமெங்கும்

இடியென முழங்கிய அவரை ஆங்கில அரசாங்கம் கைது செய்தது. பிபின் சந்திரபால் 1908 மார்ச் ஒன்பதாம் நாள் விடுதலை செய்யப்படுவார் எனும் செய்தி தீவிரவாதிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. அம்மகிழ்ச்சியைக் கொண்டாட வ.உ.சியும் அவரது நண்பர்களும் விழா எடுத்தனர். பிபின் சந்தரபாலை சுயராஜ்யச் சிங்கம் என வ.உ.சி. வர்ணித்தார். திருநெல்வேலியில் அவரது சொற்பொழிவு உணர்ச்சிகளைத் தூண்டும் வண்ணம் அமைந்திருந்தது. அன்னியப் பொருட்களை வெறுத்து ஒதுக்குமாறு மக்களைக் கேட்டுக் கொண்ட அவர் மூன்று மாதங்களில் சுயராஜ்யம் கிடைக்கும் என முழங்கினார். பொதுக்கூட்டம் முடிவடைந்த பின்னர் தன்னை வந்து சந்திக்குமாறு திருநெல்வேலி கலெக்டர் விஞ்ச் ஆணையிட்டார். வ.உ.சி. சுப்பிரமணிய சிவா மற்றும் பத்மனாப ஐயங்கார் ஆகியோருடன் கலெக்டரைச் சந்தித்தார். இச்சந்திப்பில் விஞ்ச் வ.உ.சியை கடுமையாக எச்சரித்தார். ஆனால் வ.உ.சி. கவலைப்படாமல் விஞ்சை எதிர்த்துப் பேசிவிட்டு வெளியேறினார். அவர்களிடையே நடந்த பேச்சு மோதலைச் சுப்பிரமணிய பாரதியார் அருமையான கவிதைகளாக வடித்து வெளியிட்டார்.

**கடுமையான தண்டனையேற்பு**

அவமானப்பட்டதாக உணர்ந்த விஞ்ச் தனது அடக்கு முறையைக் கட்டவிழ்த்தார். வ.உ.சி.பத்மனாப ஐயங்கார் மற்றும் சுப்பிரமணிய சிவா ஆகியோர் மீது சதி வழக்குத் தொடரப்பட்டது. திருநெல்வேலிச் செசனஸ் நீதிமன்றம் வ.உ.சியையும் சுப்பிரமணிய சிவாவையும் துரோகிகள் என முடிவு செய்தது. பத்மனாப ஐயங்கார் நிரபராதி என விடுவிக்கப்பட்டார். 1908 மார்ச் 12ல் அறிவிக்கப்பட்ட தீர்ப்பின்படி துரோகத்தனமான சொற்பொழிவை நிகழ்த்தியமைக்காக இருபதாண்டுகள் தீவாந்திரமும் சிவாவைத் துரோகத்திற்குத் தூண்டியதற்காக இருபதாண்டுகள் தீவாந்திரமுமாக நாற்பதாண்டுகள் நாடு கடத்தப்படத் தீர்ப்பளிக்கப்பட்டது. சுப்பிரமணிய சிவாவிற்குப் பத்தாண்டு நாடு கடத்தப்பட தீர்ப்பளித்தது. சென்னை உயர் நீதிமன்றத்திற்குச் செய்யப்பட்ட மேல் முறையீட்டின் காரணமாக வ.உ.சி.க்கு ஆறாண்டு சிறைத் தண்டனையும் சிவாவிற்கு நான்காண்டு சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டன.

**கண்டனப் போராட்டங்கள்**

வ.உ.சிக்கும் சிவாவிற்கும் அளிக்கப்பட்ட தண்டனைகள் மக்கள் மத்தியில் கடுமையான எதிர்ப்பை உருவாக்கின. திருநெல்வேலியிலும் பாளையங்கோட்டையிலும் அர்த்தால் மேற்கொள்ளப்பட்டது. பல இடங்களில் கண்டனக் கூட்டங்கள் நடந்தன. கண்டனம் செய்தவர்கள் மீது அரசாங்கம் கண் மூடித்தனமாக நடவடிக்கைகளை மேற்கொண்டது. பாளையங்கோட்டையில் நடைபெற்ற அர்த்தாலைத் தொடாந்து வன்முறை வெடித்தது. அரசாங்க அலுவலகங்கள் நொறுக்கப்பட்டன. அவ்வலுவலகங்-களிலிருந்த பொருட்களும் தீக்கிரையாக்கப்பட்டன. நகராட்சிக் கட்டிடம் தீ வைக்கப்பட்டது. கட்டுக் கடங்காத கூட்டத்தைக் கட்டுப்படுத்த மாவட்ட நீதிபதி இட்ட ஆணையின் பேரில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டில் நான்கு நபர்கள் இறந்தனர். தூத்துக்குடியில் பணியாற்றிய துணைக் கலெக்டர் ஆஷ்மிகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டார். திருநெல்வேலியில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் மாகாணமெங்கும் எதிரொலித்தன.

**செக்கிழுத்த செம்மல்**

கோவைச் சிறைச்சாலையில் வ.உ.சி. சொல்லொணாத் துயரங்கட்கு உள்ளானார். பல்வேறு உடலுழைப்புத் தண்டனைகள் அவருக்கு வழங்கபட்டன. செக்கை இழுத்துச் சுற்றும் தண்டனை அவருக்கு வழங்கப்பட்டது. இதனால் அவர் செக்கிழுத்த செம்மல் எனும் பட்டத்தைப் பெற்றார். பல்வேறு கொடுமைகட்கு உள்ளான போதும் வ.உ.சி. மனம் தளரவில்லை. அவரது தண்டனைக் காலம் முடிவடையும் முன்னரே 1921 டிசம்பரில் ஜார்ஜ் மன்னர் இங்கிலாந்தில் ஆட்சி பீடம் ஏறியதை முன்னிட்டு விடுதலை செய்யப்பட்ட கைதிகளில் வ.உ.சியும் ஒருவர். இந்த மண்ணின் விடுதலைக்காக முழங்கிச் சிறைப்பட்டு அல்லல்களை அனுபவித்த அவரை வரவேற்க ஓரிருவரே இருந்தனர்.

**பிற்கால நிலை**

சுதேசிக் கப்பல் கம்பெனியை உருவாக்கி நடத்தும் முயற்சில் தன் சொத்துக்களை இழந்தார். அரசாங்கத்தின் அடக்குமுறை காரணமாக வழக்கறிஞர் பணிகான அனுமதியை இழந்தார். சிறையில் செக்கிழுத்து வாடி விடுதலை பெற்று வெளியில் வந்த போது அரசியல் சூழ்நிலைகள் மாறியிருந்தன. சென்னையில் தங்கிச் சிறிது காலம் தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் தேசியச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டார். அவரது வாழ்க்கைச் செலவிற்காகத் திலகர் அவருக்கு ஒவ்வொரு மாதமும் ஒரு சிறிய தொகையை அனுப்பி வைத்தார். பின்னர் சில ஆங்கில நண்பர்களின் உதவியுடன் தனது வழக்கறிஞர் பணிக்கான அனுமதியை மீண்டும் பெற்றுத் தூத்துக்குடிக்கு திரும்பி வழக்கறிஞர் பணியைத் தொடர்ந்தார்.

தீவிரவாதியாகத் திகழ்ந்து அல்லற்பட்டுத் திரும்பிய வ.உ.சிக்குக் காந்தியப் போராட்ட வழிமுறைகளில் உடன்பாடு இருக்கவில்லை. அவர் காங்கிரசின் செயற்பாடுகளில் பங்கேற்காமல் ஒதுங்கியிருந்தார். ஆன்மிகத்திலும் இலக்கியத்திலும் ஈடுபாடு கொண்டு சில நூல்களை எழுதினார். நீதிக்கட்சியில் அவரை இணைப்பதற்கான முயற்சிகளும் கூட நடந்தன. ஆனால் அவர் அதற்கு முழுமையாக இசையவில்லை.

தமிழகத்தில் தீவிரவாதிகளின் பிரதிநிதியாகத் திலகர் சகாப்தத்தில் விடுதலைப் போராட்ட வீரராகத் திகழ்ந்து சாதனைகள் படைத்தவர் வ.உ.சி. அவர் ஒரு தொழிற்சங்கத் தலைவராகவும் இருந்தார். பல சீர்திருத்தக் கருத்துக்களையும் கொண்டிருந்தார். விதவை மறுமணம், கலப்புத் திருமணம் போன்றவற்றை ஆதரித்தார். தீண்டாமையை ஒழிக்கத் தீவிரமாக எழுதினார். அவர் ஒரு தமிழ்க் கவிஞராகவும் திகழ்ந்தார். தென்னாட்டின் திலகர் என அவரை நேசித்தவர்கள் அன்போடு அழைத்தனர்.

## சுப்பிரமணிய சிவா

மதுரை மாவட்டத்திலுள்ள வத்தலக்குண்டு எனும் இடத்தில் பிறந்தவர் சுப்பிரமணிய சிவா. வ.உ.சியின் நெருங்கிய தோழராகவும் திலகர் சகாப்தத்தின் வீரராகவும் திகழ்ந்தார். இளமைக் காலத்திலேயே சிலம்பம், குத்துச்சண்டை போன்ற வீர விளையாட்டுக்களில் நாட்டம் கொண்டிருந்தார். தாய்நாட்டுப் பற்று இயற்கையாகவே அவரது குருதியில் ஊறியது. அவரது வீர சாகசங்கள் பல இளைஞர்களை ஈர்த்தன. 1988ல் திருமணம் செய்து கொண்ட போதிலும் ஒரு துறவியைப் போல் இவர் வாழ்ந்தார்.

**இயக்கத்தில் பங்கேற்பு**

சுப்பிரமணிய சிவா வ.உ.சியுடன் இணைந்து தேசிய இயக்கப் போராட்டங்களில் பங்கேற்றார். அவருக்கு உறுதுணையாக இருந்து மக்கள் மத்தியில் தேதிய உணர்வைப் பரப்பப் பாடுபட்டார். கலெக்டர் விஞ்ச் வ.உ.சியை விசாரணைக்கு அழைத்தபோது இவரையும் சேர்த்து அழைத்தார். சதி வழக்குத் தொடரப்பட்ட போது சிவாவும் ஒரு சதிகாரர் எனக் குற்றம் சாட்டப்பட்டார். சிவாவைத் தூண்டி விட்ட குற்றத்திற்காக முதலில் வ.உ.சிக்கு இருபதாண்டு காலத் தண்டனை விதிக்கப்பட்டது. திருநெல்வேலி நீதிமன்றத்தில் பத்தாண்டுகள் தண்டனைக்கு உள்ளானார் சுப்பிரமணிய சிவா. சென்னை உயர்நீதி மன்றத்தில் செய்யப்பட்ட மேல் முறையீட்டில் அவரது தண்டனை நான்காண்டுகள் கடுங்காவலாகக் குறைக்கப்பட்டது.

சிதம்பரனாருடன் இணைந்து செயற்பட்ட சிவா சிறை வாழ்க்கையில் பிரிக்கப்பட்டார். மிகக் கடுமையான உடலுழைப்பிற்கு உள்ளானார் சிவா. சிறைத் தண்டனை நிறைவு பெற்று விடுதலையான போது சிறைக் கொடுமைகள் மற்றும் சுகாதாரக் கேடுகளின் காரணமாக ஒரு தொழுநோயாளியாக வெளிவந்தார். சிறைச்சாலைக் கொடுமைகளால் அவர் மனம் தளரவில்லை. வ.உ.சி. கோவைச் சிறையிலிருந்து விடுதலை பெற்ற போது அவரை வரவேற்க கோவைச் சிறைச்சாலை வாயிலில் காத்திருந்தார் சிவா.

சிறை வாழ்க்கைக்குப் பின்னர் வத்தலக்குண்டில் தங்கித் தேதியத்திற்காகப் பாடுபட்டார் சிவா. திலகரின் கருத்துக்களைத் தேதிய எழுச்சி பெறும் வண்ணம் சில நூல்களாக வடித்தார். பாரதியாரின் பல பாடல்களை மக்கள் மத்தியில் பரப்பும் பணியில் ஈடுபட்டார். மண்ணின் பற்றுக் கொண்டு திகழ்ந்த இராஜா தேசிங்கு மற்றும் சிவாஜி போன்றவர்களின் வரலாற்றை நாடகங்களாகப் படைத்து இளைஞர்களின் மனங்களில் எழுச்சியூட்டினார். வத்தலக்குண்டுவில் பாரதமாதா கோயில் எனும் கோயில் ஒன்றினைக் கட்டினார். சமய உணர்வுகளின் அடிப்படையில் தேசிய உணர்வை வளர்க்கப்பாடுபட்டார்.

## சுப்பிரமணிய பாரதியார்

அன்று தூத்துக்குடி மாவட்டத்தில் இருந்த எட்டயபுரத்தில் 1882 டிசம்பர் 11ம் நாள் சின்னச்சாமி ஐயருக்கும் இலட்சுமி அம்மாவிற்கும் மகனாகப் பிறந்தார் சுப்பிரமணிய பாரதி. ஐந்து வயதிலேயே தனது அன்னையை இழந்த இவரை இவரது சிறறன்னை அன்புடன் வளர்த்தார். இவரை ஒரு பெரிய விஞ்ஞானியாக்க வேண்டும் என அவரது தந்தை விரும்பினார். ஆனால் பாரதிக்குள்ளிருந்த பாவடிக்கும் உள்ளல் அவரை ஒரு தேசியக் கவியாக்கியது. பதினோராவது வயதிலேயே சிறப்பாகக் கவிதைகள் படைத்துப் ‘பாரதி’ எனும் பட்டத்தைப் பெற்றார். இவரது பதினான்காவது வயதில் செல்லம்மாள் என்ற ஏழு வயதுச் சிறுமியை மணந்தார். குடும்பச் சூழல்கள் காரணமாக வாரணாசி சென்ற இவர் அலகாபாத் பல்கலைக்கழகத்தின் மெட்ரிகுலேசன் தேர்வில் தேறினார். எட்டயபுரம் சமஸ்தானத்தில் சிறிது காலம் பணியாற்றிய பின்னர் மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகவும் பணிபுரிந்தார். பின்னர் சுதேசமித்திரன் இதழின் துணை ஆசிரியராகப் பொறுப்பேற்றார். 1906ல் இந்தியா எனும் இதழினைத் தொடங்கினார். வ.உ.சியின் சிந்தனைகளிலும் செயற்பாடுகளிலும் பாரதி ஈடுபாடு கொண்டார். கல்கத்தா காங்கிரசில் பங்கேற்கச் சென்ற பாரதியார் நிவேதிதாவைச் சந்தித்தார். அவரைத் தமது அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டார். வ.உ.சியும் சிவாவும் சிறைப்பட்டபோது அவர்களது வேண்டுகோளின்படி பாரதியார்

பாண்டிச்சேரிக்குச் சென்றார். அங்கிருந்து கொண்டு இந்தியா இதழைத் தொடர்ந்து வெளியிட்டார். 1918ல் அவர் பிரிட்டிஷ் இந்திய எல்லைக்குள் நுழைந்த போது கடலூரில் கைது செய்யப்பட்டார். சில நிபந்தனைகளின் அடிப்படையில் விடுவிக்கப்பட்ட பாரதி நெல்லை மாவட்டம் கடையம் எனும் கிராமத்தில் சிறிது காலம் இருந்தார். 1919ல் சென்னைக்குத் திரும்பி அங்கு காந்தியைச் சந்தித்தர். 1920ல் சுதேசமித்திரன் இதழின் துணை ஆசிரியரானார். 1921ல் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் யானையின் கால்பட்டுப் படுக்கையில் விழுந்த அவர் காலனின் கரம்பட்டு செப்டம்பர் 11ம் நாள் இயற்கை எய்தினார்.

**எழுச்சி படைத்த தேசியக்கவி**

சுப்பிரமணிய பாரதியார் தேசிய உணர்வைத் தமிழர் நெஞ்சங்களில் எழுச்சி பெறச் செய்யும் வண்ணம் உணர்ச்சி மிக்கக் கவிதைகள் பலவற்றைப் படைத்தார். அந்த முண்டாசுத் தலைக்குள்ளிருந்து கவிதை முத்துக்கள் உதிர்ந்தன. விடுதலையியக்க வித்துக்கள் விழுந்தன. 1907ல் அவரது சுதேச கீதங்கள் எனும் தேசியக் கவிதைகளின் தொகுப்பை வெளியிட்டார். இதில் முதல் பாடல் வந்தே மாதரம் எனும் பாடலாக இருந்தது. ஆயிரம் உண்டிங்கு சாதி எனில் அன்னியர் வந்து புகல் என்ன நீதி என ஒரு பாடலில் கேள்விக் கணை தொடுத்தார். அதே தலைப்புடன் அடுத்த ஆண்டிலேயே மற்றொரு கவிதைத் தொகுப்பு வெளியிடப்பட்டது. பாரதியார் வாழ்ந்த காலத்தில் அவரது கவிதைகள் பத்தொன்பது தொகுதிகளாக வெளிவந்தன. அவற்றில் பன்னிரண்டு தொகுதிகள் தேசியம் பற்றி அமைந்தன. அவரது மறைவிற்குப் பின்னர் படைக்கப்பட்ட நாற்பத்து நான்கு தொகுதிகளில் முப்பத்து இரண்டு நூல்கள் சுதந்திரத்திற்கு முன்பு வெளியிடப்பட்டன.

பாரதியாரின் பாடல்கள் பாடுவதற்கு எளிமையானவை. இனிமையானவை. பாமரனும் கேட்டுப் பரவசிக்கும் வரிகளை அவரது பேனா பிரசவித்தது. பல விடுதலைப் போராட்ட வீரர்கள் அவரது கவிதைகளை மன்னம் செய்து மேடைகளில் பாடினர். கல்வியறிவு இல்லாதவர்களும் கூடப்புரிந்து கொள்ளும் வண்ணம் அவரது கவிதைகள் உள்ளன. அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே என்ற அவரது பாடல் அஞ்சிச் செத்துக் கொண்டிருந்த இம்மண்ணின் மாந்தர்களின் நெஞ்சில் வீரத்தை விதைத்தது. பாரதியார் ஒரு தீவிரவாதியாகத் திகழ்ந்தார். திலகரையும் வ.உ.சியையும் இந்த மண்ணின் விடுதலைக்காக எழுந்த விடிவெள்ளிகள் என எண்ணினார். காந்தி சகாப்தம் தொடங்கிய சிறிது காலத்திலேயே அவர் மறைந்தாலும் காந்தியைச் சந்திக்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. வாழ்க நீ எம்மான் என அவரை வாழ்த்திப் பாடினார். இந்த மண்ணின் அரசியில் விடுதலைக்கு மட்டுமின்றிப் பெண்ணின் வாழ்க்கை விடுதலைக்காகவும் அவர் பாடினார். சாதியக் கொடுமைகளைச் சாடினார். ஆண்மிகச் சிந்தனையிலும் வழி தேடினார். காக்கை குருவியையும் கூட நேசித்த அந்த அமரகவி ஒரு சோசலிசச் சிந்தனையாளராகவும் திகழ்ந்தார்.

**இயக்கத் தொண்டராகப் பாரதி**

சுப்பிரமணிய பாரதியார் காங்கிரஸ் இயக்கத்தின் தொண்டராகவும் விளங்கினார். அதில் ஒரு தீவிர உறுப்பினராகச் செயற்பட்ட அவர் பனாரஸ் காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார். பால பாரதம் எனும் அமைப்பினை உருவாக்கி இளைஞர்கள் மத்தியில் தேசிய உணர்வை வளர்க்கப் பாடுபட்டார். அவ்வமைப்பின் சார்பில் கால்கத்தா (1906) காங்கிரஸ் மாநாட்டில் பங்கேற்றார். பிபின் சந்திரபாலின் அன்பைப் பெற்றவர் பாரதியார். 1907 சூரத்

காங்கிரசிலும் ஒரு பிரதிநிதியாகக் கலந்து கொண்ட பாரதியார் அங்கு ஏற்பட்ட பிளவில் திலகரின் அணியில் நின்று தன்னை ஒரு தீவிரவாதி எனப் பிரகடனம் செய்தார். தமிழகத்தின் பல இடங்களில் காங்கிரஸ் மேடைகளில் பாரதியார் முழங்கினார். அவர் இயற்றிய பாடல்களை அவரே மேடையில் பாடினார். சில சமயங்களில் மக்களின் கவனத்தை ஈர்க்கத் தெருக்களில் பாடிச் செல்வதும் வழக்கம்.

**பத்திரிக்கையாளராகப் பாரதி**

பாரதியார் கவிதைகள் படைத்துத் தமிழர் நெஞ்சங்களில் விடுதலை வித்துக்களை விதைத்தது மட்டுமின்றிப் பத்திரிக்கையாளராகவும் தேசியப் பணி புரிந்தார். சுதேசமித்திரனின் துணை ஆசிரியராக அவர் தனது பத்திரிக்கைப் பணியைத் தொடங்கும் போதே தேசியக் கருத்துக்களை எழுதத் தொடங்கினார். தமது எழுத்திற்கு முழுமையான சுதந்திரம் கிடைக்காத நிலையில் 1906ல் இந்தியா எனும் இதழில் ஆசிரியரானார். இதன் அதிகாரப் பூர்வமான ஆசிரியராக S. சீனிவாசன் என்பார் இருந்தார். ஆனால், உண்மையான ஆசிரியராகச் செயற்பட்டவர் பாரதியார். இதில் தேசிய மணம் பரப்பிய செய்திகளும் கட்டுரைகளும் வெளிவந்தன. வ.உ.சியின் சுதேசிக் கப்பல் கம்பெனிக்கு ஆதரவாக இவ்விதழில் பல கட்டுரைகளை எழுதினார். முதன் முதலில் கருத்துப்படம் வெளியிட்ட தமிழ் இதழ் இவரது இதழ் என்பது குறிப்பிடத்தக்கது. வ.உ.சியும் சிவாவும் கைது செய்யப்பட்டபோது அவர்களது வேண்டுகோளின்படி பாண்டிச்சேரிக்குச் சென்று அங்கிருந்து தனது இந்தியா இதழை வெளியிட்டு வந்தார். இந்தியா இதழிற்கு ஆங்கிலேயர்கள் பல இடையூறுகளைச் செய்தனர்.

சக்ரவர்த்தனி என்ற தமிழ்த் திங்கள் இதழ், கர்மயோகி எனும் தமிழ்த் திங்கள் இதழ், சூரியோதயம் எனும் வார இதழ் போன்றவற்றின் ஆகிரியராகவும் அவர் திகழ்ந்தார். விஜயா எனும் நாளிதழைச் சிறிது காலம் வெளியிட்டார். யங் இந்தியா எனும் ஆங்கில இதழில் பல கட்டுரைகளை எழுதினார். ஏறத்தாழப் பதினேழு ஆண்டுகள் அவர் ஒரு பத்திரிக்கையாளராகச் செயற்பட்டார். பத்திரிக்கையாளர் என்ற தமது நிலையைத் தேசத்திற்காகவே அவர் பயன்படுத்தினார். அவரது கட்டுரைகள் அரசியல் கருத்துச் செறிவும் தேசிய உணர்வும் மிக்கவையாக இருந்தன. ஒரு தேசியப் பத்திரிக்கையாளர் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்குப் பாரதியார் முன் மாதிரியாக அமைந்தார் என்பவதில் ஐயமில்லை.

**திலகரின் சகாப்தத்தின் நிறைவு**

தீவிரவாதிகள் மேலாதிக்கம் செலுத்திய திலகரின் சகாப்தம் விரைவிலேயே நிறைவு பெற்றது. வ.உ.சி. தீவிர அரசியல் இயக்கத்திலிருந்து ஒதுங்கினார். காந்தியப் போராட்ட வழிகளில் அவர் நம்பிக்கை கொள்ளவில்லை. சுப்பிரமணிய பாரதியார் காந்தியின் தலைமையை ஏற்றுக் கொண்டது போன்ற கருத்துக்களை வெளியிட்டார். திலகரின் மறைவு, முதல் உலகப்போரின் தொடக்கம், இந்திய தேசிய இயக்கத்தில் காந்தியின் எழுச்சி போன்ற காரணங்களால் தமிழகத்தில் திலகரின் சகாப்தம் நிறைவு பெற்றது. நீதிக்கட்சியின் எழுச்சியும் தன்னாட்சி இயக்கமும் தேசிய இயக்கத்தில் சில தாக்கங்களை உருவாக்கின.

## நீதிக்கட்சியும் ஈ.வே.ராவும்

இந்நூற்றாண்டின் இரண்டாம் பத்தாண்டுக் காலத்தில் பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் தோன்றிய வரையில் முக்கியமாக வேறுவித அரசியல் இயக்கங்கள் தோன்றவில்லை. பார்ப்பனரல்லாதார். இயக்கத்தை தியாகராஜ செட்டியார், டி.எம். நாயர் என்னும் இருவர்

தொடங்கி வைத்தனர். அவர்கள் ஆரம்பித்த கட்சிக்கு நீதிக்கட்சி என்று பெயரிடப்பட்டது. அக்கட்சியின் தலைவர்கள் பார்ப்பனர்கள் பொது வாழ்க்கையிலும் அரசு நிறுவனங்களிலேயும் கொண்டிருந்த அளவுக்கு மிஞ்சிய செல்வாக்கினை எதிர்த்தனர் அதே அளவு அவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியைப் போற்றினர்.

1919ல் வெளியிடப்பட்ட மான்ட்போர்டு சீர்திருத்தங்களின் விளைவாக மாகாணங்களில் அமைக்கப்பட்ட இரட்டை ஆட்சி அரசு முறையினைக் காங்கிரஸ் கட்சியினர் எதிர்த்தனர் குறை கூறினர். ஆனால் நீதிக் கட்சியினர் அச்சீர்திருத்தத் திட்டத்தை ஏற்றுக் கொண்டு சென்னை மாகாணத்தில் ஆட்சி நடத்தினர். 1926ல் காங்கிரஸின் ஒரு பகுதியாயிருந்த சுயராஜ்யக் கட்சியினர் ஆட்சியில் ஒத்துழைக்கத் துணிந்த வரையில் நீதிக்கட்சியினர் சென்னை மாகாணத்தை அமைச்சர்களாயிருந்து ஆண்டனர். தமிழ்நாட்டில் காங்கிரஸ் அரசியல் வலுவாகப் புகுந்த பிறகு நீதிக் கட்சியின் அரசியல் பிடிப்புத் தளர்ந்து போயிற்று. அதனையடுத்து அதன் சில கொள்கைகளை ஆதாரமாகக் கொண்டு உருவானது திராவிடர் இயக்கம், அவ்வியக்கத்தை ஆரம்பித்தவர் ஈ.வே.ராமசமி நாயக்கர் என்பவர். இப்புது இயக்கம் அரசியல் கிளர்ச்சி, சமூகச் சீர்திருத்தம் என்னும் இரு துறைகளிலும் கவனத்தைச் செலுத்திற்று. ஆயினும் அதன் அடிப்படைத் தத்துவம் ‘பார்ப்பனர் எதிர்ப்பு’ என்பதுதான். அவ்வியக்கத்தார் தேசிய விடுதலையைப் பற்றிக்கூட அத்துணை அக்கறைப்படவில்லை பார்ப்பனர் அல்லாதாரின் முன்னேற்றம் அவர்களுடைய முக்கிய குறிப்கோளாயிருந்தது. அதன் செல்வாக்குத் தமிழகத்தில் இன்னும் வலுத்துள்ளது. நீதக்கட்சியின் தொடக்க காலத்தில் அதன் தலைவர்களிற் பெரும்பாலோர் தெலுங்கு பேசுபவர்களாயிருந்தனர் ஆயினும் அதன் பின் தோன்றல்களாக வந்துள்ள இயக்கங்கள் பெரும்பாலும் தமிழகத்திலேயே சிறந்து விளங்குகின்றன. இதற்குக் காரணம் இக்கட்சியின் கொள்கைகள் வேறு இடங்களில் கைகூடிவிட்டன. தமிழகத்தில் மட்டும் இன்னும் சிறிது தடைப்பட்டு நிற்கின்றன என்பதாக இருக்கலாம். நீதிக்கட்சி ஆட்சி செலுத்தி வந்த காலத்தில் சில அரசு உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டன. அவை சாதி அடிப்படையில் அரசியல் அலுவல்களைப் பகிர்ந்து கொடுப்பதைப் பற்றியவை. அவற்றின்படி ஒவ்வொரு சாதிக்கும் இவ்வளவு சதவிகிதம் என்னும் முறையில் பொது அலுவல்கள் பிரித்து வைக்கப்படும். அதன்படி அலுவலர் நியமிக்கப்படுவர். இதனைச் “சாதிவாரி அரசு உத்தரவு” என்பர்.

1916ல் நீதிக்கட்சி தமிழகத்தில் தோன்றியதிலிருந்து ஒரு விந்தையான அரசியல், சமுதாய நிலைமை இங்கு நிலவுவதாயிற்று. அதனை ஒரளவிற்கு அகில இந்தியாவில், சிறப்பாக வட இந்தியாவில், நிலவிய இந்து-முஸ்லிம் பிரசினையோடு ஒப்பிடலாம். அங்கு முஸ்லிம்கள், பெரும்பான்மையினரான இந்துக்கள் அரசியல் அதிகாரத்தைச் செலுத்தும் வாய்ப்பினைப் பெறுவராயின், சிறுபான்மையினரான தங்களை அடியோடு அடிப்படுத்தி விடுவரோ என்று அஞ்சியதால் தோன்றியது அப்பிரசினை. ஆனால் தமிழகத்தில் உருவெடுத்த பார்ப்பனரல்லாதார் இயக்கம் பெரும்பான்மையினரான பார்பனரல்லாதார் மிகச் சிறுபான்யையினரான பார்ப்பனரின் ஆதிக்கத்தினின்றும் விடுபட விழைந்து தோன்றியதாகும். அனிபெசன்ட் அம்மையார் ‘ஹோம்ரூல்’ (சுயாட்சி) இயக்கத்தைத் தொடங்கியபோது பார்ப்பனரல்லாதார் இயக்கம் வலுப்பெற்று அவ்வம்மையாரை எதிர்த்தது. அவ்வெதிர்ப்பு பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு ஒரு பெரிய அரசியல் வாய்ப்பாக அமைந்தது. நீதிக்கட்சியினர்

அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தங்களைக் கண்டும் அஞ்சினர். அப்போதிருந்து நிலையில் ஜனநாக ஏற்பாடுகள் கூட அவர்களுக்கு வேண்டா வெறுப்பை அளித்தன. 1921 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணிப்பின் படி மொத்த மக்களின் இரண்டு சதவிகிதத்தினராக இருந்த பார்ப்பனர் அரசு அலுவல்களில் மிக மேல்நிலையில் இருந்த நடுத்தர அலுவல்கள் வரையில் மிகப் பெரும்பான்மை வேலைகளில் இருந்தமையால், பிறருக்கு அவ்வேலைவாய்ப்புகள் மறுக்கப்பட்டன. என்பதோடு அரசில் பார்ப்பனருக்கு அளவுகடந்த செல்வாக்கு இருந்தது என்பதும் சுட்டிகாட்டப்பட்டது, நீதிக்கட்சியினர் அனிபெஸன்ட் அம்மையாரின் சுயாட்சி இயக்கத்தை வன்மையாய்க் கண்டித்தனர்.

நீதிக் கட்சியினர் 1920 தேர்தலில் கலந்து கொண்டு போட்டியிட்டு எளிதில் வெற்றி பெற்றனர். தேர்தல் முடிவுகள்படி 65 பார்ப்பனரல்லாதரும், 22 பிராமணர்களும், 5 முஸ்லிம்களும், 14 இந்தியக் கிருத்துவர்களும், 5 அரசு நியமனர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நீதிக்கட்சி உறுப்பினர்களில் செல்வந்தரான நிலச்சுவான்தார்கள், நகர்ப்புறத்து இடைநிலை வகுப்பினரான அலுவலர்கள் முதலியோர் இருந்தனர். பொருளாதார வசதி மிக்கவர்கள் அக்கட்சியில் இருந்தனர். தேர்தலில் வெற்றிடைந்து கூட நீதிக்கட்சித் தலைவரான தியாகராஜ செட்டியார் அமைச்சரவை அமைக்க முன் வராததால், கடலூரில் புகழ் பெற்ற வழக்கறிஞராயிருந்த அ. சுப்பராயலு ரெட்டியார் முதலமைச்சரானார்.

## இராஜகோபாலச் சாரியார் (1879-1972)

**வாழ்க்கைக் குறிப்பு**

சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி சேலம் மாவட்டத்தில் ஒரு வைணவப் பிராமணக் குடும்பத்தில் மூன்று மகன்களிடையே இளையவராகப் பிறந்தார். இவரது தந்தை கிராம முன்சீப்பாகப் பணியாற்றினார். சென்னையிலும் பெங்களூரிலும் தனது கல்வியை முடித்து வழக்கறிஞரானார் இராஜாஜி. மிக ஆழமான இலக்கிய அறிவும் ஆர்வமும் கொண்டிருந்த அவர் ரௌலட் சட்டத்திற்கு எதிரான போராட்டத்தால் ஈாக்கப்பட்டுத் தேதிய இயக்கத்தில் இணைந்தார். சேலம் நகராட்சியின் தலைவர், இந்திய மதுவிலக்குக் கழகத்தின் செயலர் போன்ற பதவிகளை வகித்தார். மதராஸ் மாகாகணக் காங்கிரசின் வழிகாட்டியாகச் செயற்பட்டார். இருமுறை இம்மாகாணத்தின் முதலமைச்சராக இருந்தார். விடுதலைக்கு முன்னரே காங்கிரஸ் கட்சியில் கருத்து வேறுபாடு காரணமாக விலகி இருந்தார். இந்தியாவின் முதல் இந்திய கவர்னர் ஜெனரல் மற்றும் இந்தியாவின் கடைசி கவர்னர் ஜெனரல் என்ற பொறுப்பினை வகித்துப் பெருமை சேர்த்தவர். விடுதலைக்குப் பின்னர் சுதந்திரக்கட்சி என்ற புதிய கட்சியைத் தொடங்கித் தேசிய அரசியலில் ஒரு நல்ல எதிர்க்கட்சியாகச் செயற்படச் செய்தார். தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, ஆகிய கொள்கைகட்காக அயராது பாடுபட்டார். அணு ஆயுதக் கொள்கைக்கு எதிராகவும் இயக்கம் நடத்தினார். சிறந்த எழுத்தாளராகவும் திகழ்ந்தவர் இராஜாஜி. சாணக்கியர் என்று பலராலும் குறிப்பிடப்பட்ட அவர் 1967ல் தமிழகத்தில் காங்கிரசிற்கு எதிரான கூட்டணியை உருவாக்கினார். இந்தித் திணிப்பிற்கு எதிராக 1965ல் குரல் கொடுத்தார். முற்றிலும் எதிரான கொள்கைகளைக் கொண்ட பெரியாரின் நட்பை இவர் பெற்றிருந்தார்.

**காங்கிரஸ் இயக்கப் பணிகள்**

அனைத்திந்தியக் காங்கிரஸ் கட்சியின் செயலராகவும் மாகாணக் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகவும் சிறப்பாகச் செயற்பட்டார். வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரகத்தைச் சிறப்பாகத் தலைமையேற்று நடத்தினார். காந்தியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த அவரது ஆலோசனைகளைக் காந்தி ஏற்றுக் கொண்டார். 1937ல் அரசாங்கத்தில் பங்கேற்பது தொடர்பான பிரச்சினையில் காங்கிரஸ் கட்சி ஒரு சாதகமான முடிவினை மேற்கொள்வதில் இராஜாஜியின் பங்கு முக்கியமானது. இம்மாகாணத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். இந்தியாவில் தேசியத்தைக் கட்டிக் காக்க ஒரு தேசிய மொழி அவசியம் எனக் காந்தி நினைத்தார். அத்தகைய மொழியாக இந்தியைக் கருதிய அவர் இந்திப் பிரச்சாரத்தையும் காங்கிரஸ் கட்சியின் ஒரு செயற்திட்டமாக வகுத்தளித்தார். இம்மாகாகணத்தில் இந்தியை அறிமுகம் செய்ய இராஜாஜி திட்டமிட்டு அதனைப் பள்ளிகளில் அறிமுகம் செய்தார். இதன் காரணமாகத் தமிழகத்தில் முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் எழுந்ததது. 1938-39 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 125 உயர்நிலைப் பள்ளிகளில் இந்தியைக் கற்றுக் கொடுக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதை நீதிக்கட்சியினர் கடுமையாக எதிர்த்தனர். இந்தித் திணிப்பிற்கு எதிராகக் கிளம்பிய இயக்கம் தனித்திராவிட நாட்டுக் கோரிக்கைக்கு வழிவகுத்தது. முதலமைச்சராகப் பணிபுரிந்த முதற்கால கட்டத்தை நிறைவு செய்து 1939 இராஜாஜி இராஜினாமாச் செய்தார்.

**சென்னைத் தீர்மாணம்**

இரண்டாவது உலகப் போரில் ஜப்பான் விரைவான வெற்றிகளைப் பெற்று தென்னகத்தின் வழியாக இந்தியாவை தாக்கலாம் என்ற சூழ்நிலையேற்பட்டது. இந்நிலையில் பிரிட்டிஷ்காரர்களுடன் போர் முயற்சிகளில் இந்தியர்கள் ஒத்துழைக்க வேண்டும் என ஆங்கில அரசாங்கம் எதிர்பார்த்தது. காங்கிரஸ் கட்சி இதனை ஏற்கவில்லை. இந்நிலையில் 1942 ஏப்ரலில் இராஜாஜியின் தலைமையில் இம்மாகாணச் சட்டமன்றக் காங்கிரஸ் கட்சி ஒரு தீர்மாணத்தை நிவேற்றியது. இத்தீர்மானத்தின் ஒரு பகுதி முஸ்லீம் லீக்கின் தனி நாடு கோரிக்கையை அங்கீகரிக்கப்பரிந்துரைத்தது. மற்றொரு பகுதி மத்தியில் ஒரு தேசிய அரசாங்கம் அமைக்கப்படுவதையும் மாநிலங்களில் கூட்டணி அரசாங்கங்கள் அமைக்கப்படுவதையும் பரிந்துரைத்தது. சென்னைத் தீர்மானம் என்று அழைக்கப்பட்ட இது மிகுந்த சலசப்பை ஏற்படுத்தியது. மாகாண அளவிலான கூட்டணி அரசாங்கம் அமைக்கும் யோசனையை இராஜாஜி ஆளுநரிடம் கூறியதோடு மட்டுமின்றிக் காங்கிரசிலிருந்து பிரிந்து வந்து கூட அத்தகைய அரசாங்கத்தை அமைக்கத் தயாராக இருப்பதாக கூறினார். ஜப்பானின் தாக்குதல் தொடர்பான அச்சத்தின் காரணமாக இத்தகைய நிலையை அவர் மேற்கொண்டார். எனினும் சென்னைத் தீர்மானம் மிகுந்த கண்டணத்திற்குள்ளாகியது. இதனை வடிக்கவும் நிறைவேற்றவும் காரணமாக இருந்த இராஜாஜி அரசியல் செயற்பாடுகளில் விலகி இருக்க வேண்டிய நிலை எழுந்தது.

**காங்கிரசில் கருத்து வேறுபாடு**

பல்வேறு கருத்து வேறுபாடு காரணமாகக் காங்கிரஸ் செயற்பாடுகளில் விலகியிருந்த இராஜாஜி மீண்டும் மாகாணக் காங்கிரசில் இணைய விரும்பினார். அவரது முயற்சிக்குத் தேசிய அளவில் காந்தி, படேல் நேரு போன்ற தலைவர்கள் ஆதரவளித்தனர். ஆனால்

காமராஜரும் பிற மாகாணத்தலைவர்களும் அவர் மீண்டும் காங்கிரசில் இணைவதை விரும்பவில்லை. இராஜாஜி மீண்டும் மாகாணக் காங்கிரசில் சேர்க்கப்படும் விஷயம் பெரிய பிரச்சினையாக எழுந்தது, இப்பிரச்சினையில் மனம் நொந்து 1946ல் மீண்டும் அரசியல் வனவாசம் கொள்வதாகக் கூறி விலகியிருந்தார். காங்கிரசின் செயற்பாடுகளிலிருந்து விலகியிருந்தாலும் பொது வாழ்க்கையிலிருந்து விலகவில்லை. தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கை நலனிற்காகப் பாடுபடத் தொடங்கினார். குறிப்பாக அவர்களது கோவில் நுழைவுப் போராட்டங்கட்கு ஆதரவளித்தார்.

**பிற பதவிகள்**

1946-47ல் கவர்னர் ஜெனரலின் நிர்வகக் குழு உறுப்பினராகவும் 1947 ஆகஸ்ட் முதல் நவம்பர் வரை மேற்கு வங்காளத்தின் ஆளுநராகவும் பணியாற்றினார். 1948 முதல் 1950 வரை கவர்னர் ஜெனரலாகப் பதவி வகித்தார். 1952 முதல் 1954 வரை இரண்டாவது முறை இம்மாகணத்தின் முதலமைச்சராகப் பணியாற்றினார். தான் மேற்கொண்ட கொள்கைகட்காக அயராது பாடுபடும் பண்புகளைப் பெற்றிருந்த இராஜாஜி ஓர் அரசியல் அறிஞராகத் திகழ்ந்தார்.

## சத்தியமூர்த்தி (1887-1943)

**வாழ்க்கைக் குறிப்பு**

புதுக்கோட்டை மாவட்டத்தில் பிறந்து வளர்ந்து, சென்னைக் கிறிஸ்த்துவக் கல்லூரியில் பட்டம் பெற்றுச் சட்டம் பயின்று வழங்கறிஞரான சத்தியமூர்த்தி இளவயதிலேயே தேசியச் சிந்தனையுடன் திகழ்ந்தார். சீனிவாச சாஸ்திரியுடன் 1919ல் இங்கிலாந்து சென்று வந்த அவர் சிறந்த பேச்சாளராகவும் செயல்வீரராகவும் திகழ்ந்தார். 1923ல் சென்னைச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்தெடுக்கப் பட்டார். சிறந்த பாராளுமன்றப் பண்புகள் நிறைந்த அவரது சட்டமன்றச் சொற்பொழிவுகள் தலைவர்களாலும் மக்களாலும் பாராட்டப்பட்டன. காந்திய சகாப்தத்தில் இந்தியத் தேசியக் காங்கிரசில் இணைந்த அவர் சிறந்த தேசியவாதியாகத் திகழ்ந்தார். தமிழ்நாடு காங்கிரஸ் பல பொறுப்புகளை வகித்த அவர் 1939ல் சென்னை நகர மேயராகவும் இருந்தார். 1940ல் சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பொறுப்பேற்க அழைப்பு விடப்பட்டபோது தேசியப் பணிகட்காக அதனை மறுத்தார். 1942 ஆகஸ்ட் 11ம் நாள் அனைத்திந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் கூட்டத்தில பங்கேற்றுச் சென்னைக்குத் திரும்பிக் கொண்டிருந்த இவரை அரக்கோணம் இரயில் நிலையத்தில் கைது செய்தனர். முதலில் வேலூர்ச் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட இவரை ஆங்கிலேயே அரசாங்கம் அம்ரோதி சிறைச்சாலைக்கு மாற்றியது. நாக்பூர்லிருந்து தொண்ணூறுகல் தொலைவிலுள்ள அச்சிறைச் சாலையில் அவர் சொல்லொளாத்துயருற்றார். பின்னர் காங்கிரஸ் கட்சியினரின் முறையீட்டிற்குப் பின்னர் சென்னைக்குத் திரும்பவும கொண்டு வரப்பட்டார். உடல் நலம் குன்றிய நிலையில் சென்னை பொது மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட சத்தியமூர்த்தி 1943 மார்ச 28 ஆம் நாள் ஒரு கைதியாகவே காலமானார். தேசிய இயக்கத்தில் திடமான நம்பிக்கையும் ஈடுபாடும் கொண்டிருந்த அவர் தன்னை இராமபிரானின் படையில் கடைசி வானரம் எனச் சொல்லிக் கொண்டார். ஆங்கிலேயரின் அடக்கு முறைக்கும் நீதிக்கட்சியின் எதிர்ப்பிற்கும் இடையில் இம்மாநிலத்தில் காங்கிரஸ்

இயக்கத்தை வளர்க்கவும் காக்கவும் அரும்பாடுபட்ட அவரது நினைவாகச் சென்னையிலுள்ள காங்கிரஸ் தலைமையகம் சத்தியமூர்த்தி பவனம் எனப் பெயற் சூட்டப்பட்டுள்ளது.

**காங்கிரஸ் இயக்கப் பணி**

இளைஞராகவே காங்கிரஸ் இயக்கத்தில் இணைந்த சத்தியமூர்த்தி சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்து காங்கிரஸ் கட்சி தேர்தல்களில் பங்கேற்பதில் ஆர்வம் காட்டினார். பல்வேறு குழுக்களின் மேலாதிக்கத்தில் சிக்கியிருந்த காங்கிரஸ் கட்சியில் இராஜாஜியின் செல்வாக்கு அதிகமாகியது. தேசிய அளவில் காந்தியுடனும் மற்றத் தலைவர்களுடனும் நெருங்கிய தொடர்பினைப் பெற்றிருந்த அவர் சத்தியமூர்த்தி போன்ற இளைஞர்களைச் சட்டை செய்யவில்லை. அடிமட்டத் தொண்டர்களுடனும் மக்களுடனும் தொடர்பு கொண்டு காங்கிரஸ் இயக்கத்தில் ஓரளவு செல்வாக்கினைப் பெற்று வந்த காமராஜர் மற்றும் அவரது நெருங்கிய நண்பர் அண்ணாமலைப் பிள்ளை ஆகியோரது தொடர்பு சத்தியமூர்த்திக்கு ஏற்பட்டது, அவர்களுடைய நட்புடன் காங்கிரஸ் கட்சியின் அமைப்புத் தேர்தல்களில் குறிப்பிடத்தக்க பங்கினைச் செய்தார். இதனால் இயக்கதில் முக்கியத்துவம் பெற்ற இவர் 1930 மற்றும் 1935ல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவரானார். இப்பொறுப்பினைச் சிறப்பாகச் செய்து தமிழகத்தில் காங்கிரஸ் பேரியக்கத்தைக் கட்டிக் காத்தார்.

**விவசாயிகளின் இயக்கம்**

சட்டமறுப்பு இயக்கத்திற்குப் பின்னர் சற்றுத் தொய்வடைந்திருந்த காங்கிரசை மீண்டும் வலிமைப்படுத்தும் முயற்சியில் காங்கிரஸ் தலைவர்கள் ஈடுபட்டபோது சத்தியமூர்த்தி அம்முயற்சியில் தனது பங்கினைச் செலுத்தினார். அத்தகைய நோக்கத்திற்காக ஹரிஜன மேம்பாட்டு இயக்கம் நடத்தப்பட்டது. அவ்வியக்கத்தின் காரணமாகப் பல தாழ்த்தப்பட்ட மக்களும் பிராமணர் அல்லாதோரும் காங்கிரசிற்கு ஈர்க்கப்பட்டனர். அதே போன்று விவசாயிகளின் பிரச்சினைகளை முன் வைத்து ஓர் இயக்கத்தை நடத்தச் சத்தியமூர்த்தி ஏற்பாடு செய்தார். அதன்படி 1933ல் சட்டமன்ற உறுப்பினர்களை ஒருங்கிணைத்து நிலவருவாய் தினம் என்ற நாள் அனுஷ்டிக்கப்பட்டது. நிலவரியில் 33.3 சதவிகிதம் குறைக்க வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது. பொருளாதாரப் பெருமந்தத்தின் காரணமாகத் தானியங்களின் விலைகள் வீழ்ச்சியடைந்திருந்தன. இதனால் பாதிக்கப்பட்டிருந்த விவசாயிகள் இந்த இயக்கத்தால் கவரப்பட்டனர். இவ்வியக்கத்தை ஓர் அரசியல் யுத்தி என ஆங்கிலேய அரசாங்கம் கருதியது. எனினும், மத்திய அரசாங்கத்தின் வற்புறுத்தல் காரணமாக 1934 சனவரியில் அறுபது இலட்ச ரூபாய் அளவில் வரிச்சலுகை அளிக்கப்பட்டது. இவ்வாறு காங்கிரஸ் இயக்கத்தின் எழுச்சிக்கு வழிவகுத்தது.

**உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்கள்**

1935ல் நடைபெற்ற உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்களில் காங்கிரசின் நிலையை வலுப்படுத்தச் சத்தியமூர்த்தி காமராஜர் ீ.ளு. குமாரசாமிராஜா மற்றும் பக்தவச்சலம் ஆகியோரது உதவியுடன் சிறப்பாகச் செயற்பட்டார். ஊழலை அகற்றவும் சுதேசிப் பொருட்களின் வேட்பாளர்கள் பாடுபடுவார்கள் எனச் சத்தியமூர்த்தி அறிவித்தார். இத்தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி கணிசமான வெற்றியைப் பெற்றது. குறிப்பாக சென்னை மாநாகராட்சியில் காங்கிரசின் கட்டுப்பாட்டில் வந்தது.

**சட்டமன்றப் பணி**

சென்னைச் சட்டமன்றத்தில் சத்தியமூர்த்தி ஆற்றிய பணிகள் குறிப்பிடத்தக்கவை. தனது பேச்சாற்றலின் மூலம் தேசிய இயக்கக் கொள்கைகளின் அடிப்படையில் கருத்துக்களை ஆணித்தரமாக உரைப்பதில் திறமை பெற்றிருந்தார். அவரது சட்டமன்றப் பணிகளில் மிகவும் குறிப்பிடத்தக்கது பாரதியாரின் பாடல்களுக்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து அவர் சட்டமன்றத்தில் நிகழ்த்திய சொற்பொழிவாகும். 1928 ஆகஸ்ட் 7ஆம் நாள் பர்மா அரசாங்கம் பாரதியாரின் பாடல்கட்குத் தடை விதித்தது. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஒரு பகுதியாக இருந்த பர்மாயில் வாழ்ந்த தமிழர்கள் பாரதியார் பாடல்களால் தூண்டப்பட்டதாக அரசாங்கம் கருதியது. அக்காலத்தில் பிரிட்டிஷ் பகுதிகளில் ஓர் அரசாங்கம் இயற்றிய சட்டம் மற்றப் பகுதிகளிலும் பொருந்தும் என்ற அடிப்படையில் 1928 செப்டம்பர் 11 ஆம் நாள் சென்னை அரசாங்கம் அரசு இதழில் அவ்வாணையை அறிவித்தது. அதன்படி பாரதியார் பாடல்களைக் கொண்ட நூல்கள் பறிமுதல் செய்யப்பட்டன. நூல்களை வெளியிட்ட வெளியீட்டாளரான ஹரிஹர சர்மா கைது செய்யப்பட்டார்.

ஆங்கில அரசாங்கத்தின் அடக்குமுறையை எதிர்த்துச் சட்ட மன்றத்தில் 1928 அக்டோபர் 9ஆம் நாள் சத்தியமூர்த்தி ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். இரண்டு மாதங்கட்கு முன்னர்தான் பாரதியாரின் பாடல்களைப் பள்ளிகளைல் கற்பிப்பதை அரசாங்கம் எதிர்க்காது என முதலமைச்சர் அறிவித்திருந்தார். இதனைச் சுட்டிக் காட்டிய சத்தியமூர்த்தி பாரதியார் பிரிட்டிஷ் இந்தியாவில் பிறந்தது. துரதிர்ஷ்டம் என்றார். பாரதியாரின் கவிதை வரிகளில் சிலவற்றைச் சத்தியமூர்த்தி பாடிக்காட்டினார். இவ்வரிகள் முதலமைச்சர் சுப்பராயனின் குருதியைச் சூடாக்கவில்லையா என்றம் இதயத்துடிப்பை படபடக்கச் செய்யவில்லையா என்றும் கேள்விக் கணைகள் தொடுத்தனர். பின்னர் 1929 சனவரியில் பாரதியார் பாடல்கள் மீதான தடை ரத்துச் செய்யப்பட்டது.

ஒரு சாதாரணத் தொண்டராகக் காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்த சத்தியமூர்த்தி தமிழ்நாடு காங்கிரசின் தலைவராக எழுச்சி பெற்றார். கட்டிக்குள்ளிருந்த குழுக்களிடையிலான அரசியலில் சத்தியமூர்த்தி தனது நிலையை உறுதிப்படுத்திக் கொண்டார். இந்திய விடுதலைக்கான போராட்டங்களில் வீரத்துடன் பங்கேற்ற அவர் அடக்குமுறையின் கொடுமைகட்கு உள்ளாகி ஒரு கைதியாகவே மாண்டார்.

## காமராஜர் (1903-1976)

**வாழ்க்கைக் குறிப்பு**

விருதுநகரில் குமாரசாமி சிவகாமி அம்மாள் தம்பதிக்கு மகனாகப் பிறந்தார் காமராஜர். முறைப்படியான கல்வியறிவு அதிகம் பெற வாய்பில்லாத காமராஜர் சிறு வயதிலேயே ஒரு வணிகரிடம் பணியில் சேர்ந்தார். 1923ல் சுயராஜ்யக் கட்சி உள்ளாட்சித் தேர்தல்களில் போட்டியிடத் தொடங்கிய போது சத்தியமூர்த்தி காமராஜரைப் பொது வாழ்க்கையில் இணைத்தார். மாறுபட்ட சமுதாயச் சூழலில் கீழ்மட்ட மக்களின் பிரதிநிதியாக அரசியலில் பங்கேற்ற காமராஜர் பல்வேறு போராட்டங்களிலும் குதித்தார். 1930ல் வேதாரண்யம் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்று இரண்டாண்டு சிறை தண்டனை பெற்றார். ஆறு முறை சிறை சென்ற அவர் ஏறத்தாழ எட்டரை ஆண்டுகள் இந்நாட்டிற்காகச் சிறையில் இருந்தார். சத்தியமூர்த்தியைத் தமது அரசியல் குருவாக ஏற்றுக்கொண்ட காமராஜர் காங்கிரஸ் கட்சியில்

முக்கியத்துவம் பெற்றுத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவரானார். 1954 முதல் 1963 வரைத் தமிழக முதலமைச்சராகவும் 1963ல் அனைத்திந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகவும் பொறுப்பேற்றார். நேரு மறைந்த போதும் சாஸ்திரி மறைந்தபோதும் நாட்டின் அடுத்த பிரதமர் யார் என்பதை முடிவு செய்பதில் காமராஜரின் பங்கு முக்கியமானதாக இருந்தது. காலா காந்தி என்றும் பெருந்தலைவர் என்றும் ஜனநாயக சோசலிசச் சிற்பி என்றும் மக்களாலும் தொண்டர்களாலும் போற்றப்படும் தேதியத்தலைவர் காமராஜர்.

**இயக்கத்தில் எழுச்சி**

தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சி பிராமணர்களின் மேலாதிக்கத்தில் சிக்கித் தவித்த காரணத்தால் தேசியச் சிந்தனை கொண்டிருந்த சிலர் நீதிக்கட்சியில் இணைந்தனர். காங்கிரஸ் இயக்கத்தின் மேல்பட்ட அரசியல் குழப்பங்களில் அதிக நாட்டம் காட்டாத செயல் வீரர்கள் (activists) குழு ஒன்று செயற்பட்டது. அத்தகைய செயற்குழுவின் செயல்வீரராகக் காமராஜர் எழுச்சியடைந்தார். சாதாரணப் பிற்பட்ட சமுதாயத்தின் பிரதிநிதியாக இருந்த அவர் தன்னுடன் கருத்தொருமிப்புக் கொண்டிருந்த இளையர்களைத் திரட்டித் தமிழகத்தின் பல்வேறு கிராமங்களில் தேசிய இயக்கம் பிரச்சாங்களில் ஈடுபட்டனர். காமராஜருடன் இணைந்து அண்ணாமலைப் பிள்ளை என்பார் செயற்பட்டார். தொடக்க நிலையில் பல்வேறு பிராந்தியத் தலைவர்களுடன் இணைந்து எழுச்சி பெற்றார். இராஜபாளைம் ீ.ளு. குமாரசாமிராஜா காமராஜருடன் இணைந்து செய்ற்பட்டார். காங்கிரசில் சத்தியமூர்த்தியின் அணியில் இவர்கள் இணைந்து செய்ற்பட்டனர். சில சமயங்களில் இராஜாஜியின் மேலாதிக்கத்தை ஒடுக்கும் முயற்சியில் இவர்கள் ஈடுபட்டனர். விடுதலைப் போராட்டத்தின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றுச் சிறைச்சாலை சென்றவர் காமராஜர். பெரியார் நடத்திய வைக்கம் பேராட்டத்திலும் பங்கேற்றவர். கட்சியின் பல்வேறு செய்ற்பாடுகளில் பங்கேற்ற காமராஜர் தனது 37 வயதில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவரானார். தமிழகத்தில் தொண்டர்கள் மற்றும் மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்குப் பெற்றார். பெரியாரின் ஆதரவும் அவருக்கு இருந்தது.

**Prepared by**

**DR. B. MUTHARASI**

Associate Professor, Department of History,

A.P.C. Mahalaxmi College for Women, Tuticorin – 628 002.